

உ.

சிவமயம்.

ஸ்ரீ பொல்லாப்பிள்ளையார் துணை.

திருநாரையூர்ப்புராணம்.

உ

சிவமயம்.

ஸ்ரீபொல்லாப்பிள்ளையார் துணை.

திருநாரையூர்ப்புராணம்.

தமிழ்மொழிபெயர்ப்பு.

இது

திருவாளர்கள்,

காரைக்குடி,

ப. ராம. லெ. ராம. லெக்ஷ்மணசெட்டியாரவர்களும்,

கோட்டையூர்,

க. வீ. சொ. அழகப்பசெட்டியாரவர்களும்,

உத்தரவுசெய்தபடி,

திருநாரையூர்

ரா. முத்துக்குமாரபிள்ளையால்

கும்பகோணம்

ஸ்ரீகோமளாம்பா அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

கலி-௫௦௩௬, யுவ-ஹு புரட்டாசி-மீ

1935.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முகவுரை.

பொன்னி வடகரை சேர்நாரை யூரிற் புழைக்கைமுக
மன்ன னருபத்து மூவர் பதிதே மரபுசெயல்
பன்னவத் தொண்டத் தொகைவகை பல்குமந் தாதிதனைச்
சொன்ன மறைக்குல நம்பிபொற் பாதத் துணைதுணையே.

அநாதிமுத்தநித்தசித்துருவாகியபரமசிவன், அநாதியாணவ மூலமலச்சார்பினுல் அறிவுந்தொழிலுமிழந்து பிறவிப்பெருங்கட லுளமுந்தி வருந்தும் உயிர்களை எடுத்துப் பேரின்பவீட்டினில் வைத்து வாழ்வித்தற்பொருட்டுத் திருவுளம்பற்றிய பெருங் கருணையினுல் உலகத்தைப் படைக்குங்காலத்திலே மூர்த்தி தலந் தீர்த்தமென மூன்று திருவுருவாகவெளிப்பட்டருளி ஆன் மாக்கள் செய்யும் வழிபாட்டிற்கேற்பப் போகமும் வீடுமாகிய பயன்களைத் தந்தருளுகின்ருர் என்பதும், பெருந்தேவபதங்க ளுக்கிறைவராகிய இந்திரனயன்மால் முதலிய வானிடத்தவரும் இந்த மண்ணுலகத்தில் வந்து மூர்த்திதலதீர்த்தங்களை வழி பட்டுத் தாம் விரும்பிய பேறுகளைப் பெற்று வாழ்கின்ருர்கள் என்பதும் உண்மை நூற்றுணிபாம்.

அத்தகைய மூர்த்திதல தீர்த்தங்களின் பெருமையும், அவற் றின்வழிபாட்டினை வீடுபேற்றிற்குச்சிறந்தசாதனமாகக்கொண்ட சைவசமயத்தின் பெருமையும் புறச்சமயிகளால் விளங்காது மறையுங்காலத்திலே தெய்வத் திருவருளால் திருஞானசம்பந்த சுவாமிகள் முதலிய பரமாசாரியர்கள் திருவவதாரஞ் செய்து பலவித அற்புதங்களாலும் தேவாரமுதலிய தெய்வத் தமிழ் வேதங்களாலும் அவ்விரண்டன் பெருமைகளும் உலகத்தில் விளங்க நிலைநிறுத்தியருளினுர்கள். இக்காரணம்பற்றித் தமிழ் வேதத் திருப்பதிகம்பெற்ற மூர்த்திதலதீர்த்தங்களே விசேட முடையனவாகப் பிற்காலத்தவராற் கருதப் பெறுகின்றன.

தேவாரத்திருப்பதிகம் பெற்ற தலங்கள் பல இந்நாட்டிலி ருக்கவும் அத்தமிழ்வேதத்திருப்பதிகங்கள் மறைந்து குறைந்து

வழங்குங்காலத்திலே அவற்றை உண்மைநாயன்மார் சரித்திரத்தோடு வெளிப்படுத்தும் பெருமைவாய்ந்த மூர்த்திதல தீர்த்தங்களைத் தனக்கே சிறப்புரிமையாகக்கொண்டு விளங்குஞ் சிவத்தலம் திருநாரையூர் ஒன்றேயாம். இத்திருநாரையூரிலே பரமசிவன் பொல்லாப்பிள்ளையார் என வழங்கும் சுயம்புவிநாயகமூர்த்தியாகவும், சௌந்தர்யநாயகிசமேத பலாகேசர் என்னும் சுயம்பிரகாச சிவலிங்கமூர்த்தியாகவும் எழுந்தருளியிருந்து தம்மை வழிபட்ட மெய்யன்பர்களுக்கு அருள்செய்த சரிதங்களை விரித்துரைப்பது இத்திருநாரையூர்ப் புராணம். இஃது ஆரிய மொழியிலே காந்த மகாபுராணத்தில் க்ஷேத்திரமான்மிய கண்டத்தில் உள்ளதெனவும் சனகர் முதலிய முனிவர்களுக்கு முருகக் கடவுளால் உபதேசிக்கப்பெற்றதெனவும் இதன் அத்தியாயங்களின் முடிவுரையால் அறியப்படுகின்றது. மூர்த்திதல தீர்த்தங்களிடமாக விதிப்படி மெய்யன்பால் வழிபாடு செய்வோர் இறைவனருள் பெற்றுய்வார் என்பதைப் பல சரிதங்கள் வாயிலாக உணர்த்தற்பொருட்டெழுந்தனவே தலபுராணங்களாம். ஆதலின், அவற்றைத் தேச சரித்திரங்களோடொப்ப வைத்து நோக்கிக் கால ஆராய்ச்சி முறைக்குப் பொருந்தாதன எனக் கூறுதல் அடாதென்க, சங்கத்துச் சான்றோரும் திருவள்ளுவர் முதலிய தெய்வப்புலமையாளரும் தேவார முதலிய பன்னிருதிருமுறை ஆசிரியர்களும் மகாபுராணங்களிலும் தலபுராணங்களிலுங் கூறப்படுஞ்சரிதங்கள் பலவற்றை எடுத்துரைத்தருளுதலால் புராணங்களெல்லாம் பிரமாண நூல்களே என்பது தெளியப்படும்.

மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞால முழுது நயந்தளந்தான் — வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து. (பரணர்)

மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
தாஅய தெல்லா மொருங்கு.

ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி. (திருவள்ளுவர்)

என்றிங்ஙனம் மூலபுராணப் பிரமாணங்கண்டு பொதுவாகத்தொகுத்துக் கூறிய சரிதங்களை,

மறுமா ணுருவாய் மற்றிணை யின்றி வானோரைத்
தெறுமா வலிபாற் சென்றுல கெல்லா மளவிட்ட
குறுமா ணுருவன் றற்குறி யாகக் கொண்டாடும்
கறுமா கண்டன் மேயது கண்ணார் கோயிலே.

முன்னொரு காலத் திந்திர னுற்ற முனிசாபம்
பின்னொரு நாளவ் விண்ணவ ரேத்தப் பெயர்வெய்தித்
தன்னருளாற்கண் ணாயிர மீந்தோன் சார்பென்பர்
கன்னியர் நாளுந் துன்னமர் கண்ணார் கோயிலே.

எனத் திருஞானசம்பந்தப்பெருமான் தலபுராண சரிதமாகச் சிறப்புவகையால் விரித்துபதேசித்தருளுதலுங் காண்க

இப்புராணம் முப்பத்தொரு அத்தியாயங்களையும் ஆயிரத்தெழுநூற்றறுபத்தாறு சுலோகங்களையும் உடையது. தஞ்சாவூர் அரண்மனைப் புத்தகசாலை, கஞ்சனூர் முதலிய இடங்களிலிருந்து மூலப் பிரதிகளைத்தேடிப்பெற்று எழுதுவிக்கப்பெற்றது.

சிறப்புவாய்ந்த இத்தலத்தின் ஆலயத்திருப்பணி விஷயமாக முயன்றுகொண்டிருக்கும்போது பொல்லாப்பிள்ளையார் திருவருளால் காரைக்குடி, ஸ்ரீமான் ப. ராம. லெ. ராம லெக்ஷ்மண செட்டியார் அவர்கள் தாமும் நகரப் பிரபுக்களுஞ் சேர்ந்து திருப்பணி செய்ய முன்வந்து இத்திருநாரையூரில் நகரத்தார்களுக்காக ஒருமாளிகை அமைத்துக்கொண்டு, சிவபுரித்திருப்பணி முதலிய பெருஞ் சிவபுண்ணியங்களைச் செய்து புகழ்பெற்று விளங்குகின்ற கோட்டையூர் ஸ்ரீமான் க. வீ. சொ. அழகப்ப செட்டியார் அவர்களை உறுதித்துணையாகப் பெற்றுத் திருப்பணியைத் தொடங்கிக்கொண்டு இத்தலபுராணத்தையும் மொழிபெயர்த்து வெளியிடுவதற்கு வேண்டும் பொருளுபகரித்து அச்சிடும்படி ஆஞ்ஞாபித்தார்கள். அவர்கள் ஆஞ்ஞையின்படி திருவானைக்காவல் ஸ்ரீஜகத்குரு வித்தியாஸ்தானத்தில் தலைமை ஆசிரியராக இருக்கும் நியாயவேதாந்த விசாரதராகிய போலகம் ப்ரஹ்மஸ்ரீ P. S ஸ்ரீராம சாஸ்திரிகளவர்களால் சம்ஸ்கிருத மூலத்தைப் பரிசோதனை செய்வித்து, சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத்தமிழாசிரியரும் சமப்பிரதானவித்துவானுமாகிய ப்ரஹ்மஸ்ரீ N. கிருஷ்ணமூர்த்திஐயர் அவர்கள் மொழிபெயர்த்து எழுதியதை ஸ்ரீமெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலை ஸ்தாப

கராகிய சித்தாந்த ஞானச்செல்வர், ராம. சொ. ஸ்ரீ சொக்கலிங்க அய்யா அவர்கள் கருத்துப்படி, சூரியனூர்கோயிலாதீனம், ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரத்தம்பிரான்சுவாமிகள் அவர்களால் வட மொழி மூலத்தோடு மொழிபெயர்ப்பை ஒப்பு நோக்கிச் செம்மை செய்வித்து அச்சிட்டு முடிக்கப்பெற்றது

ஆரம்பமுதல் அச்சிட்டு முடியுங்காறும் சிரமம் பாராட் டாது இப் புராணத்தைச் செம்மை செய்து அச்சிட்டுவரும் இதழ்களை ஒப்புநோக்கித் திருத்தி முற்றுவித்து முகவுரை பிழைதிருத்தம் முதலியன எல்லாம் எழுதி அச்சிடுவித்துத் தந்த ஷை சாஸ்திரிகள் அவர்களுக்கும், சுவாமிகளவர்களுக்கும் மொழிபெயர்த்துதவிய ஐயரவர்களுக்கும் மனமார்ந்த வந்தனத் தோடு என்றும் நன்றி பாராட்டுங் கடப்பாடுடையேன். இப்புரா ணச்சொற்றிருப்பணியை முன்னின்று முற்றுவித்து யாவருங் கண்டு களிக்கும் வண்ணம் வெளிவரச் செய்ததுபோலவே திரு நாரையீசர் திருக்கோயிற் கற்றிருப்பணியையும் முற்றுவித்துக் கும்பாபிஷேகஞ்செய்வித்து யாவரும் கண்டுகண்டுள்ளங் குளிரக் கண்குளிரக் காட்டுதற்கு முன்னின்று முயலுகின்ற ஸ்ரீமான், கோட்டையூர் க. வீ. சோ. அழகப்ப ஐயா அவர்களுக்கும் இத் திருப்பணிக்கு உதவி செய்யும் நகரப் பிரபுக்கள் முதலிய சிவநே சர்களுக்கும் தீர்க்காயுசும் சிந்தித மனோரத சித்தியும் தந்தரு ளும் வண்ணம் ஸ்ரீபொல்லாப்பிள்ளையாரது பெருங் கருணையைப் பிரார்த்திக்கின்றேன். சிவம்.

இங்ஙனம்,

ரா. முத்துக்குமாரன்,

திருநாரையூர்.

சிவமயம்.

திருநாரையூர்த்
தேவாரத்திருப்பதிகங்கள்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண்—பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

உரையினில் வந்த பாவ முணர்நோய்க ளும்ம
செயநீங்கு குற்ற முலகில்
வரையினி லாமை செய்த வவைதீரும் வண்ண
மிகவேத்தி நித்த நினைமின்
வரைசிலை யாக வன்று மதின்மூன்றெ ரித்து
வளர்கங்கு 1 னங்கை வெருவத்
திரையொலி நஞ்ச முண்ட சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே. (க)

ஊனடை கின்ற குற்ற முதலாகி யுற்ற
பிணி 2 நோ யொருங்கு முயரும்
வானடை கின்ற வெள்ளை மதிசூடு சென்னி
விதியான வேத விகிர்தன்
கானிடை யாடி பூதப் படையா னியங்கு
விடையா னிலங்கு முடிமேல்
தேனடை வண்டு பாடு சடையண்ண னண்ணு
திருநாரை யூர்கை தொழவே. (உ)

ஊரிடை நின்று வாழு முயிர்செற்ற காலன்
றுயருற்ற தீங்கு விரவிப்
பாரிடை மெள்ள வந்து பழியுற்ற வார்த்தை
3 யொழிவுற்ற வண்ண மகலும்

1 ணங்கை, 2 நோய் வருந்து, 3 யொழியுற்ற, என்பன பாடபேதங்கள்.

போரிடை யன்று மூன்று மதிலெய்த ஞான்று
புகழ்வானு ளோர்கள் புணரும்
தேரிடை நின்ற வெந்தை பெருமானி ருந்த
திருநாரை யூர்கை தொழவே. (௩)

தீயுற வாய வாக்கை யதுபற்றி வாழும்
வினைசெற்ற வுற்ற வுலகின்
தாயுறு தன்மை யாய தலைவன்ற னாம
நிலையாக நின்று மருவும்
பேயுற வாய கானி னடமாடி கோல
விடமுண்ட கண்டன் முடிமேல்
தேய்பிறை வைத்து கந்த சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே. (௪)

வசையப ராத மாய வுவ 1 ரோத நீங்குந்
தவமாய தன்மை வரும்வான்
மிசையவ ராதி யாய திருமார் பிலங்கு
விரிநூலர் விண்ணு நிலனும்
இசையவ ராசி 2 சொல்ல விமையோர்க ளேத்தி
யமையாத காத லொடுசேர்
திசையவர் போற்ற நின்ற சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே. (௫)

உறைவள ருனி லாய வுயிர்நிற்கும் வண்ண
3 முணர்வாக்கு முண்மை யுலகில்
குறைவுள வாகி நின்ற குறைதீர்க்கு நெஞ்சி
னிறைவாற்று நேசம் வளரும்
மறைவளர் நாவன் மாவி னுரிபோர்த்த மெய்ய
னரவார்த்த வண்ணல் கழலே
திறைவளர் தேவர் 3 தொண்டி னருள்பேண நின்ற
திருநாரை யூர்கை தொழவே (௬)

தனம்வரு நன்மை யாகுந் தகுதிக் குழந்து
வருதிக் குழன்ற வுடலின்

---

1 ரேத, 2 சொல்லி, 3 முணர்வார்க்கு, 3 தொண்டினருள், என்பன பாடபேதங்கள்.

இனம்வள ரைவர் செய்யும் வினயங்கள் செற்று
நினைவொன்று சிந்தை பெருகும்
முனமொரு கால மூன்று புரம்வெந்து மங்கச்
சரமுன் றெரிந்த வவுணர்
சினமொரு கால ழித்த சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே. (எ)

உருவரை கின்ற நாளி லுயிர்கொள்ளுங் கூற்ற
நனியஞ்சு மாத லுறுநீர்
மருமலர் தூவி யென்றும் வழிபாடு 1 செய்ம்மி
னழிபாடி லாத கடலின்
அருவரை சூழி லங்கை யரையன்றன் வீர
மழியத் தடக்கை முடிகள்
திருவிரல் வைத்து கந்த சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே (அ)

வேறுயர் வாழ்வு தன்மை வினைதுக்க மிக்க
பகைதீர்க்கு மேய வுடலில்
தேறிய சிந்தை வாய்மை தெளிவிக்க நின்ற
கரவைக் கரந்து திகழும்
சேறுயர் பூவின் மேய பெருமானு மற்றைத்
திருமாலு நேட வெரியாய்ச்
சீறிய செம்மை யாகுஞ் சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே. (கூ)

மிடைபடு துன்ப மின்ப முளதாக்கு முள்ளம்
வெளியாக்கு முன்னி யுணரும்
படையொரு கையி லேந்திப் பலிகொள்ளும் வண்ணம்
மொலிபாடி யாடி பெருமை
உடையினை விட்டு ளோரு முடல்போர்த்து ளோரு
முரைமாயும் வண்ண மழியச்
செடிபட வைத்து கந்த சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே (க0)

எரியொரு வண்ண மாய வுருவானை யெந்தை
பெருமானை யுள்கி நினையார்

---

1 செய்யுமிழி என்பது பாடபேதம்.

திரிபுர மன்று செற்ற சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழுவான்
பொருபுனல் சூழ்ந்த காழி மறைஞான பந்த
னுரைமாலை பத்து மொழிவார்
திருவளர் செம்மை யாகி யருள்பேறு மிக்க
துளதென்பர் செம்மை யினரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண்—பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

காம்பினைவென்றமென்றோளிபாகங்கலந்தானலந்தாங்கு
தேம்புனல்சூழ்திகழ்மாமடுவிற்றிருநாரையூர்மேய
பூம்புனல்சேர்புரிபுன்சடையான்புலியின்னுரிதோன்மேல்
பாம்பினைவீக்கியபண்டரங்கன்பாதம்பணிவோமே. (க)

தீவினையாயினதீர்க்கநின்றான்றிருநாரையூர்மேயான்
பூவினைமேவுசடைமுடியான்புடைசூழப்பலபூதம்
ஆவினிலைந்துங்கொண்டாட்டுகந்தானடங்கார்மதின்மூன்றும்
எவினையெய்தழித்தான்கழலேபரவாவெழுவோமே. (உ)

மாயவன் சேயவன்வெள்ளியவன்விடஞ்சேருமைமிடற்றன்
ஆயவனாகியொரந்தரமும்மவனென்றவரையாகம்
தீயவனீரவன்பூமியவன்றிருநாரையூர்தன்னில்
மேயவனைத்தொழுவாரவர்மேல்வினையாயினவீடுமே. (ங)

துஞ்சிருளாடுவர்தூமுறுவறுளங்குமுடம்பினராய்
அஞ்சுடராரெரியாடுவராரழலார்விழிக்கண்
நஞ்சுமிழ்நாகமரைக்கசைப்பர்நலனோங்குநாரையூர்
எஞ்சிவனார்க்கடிமைப்படுவார்க்கினியில்லையேதமே. (ச)

பொங்கிளங்கொன்றையினார்கடலில்விடமுண்டிமையோர்கள்
தங்களையாரிடர்தீரநின்றதலைவர்சடைமேலோர்
திங்களைவைத்தனலாடலினார்திருநாரையூர்மேய
வெங்கனல்வெண்ணீறணியவல்லாரவரேவிழுமியரே. (ரு)

பாருறுவாய்மையினர்பரவும்பரமேட்டிபைங்கொன்றைத்
தாருறுமார்புடையான்மலையின்றலைவன்மலைமகளைச்
சீருறுமாமறுகிற்சிறைவண்டறையுந்திருநாரை
யூருறையெம்மிறைவர்க்கிவையொன்றொடொன்றொவ்வாவே. (சு)

கள்ளியிடுதலையேந்துகையர்கரிகாடர்கண்ணுதலர்
வெள்ளியகோவணவாடைதன்மேன்மிளிராடரவார்த்து
நள்ளிருணட்டமதாடுவர்நன்னலனோங்குநாரையூர்
உள்ளியபோழ்திலெம்மேல்வருவல்வினையாயினவோடுமே. (எ)

நாமமெனப்பலவும்முடையானலனோங்குநாரையூர்
தாமொம்மெனப்பறையாழ்குழறாளார்கழல்பயில
ஈமவிளக்கெரிசூழ்சுடலையியம்பும்மிடுகாட்டில்
சாமமுரைக்கநின்றாடுவானுந்தழலாயசங்கரனே. (அ)

ஊனுடைவெண்டலைகொண்டுழல்வானொளிர்புன்சடைமேலோர்
வானிடைவெண்மதிவைத்துகந்தான்வரிவண்டியாழ்முரலத்
தேனுடைமாமலரன்னம்வைகுந்திருநாரையூர்மேய
ஆனிடையைந்துகந்தானடியேபரவாவடைவோமே. (கூ)

தூசுபுனைதுவராடைமேவுந்தொழிலாருடம்பினிலுள்
மாசுபுனைந்துடைநீத்தவர்கண்மயனீர்மைகேளாதே
தேசுடையீர்கடெளிந்தடைமின்றிருநாரையூர்தன்னில்
பூசுபொடித்தலைவரடியாரடியேபொருத்தமே. (கo)

தண்மதிதாழ்பொழில்சூழ்புகலித்தமிழ்ஞானசம்பந்தன்
ஒண்மதிசேர்சடையானுறையுந்திருநாரையூர்தன்மேல்
பண்மதியாற்சொன்னபாடல்பத்தும்பயின்றார்வினைபோகி
மண்மதியாதுபோய்வான்புகுவர்வானோரெதிர்கொளவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் — பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

கடலிடைவெங்கடுநஞ்சமுண்டகடவுள்விடையேறி
உடலிடையிற்பொடிப்பூசவல்லானுமையோடொருபாகன்
அடலிடையிற்சிலைதாங்கியெய்தவம்மானடியார்மேல்
நடலைவினைத்தொகைதீர்த்துகந்தானிடநாரையூர்தானே. (க)

விண்ணின்மின்னேர்மதிதுத்திநாகம்விரிபூமலர்க்கொன்றை
பெண்ணின்முன்னேமிகவைத்துகந்தபெருமானெரியாடி
நண்ணியதன்னடியார்களோடுந்திருநாரையூரானென்
றெண்ணுமினும்வினைபோகும்வண்ணமிறைஞ்சுந்நிறைவாமே (௨)
தோடொருகாதொருகாதுசேர்ந்தகுழையானிழைதோன்றும்
பீடொருகால்பிரியாதுநின்றபிறைபான்மறையோதி
நாடொருகாவமுஞ்சேரநின்றதிருநாரையூரானைப்
பாடுமினீர் பழிபோகும் வண்ணம்பயிலுமுயர்வாமே, (௩)
வெண்ணிலவஞ்சடைசேரவைத்துவிளங்குந்தலையேந்திப்
பெண்ணிலமர்ந்தொருகூறதாயபெருமானருளார்ந்த
அண்ணன்மன்னியுறை கோயிலாகு மணிநாரையூர்தன்னை
நண்ணலமலர்க் 1 துறைவாக்குமின்கணடலைகரிசறுமே. (௪)
வானமர்தீவளிநீர்நிலனாய்வழங்கும்பழியாகும்
ஊனமரின்னுயிர்தீங்குகுற்றமுறைவாற்பிறிதின்றி
நானமரும் பொருளாகிநின்றான்றிருநாரையூரெந்தை
கோனவனைக் குறுகக் குறுகாகொடுவல்வினைதானே. (௫)
கொக்கிறகுங்குளிர்சென்னிமத்தங்குலாயமலர்சூடி
அக்கரவோடரையார்த்துகந்தவழகன்குழகாக
நக்கமருந் திருமேனியாளன்றிரு நாரையூர்மேவிப்
புக்கமரும்மனத்தோர்கடம்மைப்புணரும்புகழானே. (௬)
ஊழியு மின்பமுங் காலமாகியுயருந் தவமாகி
ஏழிசையின்பொருள்வாழும்வாழ்க்கைவினையின்புணர்ப்பாகி
நாழிகையும்பலஞாயிருகிளிர்நாரையூர்தன்னில்
வாழியர்மேதகுமைந்தர்செய்யும்வகையின்விளைவாமே. (௭)
கூசமிலாதரக்கன்வரையைக்குலுங்கவெடுத்தான்றோள்
நாசமதாகியிறவடர்த்தவிரலான்கரவாதார்
பேசவியப்பொடுபேணநின்றபெரியோனிடம்போலும்
தேசமுறப்புகழ்செம்மைபெற்றதிருநாரையூர்தானே. (௮)
பூமகனும்மவனைப் பயந்தபுயலார்நிறத்தானும்
ஆமளவுந்திரிந் 2 தேத்திக்காண்டலறிதற்கரியானூர்
பாமருவுங்குணத்தோர்களீண்டிப்பலவும்பணிசெய்யும்
தேமருவுந்திகழ்சோலைசூழ்ந்ததிருநாரையூர்தானே. (௯)

---

1 துடைவாக்கு, 2 தேத்தக் என்பன பாடபேதங்கள்.

வெற்றரையாகியவேடங்காட்டித்திரிவார்துவராடை
உற்றரையோர்களுரைக்குஞ்சொல்லை யுணராதெழுமின்கள்
குற்றமிலாததோர்கொள்கையெம்மான் குழகன் றொழிலாரப்
பெற்றரவாட்டிவரும்பெருமான்றிருநாரையூர்சேர்வே. (க0)

பாடிய லுந்திரைசூழ்புகலித்திருஞானசம்பந்தன்
சேடிய லும்புகழோங்குசெம்மைத்திருநாரையூரான்மேல்
பாடியதண்டமிழ்மாலைபத்தும்பரவித் 1 திரிந்தாக
வாடியசிந்தையினார்க்குநீங்குமவலக்கடலுனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு நாயனர்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

வீறு தானுடை வெற்பன் மடந்தையோர்
கூற னாகிலுங் கூன்பிறை சூடிலும்
நாறு பூம்பொழி னாரையூர் நம்பனுக்
காறு சூடிலு மம்ம வழகிதே (க)

புள்ளி கொண்ட புலியுரி யாடையும்
வெள்ளி கொண்டவெண் பூதிமெய் யாடலும்
நள்ளி தெண்டிரை நாரையூ ரானஞ்சை
அள்ளி யுண்டலு மம்ம வழகிதே. (உ)

வேடு தங்கிய வேடமும் வெண்டலை
ஓடு தங்கிய வுண்பலி கொள்கையும்
நாடு தங்கிய நாரையூ ரானடம்
ஆடு பைங்கழ லம்ம வழகிதே (ங)

கொக்கின் 2 றாவலுங் கூவிளங் கண்ணியும்
மிக்க வெண்டலை மாலை விரிசடை
நக்க னாகிலு நாரையூர் நம்பனுக்
கக்கி னாரமு மம்ம வழகிதே. (ச)

---

1 திரிந்தார்கள், 2 றாகிலும், என்பன பாடபேதங்கள்,

வடிகொள் வெண்மழு மானமர் கைகளும்
பொடிகொள் செம்பவ ளம்புரை மேனியும்
கடிகொ ளன்மயில் சேர்திரு நாரையூர்
அடிக டம்வடி வம்ம வழகிதே. (௬)

சூல மல்கிய கையுஞ் சடரொடு
பாலு நெய்தயி ராடிய பான்மையும்
ஞால மல்கிய நாரையூர் நம்பனுக்
கால நீழலு மம்ம வழகிதே. (௭)

பண்ணி னுன்மறை பாடலொ டாடலும்
1 எண்ணி லார்புர மூன்றெரி செய்ததும்
நண்ணி னார்துயர் தீர்த்தலு நாரையூர்
அண்ண லார்செய்கை யம்ம வழகிதே (௮)

என்பு பூண்டொரு தேறி யிளம்பிறை
மின்பு ரிந்த சடைமேல் விளங்கவே
நன்ப கற்பலி தேரினு நாரையூர்
அன்ப னுக்கது வம்ம வழகிதே. (௯)

முரலுங் கின்னர மொந்தை முழங்கவே
இரவி னின்றெரி யாடலு 2 நீடலாம்
நரலும் வாரிநன் னுரையூர் நம்பனுக்
கரவும் பூணுத லம்ம வழகிதே. (௧)

கடுக்கை யஞ்சடை யன்கயி லைம்மலை
எடுத்த வாளரக் கன்றலை யிறைஞ்சும்
நடுக்கம் வந்திற நாரையூ ரான்விரல்
அடுத்த தன்மையு மம்ம வழகிதே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்

சொல்லானைப் பொருளானைச் சுருதி யானைச்
சுடராழி நெடுமாலுக் கருள்செய் தானை
அல்லானைப் பகலானை யரியான் றன்னை
யடியார்கட் கெளியானை யரண்மூன் றெய்த

1 எண்ணினார், 2 நீடுவான் என்பன பாட பேதங்கள்.

வில்லானைச் சரம்விசயற் கருள்செய் தானை
வெங்கதிரோன் மாமுனிவர் விரும்பி யேத்தும்
நல்லானைத் தீயாடு நம்பன் றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே. (க)

பஞ்சுண்ட மெல்லடியாள் பங்கன் றன்னைப்
பாரொடுநீர் சுடர்படர்காற் றாயி னானை
மஞ்சுண்ட வானாகி வானந் தன்னின்
மதியாகி மதிசடைமேல் வைத்தான் றன்னை
1 நெஞ்சுண்டென் னினைவாகி நின்றான் றன்னை
நெடுங்கடலைக் கடைந்தவர்போய் நீங்க வோங்கும்
நஞ்சுண்டு தேவர்களுக் கமுதீந் தானை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே. (உ)

மூவாதி யாவர்க்கு மூத்தான் றன்னை
முடியாதே முதனடுவு முடிவா னானைத்
தேவாதி தேவர்கட்குந் தேவன் றன்னை
திசைமுகன்றன் சிரமொன்று சிதைத்தான் றன்னை
ஆவாத வடலேற்றொன் றுடையான் றன்னை
யடியேற்கு நினைதோறு மண்ணிக் கின்ற
நாவானை நாவினினல் லுரையா னானை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே. (ங)

செம்பொன்னை நன்பவளந் திகழு முத்தைச்
செழுமணியைத் தொழுமவர்தஞ் சித்தத் தானை
வம்பவிழு மலர்க்கணைவே ளுலக்க நோக்கி
மகிழ்ந்தானை மதிற்கச்சி மன்னு கின்ற
கம்பனையெங் கயிலாய மலையான் றன்னைக்
கழுகினொடு காகுத்தன் கருதி யேத்தும்
நம்பனையெம் பெருமானை நாதன் றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே. (ச)

புரையுடைய கரியுரிவைப் போர்வை யானைப்
புரிசடைமேற் புனலடைத்த புனிதன் றன்னை
விரையுடைய வெள்ளெருக்கங் கண்ணி யானை
வெண்ணீறு செம்மேனி விரவி னானை

---

1 நெஞ்சுண்டநினைவாகி என்பது பாடபேதம்.

வரையுடைய மகடவஞ்செய் மணாளன் றன்னை
வருபிணிநோய் பிரிவிக்கு மருந்து தன்னை
நரைவிடைநற் கொடியுடைய நாதன் றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே. (ரு)

பிறவாது மிறவாதும் பெருகி னானைப்
பேய்பாட நடமாடும் பித்தன் றன்னை
மறவாத மனத்தகத்து மன்னி னானை
மலையானைக் கடலானை வனத்து ளானை
உறவானைப் பகையானை யுயிரா னானை
யுள்ளானைப் புறத்தானை யோசை யானை
நறவாரும் பூங்கொன்றை சூடி னானை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே. (சு)

தக்கனது வேள்விகெடச் சாடி னானைத்
தலைகலனாப் பலியேற்ற தலைவன் றன்னைக்
கொக்கரைசச் சரிவீணைப் பாணி யானைக்
கோணாகம் பூணாகக் கொண்டான் றன்னை
அக்கினொடு மென்பணிந்த வழகன் றன்னை
யறுமுகனோ டானைமுகற் கப்பன் றன்னை
நக்கனைவக் கரையானை நள்ளாற் றானை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே (எ)

அரிபிரமர் தொழுதேத்து மப்பன் றன்னை
யந்தகனுக் கந்தகனை யளக்க லாகா
எரிபுரியு மிலிங்கபுரா ணத்து ளானை
யெண்ணாகிப் பண்ணா ரெழுத்தா னானைத்
திரிபுரஞ்செற் றொருமூவர்க் கருள்செய் தானைச்
சிலந்திக்கு மரசளித்த செல்வன் றன்னை
நரிவிரவு காட்டகத்தி லாட லானை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே. (அ)

ஆலால மிடற்றணியா வடக்கி னானை
யாலதன்கீ ழறநால்வர்க் கருள்செய் தானைப்
பாலாகித் தேனாகிப் பழமு மாகிப்
பைங்கரும்பா யங்கருந்துஞ் சுவையா னானை

மேலாய வேதியர்க்கு வேள்வி யாகி
வேள்வியினின் பயனாய விமலன் றன்னை
நாலாய மறைக்கிறைவ னாயி னானை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே. (௯)

மீளாத வாளென்னை யுடையான் றன்னை
வெளிசெய்த வழிபாடு மேவி னானை
மாளாமை மறையவனுக் குயிரும் வைத்து
வன்கூற்றி னுயிர்மாள வுதைத்தான் றன்னைத்
தோளாண்மை கருதிவரை யெடுத்த தூர்த்தன்
றோள்வலியுந் தாள்வலியுந் தொலைவித் தாங்கே
நாளோடு வாள்கொடுத்த நம்பன் றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

ஆகத் திருப்பதிகங்கள் ரு.

நம்பியாண்டார்நம்பி அருளிச்செய்த

திருநாரையூர்

விநாயகர்திருவிரட்டைமணிமாலை.

திருச்சிற்றம்பலம்.

என்னை நினைந்தடிமை கொண்டென் னிடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான்— புன்னை
விரசுமகிழ் சோலைவிய னாரையூர் முக்கண்
அரசுமகி ழத்திமுகத் தான். (௧)

முகத்தாற் கரியனென் றாலுந் தனையே முயன்றவர்க்கு
மிகத்தான் வெளியனென் றேமெய்ம்மை யுன்னும் விரும்படியார்
அகத்தான் றிகழ்திரு நாரையூ ரம்மான் பயந்தவெம்மான்
உகத்தா னவன்ற னுடலம் பிளந்த வொருகொம்பனே. (௨)

கொம்பனைய வள்ளி கொழுநன் குறுகாமே
வம்பனைய மாங்கனியை நாரையூர்— நம்பனையே
தன்னவலஞ் செய்துகொளுந் தாழ்தடக்கை யாயென்னைப்
பின்னவலஞ் செய்வதெனோ பேசு. (௩)

பேசத் தகாதெனப் பேயெரு தும்பெருச் சாளியுமென்
றேசத் தகும்படி யேறுவ தேயிமை யாதமுக்கட்
கூசத் தகுந்தொழி லுங்கையு நுந்தையு நீயுமிந்தத்
தேசத் தவர்தொழு நாரைப் பதியுட் சிவக்களிறே. (௪)

களிறு முகத்தவனாய்க் காயஞ்செந் றியின்
ஒளிறு முருக்கொண்ட தென்னை — யளறுதொறும்
பின்னாரை யூரார வாரும் பெரும்படுகர்
மன்னாரை யூரான் மகன். (௫)

மகத்தினின் வானவர் பற்கண் சிரந்தோ ணொரித் தருளுஞ்
சகத்தினி னீள்பொழி னாரைப் பதியுட் சுரன்மகற்கு
முகத்தது கையந்தக் கையது மூக்கந்த மூக்கதனின்
அகத்தது வாயந்த வாயது போலு மடுமருப்பே. (௬)

மருப்பையொரு கைக்கொண்டு நாரையூர் மன்னும்
பொருப்பையடி போற்றத் துணிந்தால் — நெருப்பை
அருந்தவெண்ணு கின்றவெறும் பன்றே யவரை
வருந்தவெண்ணு கின்ற மலம். (௭)

மலஞ்செய்த வல்வினை நோக்கி யுலகை வலம்வருமப்
புலஞ்செய்த காட்சிக் குமரற்கு முன்னை புரிசடைமேல்
சலஞ்செய்த நாரைப் பதியான் றன்னைக் கனிதரவே
வலஞ்செய்து கொண்ட மதக்களி றேயுன்னை வாழ்த்துவனே. (௮)

வனஞ்சாய வல்வினைநோய் நீக்கி வனசத்
தனஞ்சா யலைத்தருவா 1 னன்றோ — வினஞ்சாயத்
தேரையூர் நம்பன்மகன் றிண்டோ ணொரித்தருளு
நாரையூர் நம்பர்மக னாம். (௯)

நாரணன் முன்பணிந் தேத்தநின் றெல்லை நடாவியவத்
தோரண வுந்திரு நாரையூர் மன்னு சிவன்மகனே
காரண னேயெங் கணபதி யேநற் கரிவதனா
ஆரண நுண்பொரு ளேயென் பவர்க்கில்லை யல்லல்களே. (௧௦)

அல்லல் களைந்தான்ற னம்பொ னுலகத்தின்
எல்லை புகுவிப்பா னீண்டுழவர் — நெல்லல்களை
செங்கழுநீர் கட்குந் திருநாரை யூர்ச்சிவன்சேய்
கொங்கெழுதா ரைங்கரத்த கோ. (௧௧)

கோவிற் கொடிய நமன்றமர் கூடா வகைவிடுவன்
காவிற் றிகழ்திரு நாரைப் பதியிற் கரும்பனைக்கை
மேவற் கரிய விருமதத் தொற்றை மருப்பின்முக்கண்
ஏவிற் புருவத் 2 திமையவ டான்பெற்ற யானையையே. (௧௨)

யானைத் தியவெண்பா வென்னை நினைந்தடிமை
தானே சனார்த்தனற்கு நல்கினான் — தேனே
தொடுத்தபொழி னாரையூர்ச் சூலம்வல னேந்தி
எடுத்த மதமுகத்த வேறு. (௧௩)

1 என்றே 2 திமையவன்றான் என்பன பாடபேதங்கள்.

ஏறிய சீர்வி ரணக்குடி யேந்திழைக் கும்மிருந்தேன்
நாறிய பூந்தார்க் குமரற்கு முன்னினே நண்ணலரைச்
சீறிய வெம்பனைச் சிங்கத்தி னுக்கிளை யானைவிண்ணோர்
வேறியல் வாற்றெழு நாரைப் பதியுள் விநாயகனே. (கச)

கனமதில்சூழ் நாரையூர் மேவிக் கசிந்தார்
மனமருவி னன்பயந்த வாய்ந்த — சினமருவு
கூசாரம் பூண்டமுகக் குஞ்சரக்கன் றென்றூர்க்கு
மாசார மோசொல்லு வான். (கரு)

வானிற் பிறந்த மதிதவ ழும்பொழின் மாட்டளிசூழ்
தேனிற் பிறந்த மலர்த்திரு நாரைப் பதிதிகழுங்
கோனிற் பிறந்த கணபதி தன்னைக் குலமலையின்
மானிற் பிறந்த களிறென் றுரைப்பரிவ் வையகத்தே. (கசா)

வையகத்தா ரேத்த மதிநாரை யூர்மகிழ்ந்து
பொய்யாகத்தா ருள்ளம் புகலொழிந்து — கையகத்தோர்
மாங்கனிதன் கொம்பண்டம் பாசமழு மல்குவித்தா
னுங்கனிநஞ் சிந்தையமர் வான். (கஎ)

அமரா வமரர் தொழுஞ்சா ணுரைப் பதியமர்ந்த
குமரா குமரற்கு முன்னவ னேகொடித் தேரவுணர்
தமரா சறுத்தவன் றன்னுழைத் தோன்றின னேயெனநின்
றமரா மனத்தவ ராழ்நர கத்தி லழுந்துவரே. (கஅ)

அவமதியா துள்ளமே யல்லலற நல்ல
தவமதியா லேத்திச் சதுர்த்தோ — நவமதியாம்
கொம்பன் விநாயகன்கொங் கார்பொழில்சூழ் நாரையூர்
நம்பன் சிறுவன்சீர் நாம். (ககூ)

நாந்தன மாமன மேத்துகண் டாயென்று நாண்மலரால்
தாந்தன மாக விருந்தன ணுரைப் பதிதன்னுளே
சேர்ந்தன னேயைந்து செங்கய னேநின் றிரண்மருப்பை
ஏந்தின னேயென்னை யாண்டவ னேயெனக் கென்னையனே. (உ0)

திருச்சிற்றம்பலம்.

விநாயகர்திருவிரட்டை மணிமாலை

முற்றிற்று.

அத்தியாய விஷயக் குறிப்பு.

எ. குணவான் எனப்பெயரிய அரசிளங்குமரனுக்கு அணிமாதி சித்திமுதலியன அருள்செய்த கணேசரது முதலாவது திருவிளையாடல்.

அ. குணவான் என்னும் அரசிளங்குமரன் சித்தியின் மேம்பாட்டால் மிக்க சிறப்புடைய சித்தபுரத்தைப் படைத்துக்கொண்டமையும், தன் பெரியதந்தை மக்களாகிய துன்முகன் முதலியோரைப் போரிலே வென்று பிணித்துச் சிறையிட்டமையும்.

கூ. பெரியதந்தை தங்கள் அரசுரிமையைத் தந்தமை பற்றி மகிழ்ந்த குணவானால் சிறைவிடுக்கப்பெற்றுத் தவஞ் செய்த துன்முகன் முதலியோருக்குத் தெய்வப்படைக்கலங்கண்முதலாயின அளித்தலாகிய திருநாரையீசரதுமுதலாவது திருவிளையாடல்.

கoo. வரம்பெற்றதனால் செருக்குற்ற துன்முகன்முதலியோர் குணவானில்லாத இடத்திலே அவன் சகோதரரோடு பின்னரும் போர்தொடங்கியவழி, இதனை முன்னரே அறிந்த குணவானால் தெரிக்கப்பட்ட தெய்வப் படைக்கலங்களையுடைய அவனுடைய சகோதரர்களால் துன்முகன் முதலியோர் தோல்வியுற்றது.

கக. தமையனால் வேண்டிக்கொள்ளப்பட்ட குணவான்செய்த தோத்திரத்துக்கு மகிழ்ந்த சித்தி புத்திகளோடுகூடிய கணேசரது திருவருளால் உண்டாகியதும், பலப்பலவளங்களோடும் யாகோபகரணங்களோடுங் கூடியதுமான சிறந்த நகரத்திலே குணவான்தமையன் எண்ணிறந்த இராசசூயங்களும் பரிமேதவேள்விகளுஞ் செய்தமை கூறுதல்.

கஉ. நாடோறும் அன்பினாலே தரும்புமாலை தொடுத்துச் சாத்திய மங்கலை என்னும் பார்ப்பனக் கன்னிகைக்குத் தீர்க்கமாங்கல்யமும் சகலசித்திகளும் அளித்தருளலாகிய கணேசப்பெருமானது இரண்டாவது திருவிளையாடல்.

கங. மங்கலையின்கருணையால் குட்டநோய் நீங்கப்பெற்ற ஏமாங்கன் என்னும் அரசகுமாரனது சரித்திரம்.

௧௪. மதாலசை குவலயாசுவன் என்போரது சரித்திரமும், அரக்கனது மாயையால் மதாலசையின் மரணமும், குவலயாசுவனுக்கு நாகராசகுமாரர்களோடு நட்பும் கூறுதல்.

௧௫. தன் குமாரர்களுக்கு நண்பனாகிய குவலயாசுவனை மகிழ்வுறுத்த விரும்பிய நாகராசன் திருநாரையூரிலே கபில முனிவர் கூறியவிதிப்படி நீலோற்பலதடாகம் அமைத்து இலக்ஷார்ச்சனை செய்ய அவன் பொருட்டு மதாலசையை உயிர்ப்பித்தளித்தலாகிய திருநாரையீசரது இரண்டாவது திருவிளையாடல்.

௧௬. மதாலசையின் புதல்வனாகிய அலர்க்கனென்பவன் கணபதி பீசமந்திரசெபஞ்செய்ய அவனுக்குச்சகலசித்திகளுந் தருதலாகிய கணேசரது மூன்றாவது திருவிளையாடல்.

௧௭. அலர்க்கவேந்தன் அறநெறியே அரசியல்செய்த முறைமையும், இந்திரனுந் திருமாலும் அவனைச் சோதனை செய்தமையும், அவ்வேந்தனைச் சோதனை செய்தலாகிய திருநாரையீசரது மூன்றாவது திருவிளையாடலும்.

௧௮. வசிட்டமுனிவருபதேசித்த மிலேச்சதந்திரநெறியே தவஞ்செய்த மௌனசலயோகிக்கு அருள் புரிதலாகிய திருநாரையீசரது நான்காவது திருவிளையாடல்.

௧௯. மிலேச்சம் முதலிய புறச்சமயவியல்பு தெரித்தல்.

௨0. கிருதமுதலிய யுகங்களிலே கணேசப்பெருமான் பலவேறுவகையாக உலகத்துக்கு அருள்செய்த முறைமையும், கலிபுருடனுக்கு வரமளித்தலாகிய கணேசரது நான்காவது திருவிளையாடலும்.

௨௧. பாண்டு மன்னனுக்குப் பாண்டுநோய் நீக்கி வரமளித்தலாகிய திருநாரையீசரது ஐந்தாவது திருவிளையாடல்.

௨௨. தேவரும் அசுரரும் பாண்டவர்முதலியோராகப் பிறந்த இரகசியங் கூறுதல்.

௨௩. ஸ்ரீகிருட்டினனுக்குப் பேரன்மகனாகிய நாகசுந்தரனுக்குச் சகலசித்திகளுங் கொடுத்தலாகிய கணேசரது ஐந்தாவது திருவிளையாடல்.

உச. துரோணனுக்கும் அசுவத்தாமாவுக்கும் வரங்கொடுத்தலாகிய திருநாரையீசரது ஆறுவது திருவிளையாடல்.

உரு. சங்கட்டகாணம் என்னும் விரதமநுட்டித்த பாண்டவர் கிருட்டினன் முதலியோருக்குஅருள்செய்தலாகிய கணேசரது ஆறுவது திருவிளையாடல்.

உசு. பிரதோஷவிரதமநுட்டித்த சிவதாசசிவாசாரியருக்குச் சந்திரசேகரன் எனப் பெயரிய புத்திரப்பேறளித்தலாகிய திருநாரையீசரது ஏழாவது திருவிளையாடல்.

உஎ. ஆதிசைவம் முதலிய சைவபேதங் கூறுதல்.

உஅ. சந்திரசேகர சிவாசாரியருக்குஅருள் செய்தலாகிய கணேசரது ஏழாவது திருவிளையாடல்.

உகூ. நம்பியாண்டார்நம்பி என்னும் அன்பர்பெருமானுக்கு அருள் செய்தலாகிய கணேசரது எட்டாவது திருவிளையாடல்.

௩0. அன்னை பிதா மனைவி என்னும் மூவரையுங் கொலைசெய்து வேசிபால் வீழ்ந்த பார்ப்பனக்கடையோனது தீச்செயல் கூறல்.

௩௧. இயமனாலே நரகத்துன்பங்களை அநுபவித்து மீண்டு வேறொருபிறப்பில் வைசியனாகிப் பிறந்து எஞ்சி நின்ற தீவினைப்பயனால் தாங்கவொண்ணாத குட்டநோயுற்றுப் பத்தியோடு தம்மை வழிபாடுசெய்த அவ்வேதியனுக்குக் குட்டநோய் தீர்த்தருளுதலாகிய திருநாரையீசரது எட்டாவது திருவிளையாடலும், சிறகிழந்தநல்லூர் வரலாறும்.

அத்தியாயவிஷயக்குறிப்பு முற்றிற்று.

பிழையுந்திருத்தமும்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௩	க0	எண்பத்தைந்து	அறுபத்தாறு
கச	கஉ	பிரம்மா	பிரமா
ருசு	௩உ	சுசிலே	மங்கலே
சுரு	க	பதின்மூன்ருவது	பதிஞன்காவது
சுசு	கஎ	குவலாயா	குவலயா
	ககூ	நாஞெளி	நாஞெலி
,,	௩௩	பட்டிணத்	பட்டினத்
,,	,,	லோகத்தை	லோகத்தைக்
சுஅ	௩	பெற்று	பெற்றுப்
எ0	ச	பொருட்டு	பொருட்டுப்
எக	உசு	பின்னர்	பின்னர்ப்
,,	௩0	பின்னர்	பின்னர்த்
எஉ	ச	பதிரேரு	பதிஞெரு
,,	கஎ	சகசிர	சகச்சிர
,,	உக	பின்னர்	பின்னர்ப்
,,	உ௩	சுவாமியை	சுவாமியைத்
எ௩	கச	ஒன்றறை	ஒன்றரை
,,	உகூ	எம்மால்	எம்பால்
எரு	கரு	வணங்கி	வணங்கிப்
எஎ	அ	திரமுமா	திரமா
	ககூ	பிரார்த்திக்க	பிரார்த்திக்கக்
எஅ	ச	மாக	மாகத்
	கக	பொருட்டு	பொருட்டுப்
எகூ	க	பதிஞரா	பதிஞரு
,,	க௩	முற்றுகோடி	முற்றுக்கோடி
அ0	கூ	அணைத்து	அணைத்துப்
,,	கக	வாங்கி	வாங்கிச்
,,	கஎ	அம்பரா	அம்பரு
,,	௩ச	களும்ள	களும்

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருநாரையூர்ப்புராணம்.

*விநாயகர் காப்பு.

உலக முய்ந்திடத் திருமுறை சேரிட முணர்த்தி
நலமி குந்திருத் தொண்டர்தஞ் சரிதமு நல்கிப்
புலந லந்தரு நாரையூர்ப் புகர்முகப் பெருமான்
இலகு பொன்னடித் தாமரை யிறைஞ்சியேத் தெடுப்பாம்.

கடவுள் வணக்கம்.

சிற்சபாநாதர்

நலஞ்சாரு மெழுத்தஞ்சிற் றிருமேனி
நயந்தருளி நலமில் லாத
மலஞ்சாய வழுக்கியரு டானெடுத்தே
யுதறியிரு மாயை தம்மை
வலஞ்சாரு மெரியேந்தி யிருவினைசுட்
டுயிர்கள்சுக வாரி மூழ்கப்
பொலஞ்சாரு மம்பலத்துட் டிருநடஞ்செய்
பெருமானைப் போற்றி வாழ்வாம். (க)

சிவகாமசுந்தரி.

மூவகையா முயிர்வருக்க மெனும்புதல்வர்
மலநோய்கண் முழுது நீங்கித்
தாவரிய சுகவாழ்வு பெறுவதனுக்
கிறையவனார் தாங்கொள் கின்ற
ஓவரிய திருமேனி யனைத்துமளித்
தவராட லுவந்து நோக்கி

---

* இக்காப்பு முதலிய செய்யுள்கள், சூரியனார்கோயிலாதீனம், ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமிகள் இயற்றியன.

மேவடியா ருளக்கமலம் விற்றிருக்கு
மன்னைபதம் விரும்பி வாழ்வாம்.

சௌந்தரேசர்

பகர்மார்க் கண்டர் திருநாரை பாண்ட வாதி பலர்முன்னாள்
அகமா ரன்பால் விதியுளியே யருச்சித் திறைஞ் சவவ்வவர்க்குத்
தகமாக் கருணை புரிந்தருளித் தமியேம் பிறவி நீங்கலம்
மிகமா வளஞ்சேர் திருநாரை யூர்வாழ் விமலன் ருள்பணிவாம்.

திரிபுரசுந்தரி.

பெருநா கப்பணி யுடனே குழவிப்
பிறையுஞ் சடைமிசை யணியும் பெருமான்
இருநா ழித்தரு மருகென் முதலா
வெண்ணுன் கறமும் பெருகப் புரிவாள்
தருநா கத்தவர் முதலெவ் வுயிருக்
தழையத் தழையும் பொழிலிற் றிகழும்
திருநா ரைப்பதி வளருங் கருணைத்
திரிபுர சுந்தரி சரணம் பணிவாம். (௪)

பொல்லாப்பிள்ளையார்.

தன்னைக் குறித்த திருப்பணியுஞ்
சான்றோர் பிறர்க்குச் செயும்பணியும்
முன்னைத் தனது வழிபாடு
முடிப்போர்க் கினிதா முடிப்போனை
என்னை நினைத்துத் தனதுபணி
யியற்றப் பணித்த விபமுகனைப்
புன்னைத் தருச்சூழ் திருநாரைப்
பொல்லா முதல்வன் றனைப்பணிவாம். (௫)

சித்திபுத்திகள்.

பத்தி யிற்செய் பணிசிறி தாயினும்
உத்த மத்திரு வோடுமெய் வீடுநல்
சத்தி வத்திரத் தண்ண லகத்தமர்
சித்தி புத்திகள் சேவடி போற்றுவாம். (௬)

சுப்பிரமணியர்.

மன்னு மூவிரு கண்களு நுதலிடை மறையப்
பன்னு வாரிசக் கரமுக விழிகண்முப் பானும்
அன்னை மாரிரு பாகமு மாமரு ளுருக்கொண்
டென்னை யாடிரு முருகனல் லிணையடி பணிவாம். (எ)

திருநந்திதேவர்.

சுருதிச் சென்னியின் மெய்ப்பொருட் டொகையினை விரியாத்
தருநற் சைவநூற் பொதுச்சிறப் பியல்பெலாஞ் சாலத்
தெருளச் சொல்சிவ ஞானபோ தம்புவி தேற
அருளிச் செய்குரு நந்திதா ளகந்தழீஇத் தொழுவாம். (அ)

அகத்தியர்.

இன்னியற் றமிழி னூனு மிளநறுந் தென்ற லானும்
தன்னுளத் தருளின் றண்மை தரணியோர் தெளியக் காட்டி
என்னுளச் சிலையின் மீது மிருந்தருள் பொதியத் தாசான்
மன்னகத் தியன்பொற் பாத மலர்தலைக் கணிந்து வாழ்வாம். (கூ)

சமயகுரவர்.

கருஞால முண்டவன் பிரமாதி தேவருங்
காணாமை வெந்தழற் றானாகி நின்றவெம்
பெருமா னடித்தொண்டி னுயர்வீறு தேறவும்
பேரா வியற்கைமெய் வீடேய வும்புவி
வருஞான சம்பந்தர் வாகீசர் சுந்தரர்
மணிவாச கங்கோவை தருமன்ப ரென்னுமித்
திருமா னெழிற்சமய குரவோர்த மின்னருட்
டேனூறு செங்கமல பாதங்கள் போற்றுவாம். (கo)

நம்பியாண்டார்நம்பிகள்.

முன்னரு மறைக ளுன்கா வகுத்திடு முனிவ னைப்
பன்னருந் தமிழ்வே தங்கள் பதினொரு முறைக ளாக
மன்னிட வுலகி லென்றும் வகுத்தவன் கருணைச் செல்வம்
துன்னிய நம்பி யாண்டார் நம்பிதா டொழுது வாழ்வாம். (கக)

சேக்கிழார்.

அங்க ணன்றரு மாதி யுலகெலாம்
தங்க மார்திருத் தொண்டர் புராணத்துள்
எங்கு மார வியம்பிய சேக்கிழான்
பொங்கு மாணடி போற்றிசெய் வாமரோ. (௧௨)

சந்தானகுரவர்.

பண்ணி னேசையிற் பழத்துறு சுவையினிற் பரன்பால்
நண்ணு கின்றதத் துவிதமா நயமென நவின்றே
வெண்ணெ மேவுமெய் கண்டநல் வியன்குரு மரபிற்
புண்ணி யந்தரு குரவர்தம் பொன்னடி பணிவாம். (௧௩)

சண்டேசுரர்.

தண்டு கொண்டுதன் முதுகினிற் புடைத்தமை
தானறி யாதுள்ளம்
மண்டு காதலிற் பூசனை செய்துழி
வைத்தபாற் குடந்தள்ளக்
கண்டு தாதைதன் றுளெறிந் தீசனர்
கழலடிக் கன்பார்ந்த
தொண்டர் செய்தவே தவமெனத் தெரித்தவன்
றுணையடி தொழுதுய்வாம். (௧௪)

வாழ்த்து.

திருவமர் நாரை யூருறை யீசன்
திருப்பணி செய்யுநல் லன்பர்
பெருகிடு மாயுள் பிணியிலா யாக்கை
பெற்றுயர் திருவொடும் வாழ்க
அருமறைப் பயனுஞ் சைவமு நீறு
மக்கமா மணியுமஞ் செழுத்தும்
தெருளம ரிரு றெணுந்திரு முறையுஞ்
சிறந்துநீ டூழிவா ழியவே. (௧௫)

திருச்சிற்றம்பலம்

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

திருநாரையூர்ப் புராணம்.

கணபதிவணக்கம்.

𑌵𑌨𑍍𑌦𑍇 𑌗𑌜𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌦𑌨𑌂
𑌵𑌾𑌮𑌾𑌙𑍍𑌕𑌾𑌰𑍂𑌢𑌵𑌲𑍍𑌲𑌭𑌾𑌶𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌮𑍍 ।
𑌕𑍁𑌙𑍍𑌕𑍁𑌮𑌰𑌾𑌗𑌶𑍋𑌣𑌂
𑌕𑍁𑌵𑌲𑌯𑌿𑌨𑍀𑌜𑌾𑌰𑌕𑍋𑌰𑌕𑌾𑌪𑍀𑌡𑌮𑍍 ॥

சிறந்தயானைமுகத்தையுடையவரும், இடதுதுடையிலமர்ந்த வல்லபையாற்றழுவப் பெற்றவரும், குங்குமமளாவிய செஞ்சந்தனம் போன்ற சிவந்த நிறமுடையவரும், நீலோற்பலங்களுக்கு நாயகனாகிய சந்திரனது அரும்பாகிய இளம்பிறையைத் தலைக்கணியாகச் சூடியவருமாகிய, விநாயகப் பெருமானை வணங்குகின்றேன்.

முதலாவது நாரையின் பிறப்புரைத்த அத்தியாயம்.

௧. முன்னொருகாலத்திலே, முனிவர்கள் சூத முனிவரைப் பார்த்து, பதினெண்புராணங்களிலும் ஆகமங்களிலும் மிகுந்த உணர்ச்சியுடையவரே பேரறிவாளரே! இப்பரதகண்டத்திலே போகமும் வீடுந்தருவனவாக முனிவர்களாற் கொள்ளப்பெற்ற க்ஷேத்திரங்களுள்ளே சிறந்த க்ஷேத்திரங்களின் வகைகளையும் அவற்றுள்ளும் மிகச்சிறந்த ஓர் தலத்தின் மாஹாத்மியத்தையும், அடியேங்களுக்குக் கருணையோடு கூறியருள வேண்டுமென்று பிரார்த்திக்க, அவர்களைப் பார்த்துச் சூத முனிவர் கூறுவாராயினர்.

௨. முனிவர்களே! உலகத்திலே கணேசப்பெருமானுக்குச் சிறந்தனவாகக் கூறப்படும் க்ஷேத்திரங்கள் நூற்றெட்டு. அப்

படியே சிவக்ஷேத்திரங்கள் நூற்றெட்டு. விட்டுணுவுக்குரிய க்ஷேத்திரங்களும் நூற்றெட்டாகும். பராசத்திக்குரியன அறு பத்துநான்கு க்ஷேத்திரங்கள். சூரியனுக்குரிய க்ஷேத்திரங்கள் பன்னிரண்டு. இப்படி ஒவ்வொரு தேவதைக்குத் தனித்தனி யே சிறப்பாகிய க்ஷேத்திரங்கள் மகான்களால் வகுத்துக் கூறப் பட்டன.

ரு. இனி, இப்பரதகண்டத்தில் கணேச க்ஷேத்திர முதலா கவுள்ள ஐந்துவகைத் தலங்களுள் இரண்டு தேவதைகட்கு இருப் பிடமாகிய தலங்கள் தொளாயிரத்தறுபது. சிவனுக்குரியக்ஷேத் திர முதலாகவுள்ள ஐந்து தலங்களுள் மூன்று தேவதைகட்கு இருப்பிடமாகிய தலங்கள் நானூற்றெண்பது. விஷ்ணுக்ஷேத்திர முதலாகவுள்ள ஐந்திலுள் நான்குதேவதைகட்கு இருப்பிடமா கிய சிறந்த தலங்கள் இருநூற்றுநாற்பது. ஐந்து தேவதைகட் கும் இருப்பிடமாகிய திவ்வியஸ்தலங்கள் நூற்றிருபது. இவ்வாறு ஸர்வாபீஷ்டங்களையும் கொடுக்கவல்லனவும் பரதகண்டத்திற் சிறந்தனவுமாகிய தலங்கள் தொகையால் இரண்டாயிரத்திருநூறு என்று பெரியோர்களாற் கூறப்பட்டன.

சு. கணேசப்பெருமானுக்கும் மற்றொரு தெய்வத்திற்கும் உரியவாகிய புத்திமுத்தி தரும் க்ஷேத்திரங்கள் வேதாகமங்க ளில் வல்லவர்களால் பிராசாதங்கள் என்று கூறப்படும்.

கணபதி, சிவன் என்னும் இருவருக்குமுரிய தலம் சிவப் பிராசாதம் என்று புராணங்களிலே கேட்கப்படுகின்றது. சிவப் பிராசாதமாகிய க்ஷேத்திரங்கள் நூற்றெட்டாகும். அந்த நூற் றெட்டுச் சிவப்பிராசாத க்ஷேத்திரங்களுள்ளும் விரைவிற் சித்தி தருவதும், போகம் மோக்ஷம் இரண்டையுந் தரத்தக்கதுமாகிய உத்தம க்ஷேத்திரம் திருநாரையூர் ஒன்றேயாம். அந்த க்ஷேத் திரத்தின் மான்மியத்தை ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமான் சனகர் முதலிய முனிவர்களுக்கு உபதேசித்தருளினர். அவர் உபதே சித்தபடியே அத்தலமான்மியத்தை உங்களுக்குக் கூறுவேன். அன்புடன் கேளுங்கள் என்று சூதமுனிவர் கூறுவாராயினர்.

எ. ஒரு காலத்தில் சனகர் முதலிய இருடிகள் முருகப்பெ ருமானைத் தரிசித்து வணங்கி, ஆறு திருமுகங்களையுடையவரே! தேவசேனாபதியே! எல்லாத் தத்துவங்களையும் உணர்ந்தவரே!

திருநாரையூர் என்னுந் தலத்தின் மான்மியத்தை அடியேங்களுக்குக் கருணை கூர்ந்து உபதேசித்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, முருகப்பெருமான் திருவாய்மலர்ந்தருளினர்:—

௬. திருநாரையூர் என்பது அநேக தலங்களுள்ளே மிகவும் உத்தமமானது. அங்கே விநாயகப் பெருமான் எட்டுத் திருவிளையாடல்களைச் செய்தருளினர். அப்படியே பக்த பரிபாலகராகிய சிவபெருமானும் எட்டுத் திருவிளையாடல் புரிந்தருளினர். இப்பதினறு திருவிளையாடல்களோடு முப்பத்தொரு அத்தியாயங்களால் அலங்கரிக்கப்பட்டதும், ஆயிரத்தெழுநூற்று எண்பத்தைந்து கிரந்தங்களை உடையதுமாக விளங்குவது இத்திருநாரையூர்த் தலமான்மியம்.

௭. இராசேந்திர பட்டணத்திலுள்ள சிவாலய பூசகர்களாகிய ஆதி சைவர்கள் வசிக்கப்பெறுவது உத்தமமாகிய க்ஷேத்திரங்களுட் சிறந்த திருநாரையூர். அந்தத் தலத்தின் மான்மியத்தைக் கூறுவேன். அன்போடு கேளுங்கள்.

௮. பிரமாவினுடையபுத்திரனும் மேதாவியும்தர்மப்பிரஜாபதி என்று பிரசித்தி பெற்றவனுமான சிறந்த முனிவன் ஒருவன் இருந்தான். அவன் இலக்குமிநாதனுகிய விட்டுணுவை நன்ருக உபாசித்து அவனையே தனக்குப் புத்திரனுக வரவேண்டுமென்று பிரார்த்தித்தான். அருளாளனுகிய விட்டுணுவும் அவன் வேண்டுகோட்கிணங்கி நரநாராயணர் என்னும் இரண்டுருவங்கொண்டு அவனுக்குப் புத்திரராய் அவதரித்தான். அதனல் தருமப் பிரஜாபதி முனிவன் சந்தோஷமடைந்தான்.

௯. நரநாரயணர் இருவரும்விஷ்ணுவின் உண்மையான அம்சமாய் உதித்தவர்களாதலின், அநேக முனிகணங்களால் வணங்கப் பெற்றுத் தவநிலையிலிருந்து தங்கள் தபசினலே அம்பிகா சமேதராகிய பரமசிவனை மகிழ்வுறச் செய்தனர்.

௧0. இங்ஙனமொழுகுநாளிலே முற்கலமுனிவனுக்குப்புத்திரனுகிய புருசுண்டி என்னும் முனிபுங்கவன் கஜாநந கணேசான என்பன முதலிய கணபதி திருநாமங்களைக் கூறிப் பஜனைசெய்துகொண்டு அரிபிரமேந்திராதி தேவர்களாலுந் தொழப்படும் பாத தாமரையையுடையவனுய்த் தெய்வச் செயலாய்ப் பதரிகாவன மார்க்கமாய் முற்கலாச்சிரமத்தை நோக்கிச் செல்வானுயினன்.

கக. அப்போது அம்மகானைக் கண்டதும் நான்முதலாகிய முனிவர்கள் ஆசனம் விட்டெழுந்து அவனை அன்போடு வழிபட்டார்கள். நாராயண முனிவன் மாத்திரம் அவனைக் கண்டு அநாதரவு செய்து மோகத்தால் ஆசனம் விட்டெழாமலும் வழிபாடியற்றாமலும் வாளாவிருந்தான். அங்ஙனமிருத்தலை மௌத்கல்யன் கண்டதும் அதிக கோபமுற்று 'அடே! தருமனுக்குப் பிறந்த அதமனே! நாரைபோல் கெடிய சரீரத்தையுடையவனே! ஞானத்தையிழந்த பிராமண அதமனே! நீ நாரையின் கர்ப்பத்திலே பிறந்து பூமியில் வஞ்சனையோடு கூடியவனாயிரு' என்று சபித்து மேற்செல்வானாயினன்.

கஉ. அதைக்கேட்டதும் யோகியாகியநாராயணமுனிவன் பயந்து அந்தப் புருசுண்டி முனிவனைத் தண்டாகாரமாய்ப்பாதங்களில் விழ்ந்து வணங்கினன். அடிக்கடி வணங்கிச் சாபத்தை நீக்கியருளும்படி பிரார்த்தித்தான். அவனது பிரார்த்தனையைக் கண்டு இரக்கமுற்ற புருசுண்டிமுனிவன் "ஓ அறிவிலியே! நீ நாரையாகப் பிறந்து உனது பூர்வஞானங் கைவரப்பெற்று விநாயகப் பெருமானை அருச்சிப்பாய், அப்பெருமானருளால் என்னை இகழ்ந்த இப்பாவம் நீங்கும்; ஐயமில்லை. அதன்மேல் உன்னால் விரும்பப்பட்ட சிவலிங்கத்தைப் பூசித்து நாரை வடிவத்தினின்றும் நீங்கி முன் வடிவை அடைவாய்." என்று பதரீவநவாசியாகிய நாராயணனுக்கு அநுக்கிரகஞ் செய்து முற்கலாச்சிரமத்தை நோக்கிச் சென்றான்.

கங. உடனே அந்நாராயணமுனிவன் ஒரு நாரை வயிற்றிலே பிறந்து நாராயணபக்ஷி என்று மூவுலகத்திலும் பிரசித்திபெற்று அநந்தேசுரம் என்னுஞ் சிறந்த தலத்தை அடைந்து கிழக்கு முதலிய எழுதிக்கிலும் சிவபெருமானைப் பூசித்து ஈசானிய திக்கை அடைந்து அங்கே சௌந்தர்யநாயகி சமேதராய் மிக்க அற்புதமாய் விளங்கும் சிவலிங்கப்பெருமானையும் அதனருகே ஒரு விநாயகப்பெருமானுடைய திருவுருவத்தையுங் கண்டான். அப்பக்ஷியாசு அங்கே தியான நிட்டையிலமர்ந்த சித்தனாகிய பகமுனிவனையும் தரிசித்து அதிக விநயத்துடன் நமஸ்கரித்தது.

கச. அம்முனிவன் ஞானக்கண்ணால் அப்பக்ஷியாசைத் தருமனது புத்திரனாக அறிந்து தன்னிடத்தே வந்திருந்த மார்க்கண்டேயனோடு உரிய முறையால் உபசரித்துக் கொண்டாடினன்.

பிறகு மார்க்கண்டேயனுக்கு அதன் பிறப்பு வரலாற்றையுங் கூறினான்.

கரு. அது கேட்ட மார்க்கண்டேயனும் அப்பக்ஷியரசை ஆதரவோடு உபசரித்துப் பூசித்தான். அந்தப் பகமுனிவனுச்சிர மத்திலேயே பக்ஷியரசாகிய நாரையும் பகமுனிவனும் மார்க்கண்டேயனும் மிகுந்த மகிழ்ச்சியுடன் சுகமாக வசித்து வந்தார்கள்.

முதலாவது அத்தியாயம் முற்றிற்று.

இரண்டாவது பகமுனிவன் தோற்றமுரைத்த அத்தியாயம்.

குமாரக்கடவுள் சனகாதியருக்குக் கூறுகின்றார்:—

க. முனிவர்களிற் சிறந்த நாராயண முனிவனது அவதாரமாகிய நாரைப் பக்ஷியானது தியானசமாதியிலிருக்குஞ் சித்தனுகிய பகமுனிவனைப் பார்த்து அன்போடு வணங்கி, ஓ சிவயோக சித்திபெற்ற முனிவர் பெருமானே! என்சாபவிமோசனத்தின் பொருட்டு விநாயகப் பெருமானும் சிவபெருமானும் என்னால் பூசிக்கத் தக்கவர்கள். எந்தத் தலத்தில் எவ்விதம் பூசிக்க வேண்டுமோ அதை எனக்குத் தண்ணளியோடு தேவரீர் உபதேசித்தருள வேண்டும் என்று கேட்டது.

உ. பகமுனிவன் அதனைக்கேட்டுச் சிவப் பிராசாதங்களிற் சிறந்ததும் என்னுடைய ஆச்சிரமமானதும் புண்ணியம் நிறைந்ததுமாகிய இந்தத் தலத்தில் என்னாலும் என்னுடைய மித்திரனுகிய மார்க்கண்டேயனுலும் நன்ருகப் பூசிக்கப்பட்ட இவ்விநாயகப் பெருமானையும் உமாபதியாகிய இச்சிவலிங்கப் பெருமானையும் முறைப்படி நீ அருச்சிப்பாயாக. விரைவில் உனக்கு இட்ட சித்தியும் சாபவிமோசனமும் உண்டாகும் என்று உபதேசித்தான்.

ங. நாரையானது இவ்வாறு பகமுனிவனுற் சொல்லக்கேட்டதும் ஓ முனிபுங்கவரே! சித்தரே! மிகுந்த பாக்கியத்தை உடையவரே! புண்ணியத்தைத் தரவல்ல உம்முடைய சரித்திரம் யாது? உம்மால் இவ்விநாயகரும் சிவலிங்கமும் எவ்வாறு அருச்சிக்கப்பட்டார்கள்? என்ன சித்தி உங்கட்கு உண்டாயிற்று? எல்லாவற்றையும் எனக்குத் தண்ணளியோடு கூறவேண்டும் என்று வினவப் பகமுனிவன் கூறுகின்றான்.

௪. அங்கிரசின் கோத்திரத்திற் பிறந்த மகாமுனிவராகிய முற்கலர் என்னும் பெயரையுடைய ஒரு சித்தர் லோகாநுக்கிரகத்தின் பொருட்டுப் பூமியெங்கும் தலயாத்திரை செய்துவந்தார். அப்போது இந்திரத்தியும்நமென்னும் தடாகத்தில் ஆணும் பெண்ணுமாகிய ஒரு கொக்கினது தம்பதிகள் வசித்து வந்தன. அவற்றுள் காலகதியாலிறந்த புருடனாகிய கொக்கைப் பார்த்துப் பெண் கொக்கானது மிகுந்த கவலையோடு அழுதுகொண்டிருந்தது. வருந்தி இளைத்த அப்பெண் கொக்கினது மகிழ்ச்சியின் பொருட்டு அம்முனிவர் அவ்வாண் கொக்கின் காயத்தினுள்ளே பிரவேசித்து உயிர்த்தெழுந்து அப்பேடையோடு விளையாடிக் கொண்டு ஒருவருடகாலம் உடன் வசித்துக்கொண்டிருந்தார்.

௫. அப்போது அவரால்அப்பெண்கொக்கினிடத்தே யான் கருப்பத்திலே ஞானம் நிரம்பிக் கொக்குருவாகப் பிறந்தேன். பிறந்ததும் ஞானவிசேடத்தால் யான் பிதாவாகிய அம்முனிவரை ஒரு சித்த புருடரென அறிந்து அவரையே மோக்ஷோபாயத்தை உபதேசிக்கும்படி வேண்டினேன். அவர் தம் பெயராலாகிய புராணத்தை எனக்கு உபதேசித்தார்.

௬. அம்முற்கலருடைய சேர்க்கையாலும் மௌத்கல்யம் என்னும் ஞானநூற் கேள்வியாலும் எனது தாயானவள் விரத்தியையடைந்து உறுதியான யோகத்தோடு முற்கலருடைய ஆணைப்படி ஆன்மயோகத்தில் விருப்புற்றவளானாள்.

௭. நான்அப்பிதாவாகிய முற்கலரது கிருபையினாலேயோகத்திலும் ஞானத்திலும் பாரங்கதனாய்ப் பரமான்மத்தியானத்தில் விருப்புற்றவனானேன். முற்கலரும் பிறகு தனது இருப்பிடத்தை அடைந்தார். என்னுடைய தாயும் இப்பூதவுடலை நீத்துப் பிரமலோகத்தை அடைந்தாள். நான் தியான சமாதியில் விருப்புடையவனாய் அங்கேயே மகிழ்ச்சியோடு வசித்திருந்தேன்.

௮. அப்போது வேநன் என்னும் அரசனது பாபத்தினாலும் இரணியனுடைய பாபத்தினாலும் பூமியானது தனது வீரியத்தை இழந்தும் நீர் நிலைகளின்சிர் நிலைகள் குலைந்தும் போயிற்று. தடாகங்களிலும் நீரில்லாமையால் பசுபக்ஷிகளெல்லாம் யானிருந்த இந்திரத்யும்நமென்னும் தடாகத்தை அடைந்தன. அப்

பொழுது நான் அப்பிராணிகளின் கூட்டத்தினாலே அத்தடாகத்தைவிட்டு மனிதர் இல்லாததும் பிராணிகளில்லாததுமான இந்தத் தலத்தையடைந்து தவஞ்செய்யத்தொடங்கினேன்.

கூ. மூலாதாரத்திலே கணபதியையும், சுவாதிட்டானத்தில் பிரமாவையும், மணிபூரகத்தில் மகாவிட்டுணுவையும், அநாகதமாகிய இருதயத்தில் அழிவற்றவனாகிய உருத்திரனையும், விசுத்தியில் பார்வதிசமேதராகிய மகேசுவரனையும், ஆஞ்ஞையில் சதாசிவனையும் தியானித்து ஆயிரம் வருடம் தாரகமந்திரத்தையிடைவிடாமல் செபித்து வந்தேன்.

க0. அப்போது சுவாதிட்டானத்தை அடைந்த பிரமதேவர் தேசோரூபத்தோடு கூடி ஒரு பீடரூபமாக அமைந்தார். அப்போது அணிமா என்னும் சித்தி என்னை அடைந்தது.

பிறகு ஆயிரம் வருடம் மணிபூரகத்தைஅடைந்த விட்டுணுவானவர் எனது தியானயோகத்தால் யோகபீடசொரூபமாகத் தோன்றினார். அப்போது மகிமா என்னும் சித்தி என்னை அடைந்தது.

பின்னும் ஆயிரம் வருடத்துக்கப்பால் அநாகதத்தையடைந்த ஸ்ரீருத்திரர் தமது குணவடிவமான உருவத்தை விட்டு, வடிவமற்றதும் மேன்மையுற்றதுமான ஒரு தேசோரூபத்தைக்கொண்டு தோன்றினார். அப்பொழுது கரிமா என்னுஞ் சித்தி என்னை அடைந்தது.

அப்பால் ஆயிரம் வருடமானபிறகு விசுத்தியின்கண் மகேசுரர் நிராகாரமான தேசோரூபமாய்த்தோன்றினார். அப்போது இலகிமா என்னுஞ் சித்தி என்னை அடைந்தது.

பின்னும் ஆயிரம் வருடத்துக்கப்பால் சதாசிவர் பிரமதேசோரூபமாகத் தோன்றினார். அப்பொழுது பிராப்தியென்னுஞ் சித்தி என்னை அடைந்தது-

பின்னர் ஆயிரம் வருடங்களின் மேல் மகாருத்திரர் முதலியவர்களின் ஒளியெல்லாம் ஓரொளிமயமாய்க் கூடித்தோன்றின. அப்போதுபிராகாம்மியம் என்னும்சித்தியும் என்னைஅடைந்தது.

பிறகு ஆயிரம் வருடங்களின் மேல் அவ்வொளியானது பிராம்ம வைணவ பீடங்களோடு கூடிய இலிங்கரூபமாகத்தோன்

றிற்று. அப்போது ஈசுவரத்தன்மையை அளிக்கவல்ல ஈசத்துவம் என்னுஞ் சித்தி என்னை அடைந்தது.

௧௧. பிறகு ஆயிரம்வருடங்களின்மேல் தியானத்தில் விருப்புடைய எனக்குமுன்னே மிகப்பெரியதும் பரஞ்சோதி சொரூபமுடையதும் உலகத்திற்கு மேலான காரணமானதுமாகிய மகாலிங்கம் வெளிப்பட்டுத் தோன்றியது. இருதயத்தில் தோன்றிய இலிங்கம் உடனே காணப்படாமையால் கண்ணை விழித்துப் பார்க்க எதிரே தோன்றுவதைக் கண்டேன்.

அவ்விலிங்கத்தின் மத்தியில் மேலானவரும் சம்புவும் பராசத்தியொருபாதியிற் பொருந்திய திருவுருவுடையவரும் மாயையை உடையவரும் ஈசானரும் ஆகிய பரமேசுவரரைப் புறக் கண்ணால் நான் தெரிசித்து நமகமந்திரங்களால் வணங்கித் தோத்திரஞ் செய்தேன்.

பகமுனிவர் கூறிய தோத்திரங்கள்.

௧௨. (1) எப்பொழுதும் எல்லாவுயிர்கட்கும்உணவையளிப்பதும், வினைகட்கு ஏதுவானதும், மகாசித்தர்களும் தேவர்களும் இருடிகளுமாகிய கூட்டங்களுக்கு ஆதாரமானதும், உயிர்களுக்குப் போகமோக்ஷங்களை அளிப்பதுமாகிய பூமி ரூபமானவரும் பராகாச ரூபமுடையவருமான மகாலிங்கமாகிய உம்மைத் துதிக்கின்றேன்.

௧௩. (2) தனது அம்சத்தாற் றோன்றிய நதிகள், கூபங்கள் வாவிகளாகிய இவற்றால் உலகத்தின் உயிர்வாழ்வை உண்டுபண்ணுவதும், பிரமசிருட்டியில் முதலாவதும், தாகம் முதலியவைகளைப் போக்குவதும் முதன்மை பெற்றதுமான சலரூபமானவரும், பராகாசரூபமுடையவருமாகிய மகாலிங்கத்தைத் துதிக்கின்றேன்.

௧௪. (3) அவிசுகளைக் கொடுத்தற்குரிய சிறந்த மந்திரங்களாலே தேவதைகளின்பொருட்டுத் தன்னிடத்தே ஓமஞ் செய்யப்பட்ட அவிசுகளை அத்தேவர்கள்பாற் செலுத்துவதும், உலகத்துயிர்கள் சீவிக்க ஏதுவான மருந்தாயுள்ளதும், பூமிக்குச் சுத்தத்தைச் செய்வதுமான அக்கினிரூபமானவரும் பராகாசரூபமுடையவருமாகிய மகாலிங்கத்தைத் துதிக்கின்றேன்.

கரு. (4) உயிர்களின் பிராணரூபமானதும், கண்ணுக்குத் தெரியாததும், பரிசுத்தமானதும், உலகமெங்கும் வியாபித்ததும் சுகமான பரிசத்தால் அறியப்படுவதும் அனேக அண்டங்களை நிலைபெறுத்துவதுமான வாயுரூபமானவரும், பராகாசரூபமுடையவருமாகிய மகாலிங்கத்தைத் துதிக்கின்றேன்.

கசு. (5) வியாபகமானதும் எவற்றையுந் தன்னுள்ளடக்கி நிற்பதும் காதுக்குப்புலனாகின்ற சத்தகுணத்தையுடையதும், அருவமானதும் சரீரத்தில் மகேசாநனுக்கு உறையுளாவதும், கண்டிக்கப்படாததும் வடிவமில்லதுமான ஆகாசரூபமாயிருப்பவரும் பராகாசரூபமுடையவருமாகிய மகாலிங்கத்தைத்துதிக்கின்றேன்.

கஎ. (6) இருட்படலங்களை அழிப்பதும் சனங்களின் அஞ்ஞானங்களைப் போக்குவதும், வேதசிரசுகளின் சாரமானதும், பரப்பிரமமும் சமுசாரத்தின் கரையாயிருப்பதும் உலகத்தின் நேத்திர வடிவானதுமான சூரியரூபமானவரும் பராகாச ரூபமுடையவரும் ஆகிய மகாலிங்கத்தைத் துதிக்கின்றேன்.

கஅ. (7) சூரியதாபத்தைப் போக்குவதும், அந்தணர்கட்குத் தலைவனும், அமுதத்தைப் பெருக்குகின்ற கிரணங்களால் தேவர்களை எப்பொழுதும் மகிழ்விக்கின்றதுமான சந்திரரூபமானவரும், பராகாச ரூபமுடையவருமான மகாலிங்கத்தைத் துதிக்கின்றேன்-

ககூ. (8) வஷட் வௌஷட் முதலியவைகளை இறுதியிலுடைய மகாமந்திரத் தொகுதிகளோடு கூடிய அநேகயாகக்கூட்டங்களால் தேவர்களை மகிழ்விக்கின்ற சோமயாஜியான இயமான ரூபமானவரும் பராகாச ரூபத்தையுடையவருமான மகாலிங்கத்தைத் துதிக்கின்றேன்.

உ0. எட்டு மூர்த்தங்களையுமுடைய மகாலிங்கத்தின் தோத்திரமாகிய இந்த எட்டுப் பாசுரங்களையும் எவர்கள் பரிசுத்தராய் முப்போதும் இடைவிடாமல் அன்புடன் பாராயணஞ் செய்கின்றார்களோ, அவர்கள், வணங்குவோர்க்குக் கற்பதருவாக உள்ள மகேசனுடைய அருளால் போக மோக்ஷங்களை நிச்சயமாகப் பெறுகின்றார்கள்.

உக. இவ்வாறு என்னாற்றுதிக்கப்பட்ட மகாதேவர் கருணையோடு கூடி என்னைப் பார்த்துக் கூறுவாராயினர்:— "நரம்பு போல் நீண்ட கால்களையுடைய பக்ஷியே! பகோத்தமனே! எம்

மிடமிருந்து வேண்டிய வரங்களைப் பெற்றுக்கொள். சித்திபெற் றவர்களில் சிரேஷ்டனே ! என்னுடைய சிடனாகிய முற்கலனது மைந்தனே ! வேண்டும் வரங்களைக் கேட்பாயாக” என்று கூறிய கருணாமிருதமான சங்கருடைய திருவாக்கைக் கேட்டதும் யான் ஓ மகாதேவரே ! ஜகத்குருவே ! தேவரீருடைய திருவரு ளால் சிவமாந் தன்மைப் பெருவாழ்வையடைய விரும்புகின்றேன். இந்த லோகத்தில் உமது திருவருளால் இதைவிட யான் வே றொன்றையும் அடையவிரும்பவில்லை இந்தத் தலத்தில் ஆன்ம கோடிகள் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் தேவரீர் இம் மகாலிங்கத்தில் எப்போதும் சாந்நித்தியமாய் எழுந்தருளியிருக்க வேண்டும். பங்குனி மாதத்தில் வரும் உத்தர நக்ஷத்திரமாகிய இன்றய தினத்தில் எவர்கள் இந்த க்ஷேத்திரத்தில் தேவரீரைப் பூசிக்கின்றார்களோ அவர்கள் ஏழாயிரம் வருஷங்களால் முயன்ற டையும் பயனையும் இன்னும் அவர்கள் மனதில் எதை விரும்பி னார்களோ அதையும் கிருபையோடும் தேவரீர் தந்தருளல் வேண் டும் என்று அம்மகேசரைப் பிரார்த்தித்தேன்.

௨௨. அப்போது சம்புவானவர், ‘ஓ நீண்ட கால்களையுடைய பகோத்தமனே ! உன்னுடைய சிரசில் ஆஞ்ஞாமத்தியில் எவற் றிற்கும் காரணனும் வியாபகனுமாகிய நம்மை இவ்விலிங்க சொ ரூபமாக நீ சலனமில்லாமல் தியானிப்பாயாக. மூலாதாரத்திற் சகளநிட்கள சொரூபமான கசமுகனாகவும் எம்மை உபாசிப்பா யாக. ஆயிரம் வருடங்களில் எம்முடைய ஆணைப்படி சிவமாந் தன்மைப் பெருவாழ்வைத்தரவல்ல மகாசித்தியை நீ அடைவாய்; சத்தியம். இதிற் சந்தேகமில்லை. இந்தத் தலத்தில் இவ்விலிங் கவுருவமாகப் பிரமகற்பம் வரையும் உன்னுடைய வேண்டுகோ ளின்படியே சந்தோஷத்தோடு அன்பர்கட்கு அநுக்கிரகஞ் செ ய்துகொண்டு விளங்குவோமென்று திருவாய் மலர்ந்தருளி மகா தேவர் எனது இருதயப் பிரதேசத்தில் அந்தர்முகமானார். இந் தத் தலத்தில்எனது வேண்டுகோளால் அன்பர்களுக்கருளவே ண்டிப் பகேசுவரர் என்னும் பேரோடு சிவபெருமான் இவ்வி லிங்கரூபமாக நிலைபெற்றார். மூலாதாரத்தில் விநாயகரையும் பிர மரந்திரத்தில் மகாலிங்கரூபியான சிவனையும் எப்பொழுதும் தியானித்துக்கொண்டு நான் இருந்தேன் என்று கூறினான்.

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

மூன்றாவது
பொல்லாப்பிள்ளையார் வரலாறுரைத்த அத்தியாயம்.

மேலும் பகமுனிவன் நாரைக்குக் கூறத்தொடங்கினன்.

க. என்னுடையபிரமரந்திரத்தில் தியாநிக்கப்பட்டிருந்த அமுதமயமாகிய சிவலிங்கமானது மூலாதாரத்திலுள்ள சத்தாகிய பிரமத்தின் ஒளியாகிய அக்கினியினாலே உருகி யொழுகுந்தன் மையை அடைந்தது. குண்டலிநீயாகிய அமுதசத்தியானது மூலாதாரத்திலுள்ள மேலான மூலப்பிரகிருதியோடு கலந்து ஆதார மண்டலத்தில் தங்கிற்று. அப்போது யான் காரியகாரணபாவங்களிலிருந்து நீங்கியவனானேன். அப்போது எல்லா உலகங்களையும் வசீகரிக்கும் வசித்துவம் என்னும் சித்தியானது என்னை அடைந்தது.

உ. மூலப்பிரகிருதி ரூபமானதும் துரியாதீதத்தினிடமானதுமான சிறந்த ஆதார சக்கரத்தில் எப்போதும் ஒரே தியானத்துடன் ஆயிரம் வருடமிருந்தேன். அப்போது உண்மையானதும் நிகரற்றதுமான ஒரு சோதி தோன்றிற்று. அதன் மத்தியில் ஞானக்கண்ணால் பரப்பிரம சொரூபத்தைக் கண்டேன். உண்மையான ஆனந்தத்தால் விளங்காநின்ற தமது கோயிலில் செந்தாமரையில் வீற்றிருப்பவரும் சத்தியமான சோதியில் நிருமலராய் விளங்குஞ் செந்நிறமுடையவரும் எப்போதும் கன்மசாக்ஷியாயிருப்பவரும் கழுத்தின் கீழ்ச் சகளமான திருவுருவத்தையுடையவரும் தெளிவாகியமுகத்தையுடையவரும், இரண்டு சத்திகளால் மகிழ்ச்சியோடு தழுவப் பெற்றவரும் தமது கைகளால் அபயம் வரதம் அங்குசம் பாசம் மோதகம் இவற்றைத் தாங்கியவரும் ஆகிய விநாயகப் பெருமானை அன்போடு உயர்ந்த துதிகளாற் பரப்பிரமமாகக் கருதித் துதித்தேன்.

விநாயக தோத்திரங்கள்.

ங. (1) பிறப்பில்லாதவனும், விகற்பமில்லாதவனும், வடிவில்லாதவனும், ஒருவனும், பற்றில்லாதவனும், இரண்டல்லாதவனும், இன்பநிறைவினனும், முன்னோனும், முக்குணமில்லாதவனும், விசேடமில்லாதவனும் விருப்பிலாதவனும், பரப்பிரமரூபனுமான கணேசப் பெருமானை நான் சேவிக்கின்றேன்.

ச. (2) குணங்களைக் கடந்தோனும், முதலானவனும், அறிவின்பவடிவினனும், உயிர்களின் அறிவை விளக்குவோனும்,

அனைத்திலும் நிறைந்தோனும், ஞானத்தால் அறியப்படுவோனும், முனிவரால் தியானித்தற்குரியோனும், ஆகாசவடிவினனும் மேலான இறைவனும் பரப்பிரம ரூபனுமான கணேசப் பெருமானை நான் சேவிக்கின்றேன்.

ரு. (3) உலகங்களுக்கு நிமித்தகாரணனும் காரணங்களைக் கடந்தோனும் ஆளுகின்றவனும் விண்ணோர்க்கு முதல்வனும் இன்பத்திற்கு, முதல்வனும் யுகங்கட்கு முதல்வனும், சிவகணங்கட்கு இறைவனும் உலகெலாம்நிறைந்தோனும் அனைவராலும் வணங்குதற்குரியோனும் தேவர்களை ஆள்பவனும் பரப்பிரமரூபனுமான கணேசப் பெருமானை நான் சேவிக்கின்றேன்.

சு. (4) வேதங்களை அறிந்தோனும், இராசத குணச் சேர்க்கையால் எப்போதும் காரியங்களிலிச்சையுடையவனும் இருதயத்தால் சிந்திக்கத் தக்கவனும், உலகத்தைப்படைப்போனும், எல்லா வித்தைகட்கும் இருப்பிடமானவனும், ஆகிய பிரமாவின் வடிவத்தை அதிட்டிப்பவனும், பரப்பிரம ரூபனுமான கணேசப் பெருமானை நான் சேவிக்கின்றேன்.

எ. (5) எப்போதும் சத்துவகுணச் சேர்க்கையால் மகிழ்சியோடு விளையாடுகின்றவனும், விண்ணோர் பகைவரையழிப்பவனும், உலகங்களைக் காப்பவனும், அநேக அவதாரங்களை உடையவனும், அன்பரறியாமையை நீக்குபவனுமான விட்டுணுவின் வடிவத்தை அதிட்டிப்பவனாகிய கணேசப்பெருமானை நான் எப்பொழுதும் சேவிக்கின்றேன்.

அ. (6) மூன்று கண்களையுடையவனும் உலகங்களையழிப்பவனும், பிறவிக்கடலை நீந்தச்செய்கின்ற ஞானத்துக்குக் காரணனும் எண்ணிறந்த ஆகமங்களால் தன் அன்பர்களை உணர்த்துபவனும், சிவபெருமானது வடிவுடையவனும் தமோகுணச்சேர்க்கையையுடையவனுமாகிய உருத்திரனது வடிவத்தை அதிட்டிக்கின்ற கணேசப் பெருமானை நான் எப்பொழுதும் சேவிக்கின்றேன்.

கூ. (7) இருட்கூட்டங்களை அழிப்பவனும், அன்பர்களின் அறியாமையை நீக்குபவனும், மூன்று வேதத் தொகுதியின் சாரமாயுள்ளவனும், பரப்பிரமரூபனும், இருளின் கரையாகவுள்ளவனும், முனிவர்களுக்கு ஞானத்தைச்செய்பவனும், மிக்க தூரத்திற் சென்ற விகாரத்தையுடையவனுமாகிய சூரியவடிவத்தை

அதிட்டிக்கின்ற கணேசப் பெருமானை நான் எப்பொழுதும் சேவிக்கின்றேன்.

க0. (8) தன்னுடைய கிரணக்கூட்டங்களால் பயிர்களையும் அமுதம் பெருகும் கலைகளால் தேவர் கூட்டங்களையும் மகிழ்விப் போனும் சூரியகிரணவெப்பத்தை நீக்குவோனும், இருபிறப்பா ளர்க்கிறைவனுமாகிய சந்திரனது வடிவத்தை அதிட்டிக்கின்ற கணேசப்பெருமானை நான் சேவிக்கின்றேன்.

கக. (9) ஒளியின் வடிவினனும், ஆகாயவாயுவடிவினனும், வினைக்காரிய முதலியவற்றிற்குக் காரணனும், கலையும் காலமும் வடிவானவனும், பலவேறு தொழில் செய்யும் ஞானக்கிரியாசத்தி, சொரூபமானவனும், அருளே திருமேனியாகவுடையவனும் ஆகிய கணேசப்பெருமானை நான் எப்பொழுதும் சேவிக்கின் றேன்.

கஉ. (10) மூலப்பிரகிருதியும், மகத்தத்துவமும், பூமியும் சலமும், திக்குப்பாலகர் முதலியோரும் அசத்தும் சத்துமாகிய விசுவத்துக்கு அந்தர்யாமியும், விசுவகாரணனும் விசுவரூபியுமா கிய கணேசப்பெருமானை நான் எப்பொழுதும் சேவிக்கின்றேன்.

கங. (11) விசாலமாய் விளங்குகின்ற சூரியமண்டலத்திலி ருக்கின்ற இந்தச் சனமானது இருளின் துன்பத்தை எப்படி அடையும் (அடையமாட்டாது) அதுபோல மனிதன் தன் மனதை உன்னுடைய திருவடித்துணையில் வைப்பானேயானால் இடையூற்றின் கூட்டத்தினால் துன்பத்தை அடையமாட்டான்.

கச. (12) உலகத்தைத் தாங்குபவனே, முதல்வனே, நான் அறியாமைச் சேர்க்கையால் பல வருடங்களாக உன்னுடைய திருவடியை அடையாமல் எப்பொழுதும் சுழன்றேன். உன்னு டைய அநுக்கிரகத்தினாலேயே இப்பொழுது அடைந்தவனானேன் அடைக்கலம் புக்க என்னை எஞ்ஞான்றுங் காத்தருள்க.

கரு. இவ்வாறு நான் தோத்திரிக்கவுடன் யானை முகத் தையுடைய விநாயகப்பெருமான் கருணையோடு என்னைப் பார்த் துக் கூறுவாராயினர். குழந்தாய்! முற்கலனுடைய புத்திரனே! எமது பக்தர்களுக்குள்ளே சிறந்தவனே !

கசு. இந்தத் தோத்திரத்தை எந்தப் புத்திசாலியானவன் பிராதக்காலத்தே நித்திரை விட்டெழுந்து படிக்கின்றானோ,

மூன்று சந்திகளிலும் பரிசுத்தனுகி அன்புடன் தோத்திரிக்கின்ருனே, அவன் புத்திரப்பேற்றையும் இலக்குமியையும் எல்லா விருப்பங்களையும் அடைவான். அந்தியகாலத்தில் பரப்பிரம சொரூபத்தையும் அடைவான். உனக்குச் சிவமாந் தன்மையாகிய பெரிய சித்தியானது எம்மாற் கொடுக்கப்பட்டது. இதில் ஐயமில்லை.

௧எ. எம்முடைய சத்தி சித்திதேவியாகும். பிரமத்தன்மையைத் தாத்தக்க அவள், பிரமஞான சொரூபத்தையுடைய எமது ஞானசத்தியாகிய புத்திதேவியோடும் அணிமா முதலாகிய எண்வகைச் சித்திகளோடும், உனது வசமாயிருப்பாள். நீ பிரம்மானந்தத்தையுடையவனுய்ப் பிரமகற்பம் வரை உலகத்திலே இருப்பாயாக.

௧அ. விலங்கு, பறவை முதலிய யோனிகளிற் பிறந்தாலும் கருமபரிபாகத்தால் பக்குவப்பட்ட பசுபக்ஷிகட்கும் விசேடமாக உன்னைச் சரணமடைந்த தேவர் மனிதர்கட்கும் உத்தம ஞானத்தையும் வைராக்கியத்தையும் பக்தியையும் கொடுப்பதின் பொருட்டு எம் ஆணையால் நீ நிலைபெறுவாயாக. நீ எம் வரத்தால் பிரம விட்டுணுவாதி தேவர்களாலும் தொழத் தக்கவனுகுக. உனக்குஅநுக்கிரகித்த விசேடதினமாகிய ஆவணிமாதத்துஅமாவாசையாகிய இன்று இத்தலத்தில் எவர்கள் எம்மைப் பூசிப்பார்களோ அவர்களுக்கு இட்டமான வரங்களை அப்பொழுதே கொடுப்போம். அன்பருட்சிறந்தவனே! பிரமகற்பம் வரை இந்தத் தலத்தில் உன்பேரால் பகசித்திவிநாயகர் என்னும் பேரோடு சர்வசித்திகளையும் கொடுத்துக்கொண்டு நிலைபெறுவோம். என்றிவ்வாறு கூறி விநாயகப் பெருமான் என்னுள்ளே மறைந்தார்.

௧௯. பிறகு விநாயகப் பெருமான் சிலாரூபமாகமேற்கூறிய பகேசலிங்கத்தின் வலதுபாகத்தில் தோன்றி நின்ருர். உடனே நான் அவ்விநாயகப் பெருமானையும் சிவலிங்கப் பெருமானையும் புறத்தே பூசித்து முற்கூறிய இந்திரத்யும்ந தடாகதீரத்திற் போயிருந்து நிட்டை கூடினேன்.

௨௦. எனக்குச் சித்தி கிடைத்த தினத்தில் வருடத்துக்கொருமுறை இந்தத் தலத்தை அடைந்து விநாயகப்பெருமானைப் பூசிப்பேன். இன்றைக்கும் அந்த நாளாதலின் விநாயகரைப் பூசிக்க வந்தேன். விநாயக பூசையும் மிக்க அன்புடன் என்னுற்

செய்யப்பட்டது. நான் செல்லும்போது மார்க்கண்டேயரும் இங்கு வந்து சேர்ந்தார். அவரோடு நான் பேசிக்கொண்டிருக்க்கும் போது முனீசனே ! உன்னைக் காணப்பட்டேன். உன்னுடைய சரிதமுங் கேட்கப்பட்டது. இங்கே இந்தச் சிவலிங்கப் பெருமானையும் விநாயகப் பெருமானையும் நீ பூசித்து உன் சாப விமோசனத்தை அடைந்து உனது ஆச்சிரமத்துக்குப் போவாயாக என்றான்.

உக. இவ்வாறு பகமுனிவனாற் கூறப்பட்ட நாரையானது பகமுனிவனை மறுபடியும் வணங்கி மார்க்கண்டேயர் பிரசித்தி பெற்றவர் அவருடைய விசேடம் என்ன? உங்களுக்கு எப்படி நட்பு உண்டாயிற்று ? அதை எனக்குக் கூறவேண்டுமென்று விநயத்துடன் கேட்டது.

உஉ. பகமுனிவர் கூறுகின்றார். மிருகண்டு முனிவர் எனப் பேர்பெற்ற பெரியவர் கச்யபமுனிவருடைய குமாரர். அவர் பரமசிவனைக் குறித்துத் தவஞ்செய்து அவரை மகிழ்வித்தார். பரமசிவன் வெளிப்பட்டு உனக்கு வேண்டும் வரங்களைக் கேள் என்று திருவாய்மலர்ந்தருளினார். அப்போது அம்முனிவர் உருவழகும், குணநிறைவும் சிவபக்தியும் ஞானமும் யோகசித்தியுமுடைய ஒரு புத்திரனை வேண்டினார். பரமசிவன் அம்முனிவரைப் பார்த்து அருளிச்செய்கின்றார். உனக்கு அத்தகைய குணம் வாய்ந்த ஒரு புத்திரன் பிறப்பான். ஆனால் அவன் பதினாறு வயதுடையவனாயிருந்து அதன்மேல் நம்முடைய மேன்மையான பதத்தையடைவான் என்று திருவாய்மலர்ந்து தமது கணங்களோடும் மறைந்தருளினார்.

உங. அம்முனிவரும் பரமசிவனுடைய வரத்தால் அப்படியே குணநிதியாகிய ஒரு புத்திரனைப் பெற்றார், பிறகு அக்குழந்தை தகப்பனாரால் தன்னுடைய வரவிசேடத்தை உணர்ந்தது. உணர்ந்ததும் மார்க்கண்டேயர் தந்தை மனக்கவலை ஒழிந்து மகிழுமாறு தனக்குத் தீர்க்காயுசு உண்டாதற்குரிய உபாயத்தை நாரதரிடம் வினவினார்.

உச. திவ்வியஞானத்தையுடைய சிவயோகியாகிய நாரதர் அக்குழந்தையைப் பார்த்துக் கூறுகின்றார். சீவனானது சுவாசப் பிரமாணத்தை உடையது. வருடப்பிரமாணத்தை உடைய

தன்று. பத்துக்கோடி சுவாசங்கள் மனிதர்களால் பதினறு வரு டங்களில் விடப்படும். முனிகுமாரனே நீ ஆயுள்விருத்தியை விரும்பி அச்சுவாசங்களை இயற்கையினியங்கவிடாது யோகமார்க் கத்தால் தடுத்துக் குறைவாக விட்டுச் சிவாஞ்ஞையால் ஆயுளை விருத்தி செய்துகொள்க.

முற்கலமுனிவரின் குமாரரும் தவசிரேட்டரும் அகூபாரர் எனப்பிரசித்திபெற்றவரும் யோகியுமாகிய கோட்டான் முனி வர் இமாசலத்தில் தவஞ் செய்துகொண்டிருக்கிறார். நீ அவரை அடைந்து அவரால் யோகமார்க்கத்தை உணர்ந்துகொள் என்று நாரதராற் சொல்லக்கேட்ட ஐந்து வயதுக் குழந்தையாகிய மார்க் கண்டேயர் அந்த அகூபார முனிவரை அடைந்து மேலாகிய யோகமார்க்கத்தை ஒரு வருடத்துக்குள் நுட்பமாக அம்முனிவ ரால் அறிந்துகொண்டார்,

உரு. பிறகு மார்க்கண்டேயர் அரித்துவாரத்தில் ஒருமாசம் வசித்தார். அப்போது அம்முனிவர் ஒரு நாளைக்கு ஆயிரம் மூச் சுக்கள் தான் விட்டார். பதரியிலும், பிரயாகையிலும், ஆறுமா சந்தங்கினர். அப்போது நூற்றிருபது மூச்சுக்கள் ஒருநாளைக்கு விட்டார். பிறகு ஐந்துமாசம் காசியில் வசித்தார். பிறகு ஒரு வருடம் கேதாரத்திலும் எழுமாசம் மாளவத்திலும் மயூரபுரி யில் ஒருவருடமும் அப்படியே ஆறுவருடம் எனைப் புண்ணியத் தலங்களிலும் சிதம்பரத்தில் ஐந்துமாசமும் தங்கிப் பின்பு திருக் டவூரில் ஒருவருடம் சிவயோகத்தில் அமர்ந்தார். இவ்வாறு பர மசிவனல் நியமிக்கப்பட்ட பதினறு வயசுகளில் முன் சென்ற ஐந்து ஒழிய எஞ்சிய பதினொரு வருடத்திலும் மார்க்கண்டேய ரால் ஒருவருடத்துக்குரிய சுவாசங்கள்தான் யோகமார்க்கங்க ளால் விடப்பட்டன. ஆதலால் அப்போது அவர்க்கு வயது ஆறாயிற்று. பதினறு ஆகவில்லை.

உசு. இந்த இரகசியத்தை இயமன் அறியாமல் பொதுவா கிய வருடமானத்தால் பதினறுவயது முடிவானதாக எண்ணி அம்முனிவர்பால் அடைந்து சிவலிங்க பூசையில் அமர்ந்த அவ ரைத் தனது பாசத்தால் மாட்டி இழுத்தான். அதனுற் கோப மடைந்த மகாதேவர் அவ்விலிங்கத்தினின்றும் வெளித்தோன்றி அந்த இயமனைத் தமதுகாலால் உதைத்தார், பிறகு காலகால

ராகிய சிவபிரான் தேவர்களுடைய பிரார்த்தனைப்படி கடைக் கண்ணால் இயமனைப் பிழைப்பித்துத் தேவர்களுக்குத் தமது வரத்தின் இரகசியத்தைக் கூறி மார்க்கண்டேயரைப் பார்த்து, ஓ மகாமேதாவியே! நீ யோகசித்தியால் சீவன் முத்தனாக ஆனாய். ஐயமில்லை. நீ பதினாயிரம் வருடங்களுக்கு ஒருதடவை ஒரு மூச்சு விடுவதற்குச் சத்தியுடையவனாகுக. அதனால் நீ ஏழு கற்பம் வரை நிலைபெற்றுக் கைவல்லிய முத்தியையும் அடைவாய். இதில் சந்தேகமில்லை, என்றருளினார்.

உஎ. இவ்வாறு பரமசிவன் மார்க்கண்டேயருக்கு வரங் கொடுத்து மறைந்தருளினார். எனது சீடனாகிய அகூபாரனுடைய சீடன் மார்க்கண்டேய முனிவர் என அறிவாயாக.

மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

நான்காவது
அகூபாரன் முதலியோர் வரலாறு உரைத்த அத்தியாயம்

க. மகாபாக்கியசாலியாகிய பகசித்தரே! முற்கலமுனிவரது புத்திரரே! யோகியர்க்கரசே! அகூபாரர் எனப் பிரசித்தி பெற்றவர் யாவர்? அவர் மார்க்கண்டேயருக்குக் குருவானதும், உமக்குச் சீடரானதும் எப்படி? அதை எனக்குக் கருணை கூர்ந்து கூறவேண்டும் என்று வினவப் பகமுனிவர் கூறுவார்:—

உ. மகான்மாவும், உலக குருவும் துறவியுமாகிய கணகர் என்பவரால் அறிவுடைப் பிராணிகளில் பக்குவமுடைய உயிர்கட்கு ஞானசித்தியை அளிக்கும்பொருட்டு ஆங்கிரஸ் என்னும் முனிவருடைய புத்திரராகிய முற்கலமுனிவர் ஞான குருவாக நியமிக்கப்பட்டார்.

ங. அந்த ஆங்கிரசராகிய முற்கலமுனிவர் சீடபரம்பரையாக மனிதர் தேவர்களுக்குக் குருவாகப் புருசுண்டி முதலிய சித்த புருடர்களையும், விலங்குகட்குபதேசிக்கப் பூஷாமிருகம் என்னும் சித்தரையும், பறவைகட்கு என்னையும், பாம்பு முதலியவைகட்குக் கிருகலாச முனியையும், நீர்வாழ்வனவற்றிற்குப் பாபாரகர்ணன் என்னும் ஆமையையும், நியமனஞ் செய்தார்.

தன்று. பத்துக்கோடி சுவாசங்கள் மனிதர்களால் பதினறு வருடங்களில் விடப்படும். முனிகுமாரனே நீ ஆயுள்விருத்தியை விரும்பி அச்சுவாசங்களை இயற்கையினியங்கவிடாது யோகமார்க்கத்தால் தடுத்துக் குறைவாக விட்டுச் சிவாஞ்ஞையால் ஆயுளை விருத்தி செய்துகொள்க.

முற்கலமுனிவரின் குமாரரும் தவசிரேட்டரும் அகூபாரர் எனப்பிரசித்திபெற்றவரும் யோகியுமாகிய கோட்டான் முனிவர் இமாசலத்தில் தவஞ் செய்துகொண்டிருக்கிருர். நீ அவரை அடைந்து அவரால் யோகமார்க்கத்தை உணர்ந்துகொள் என்று நாரதராற் சொல்லக்கேட்ட ஐந்து வயதுக் குழந்தையாகிய மார்க்கண்டேயர் அந்த அகூபார முனிவரை அடைந்து மேலாகிய யோகமார்க்கத்தை ஒரு வருடத்துக்குள் நுட்பமாக அம்முனிவரால் அறிந்துகொண்டார்,

உடு. பிறகு மார்க்கண்டேயர் அரித்துவாரத்தில் ஒரு மாசம் வசித்தார். அப்போது அம்முனிவர் ஒரு நாளைக்கு ஆயிரம் மூச்சுக்கள் தான் விட்டார். பதரியிலும், பிரயாகையிலும், ஆறுமாசந்தங்கினர். அப்போது நூற்றிருபது மூச்சுக்கள் ஒருநாளைக்கு விட்டார். பிறகு ஐந்துமாசம் காசியில் வசித்தார். பிறகு ஒரு வருடம் கேதாரத்திலும் ஏழுமாசம் மாளவத்திலும் மயூரபுரியில் ஒருவருடமும் அப்படியே ஆறுவருடம் ஏனைப் புண்ணியத் தலங்களிலும் சிதம்பரத்தில் ஐந்துமாசமும் தங்கிப் பின்பு திருக்கடவூரில் ஒருவருடம் சிவயோகத்தில் அமர்ந்தார். இவ்வாறு பரமசிவனல் நியமிக்கப்பட்ட பதினறு வயசுகளில் முன் சென்ற ஐந்து ஒழிய எஞ்சிய பதினெரு வருடத்திலும் மார்க்கண்டேயரால் ஒருவருடத்துக்குரிய சுவாசங்கள்தான் யோகமார்க்கங்களால் விடப்பட்டன. ஆதலால் அப்போது அவர்க்கு வயது ஆருயிற்று. பதினறு ஆகவில்லை.

உசு. இந்த இரகசியத்தை இயமன் அறியாமல் பொதுவாகிய வருடமானத்தால் பதினறுவயது முடிவானதாக எண்ணி அம்முனிவர்பால் அடைந்து சிவலிங்க பூசையில் அமர்ந்த அவரைத் தனது பாசத்தால் மாட்டி இழுத்தான். அதனுற் கோபமடைந்த மகாதேவர் அவ்விலிங்கத்தினின்றும் வெளித்தோன்றி அந்த இயமனைத் தமதுகாலால் உதைத்தார், பிறகு காலகால

ராகிய சிவபிரான் தேவர்களுடைய பிரார்த்தனைப்படி கடைக் கண்ணால் இயமனைப் பிழைப்பித்துத் தேவர்களுக்குத் தமது வாத்தின் இரகசியத்தைக் கூறி மார்க்கண்டேயரைப் பார்த்து, ஓ மகாமேதாவியே ! நீ யோகசித்தியால் சீவன் முத்தனாக ஆனாய். ஐயமில்லை. நீ பதினாயிரம் வருடங்களுக்கு ஒருதடவை ஒரு மூச்சு விடுவதற்குச் சத்தியுடையவனாகுக. அதனால் நீ ஏழு கற்பம் வரை நிலைபெற்றுக் கைவல்லிய முத்தியையும் அடைவாய். இதில் சந்தேகமில்லை, என்றருளினர்.

உஎ. இவ்வாறு பரமசிவன் மார்க்கண்டேயருக்கு வரங் கொடுத்து மறைந்தருளினர். எனது சீடனாகிய அகூபாரனுடைய சீடன் மார்க்கண்டேய முனிவர் என அறிவாயாக.

மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

நான்காவது
அகூபாரன் முதலியோர் வரலாறு உரைத்த அத்தியாயம்

க. மகாபாக்கியசாலியாகிய பகசித்தரே ! முற்கலமுனிவரது புத்திரரே ! யோகியர்க்கரசே ! அகூபாரர் எனப் பிரசித்தி பெற்றவர் யாவர் ? அவர் மார்க்கண்டேயருக்குக் குருவானதும், உமக்குச் சீடரானதும் எப்படி ? அதை எனக்குக் கருணை கூர்ந்து கூறவேண்டும் என்று வினவப் பகமுனிவர் கூறுவார்:—

உ. மகான்மாவும், உலக குருவும் துறவியுமாகிய கணகர் என்பவரால் அறிவுடைப் பிராணிகளில் பக்குவமுடைய உயிர்கட்கு ஞானசித்தியை அளிக்கும்பொருட்டு ஆங்கிரஸ் என்னும் முனிவருடைய புத்திரராகிய முற்கலமுனிவர் ஞான குருவாக நியமிக்கப்பட்டார்.

ங. அந்த ஆங்கிரசராகிய முற்கலமுனிவர் சீடபரம்பரையாக மனிதர் தேவர்களுக்குக் குருவாகப் புருசுண்டி முதலிய சித்த புருடர்களையும், விலங்குகட்குபதேசிக்கப் பூஷாமிருகம் என்னும் சித்தரையும், பறவைகட்கு என்னையும், பாம்பு முதலியவைகட்குக் கிருகலாச முனியையும், நீர்வாழ்வனவற்றிற்குப் பாபாரகர்ணன் என்னும் ஆமையையும், நியமனஞ் செய்தார்.

இவர்கள் அவ்வாங்கிரச முனிவரால் அவ்வச்சாதியிற் பிறந்த புத்திரர்களே யாவர்.

௪. அகூபாரன் என்னும் கோட்டான் எனது சீடனும் தம்பியுமாகும். அது முற்கூறிய முற்கலாது ஆணைப்படியே என்பால், பிரமதத்துவத்தை அறிந்து இமயமலையிலுள்ள ஒரு பொந்தில் அநேக கோடி சீடரோடு எனது கட்டளைப்படி பத்துக் கற்பமாகிய ஆயுளுடன் வசித்து வந்தது. அதனிடமிருந்து மார்க்கண்டேயரால் பிரமதத்துவம் அறியப்பட்டது. அம்மார்க்கண்டேயர் ஏழுகற்ப ஆயுளுடன் அநேக சீடரோடு அந்தப் பருவதத்திலேயே வசித்து வந்தார்.

௫. ஒருகாலத்தில் இந்திரசபையில் இந்திரனது சமாசனத்தில் இருந்த இந்திரத்தியும்நன் என்னும் அரசனை அட்டதிக்குப் பாலகர்கள் பூமியில் பெருமைகுன்றிய உனக்குத் துறக்கவாழ்வில்லை என்று கூறி அங்கிருந்து பூமியில் விழத் தள்ளினார்கள்.

௬. அந்த அரசன் புண்ணியவசத்தால் மார்க்கண்டேயர் ஆச்சிரமத்தில் வீழ்ந்து தனது விருத்தாந்தத்தைக் கூறி என்னை உமக்கு முன் தெரியுமோ என வினவினன். அதற்கு அவர் இந்திரத்தியும்நன் என்று யான் கண்டதுமில்லை கேட்டதுமில்லை என்று விடையளித்தார்.

௭. பின்பு அவ்வரசன் அம்மார்க்கண்டேய முனிவரோடுகூட அவரது குருவாகிய அகூபாரர் என்னும் விருத்தரையடைந்து வணங்கி இந்திரத்தியும்நன் என்னுமரசன் பிரமஞானியாகிய உம்மாற் பார்க்கவாவது கேட்கவாவது பட்டவனோ? அப்படியாயின் எனக்குக் கிருபையாற் கூறவேண்டுமென்று வினவினன். அதைக் கேட்ட எனது சீடனும் பிரமத்தை அறிந்தவரில் உத்தமனும் ஆகிய உலூகமுனிவன் "இந்திரத்தியும்நன் என்பான் என்னாற் கேட்கவும், காணவும் படவில்லை" என்று கூற, அவ்வரசன் உடனே அம்முனிவர் கூறியபடி அவ்விருவரோடும் இந்திரத்தியும்நசரசு என்னும் தடாகக் கரையிலமர்ந்த என்னை அடைந்து வணங்கிப் பிரமத்தை அறிந்த உம்மால் இந்திரத்தியும்நன் என்னும் அரசன் அறியப்பட்டவனோ என்று அன்புடனும் வியப்புடனும் வினவினன். நானுந் தெரியாது என்று கூறினேன்.

அ. பிறகு அவ்வரசன் உம்மினும் வயசான்மிக்கவர் உலகில் உண்டோ என்று வினவினான். நான் எனக்குத் தமையனாகிய பாபாரகர்ணன் என்னும் ஓராமை பிரமஞானியாக இத்தடாகத்தில் இருப்பதாகக் கூறினேன். உடனே அவ்வரசன் எங்கள் மூவரோடும் அத்தடாகத்தை அடைந்தான். அப்போது நான் சகோதரனாகிய ஆமையை அழைத்து வணங்கிப் பிரமத்தை அறிந்த நம்மால் இவ்வரசனை அறியக்கூடுமோ என்று கேட்டேன். அப்போது அம்முனிவர் கூறுவாராயினர்.

கூ இந்திரத்தியும்நன் என்னுமரசன் என்னாற் பலதரம் பழகி அறியப்பட்டவன். அவனால் அந்தணர்களுக்கு நிறைந்த அநேக தானங்கள் செய்யப்பட்டன. அத் தான நீராலுண்டாகிய இத்தாடகம் இந்திரத்தியும்ந சரசு என்னும் பெயரையும் அடைந்தது. குழந்தாய்! இப்பூமியில் இத்தடாகத்தில் வசிக்கும் என்னால் ஏழு கற்பங்கள் காணப்பட்டன. அந்த அரசனாகிய இராசரிஷி என்னாலும் இத்தடாகத்தில் வசிக்கும் என் போன்றாராலும் நன்கு நினைவு கூர்தற்குரியவனாவன் என்றார்.

க0. இவ்வாறு கூறிய ஆமைமுனிவரது வார்த்தையைக் கேட்ட அரசனும், தனது விருத்தாந்தத்தைக்கூறினான். உடனே ஆமையாகிய முனிவர் அவ்வரசனை இந்திரத்தியும்நன் எனவறிந்து அன்பால் அவனைத் தழுவிப் பிரமதத்துவத்தை உபதேசித்தார். அப்போது பிரமா விட்டுணு முதலானவர்களெல்லோரும் வந்து அவ்வரசனை விமானத்திலேற்றிக்கொண்டு அவன் விரும்பிய வண்ணம் வைகுண்டத்தில் உறைவிடமளித்துத் தங்கள் தங்கள் இருப்பிடத்துக்குச் சென்றார்கள்.

கக. நானும் தமயனுக்கு அறிவித்துக்கொண்டு எனது இருப்பிடத்தை அடைந்தேன். அகூபாரரும் மார்க்கண்டேயரும் என்னுடன்கூட வசித்து வந்தார்கள். பிறகு யோகிகளிற் சிறந்த அவ்விருவரும் எனக்குச் சீடர்களாய் என்பால் ஞானமாகிய அமிர்தத்தைத்தரும் சாத்திரத்தைப் பெற்றுக்கொண்டு என் கட்டளைப்படி தத்தம் இருப்பிடத்தை அடைந்தார்கள்.

கஉ. ஓ தருமன் மைந்தனே! மயூரேசம், பகாச்சிரமம் என்னும் இந்த இரண்டு சிறந்த தலங்களும் பூமியில் எனக்கு விருப்பமாகிய தலங்களாம். இவ்விந்திரத்தியும்ந தடாகதீரமே

எனக்கு எப்போதும் வாசஸ்தலம். விநாயகசதுர்த்தியிலே மயூரேசவிநாயகரைப்பூசித்து, ஆவணிமாதத்து அமாவாசையில் சகல சித்திகளையும் தரும் இந்த க்ஷேத்திரத்தில் வந்து விநாயகபூசையையும் செய்துகொண்டு வருகிறேன்.

௧௩. மயூரேச தலத்தை அடைந்து உலூகராகிய எனது தம்பியும் தனது சந்தேகங்களைப்பற்றி என்பால் வினவுவான். மார்க்கண்டேய முனிவரும் இந்தத்தலத்திலே வந்து என்பால் சந்தேகங்களைக் கேட்பார். இப்போதும் அதற்காகவே இந்தத் தலத்தில் என்பால் வந்தடைந்தார். இங்கே கணேசப்பெருமான் மிக்க அன்போடு என்னுற் பூசிக்கப்பட்டார். மார்க்கண்டேயருடைய சந்தேகமும் என்னுல் நிவர்த்திக்கப்பட்டது.

௧௪. நீயும் இந்தத்தலத்தில் விநாயகப் பெருமானையும், சிவலிங்கப் பெருமானையும் நன்ருகப் பூசித்து, புருசுண்டிமுனிவர் சாபநீக்க முற்று நினது பதரிவனத்தை எய்துவாயாக என்று கூறிப்பகமுனிவன் மயூரேசபுரத்தை அடைந்தான். மகாயோகியாகிய மார்க்கண்டேயனும் நாராயணனது அமிசத்தாற் பிறந்த நாரையை அநுக்கிரகித்துத் தனது தானமாகிய இமயபர்வதத்தை அடைந்தான்.

நாலாவது அத்தியாயம் முற்றிற்று.

ஐந்தாவது
நாரைக்கருள்புரிந்த அத்தியாயம்.

௧. பின்னும் குகப்பெருமான் முனிவர்களைப் பார்த்து நாரையின் பூசாபலத்தைக் கூறுவாராயினர்.

நாராயணபக்ஷியாகிய நாரையானது விநாயகப் பெருமானை அறுகங்கொழுந்துகளாலும், வன்னிப்பத்திரங்களாலும் மந்தார மலர்களாலும், அநேக புட்பங்களாலும், அருச்சித்து விநாயகரது ஆறெழுத்து மந்திரத்தையும் திடபத்தியோடு நூறுவருடஞ் செபித்தது. அப்போது விநாயகப் பெருமான் பூசிக்கப்பட்ட அவ்வுருவத்தினின்றும் யானைமுகமும் ஒற்றைக் கொம்பும் நான்கு கரங்களும், வளைந்த துதிக்கையும், அளவற்றபேரொ

ளியும் உடையவராய்ப் புருசுண்டி அஞ்சர் அவ்வியத்தர் முத லிய சித்தர்களோடும், வெளிப்பட்டு. ஓ மகாபாக்கியசாலியே! நாராயணபக்ஷியே! உனக்கு வேண்டும் வரத்தைக் கேட்பாயாக எல்லாவுயிர்க்கும் கிடைத்தற்கரிய அந்தப் பேற்றையளிப்பேம் ஐயுறவில்லை என்று திருவாய்மலர்ந்தருளினர்.

௨. அதைக்கேட்ட நாரையானது விநாயகப் பெருமானைப் பார்த்து, தேவரீருடைய சாரூப்பியத்தை அடைந்தவராகிய புரு சுண்டி முனிவரை அவமதித்தலால் எனக்குண்டாகிய சாபதோ டத்தைத்தேவரீர் நீக்கியருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தது.

௩. நாரையின் வேண்டுகோட்கிரங்கி விநாயகப் பெருமான் மகாபாதகம் முதலிய ஒன்பது பாதகங்களுள்ளும் அந்தணரை அவமதித்தல் பெரியதென்று வேதங்கூறும். அந்தணரை அவ மதித்தலினும் முனிவரை அவமதித்தல் நூறுமடங்கு அதிகம். அதனினும் யோகியை அவமதித்தல் நூறுமடங்கு அதிகம். அத னினும் சித்தபுருடனை அவமதித்தல் அநந்த மடங்கு அதிக தோ டமாம். சித்தர்களினும் எமது சாரூபமுற்ற புருசுண்டியான வன் மிக மேலானவன். அவனை அவமதித்த தோடம் அவன ருளாலும், எம்மருளாலும் அன்றி அநேக கோடி புண்ணியங்க ளாலும் நீங்காது. உனது தோடம் எங்களிருவரருளாலும் நீங் கிற்று. மார்கழிமாதத்துச்சுக்கிலபக்ஷ சட்டியாகிய இன்று எம்மை அன்போடு யாவர் பூசிக்கின்றூர்களோ அவரது பிராமணது டணத்தால்வரும் தோடத்தை நீக்குவேம். பிரதமை முதல் பஞ் சமிவரையில் யாம் பூசிக்கப்பட்டால் பஞ்சமகாபாதக தோடங் களையும் விலக்குவேம் ஐயமில்லை. ஓ தருமனது புத்திரனாகிய பக்ஷியரசே! இந்த க்ஷேத்திரத்திலே முதலாவதாகிய இந்தக் கிருதயுகத்தில் உன்னால் அருச்சிக்கப்பட்டமையால் யாம் திருநா ரைப் பிள்ளையார் என்னும் பெயரோடு இருப்போம்: புருசுண்டி முனிவன் வாக்கியப்படியே நீ பரமசிவனையும் பூசித்து நாரைப் பிறப்பினின்றும் நீங்கி உனது ஆச்சிரமத்தை அடைவாயாக என்று திருவாய்மலர்ந்து நாரைக்கு அநுக்கிரகித்துப் புருசுண்டி முதலிய முனிவர்களுடன் அவ்விநாயகமூர்த்தத்துள்ளே மறைந் தருளினர்.

௪. நாரையானது மறுபடியும் சிவலிங்கப்பெருமானை நன் ருக அருச்சித்துப் பார்வதீசமேதராகிய பரமசிவனையே இதயத்

தில் தியானித்துத்தவம் புரிந்தது பிறகு நூறு வருடங்களின் மேல் அவ்விலிங்கமத்தியினின்றும் பராசத்தியோடும் நந்தி முத லிய பிரமதகணங்களோடும், சதாசிவப்பெருமான் தோன்றிய ருளினர். நாரையானது பரமசிவனைக் கண்டதும் நமக வமந்திரங் களால் வணங்கித்துதிக்கத் தொடங்கிற்று.

௫. கொடியவனும் புத்தியினீங்கினவனும், மறைந்து கேடு செய்வோனும் அறிவிலாதோனும் இறுமாப்புக் குறையுளானவ னும், துட்டனும், பெரிய சித்தரை அவமதித்தலால் உண்டாகிய பாபத்தையுடையவனும், பொல்லாங்குடையவனும், காமக் குரோதமத முதலியவைகட்குறையுளானவனும், பூசுரரை வெ றுத்தவனும், சாபத்தால் துன்புற்றவனுமாகிய என்னைக் கரு ணைக் குறைவிடமாகிய பரமபிதாவே ! பசுபதியே! காத்தருள்க.

௬. பாபகருமங்களில் விருப்புடையவனும், தயையற்றவ னும், துர்ப்பாக்கியநிறைந்தவனும், நன்னெறிக்கு மாறுபட்டவ னும் தனது மமதையாலழிந்தவனும், நன்றிமறத்தலில் முதலா னவனும், மோகத்தால் இம்மை இன்பத்தில் மயங்கியவனும், பெரியோரைத் துணைக்கொள்ளாதவனும், கயவனும், சாபத்தால் துன்புற்றவனுமாகிய என்னைக் கருணைக் குறைவிடமாகிய பரம பிதாவே, பசுபதியே ! காத்தருளுக.

௭. ஆணவமலத்தால் மறைபட்டவனும், அதனுற்றுன் புறுபவனும், குணலேசமுமில்லாதவனும், சோகத்துக்கு உறை விடமானவனும், ஏழையும், இழிதகைமையுடையவனும், பறவை வடிவுற்றவனும், சண்டாளரினுங் கீழ்ப்பட்டவனும், செய்வது தவிர்வது தெரியாதவனும், இழிந்தோனும் செய்கையாற் பெரிதும் பழிக்கப்பட்டவனும், சாபமுற்றவனுமாகிய என்னைக் கருணைக் குறைவிடமாகிய பரமபிதாவே பசுபதியே காத்தருள்க.

௮. விலங்கினத்துட்புக்கவனும், தன்வினைவயத்தால் எப் பொழுதும் நிந்திக்கப்படுபவனும், பழிக்கப்படும் பெரும் பாபங் கள் எல்லாவற்றினும் கொடிதான சித்தரை அவமதித்தலால் வந்த பாபத்தைச் செய்தவனும் அதனல் அளவிலாத துக்கத்தை அடைந்தவனும், சாபத்தால் துன்பமுற்றவனுமாகிய என்னைக் கருணைக்குறைவிடமாகிய பரமபிதாவே! பசுபதியே காத்தருள்க.

௯. மாயைக்கும் சத்துவகுணத்துக்கும் அதிதேவதையே! ஐசுவரிய முதலிய ஆறு குணங்களையுமுடையவனே! தனதிச்சையாற் கொண்ட திருவுருவத்தை உடையவனே! சோதிவடிவினனே! பரத்துக்குப் பரமானவனே! துன்புற்றடைந்தோரைக் காக்குந் திருவடியையுடையவனே! பிரமாண்டத்தின் தலைவனே! அனேக பிரமர்களாலும் உருத்திரர்களாலும் வணங்கப்படுபவனே! திருமாலாதியரால் சேவிக்கப்படுபவனே! சாபத்தால் துன்புற்ற என்னைக் கருணைக் குறைவிடமாகிய பரமபிதாவே! பசுபதியே! காத்தருள்க.

௧0. நித்தியானந்தத்தைத் தருபவனே! விகற்பமில்லாதவனே! சிற்குணத்தின்பற்றினல் பலவிதரூபமுடையவனே! அருவமும் உருவமுமான திருமேனியுடையவனே! வேதசிரசுகளால் அறியப்படுபவனே! பிராரத்தங்களை அழிப்பவனே! மாயையையுடைய மகேசனே! மௌத்கல்யரது தியானத்தால் உண்டாகிய இலிங்கரூபனே! சாபத்தால் துன்புற்ற என்னைக் கருணைக் குறைவிடமாகிய பரமபிதாவே! பசுபதியே! காத்தருள்க.

௧௧. ஒங்காரத்திலுதிப்பவனே! உலகமேயுருவமாகவுடைய பரமனே! பழைய வாக்குக்களுக்கும் எட்டாதவனே! தனதிச்சையாற் படைக்கப்பட்ட எண்ணிறந்த புவனங்களிலுள்ள உயிர்களையுடையவனே! அவ்வுயிர்களுக்கு ஞானக்கண் கொடுப்பவனே! அன்பருக்கருள் செய்யக் கட்டிய கங்கணமுடையவனே! எப்போதும் அடியவர்க்குப் பகையானவரை அழிப்பவனே! சாபத்தால் துன்புற்ற என்னைக் கருணைக் குறைவிடமாகிய பரமபிதாவே! பசுபதியே! காத்தருள்க.

௧௨. தத்துவகாரியங்களை உண்டுபண்ணுபவனே! விக்கினராசன் தோன்றுதற்கிடமானவனே! அரிபிரமருத்திரர் முதலிய ஐந்து வடிவுடையோய்! பஞ்சப் பிரமங்களால் வணங்கப்படுபவனே! பத்தியென்னும் (ஆன்மபோதமாகிய) மங்கையை நிவேதனம் செய்தவழி முத்திகொடுப்போய்! கேசபரியந்தமாகப் பூசிக்கப்படுகின்ற சுத்தஞான சொரூபியே! மகாமாயை என்னும் சுத்தமாயைக்கு அதிதேவதையாகிய பராசத்திக்குத் தலைவனே! கருணைக் குறைவிடமாகிய பரமபிதாவே! பசுபதியே! சாபத்தால் துன்புற்ற என்னைக் காத்தருள்க.

கங. (இவ்வாறு நாரையாற்றுதிக்கப்பட்ட பரமசிவன் கிருபை கூர்ந்து) "சாபநிவாரணமெனப் பெயரிய இந்தச் சுலோகங்களைப் பத்தியோடு நாடோறும் காலையும் மாலையும் பசுபதியைத்தியானித்துப் பொருளுணர்ச்சியோடு நூறுதரமாயினும் பத்துத்தரமாயினும், பகேசுவரசுவாமி சந்நிதியில் யாவர் துதிக்கின்றார்களோ அவர்களது பாவகணங்களைப் போக்கி எல்லாப் போகங்களையும் அளிப்பேம்" ஆதலால் நாரையாகிய பறவையாசே! உனக்கு வேண்டிய வரத்தை எம்பாற் கேட்பாயாக. பிரமாவுக்குங் கிட்டாத அப்பயனைத்தருவேம் ஐயுறவேண்டாம் என்று திருவாய் மலர்ந்தருளினர்.

கச. நாரையானது எனது நாரைவடிவம் நீங்கவும், புருசுண்டிமுனிவரது சாபம் நீங்கவும், சம்புவே! கருணையோடு அருள்வீராக. தேவரீரிடத்து நிலையான அன்பையும் அருளுக. என் நாமத்தோடு பொருந்தத் தேவரீரது திருநாமம் பலாகேசுவரரென வழங்குக. எனக்கு அநுக்கிரகஞ் செய்த தினமாகிய கார்த்திகைப் பூரணையில் இத்தலத்தில் யாவர் வந்து பரமபத்தியோடு தேவரீரைப் பூசிக்கின்றார்களோ அவர்களுக்கு அந்த க்ஷணமே மகாபாபங்களைப் போக்கி இட்டகாமியங்களை அருளல் வேண்டும். பல யுகங்களிலும் பலாகேசுவரனென்னும் பெயரால் தேவரீர் புகழப்பட வேண்டும் என்று அந்த நாரையானது ஈசனை வேண்டித் துதித்தது. அப்படியே பரமசிவன் அந்த நாரைக்கு வரங்களைக் கொடுத்து அருள் செய்து கணங்களோடும் அவ்விலிங்கத்துள் மறைந்தருளினர். நாரைவடிவாகிய சாபத்தினின்றும் நீங்கித் தருமனது புத்திரனாகிய நாராயணனும் தனது பதரிகாவனத்தை அடைந்தான்.

கரு. திருநாரைப் பிள்ளையார் திருநாரையீசர் இவ்விருவருடைய மகிமையைக் கூறும் இவ்வைந்தத்தியாயங்களையும் பூமியில் எவர்கள் பத்தியோடு கணபதியையும் பரமசிவனையும் மனத்துட்டியானித்துக்கொண்டு படிக்கின்றார்களோ அவர்கள் பிரமகத்தி முதலான தோடங்களினின்றும், பிராமணரை அவமதித்தலாகிய குற்றத்தினின்றும் நீங்கி விரும்பிய பேறுகளையெல்லாம் இம்மையிலேயே தவறாது பெறுவர்.

ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

ஆருவது
புருசுண்டிமுனிவர் வரலாறுரைத்த அத்தியாயம்.

க. ஆறுமாமுகமுடைய அருட்பெருஞ் செல்வ! தேறு தத்துவமெலாந் தெரிந்த மெய்யறிவுளோய்! சிவகுமார! வதரீ வனத்திலிருக்கும் நரனுக்குத் தமையனாகிய நாராயண முனிவரைச் சபிப்பதற்கு அவரினும் புருசுண்டிமுனிவர் எங்ஙனம் மேம்பாடுற்றனர். அதைக் கருணையாற் கூறியருள்க என்று முனிவர் கேட்பக் குமாரக் கடவுள் கூறுகின்றார்.

உ. முன்னொருகாலத்திலே சாரசுவத கற்பத்தில் கோதாவரிக்கரையில் விப்பிரப்பிரியன் என்னும் பெயருடைய சிவபத்தியிற் சிறந்த ஓரந்தணன் இருந்தான். அவன் கௌதம முனிவனை அடைந்து சிவமாந்தன்மைப் பெரும்பேற்றை அடைதற்பொருட்டு விரைவிற் பயன்றரக் கூடிய நெறியைச் சொல்லுக என்று மிக்க காதலோடுங்கேட்டான். அதுகேட்ட கௌதம முனிவன் கூறுகின்றான். ஓ விப்பிரப்பிரியா! நீ எனது வாய்மொழிப்படி லக்ஷாபிஷேக விதியினால் பரமேசனுக்கு அபிஷேகஞ் செய்க; அதனால் அட்டசித்திகளோடு சிவமாந்தன்மையையும் அடைவாய் என்று கூறினான்.

ங. பின்பு விப்பிரப்பிரியனும் அதனைக் கேட்டுக் குதூகலமடைந்து லக்ஷாபிஷேக மார்க்கத்தை எனக்குச் சொல்லுக என்று கௌதமனைப் பிரார்த்தித்தான். அபிஷேக காலத்திலே சமகாநுவாக முன்னாகப் பதினொரு முறை உருத்திரத்தைச் செபஞ் செய்து அபிடேகிப்பது ஓரபிடேகம் என்று சொல்லப்படும். இப்படி லக்ஷப்பிராமண போசனத்துடன்கூடிய ஒரு லக்ஷம் அபிடேகமானது சர்வாபீட்டத்தையும் தரும் லக்ஷாபிடேகமெனச் சொல்லப்படும் என்று சிவஞானியாகிய கௌதமன் அந்தப் பிராமணனுக்குக் கூறினான்.

ச. அதனைக்கேட்ட விப்பிரப்பிரியனாகிய அந்தணன் பிராமணோத்தமர்களோடு கூடிக் கோடிசங்கரமென்னுந்தலத்தில் பரமசிவனுக்குத் தினம் நூறு அபிடேகமாகச் செய்தான். இவ்வாறு ஆயிரமுறையில் லக்ஷாபிடேகத்தைச் செய்தவனாயினான். ஆனால் விக்கினசாந்தியின் பொருட்டு விநாயகபூசையைச் செய்யா,

மல் அறிவின்மையால் பிரயத்தினத்தோடு சிவனுக்கு லக்ஷாபி டேகம் மாத்திரம் செய்யப்பட்டது. அதனால் அவ்வந்தணன் புத்திமோகத்தையும் அடைந்தான். முடிவில் பத்து அபிடே கம் குறையாக இருக்கும்போது விக்கிநேசருடைய மாயையின் பலத்தால் அறிவிழந்து, விக்கினத்தால் வருத்தமுற்றுச் சர்வசித்தி களினும் உயர்ந்த பிரமத்தன்மையைத் தருஞ் சித்தியை யான் இன்னும் பெற்றிலேன்; அணிமாதி சித்திகளில் ஒன்றேனும் அடையவுமில்லை; உருத்திராபிடேகம் லக்ஷமும் பயனற்றதென எனக்குத் தோன்றுகிறது என்று எண்ணி அவ்வந்தணன் வெகுண்டு தன் கையிலிருந்த சலநிறைந்த கௌரிசிருங்கமென்னும் பாத்திரத்தைச் சிவலிங்கத்தின் உச்சியில் எல்லாம் வீணென்று சொல்லி எறிந்தான்.

௫. உருத்திர மந்திரம் செபித்துக்கொண்டிருந்த அந்தணர்கள் எல்லாம் ஆ ஆ என்று சத்தம் செய்தார்கள், அப்போது சிவலிங்க மத்தியிலிருந்து மகேசுவரர் கோபத்தோடு வெளிப்பட்டுப் பிராமணனைப் பார்த்து அடே பேதைப்பிராமணனே ! நல்ல பயன் கிட்டுங்காலையில் வேடனைப்போல் மூடத்தன்மையால் விபரீதஞ்செய்தாய் எமது சாபத்தால் வேடனாகக்கடவாய். ஓ மடவோனே ! வேடர்தொழிலிலே மிக்கவனாய்ப் பிராமணர்களை யும் வருத்தித்திரியும்போது எப்போது எனது பத்தனும், யோகசித்தனும், பிரமஞானியுமாகிய முற்கலன் என்பவனைக் காண்பாயோ அப்போது அவனைக்கண்ட மகிமையால் சமுசாரத்தில் வைராக்கியமும் சாந்தியுமடைந்து அவனருளால் உபதேசமும், அதனால் சித்திகளையும் நீ அடைவாய் என்று சாப நீக்கத்தையுங் கூறி அவ்விலிங்கத்துள்ளே மறைந்தனர்.

௬. அந்தணனும் அதுகேட்டு வருந்திக்கௌதமனதுசொற்படி சிவனைத் தியானித்துக்கொண்டு திரிவேணியிலே தனது உடலை விட்டான். உடனே அவ்வந்தணன் வேடர் குலத்திலே பிறந்து பாலியமுதல் யாரையும் இம்சிப்பவனாய் மான்களையும் மனிதர்களையும் கொன்றும், களவு பொய்களிற் பயின்றும், கட்குடித்தும், இருபத்தைந்து வருடங்களைக் கழித்தான். இப்படி இருக்கையில் தெய்வவசமாக ஒருநாள் அவ்வேடன் ஓரந்தணனைக் கண்டு கொல்லுதற்காகப் பின்றொடர்ந்தோடினன். ஓடும்

போது அங்கே யோகத்திற் சிறந்தவனும், பிரமத்தை அறிந்தவருட் சிறந்தவனும், விநாயக மந்திர செபஞ் செய்பவனும், ஆகாயத்தில் சஞ்சரிப்பவனுமாகிய முற்கல முனிவனைக் கண்டான். கண்டவளவில் அவ்வேடன் வைராக்கியமும் ஞானமும் வரப்பெற்றுத் தன் கையிலிருந்த ஆயுதங்களைப் பூமியில் எறிந்துவிட்டு, பிறவிப்பெருங் கடலினின்றும் என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று அம்முனிவனைச் சரணமடைந்தான்.

எ. முற்கல முனிவன் கணேசப்பெருமானது திருநாமமந்திரத்தை அவ்வேடனுக்கு உபதேசித்தான். அவன் கட்டளைப்படியே வேடனும் ஒரு மரத்தடியில் இருந்து கணபதி நாம மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு நிலையான விரதம் பூண்டு, ஆகாராதிகளையும் விட்டுக் காட்டமும் கல்லும் போல அசையாதிருந்து உறுதியான யோகத்தைப் பெற்று அதுவே குறியாக நிலைத்தான். அவன்மேலே புற்றும்முடிக்கொடிகளுஞ்சுற்றிமறைத்தன.

அ. இப்படி ஆயிரம் வருடம் சென்ற முடிவில் முற்கல முனிவன் அவ்வழியே வந்தான். அப்போதுவேடனாகிய தனது சிடனை நினைத்துப் புற்றினாலே மூடப்பட்டிருந்த அவ்வேட முனிவனைப் பார்த்தனன். பிறமுனிவர்களால் செய்யமுடியாத உத்தம தவத்தில் நிலைத்தவனும், கண்மாத்திரம் தோன்ற உடலம் எல்லாம் புற்றால் மூடப்பட்டவனு மாகிய வேடனை முனிவர்பெருமான் முயற்சியால் பார்த்து மேலே மூடியிருந்த புற்று மண்ணையெல்லாம் நீக்கி, அபிமந்திரித்த சலத்தினாலே அவ்வேடமுனிவனது அங்கம் முழுவதையும் நனைத்தான்.

௯. அப்போது அந்த வேட முனிவன் விநாயகரது சாரூப்பியம் பெற்றதும், துதிக்கையோடுகூட இரண்டு கரமுடையதும், விநாயகரது மந்திரத்தைச் செபிப்பதுமாகிய திவ்விய சரீரத்தை அடைந்தான். அப்பொழுது முற்கல முனிவனாலுணர்த்தப்பட்ட வேடமுனிவன் தன்னிரண்டு கண்களையுந் திறந்தான். முற்கல முனிவனால் தவந்தடுக்கப்பட்டதனால் வேட முனிவனது கண்களிற்றோன்றிய அக்கினியானது மின்னல்போல விண்ணிற் சென்று மூவுலகையும் சுடத் தொடங்கியது.

௧௦. பிறகு வேடனாகிய அந்தணமுனிவன் விநாயக நாமத்தைத் தனக்கு உபதேசித்த அருளாளனாகிய தனது குருவைக்

கண்டு மகிழ்ச்சியோடு வணங்கித் தனயன் தந்தையைத் தழுவு வதுபோலத் தழுவிக்கொண்டான். அப்போது வன்மீகத்திலி ருந்து மீளப் பிறந்த புதல்வனாகிய அவனை முற்கல முனிவன் கொண்டாடிப் புருவமத்தியிலிருந்து துதிக்கை முளைத்திருப்ப தால் புருசுண்டி என்று அவனுக்கு நாமகரணஞ்செய்து, பின்பு ஏகாக்ஷரமாகிய மகாமந்திரத்தை உபதேசித்தான்.

கக. பின்னும், நீ மகாசித்தனாயிரு. பிரமா முதலிய தேவர் களாலும் சித்தர்களாலும் அருச்சிக்கப்படுவாய். மைந்தனே! விநாயகப்பெருமான் எங்ஙனம் யாவராலும் தியானிக்கற்பாலரா யும், தெரிசிக்கத் தக்கவாராயும், பாபவிமோசகராயுமுள்ளாரோ அங்ஙனமே நீயும் இப்போதே யாவராலும் தியானிக்கத் தக்க வனாகவும் தெரிசிக்கத் தக்கவனாகவும் பாபவிமோசகனாகவும் ஆகிப் புருசுண்டி எனப்பெயர் பெற்றவனாகுக. உன்னுடைய தரிச னம் எவனுக்குக் கிடைத்ததோ அவன் பிறவிப்பயன் பெற்றவ னாவன். உனக்கு இனி வயது என் வாக்குப்படி ஒரு லக்ஷ கற்ப காலமாம் என்று அனேக வரங்களைக் கொடுத்தான்.

க௨. இங்ஙனம் முற்கல முனிவன் புருசுண்டிக்கு அனேக வரங்களைக் கொடுக்கும்போது பிரமா முதலிய தேவர்களும், நார தர் முதலிய முனிவர்களும் தெரிசிக்க வந்து, அவனை வணங்கி ஓ புருசுண்டி முனிவரே! உம்மைத் தரிசித்த எங்களுடைய பிறவி பயனுற்றது; எங்களுக்கு ஞானமும், தவமுங் கீர்த்தி யும் இருமுதுகுரவரும் நீரே; எமக்குக் கணநாதரும், அன்பால் பூசிக்கத் தக்கவரும் நீரேயாகின்றீர் என்று கூறினார்கள். உட னே புருசுண்டி முனிவன் அவர்களெல்லோரையும் அன்போடு வணங்கிப் பூசித்து அவர்களை விடையளித்தனுப்பி முற்கல முனி வன் உபதேசித்தபடி ஏகாக்ஷரமந்திரத்தைச் செபஞ் செய்யத் தொடங்கினான்.

க௩. பிறகு நூறுவருடஞ்சென்றபின் வேழமுகத்தையுடைய விநாயகப் பெருமான் புருசுண்டி முனிவனுக்குப் பிரசந்நமாகத் தோன்றினார். தோன்றியருளிப் புருசுண்டியே நீ எனது சா ரூப்பியத்தைப் பெற்றுயாதலால் தேவர்கள்முதலியோராலுந்தொ ழத் தக்கவனாயிரு. பிரமத்தன்மை முதலாகிய பத்துச் சித்திக ளும் உனக்களிக்கப்பட்டன. நீ பிறவிப் பயனைப் பெற்றவ

ளுகின்ருய். ஆயுள் முடிவிலே நீ சாயுச்சிய பதவியையும் அடை வாய் என்று வரமளித்தார்.

௧௪. இங்ஙனம் விநாயகப் பெருமானது திருவருளால் முற்கல புத்திரனாகிய புருசுண்டி முனிவன் வரங்களை அடைந்து பிரம வித்துக்களில் உயர்ந்தவனாயும் ஞானியாயும் சிறந்த நாமலம் என்னுந்தலத்தில் வசித்திருந்தான்.

௧௫. ஓ முனிவர்களே! இந்த உயர்ந்த சரித்திரமானது உங்களுக்குக் கூறப்பட்டது. இச்சரித்திரம் அறம்பொருள் இன்பம் வீடு நான்கையும் அளிப்பது. புத்திர பௌத்திராதி சந்தானத்தையும் தரவல்லது. மகாபாதகங்களையெல்லாம் போக்குவது. இதன்மேல் இன்னும் என்ன கேட்க விரும்புகின்றீர்கள் என்று முருகப்பெருமான் கேட்டருளினர்.

ஆறுவது அத்தியாயம் முற்றிற்று.

ஏழாவது
பொல்லாப்பிள்ளையாரது முதற்றிருவிளையாடலாகிய குணவானுக்கருள் புரிந்த அத்தியாயம்.

௧. முனிவர்கள் ஆறுமுகப்பெருமானைப் பார்த்து மகாசேநரே! திருநாரையூரென்னும் பெரிய தலத்தில் விநாயகராலும் சிவலிங்கப் பெருமானாலும் செய்யப்பட்டனவாய்ச் செவிக்கின்பந்தருவனவாகிய திருவிளையாடல்களைக் கருணையோடு திருவாய்மலர்ந்தருள வேண்டும் என்று வினவச் சுப்பிரமணியக்கடவுள் கூறத்தொடங்கினர்.

௨. முன்னொருகாலத்திலே மகத தேசத்திலே தருமநெறி ஒழுகிய சந்திரசேனன் என்னும் அரசன் பூமியை ஆண்டு வந்தான். அவனுக்கு இரண்டு மனைவிகளிடத்தில் வீரியமும் குணமுமுடைய இரண்டுபுத்திரர்கள் பிறந்தார்கள். அவர்கள் பலவான் வீரியவான் என்று மூவுலகத்திலும் பிரசித்தி பெற்றவர்கள்.

௩. மூத்தவனாகிய பலவான் பிதாவின் அநுமதிப்படி கிரிவிரச நகரத்தில் இருந்து பூமியை ஆண்டான். இளையவனும் மாற்றாந்தாய் மகனுமாகிய வீரியவான் என்பவன் பாடலீபுரத்

திலிருந்து அரசு செலுத்தினன். சந்திரசேநன் என்னும் பிதா வனத்திற் சென்று யோகத்தால் விண்ணுலகெய்தினன்.

௪. பலவான் என்னும் மூத்த அரசகுமாரனுக்குப் பிரா மண மனைவியினிடம் இரண்டு பிள்ளைகளும், வைசியகுல மனைவியி னிடத்து இரண்டு பிள்ளைகளும், சூத்திரகுல மனைவியினிடத்து ஒரு பிள்ளையும், க்ஷத்திரியகுல மனைவியாகிய பட்டமகிஷியிடத் துப் பத்துப் பிள்ளைகளும், சூதகுலப் பெண்ணினிடத்து ஒரு பிள்ளையும் பிறந்தார்கள். இப்படிப் பலவானுக்குப் பதினறு பிள்ளைகள் உண்டானர்கள்.

௫. விரதவான், விருஷசேநன் என்னும் இருவரும் பிராம ணியின் புதல்வர்கள். சரத்துவான், வாக்குமி என்னும் இருவ ரும் வைசியகுல மாதின் புதல்வர்கள். துர்முகன் முதலாகிய பதின்மர் பட்டமகிஷியின் புதல்வர்கள். சயன் என்பவன் சூத குலப்பெண்ணின் புதல்வன். உக்கிரன் சூத்திரகுல மனைவியின் புதல்வன். இந்தப்பதினறு புதல்வர்களில் பட்டமகிஷியின் புதல் வர்கள் இளையவர்கள். அரசன் இப்புதல்வர்களைப் பிருசாசுவ னென்பவனிடத்து வில்வித்தை கற்கும்படி செய்தான்.

௬. இப்பதினறு பிள்ளைகளுள்ளும் மூத்தவனகிய விரத வான் வலிமையுடன் கூடினவனயும், தருமசாத்திரத்தில் பாரங் கதனயும், தனுர் வேதத்தில் பண்டிதனயும் விளங்கினன். இரண் டாவது குமாரன் விருஷசேநனும் தனுர்வேதத்தில் முதன் மை பெற்றான். நான்காவது குமாரனகிய வாக்குமியென்பவன் வித்தைகளிற் பாண்டித்தியம் பெற்றான். இவன் வித்தைகளிலும் பராக்கிரமத்திலும் விரதவானுக்கு ஒத்தவன். மூன்றாவது குமாரன் சரத்துவான். இவன் எல்லாத் துறைகளிலும் சாது ரியமுடையவன். ஏழாவதாகப் பிறந்த வீரன் என்னும் அரச குமாரன் பதினயிரம் யானை பலமுடையவன் ஆனன். ஐந்தா வது அரசகுமாரனகிய துர்முகனென்பவன் வில்வித்தையிற் சிறந்தவனனன். தேர்ப்பாகன்மகள் புதல்வனகிய சயனென்பவன் கதாயுத்தத்தில் முதன்மையனகவும், வில்வித்தையில் விரதவா னுக்குச் சமானனகவும், புத்திசாலியாகவும், இருந்தான். ஆறா வதாகப் பிறந்த உக்கிரனென்பவன் பதினயிரம் யானை பலமுடை யவனகவும், கதாயுத்தத்தில் துர்முகனுக்குச் சமானனகவும்,

வில்லில் விரதவானுக்குச் சமானனாகவும், வாள் முதலிய சத்திர யுத்தங்களிலும் மல்லயுத்தத்திலும் மிக மேலானவனாகவும் சிறந்து விளங்கினான்.

எ. இந்தப் பதினாறு குமாரர்களும் யௌவனத்தோடு கூடினவர்களாயும், மகாபலமுடையவர்களாயும், விளங்குவதை அரசன் கண்டு மகிழ்ந்து, இராணியின் குமாரனும், புத்திசாலியுமாகிய துர்முகனுக்கு விதிப்படி யுவராசபட்டாபிஷேகத்தைச் செய்து முடித்தான். அரசியல் விருத்தியாதற்பொருட்டுச் சாத்துவான், விருஷசேநன், வாக்குமி, விரதவான், என்னும் இந்நால்வரும் அமைச்சராகவும், உக்கிரன் சயன், என்னும் இரண்டு குமாரர்களும் சேனாபதிகளாகவும் அரசனால் நியமிக்கப்பட்டார்கள். துர்முகன் என்னும் வீரன் இளவரசனாகவிருந்து பூமியைப் பரிபாலித்து வந்தான்.

அ. இப்படியிருக்கும் நாளிலே பலவான் என்னும் பெரிய அரசனது தம்பியாகிய வீரியவான் என்னுமரசன் கர்க்கமுனிவனுக்குக் கிருதாசியிடம் பிறந்த சுகந்தி குந்தலையையும் விதர்ப்பராசன் புதல்வியராகிய சுந்தரி மங்களாம்பிகை என்னும் இருவரையும் மணந்துகொண்டான். இம்மூவர்மனைவியரில் சுந்தரியிடத்தில் தருமவானும், பதினாயிரம் யானை பலமுடைய மருத்துவானும் சாபவானும் ஆகிய மூவரும் சுகந்திகுந்தலையிடத்தில் வடிவாலழகிய குணவானும் மங்கலையிடத்தில் திருதிமான், சத்தியவான் என்னும் இருவரும் ஆக நற்குணங்கள் நிறைந்த ஆறு குமாரர்கள் முறையே பிறந்தார்கள்.

கூ. தருமவான் என்னும் மூத்த அரசிளங் குமாரனுக்கு ஏழாவது வயது நடைபெறும் பொழுது துர்முகனுக்கு மாமனானவன் தன் சகோதரி மகனாகிய அத்துர்முகனுடைய நலத்தின் பொருட்டுப் பலவானோடும் பல அரசர்களோடும் சேர்ந்து வீரியவான் என்னும் அரசனை வஞ்சனை யுத்தத்தாற் பொருது வென்றான்.

க௦. இராச்சியமிழந்த வீரியவான் தனது மனைவிமாருடனும் மக்களுடனும் தண்டகாரணியத்தை அடைந்து முனிவர்களுடன் வசித்து வந்தான்.

கக. துர்முகனுடைய மாமனாகிய துச்சனியென்பவன் தான் வென்ற ராச்சியத்தைப் பலவானாகிய மைத்துனனுக்குக்

கொடுத்துவிட்டு, அரசர் கூட்டங்களுடன் மகிழ்ச்சியோடு தன் னகரத்தை அடைந்தான்.

௧௨. விரியவான் தன்மனைவி மக்களுடன் துக்கத்தால் மெலிந்து முனிவர்களுடன் கானகத்தில் வனவிருத்தியாற் காலங் கழித்தான். இங்ஙனமிருக்குங்காலத்தில் புண்ணிய காலமாகிய துலாமாசத்தில் காவேரியில் ஸ்நானம் செய்வதற்காகக் கௌதமன் முதலாகிய முனிவர்கள் ஓமாம்புலியூரென்னும் சிறந்ததலத்தை அடைந்தார்கள். அரசனும் தன் மனைவி மக்களுடன் அம் முனிவர்களோடு கூடவந்தான்.

௧௩. இங்ஙனம் வந்தவர்களிற் சிலர் ஓமாம்புலியூரிலும் சிலர் இராதாபுரத்திலும், சிலர் தெற்கிருப்பிலும், சிலர் அநந்தேசத்திலும் இருந்தார்கள். அரசன் தன் மனைவி மக்களுடன் திருநாரையூரிலே இருந்தான். இருக்குங்காலத்தில் அரசன் தன் மக்களுக்குத் தானே வித்தைகளைக் கற்பித்தான்.

௧௪. அப்புதல்வர்களுக்குள்ளே குணவான் என்னும் பாலன் சதா விளையாட்டிற் பற்றுடையவனைப் பிதாவையும் தன் சகோதரர்களையும் ஏமாற்றிவிட்டு அதிகாலையில் தோழர்களாகிய முனிகுமாரர்களுடன் தேவபூசைகளில் உற்சாகங்கொண்டு விநாயகாலயத்திற்குப் போய் வரலானன். பலவகை விளையாடல்களிற் பற்றுள்ள அவ்வரச குமாரன் ஸ்நானஞ்செய்து சிலாமூர்த்தியாகிய நாரைக்கருள் செய்த பொல்லாப் பிள்ளையாரை அறுகங் கொழுந்தும் வன்னிப் பத்திரமுங்கொண்டு அருச்சித்து, மண்ணினலே அமைக்கப்பட்ட மோதகங்களையும் பத்தி பாவனையோடு நிவேதனஞ்செய்து, முனிவர்களாற் புகழப்படும் விநாயக நாமாவளிகளைச் செபித்துக்கொண்டு ஒரு யாமம் வரையும் தினந்தோறும் தியானஞ் செய்துகொண்டிருப்பான். பிறகு ஏனை இளஞ்சிறுர்களுடன் போசனத்துக்காக வீட்டுக்குப் போவான்.

௧௫. இங்ஙனம் அரசகுமாரன் ஒழுகு நாளில் தன் மைந்தன் சதா தேவபூசை செபங்களால் பொழுது போக்குகின்றான் என்று தந்தையாற் கூறக்கேட்ட தாயானவள் கோபமுற்றவளாய்க் குமாரனைப் பார்த்து அடே துர்ப்புத்தியுடையவனே! முனிவர்க்குத் தௌகித்திரனே! எனது மைந்தனே! நீ வித்தை கற்பதை விட்டு இளமைதொட்டுத் தேவபூசையில் கருத்து

உடயவனாய் விளையாட்டிலேயே காலங்கழிக்கின்றாய். இனி நான் உனக்கு உணவு தரமாட்டேன். எந்தத் தெய்வம் உன்னால் பூசிக்கப்படுகின்றதோ அந்தத் தெய்வமே உனக்குப் போசனம் தருவதாக. மடவோனே நீ அங்கேயே போ என்று சொல்லி அவனையடித்து வீட்டினின்றும் வெளியே துரத்தினாள்.

கசுு. குணவான் என்னும் பெயருக்கேற்ற நற்குணம் இயற்கையிலமையப்பெற்ற அவ்வரசிளங்குமரன் உடனே பொல்லாப் பிள்ளையாரின் சந்நிதியை அடைந்து அழுதுகொண்டு அவ்விநாயகப் பெருமானை வணங்கி ஓ தேவரே! கருணைக்கு உறைவிடமானவரே! இனி உம்முடைய பூஜையை விட்டு நான் எனது வீட்டிற்குச் செல்லேன். நீரே எனக்கு உணவளிப்பின் உண்பேனல்லது வேறு பிறர்பால் உணவு வேண்டேன் என்றுசொல்லி விநாயகப் பெருமானையே இடைவிடாது தியானித்துக் கொண்டிருந்தான்.

கஎ. அன்று மாலையில் அவனுடைய தாய் கோயிலுக்கு வந்து தியானத்தில் இருக்கும் மகனைப்பார்த்துப் பசிதாகமற்றவனும் யோகிபோல அசைவற்றிருப்பவனுமாகிய அவனை உணவருந்தும் பொருட்டு வீட்டிற்கு வா என்று அன்புடன் அழைத்தாள். அப்போது குணவான் நான் உன்னால் தரப்படும் உணவை இனி உண்ணேன். தெய்வந்தரும் உணவையே உண்பேன் என்று தாய்க்குக் கூறிவிட்டுத் தியான நிலையிலே இருந்தான். தாய் அவனை மீட்கமாட்டாது பயத்தால் வருந்தித் தனதில்லஞ் சென்றாள். சென்றவள் தன் கணவனிடத்து மகன் செயலை உணர்த்த அவனும் கோபத்தோடு பொருந்தி இவன் என் மக்களுக்குள்ளே மிகவும் மூடன். இளமையிற் கல்வியை நாடாது விட்டவன். ஆதலால் அவன் மனிதரில்லாத இடத்திலே தனித்திருப்பதால் விலங்குகளுக்கே இரையாகுக. அதனால் எனக்கு வருத்தமில்லை என்று மனைவிக்குக் கூறித் தன் காரியத்திற் கருத்துடையவனானான்.

கஅ. இங்கே அரசகுமாரனாகிய குணவானோ தனித்துறைவதாற் பயமில்லாதவனாகவும், நோயற்றவனாகவும், விநாயகப் பெருமானையே தியானித்துக்கொண்டிருந்தான். அப்போது விக்கினேசுரருடைய கிங்கரனாகிய விக்கினம்வந்து அக்குழந்தையைப்

பலவித பயங்கரசொருபங்களாற் பயமுறுத்தியது. அப்போதும் அக்குமாரன் புறக்காணங்களின் விருத்தியின்மையால் யோகி வேந்தர்போல அவையொன்றையும் அறியாதிருந்தான். இங்ஙனம் அக்குமாரன் ஒருநாள் முழுதும் உணவின்றியிருந்தான்.

௧௯. இவ்வாறாக இருக்கும்போது பொல்லாப்பிள்ளையார் அவனது பத்தியால் மகிழ்ந்து, சித்திரைமாதத்துச் சுக்கிலபக்ஷத் துதியை திதியில் பிராதக்காலத்திலே அந்தக் குமாரனுக்கு முன்னே அம்மூர்த்திமத்தியினின்றும் வேழமுகத்துடனும் சித்தி புத்தி என்னும் இரண்டு சத்திகளுடனும் சர்வாபரண பூஷிதராகவும் வெளிப்பட்டருளினர். அத்தோற்றத்தைக் கண்டதும் அக்குமாரன் மகிழ்ந்து விநாயகப் பெருமானைப் பலதரம் வணங்கினன்.

௨௦. அப்போது அக்குமாரனை விநாயகப்பெருமான் தமது திருக்கரத்தால் அன்போடு எடுத்தணைத்துப் புத்திதேவியின் கையிலே கொடுத்தார். அவளும் அன்போடு தனது திருமுலைப்பாலை உண்பித்தாள். அதனால் அவ்வரசிளங்குமரன் அறுபத்து நான்குகலை ஞானங்களையும் அறிந்தவனானன். பிறகு சித்திதேவியானவள் அக்குழந்தையை எடுத்தணைத்துத் தன்றிருமுலைப்பாலையுண்பித்தாள். உடனே அக்குழந்தைக்கு அட்டசித்திகளும் உண்டாயின. பின்னர் விநாயகப் பெருமான் தமது திருக்கரத்தை அக்குழந்தையின் சிரசின்மேல் வைத்துச் சிவதிக்ஷை செய்து, ஓ குழந்தாய்! பத்தசிகாமணியே! அறுபத்துநாலுகலைகளும், அட்டசித்திகளும், எல்லா நற்குணங்களும், கோடி மன்மத ரூபமும், லக்ஷம் யானைப் பலமும் உன்னால் அடையப்பட்டன. இதிற் சந்தேகமில்லை. உனக்கு யுத்தம் நேரிடும்போது எம்மை நினைப்பாயாக. அப்போது சர்வாயுதங்களுடனே கூடிய தேரொன்று உன்னையடையும். யுத்தத்தில் உன்னை வெல்லக்கூடியவனாக உலகத்தில் பிறந்தவனுமில்லை. இனிப் பிறப்பவனுமில்லை. நீ சிவன்முத்தனாகப் பூவுலகில் லக்ஷம் வருடம் இருந்து உன் சகோதரர்களோடும், புத்திரர்களோடும், மூவுலகத்திலுமுள்ள சம்பத்துக்களை இனிது நுகர்ந்து உனது கணங்கள் புடைசூழ நம்முடைய பதத்தை அடைவாயாக. உனக்கு அநுக்கிரகஞ் செய்த தினமாகிய இந்தத் தினத்தில் இந்தத் தலத்திலே யாவர் எம்மை அருச்சிக்கின்றார்களோ அவர்களுக்கும் இப்படியே வரந்

களைக் கொடுப்பேம் ஐயுறவில்லை என்று திருவாய்மலர்ந்து அரசிளங்குமரனுக்கு அநுக்கிரகித்து, விநாயகப் பெருமான் தமது விக்கிரக ரூபத்துள்ளே மறைந்தருளினர்.

உக. அவ்வரசகுமாரன் சித்திபுத்தி தேவியர்களுடைய திருமுலைப்பாலமிர்தத்தை உண்டமையால் பெருமகிழ்வுடையவனாகித் தனக்குக் கிடைத்த அட்டசித்திகளின் மகிமையால்கணப் பொழுதில் அவ்விநாயகப் பெருமானுக்குப் பலவகை இரத்தினங்களிழைத்த ஓராலயத்தை நிருமித்தான்.

உஉ. பிறகு அவ்விநாயகப் பெருமானுடைய சந்நிதியிலே இருந்து, காலையில் அப்பெருமானைப் பூசித்துத் தனது தாயின் வீட்டை அடைந்தான். சித்திபெற்றுவந்த தநயனைக் கண்ட முனிபுதல்வியாகிய தாயானவள் தனது குமாரன் விநாயகப்பெருமானுடைய சாரூப்பிய ஒளியினாலே கோடி மன்மதப் பிரகாசமாக மிக்கு விளங்குவதைக் கண்டு மிக மகிழ்ந்து வியந்து கையிலே எடுத்தணைத்து அன்பாற்றழுவி, அங்கத்தடங்காத பெருங் களிப்புற்றாள்.

உங. தனது புத்திரன் இவ்வாறு சித்திபெற்று வந்தானென்று கேட்ட தந்தையாகிய அரசன் கௌதம முனிவனுடனும் ஏனை மைந்தர்களுடனும் வந்து உண்மை பொளியால் விளங்கும் மைந்தனைப் பார்த்துச் சித்தனாகிய கௌதமனை இவ்வொளியின் காரணம் என்ன என்று வினவினான். உடனே கௌதமன் தனது ஞானக்கண்ணால் நோக்கி விநாயகப்பெருமானது அருளால் வந்ததென்பதை அறிந்து, நடந்த செய்தி யெல்லாவற்றையும் அவ்வரசனுக்கு அறிவுறுத்தினான். அறிவுறுத்தி அரசகுமாரனாகிய அச்சித்தகுமாரனைக் கௌதமன் வணங்கினான்.

உச. பின்னர் அரசனால் வினவப்பட்ட அரசிளங்குமரன் தனக்குப் பொல்லாப் பிள்ளையார் வெளிப்பட்டருளினமையையும், அவரது தேவிமார்களாகிய சித்தி புத்தி யென்னுமிருவரும் திருமுலைப்பாலமுதமளித்ததையும், பொல்லாப்பிள்ளையார் வரங்கள் தந்ததையும் அன்போடு முறையாகத் தந்தையிடங்கூறினான். அதனைக்கேட்ட அரசர்பெருமானும், அவன் மனைவியும், மற்றை அரசகுமாரர் முதலியோரும் அளவிறந்த மகிழ்ச்சியுற்றவர்களாய்க், குணவானைப் பலமுறையுந் தழுவிக் கொண்டாடினர்கள்,

உ௫. பரமான்மாவாகிய பொல்லாப்பிள்ளையார் அரசகுமாரனுக்கு அருள் புரிந்த இந்த முதற்றிருவிளையாடலாகிய சரிதத்தை எவன் அன்போடு படிக்கின்றானோ அவன் அவ்விநாயகப் பெருமானது திருவருளால் ஞானத்தையும் சித்தியையும் பெற்று வாழ்வான்.

ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

எட்டாவது வீரியவான் அரசியல்பெற்ற அத்தியாயம்.

க. பின்னரும் முனிவர்களைப் பார்த்துக் குமாரப் பெருமான் கூறுவாராயினர். தேவகிமைந்தனான கிருட்டினன் சித்தர்போலப் பாலக்கிரீடைகள் செய்துகொண்டிருந்ததெவ்வாறோ அவ்வாறே அரசிளங்குமாரனாகிய குணவானும் சித்தனாயிருந்தும் எப்பொழுதும் பாலக்கிரீடைகள் பலவற்றைச் செய்துகொண்டிருந்தான்.

உ. இவ்வாறிருக்கும்போது மாசி மாதத்தில் கௌதமாதி முனிவர்களும், மனைவிமக்களோடு கூடிய அரசனும், மகிழ்ச்சியோடு கோதாவரி ஸ்நாநத்தின் பொருட்டுச் சென்றார்கள். கௌதமாதி முனிவர்கள் கோதாவரியையடைந்து அங்கே ஸ்நாநஞ்செய்துகொண்டு அக்கோதாவரிக் கரையிலே தங்கியிருந்தார்கள்.

ங. அப்பொழுது குணவான் தனது சித்திவன்மையால் பத்து யோசனை விரிவுடையதும், அவ்வளவு நீளமுடையதும், ஆயிரம் வீதிகளுடையதும், நவரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டதுமாகிய ஒரு நகரை மனதால் நிருமித்தான். அப்பட்டணத்துக்கு வெளியில் நூறு யோசனை விரிவுடையதும், நதி வாவி முதலியவற்றுடன் கூடியதுமான பல பயிர் நிலங்களையும் வளம்படப் படைத்தான். அதற்கும் வெளியில் அநேக விருக்ஷங்களுடன் கூடிய அழகிய வனங்களை முனிவர்கள் உறைவதன் பொருட்டு மகிழ்ச்சியுடன் உண்டுபண்ணினான். அந்தப் பட்டணமானது சித்தபுரம் என்னும் பெயராற் பூமியிற் புகழ்பெற்று விளங்கியது. அந்நகரின் மத்தியிலமைந்ததும் இரத்தினகசிதமானதும், சங்கநிதி பதுமநிதிகளோடு விளங்குவதுமான அரண்மனையில் குணவானுக்குத் தந்தையாகிய அரசன் வசித்தான்.

௪. அநேக தேசங்களிலிருந்து பிராமணர்களும், க்ஷத்திரியர்களும், வைசியர்களும், சூத்திரர்களுமாகிய நால் வருணத்தவர்களும் அவ்வுத்தம நகரில் வந்து குடியேறினார்கள். அநேக சனங்களால் நிரம்பியதும், தனதானியங்களோடு கூடியதும், மிக்க சுகத்தையளிப்பதும், சுத்தமானதுமான அந்நகர் குபேரபுரியை நிகர்த்திருந்தது. அந்நகரின் புறத்தேயுள்ளதும், இந்திரனுடைய உபவனத்தைக் காட்டிலும் சிறந்ததுமான அவ்வனத்திலே முனிவர் எண்பத்தெண்ணாயிரவர்கள் மகிழ்ச்சியோடு வசித்தார்கள். வீரியவான் என்னும் அரசர்பெருமான் அந்நகரில் இருந்துகொண்டு மனுமுறையாக அரசு செலுத்திவந்தான்.

௫. இங்ஙனம் பத்து வருடங்களானபோது அரசிளங்குமாரர்கள் யாவரும் கௌதமனிடமிருந்து சகல வித்தைகளையும் நன்கு பயின்றார்கள். இவர்களுக்குள்ளே தருமவான் என்னும் புதல்வன் ஐயாயிரம் யானைபலமுடையவனாகவும், தருமகாரியங்களில் பற்றுடையவனாகவும், தருமசாத்திரங்களிற் பண்டிதனாகவும், தநுர்வேதத்திலே நிபுணனாகவுமானான். மருத்துவான் என்னும் குமாரன் வீரபராக்கிரமமுடையவனாகவும், பதினாயிரம் யானை பலமுடையவனாகவும், கதாயுத்தத்தில் அதிக பண்டிதனாகவும் ஆனான்; இவன் வன்மையோடு பகைவர்களைத் தாக்கலால் தருமனை விட யுத்தத்திற் சிறந்தவனென்று நினைக்கப்பட்டான். சாபவான் என்பவன் குணசம்பந்நனும், தநுர்வேத பண்டிதனும், எண்ணாயிரம் யானை பலமுடையவனும் ஆனான். திருதிமான் என்பவன் வில்வித்தையை நன்றாக அப்பியசித்தவனும், செய்காரியங்களில் வல்லனும், ஏழாயிரம் யானைகளின் மிக்க பெலமுடையவனும் அத்திரசத்திரங்களில் வல்லவனும் வாள்யுத்தத்திலே சிறந்தவனும் ஆனான். சத்தியவான் உண்மையில் மிக்க பற்றுடையவனாகவும் வில்வித்தையில் பண்டிதனாகவும் பயங்கரமான வன்மையுடையவனாகவும் ஆறாயிரம் யானை பலமுடையவனாகவும் ஆனான்.

௬. சதக்கினியென்னும் ஆயுதத்தின் இரகசிய உண்மையையறிந்த சித்தசிரேட்டனாகிய குணவான் லக்ஷம் யானை பலமுடையவனாகவும், கோடிமன்மதாழகுடையவனாகவும், அடக்கம் முதலிய குணங்களோடு கூடினவனாகவும், பொறுமை

யாற் பூமிக்குச் சமானனாகவும், எல்லா யுத்தங்களிலும் வல்லவனாகவும், உலகத்தாருடைய கருத்தை அநுசரிப்பவனாகவும் தெய்வத்தன்மை வாய்ந்த சத்தியுடைமையால் கிருட்டினனைப் போன்றவனாகவும், உருவத்தினாலும், பேச்சினாலும், செய்கையினாலும், யாவரையும் மோகிக்கச் செய்பவனாகவும், தமையன்மார் பிதாக்களின் வயத்தில் நிற்பவனாகவும், தருமமார்க்கந் தெரிந்தவனாகவும் விளங்கினான்.

எ. இத்தன்மையராகிய புத்திரர்களால் சூழப்பட்டவனாகிய அரசன் மூத்தகுமாரனாகிய தருமனுக்கு இருபத்திரண்டாவது வயது நடக்கும்போது தனது புத்திரர்கள் அறுவரையும் பார்த்துக் கூறுவான். என் குழந்தைகளே! என் உயிரை மகிழ்விப்பவர்களே! எனக்குப் பிதாவினால் கிடைத்த இராச்சியபாகம் மகததேசத்திலேயுள்ள பாடலீபுரம் என்பது. எனது மாற்றாந்தாயின் புதல்வனும், எனக்கு மூத்த சகோதரனுமான பலவான் என்பவன் மத்திரதேசாதிபனாகிய மைத்துனனால் கபட யுத்தஞ்செய்து வென்று என்னை இராச்சியத்தினின்றும் நீக்கி அந்நகரைத் தானே ஆளுகின்றான்.

அ. இப்போது அவன் மிகுந்த பலமுடையவனாய், வீரர்களான பதினாறு பிள்ளைகளுடனும், பின்னும் மற்சியதேசம் முதலிய பதினாறு தேசங்களையும் வென்று பல அரசர் கூட்டங்களாற் றொழப்பட்டு ஒரு சக்கிரவர்த்திபோல் இருக்கிறான். அவனால் வனத்திற் றுரத்தப்பட்ட நாம் இராச்சியமிழந்தவர்களாய்த் தண்டகவனத்தில் வசிக்கின்றோம்.

௯. இந்தச் சித்தபுரம் என்னும் நகரம் அளகைநகரத்திலும் மேம்பட்டதாயினும் பூர்வராச்சியத்தின் நீங்கிய யாம் அரசராகமாட்டோம். குழந்தைப் பருவமாயிருந்த உங்களைக் காப்பாற்றவேண்டிய நிமித்தமே யான் தண்டகவனத்தை அடைந்து வசித்துவந்தேன். இப்போது நீவிரெல்லாம் மகாவீரர்களாகவும், இராசதருமத்தில் நிலைபெற்றவராகவும், வில்வித்தையின் இரகசியங்களை அறிந்தவர்களாகவும், போரிலே உறுதியுடையவர்களாகவும் ஆனீர்கள். நீவிர் எல்லீரும் என் ஆணைப்படி பாடலீபுரத்தை அடைந்து போரிலே மதங்கொண்ட பகைவர்களோடு பொருது அவர்களை நீதியாக வென்று பலவான் என்பவனைப் புத்திரர்களோடும், மைத்துனனோடுங் கட்டி

என் பக்கத்தே விரைவிற்கொண்டுவருக என்று கூறி அரசன் தன் வீரமக்களை ஏவினன். சித்தபுரநடனாகிய குணவான் தனது பிதாவை வணங்கிச் சகோதரர்களாற் சூழப்பட்டவனாய், ஒரு அக்குரோணி சைநியத்துடன் பாடலீபுரத்தை அடைந்தான்.

கo. அரசிளங்குமாரனாகிய குணவான் அந்நகரை அடைந்ததும், தனது தூதனொருவனைப் பலவானாகிய தனது பெரிய தாதையிடம் தூதாக அனுப்பினான். அந்தத் தூதன் கிரிவிரச நகரிலே பதினாறு மக்களாற் சூழப்பட்ட பலவானாகிய வீரனை அடைந்து மந்திரிகள் முதலிய சபையினராற்சூழப்பட்ட அரசனை அன்புடன் வணங்கி ஓ அரசர்தலைவ! நான் தருமவருமராசனது தூதன். உன் தம்பியைப் பாடலீபுர ராச்சியத்தினின்றும் ஓட்டிவிட்டு நீதியின்றி அவ்விராச்சியம் உன்னால் அநுபவிக்கப் படுகின்றது. இப்போது உன் தம்பியின் புத்திரர்களாகிய தருமவருமன் முதலிய வீரர்கள் சித்தபுரத்தைப் பரிபாலித்துக் கொண்டுவருகின்றார்கள். அங்ஙனமிருப்பினும் தம் பிதாவின் கட்டளைப்படி ஆறு வீரர்களென்று உலகத்தாரால் மெச்சப் படுகின்ற அவர்கள் போரை விரும்பி உனது மதிற்புறத்தே ஓர் அக்குரோணி சேனையுடன் வந்திருக்கின்றார்கள். சமாதானத்துடன் பிதிரார்ச்சித பாகத்தைத் தருகின்றாயா? அல்லது போர்முகத்திற்றருகின்றாயா? என்பதைக் கேட்பதற்கு என்னைத் தூதாக அனுப்பியிருக்கின்றார்கள். நீ கூறும் விடை யாதோ? அதனைக் கூறுவாயாக என்று தருமவருமனது தூதன் அரசனைக் கேட்டான்.

கக. உடனே பலவான் என்னுமரசன் அத்தூதன் மொழியைக் கேட்டுத் தனது புத்திரர்களையும், மந்திரிகளையும், சபையினரையும், அந்தணர்களையும் பார்த்துக்கூறுவான்; எனது தம்பியாகிய வீரியவான் பாடலீபுரம் என்னும் நகரைப் பிதாவினால் பிதிரார்ச்சிதமான உரிமையாற் பெற்றான்; இராச்சிய லோபத்தால் என்னாலும் என் மைத்துனனாலும் யுத்தத்தினால் வெல்லப் பட்டவனாய்த் தன் புத்திரர்களுடன் நுழையமுடியாத கானகத்தை அடைந்தான். அவனுடைய நான்காவது புதல்வன் குணவான் என்பவன் கணபதியின் திருவருளால் விட்டுணு சத்தி போன்ற சத்தியைப்பெற்று அச்சத்தியால் குபேர நகரத்துக்குச் சமமான சித்தபுரமென்னும் அழகிய நகரத்தைப்

படைத்துக் கோடிக்கணக்கான நான்கு வருணத்துப் பெரியோர்களும் நிறைந்து வசிக்கப்பெற்ற அக்நகரத்தில் நிலைபெற்றுளன் என்று நான் முன்னமே நாரதர் முகமாகக் கேட்டேன். அந்தக் குணவான் என்னும் புதல்வன் பிரமன் மால் முதலியவர்களாலும் வெல்லமுடியாதவன் என்பது எனது அபிப்பிராயம். இந்திரன், வருணன், வாயு, அக்கினி, யமன் என்னும் ஐவருக்கும் நிகரான தருமவருமன் முதலிய மற்றை ஐவரும் என் தம்பியின் புதல்வர்கள். மிக்க பராக்கிரமமுடையவர்கள் என்று நாரதர் கூறினர். ஆதலால் சமாதானமாக அவர்களுடைய இராச்சியத்தை நீதியால் அவர்களுக்கே கொடுக்க நான் விரும்புகிறேன். என் புதல்வர்களே! உங்கள் அபிப்பிராயத்தைக் கூறுக. மந்திரிகளே! நீங்களும் உங்கள் அபிப்பிராயத்தை எனக்கு மொழிமின்கள் என்றான்.

௧௨. அரசன் கூறிய மொழியைக் கேட்டுத் துர்முகன் என்னும் யுவராசன் அப்பொழுது தன் பிதாவுக்குக் கூறுவான். ஓ தாதையே! வீரர்தம்பெருமானே! பல மன்னவராற் றொழப்பட்டவனே! நாகாயுதங்களினும் வல்ல பதினறு தேசத்தரசர்கள் பதினறு அக்குரோணி சேனைக்குத் தலைவர்களாய் நமது சுவாதீனத்தில் நிற்கின்றார்கள். நாங்கள் எல்லோரும் வீரருட் சிறந்த பதினறு சகோதரர்களாக இருக்கிறோம். எங்களில் ஒருவனே மூவுலகையும் வெல்லவல்லன். ஆதலால் நான் வநவாசிகளாகிய அவர்களுக்கு இராச்சியத்தைத் திருப்பிக் கொடேன். அவர்கள் யுத்தத்திற்கு வந்தால் நானே அவர்களைக் கொல்வேன். இதில் சந்தேகமில்லை என்றான்.

௧௩. இவ்வாறு கூறிய துர்முகப் புதல்வனுடைய வார்த்தையை அரசன் கேட்டுத் தூதனைப் பார்த்து என் பிள்ளைகள் சைநியத்துடன் யுத்தத்துக்கு வருகின்றார்கள். யுத்தத்தினலேயே உனது இராச்சியத்தை நீ பெறுவாயாக என்று உனது தலைவனுக்கு நீ சென்று மொழிவாயாக என்று கூறிப் பலவான் அத்தூதனை அனுப்பினன்.

௧௪. உடனே அத்தூதன் தனதரசன்பால் வந்து பலவானுடைய வாக்கியத்தை மொழிந்தான். அது கேட்டதும் குணவான் தனது சேனையை சக்கரவியூகமாக அணிவகுத்து, அவ்வணியின் நடுவிலே மிக்க வலிமையுடைய தருமவானையும்,

முன்னணியிலே சாபவானையும், மருத்துவானைப் பின்னணியி லும், திருதிமானைத் தெற்குப் பக்கத்திலும், சத்தியவானை வடக்குத் திக்கிலும் நிறுத்தித் தானும் வியூகமுனையில் நின்றான்.

௧௫. அதுபோலப் பதினெட்டு அக்குரோணி சைநியத் துடனும் சகோதரர்களுடனும் தூர்முக அரசனும் யுத்தகளத் தையடைந்து, மகாவீரனும் சகோதரனுமாகிய விரதவானைச் சேனாபதியாக மந்திரங்களால் அபிஷேகம் செய்தான். யுத்த தத்துவம் தெரிந்தவனாகிய விரதவான் சேனைகளைப் பதுமவியூக மாக அணிவகுத்து, அதற்குத் தெற்குப் பாகத்திலே விருஷ சேனனையும் உத்தரபாகத்திலே வாக்குமியையும் பின்பக்கத்தில் உக்கிரனையும் சரத்துவானையும் நடுவிலே தூர்முகனைப் பதினாறு தேசத்தரசர்களுடனும் சகோதரர்களுடனும் நிறுத்தித் தானும் வியூகமுனையில் நின்று யுத்தபேரியை முழக்கினான்.

௧௬. அம்முழக்கம் கேட்ட குணவானும் கணபதியைத் தியானித்துக்கொண்டு அவர் திருவருளால் வந்த தேரிலாரோ கணித்துக் கணேசரளித்த வில்லை ஏந்திக்கொண்டு அதினின் றும் நாணொலியை எழுப்பித் தனது சங்கநாதத்தையும் உண்டு பண்ணினான். அச்சத்தம் கேட்டவுடனே சத்துருக்களெல் லாம் மூர்ச்சை அடைந்து பூமியில் விழுந்தார்கள். குணவா னுடைய தேர்ச்சாரதியானவன் அதிவிரைவில் தனது தேரை விரதவானுக்கெதிரிற் கொண்டுபோய் நிறுத்தினான்.

௧௭. அப்போது குணவான் விரதவானை வணங்கி மகிழ்ச் சியோடு சிரித்துக்கொண்டு என்னுடைய மூத்த சகோதரனே! சகல நூற்பொருளுண்மைகளையுமுணர்ந்தவனே! உனக்கு வந் தனம். உன்னால் எனக்கு ஒரு அடி கொடுக்கப்பட்டால் அதன் பிறகுதான் உனதாணைப்படி நான் உன்னோடு யுத்தஞ்செய் வேன் என்று கூறினான்.

௧௮ குணவான் கூறிய வார்த்தையைக் கேட்டதும் விரதவான் அவனுடைய நீதியோடு கூடிய குணத்தையும், நாணொலியையும் அவனுடைய இரதத்தையும் பார்த்து உள் ளத்திற் பயந்தும், அநேக பாணத்தொகுதிகளால் குணவானைத் தாக்கினான்.

௧௬. உடனே போரதிருகிய குணவான் விளையாட்டாக அநேக பாணங்களால் அவன் விட்ட பாணங்களைச் சேதித்து, விரதவாறுடைய வில்லையும் முறித்து, அவனது தேரிற்பூட்டிய குதிரைகளையும் சாரதியையும் தேரையும் சாய்த்து, அவனது தேர்காப்போரையும் சேனைகளிலுள்ள பல சேனையையும் எளிதாக நாசப்படுத்தினன். அப்போது விரதவான் தேரினின்றும் குதித்து வேறு ரதமின்றி நிராயுதனாய் ஓடினன். குணவான் எதிரியின் பதுமவியூகத்தைப் பிளந்து தென் பக்கத்தில் நின்ற விருஷசேநனை மயங்கவைத்து அங்கிருந்த சேனைகாவலரைச் சேனைகளுடன் கொன்று பின் பக்கத்தில் நின்ற உக்கிரனையும் சாத்துவானையும் உத்தரபாகத்தினின்ற வாக்குமியையும் தோற்கச்செய்து உள்ளே நுழைந்து வியூகமத்தியில் இருந்த துர்முகன் முதலாகிய அரசர்களையும், கால் முதல் தலைவரையில் சுலபயுத்தமாகப் பாணங்களை அழுத்தி விளையாட்டாக மூன்று அக்குரோணிசேனைகளையும் கொன்றான்.

௨௰. அதைப் பார்த்துத் துர்முகன் முதலாகிய பதினாறு சகோதரர்களும், ஐம்பதினாறு தேசத்து அரசர்களோடு ஒருங்குகூடி அநேக அத்திரசத்திரங்களால் வெற்றியைவிரும்பிக் குணவானோடு பொருதார்கள்.

௨௧. குணவான் பலராலும் தன்மேல் தொடுக்கப்படும் பாணங்களை விளையாட்டாக அநேக பாணங்களை விட்டுத் தொலைத்து, இரண்டு அக்குரோணி சேனைகளையும் அழித்துத் துர்முகன் முதலிய அனைவரையும் நிராயுதர்களாகச் செய்து, அரைநொடிப்பொழுதில் இவர்களுக்குத் துணையாக வந்த பதினாறு தேசத்தரசர்களையும் மூர்ச்சையடைவித்துத் துர்முகன் முதலிய பதினாறு சகோதரர்களையும் கட்டித் தனது தேரில் ஏற்றிக்கொண்டு ஒருயாமகாலத்துள் வெற்றியுடையனாகி வெற்றி முழக்கத்துடன் மகிழ்ந்து தன் சேனையையெய்தித் தமையனாகிய தருமவருமனை வணங்கி அவரெல்லோரையும் தமையன் பாதத்தில் வீழ்வித்தான்.

௨௨. துர்முகன் முதலிய பதினாறுபேரும் நாணமும் அச்சமும் எய்திநின்றார்கள். மருத்துவான் களிப்புடன் அவர்களுக்கு நாற்புறத்திலும் சேனையை நிறுவித் துணைவர்களோடு மகிழ்ந்தான்.

௨௩. பதினாறு தேசத்துத் துணையரசர்களும் மூர்ச்சை தெளிந்து, துர்முகன் முதலானவர்கள் சிறைபட்டதைக்கேட்டுப் பயத்தால் வருந்திச் சாவாதிருந்த தங்கள் சேனைகளுடன் உயிர் தப்பிய மகிழ்ச்சியோடு தங்கள் தங்கள் தேசத்தை அடைந்தார்கள்.

எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

ஒன்பதாவது
பலாகேசர்முதற்றிருவிளையாடலாகிய பலவான்மக்கள் வரம்பெற்ற அத்தியாயம்.

௧. சண்முகப்பெருமான் முனிவர்களைப் பார்த்துப் பின்னுங்கூறுவார்.

பலவான் என்னும் அரசன் தனது மக்கள் அவமானத்துடன் எதிரிகள்பாற் சிறைபட்டதைத் தூதரால் உணர்ந்து முதிய மந்திரிகளோடும், படைத்தலைவர்களோடும், வஸ்திரம் ஆபரணம் முதலிய காணிக்கைத் திரவியங்களை எடுத்துக் கொண்டு கவலையோடு கூடியவனாய்த் தம்பிமக்களாகிய தருமசேநன் முதலியவர்கள்பால் வந்தடைந்தான்.

௨. அவ்வரசனைக் கண்டதும் தருமசேநன் முதலானவர்கள் வணங்கிக் கூறுவார்:— அரசே! உனது புத்திரர்கள் உனதாணைப்படி யுத்தம் செய்ய வந்தார்கள். வந்து தோற்று எங்கள் வசம் சிறைபட்டிருக்கின்றார்கள். எங்கள் பிதா முன்னே கபடயுத்தத்தால் உன்னால் வெல்லப்பட்டார். இப்போது எங்களில் ஒருவனாகிய குணவானால் நேர்மையான யுத்தத்தால் சேனையோடு கூடிய பலராகிய உன் புதல்வர்கள் வென்று சிறைபடுத்தப்பட்டார்கள். இப்போது நீ சேனையோடு வந்து பொருது உன் புதல்வரை மீட்பது கருத்தா? அல்லது நீ புதல்வருடன் கூட எங்கள் தந்தைபால் வருகின்றாயா? அதனைச் சொல்லுக என்று தருமசேநன் கூறினான்.

௩. அதைக்கேட்ட பலவானாகிய பெரிய தந்தை தம்பி குமாரர்களறுவரையும் பார்த்து அவர்களோடு போர் செய்ய

முடியாதென்று நினைத்துத் தானும் அவர்களோடு கூடத் தனது தம்பியிடம் வருதற்குச் சம்மதித்தான். உடனே தருமசேநன் முதலாகிய எல்லாரும் சித்தபுரத்தையடைந்தார்கள். அடைந்ததும் பிதாவைக் கண்டு அன்போடும் வணங்கி யுத்தத்தில் சத்துருக்களை வென்ற வரலாற்றைக் கூறினார்கள்.

௪. அதுகேட்ட வீரியவான் தனது தமையன் வந்ததை அறிந்து அவனை அன்புடன் வணங்கினான். பலவான் மகிழ்ந்த மனத்தவனாய் வணங்கிய தம்பியை ஆசிர்வதித்துக் குழந்தாய்! தம்பியே! நான் அப்போது மைத்துனன் வசமாகி மதிமயங்கி மண்ணாசையால் உன்னைப் போரில் வென்று அறியாமையால் உனது இராச்சியத்தைப் பிடித்துக்கொண்டேன். இப்போதும் சைநிய பலத்தால் செருக்குற்ற துட்டர்களாகிய என் பிள்ளைகள் என் சொல்லையும் மதியாமல் நின்புதல்வர்களுடன் பொருதுயுத்த களத்திற்றோல்வியுற்று எல்லோருங் கட்டப்பட்டார்கள். நீ என் பிழையை மறந்து என் பிள்ளைகளை விடுவிக்க வேண்டும் என்றும், என் பாதி இராச்சியத்தை எனக்குத் தந்து உன் இராச்சியத்தை நீயே ஆளுக என்றும் கேட்டுக்கொண்டான்.

௫. அதுகேட்ட தம்பியாகிய வீரியவான் மகிழ்ந்து, தமையன் பிள்ளைகளைச் சிறையினின்றும் விடுவித்து, அவர்களெல்லோரையும் தனதில்லத்தில் விருந்துண்பித்து, அநேக ரத்தினங்களுடனும், மக்களோடும் தமையனை அப்பொழுதே மகிழ்ச்சியோடு அவனது இராச்சியத்துக்கு அனுப்பினான்.

௬. பிறகு வீரியவான் தருமசேநனைப் பாடலீபுரத்துக்கரசனாகமுடிசூட்டித்தம்பிகளாகிய மருத்துவான் சாபவான் என்னுமிருவரோடும் அனுப்பினான். தருமசேநன் தகப்பன் ஆணைப்படி பாடலீபுரத்தை அடைந்து, அவ்விராச்சியத்தைத் தந்தையின் ஆணைபேணி ஆண்டுவந்தான். பின்னர் அரசன் குணவானைச் சித்தபுரத்துக்கரசனாக விதிப்படி முடிசூட்டுவித்துத் தான் கௌதமன் முதலிய முனிவர்களுடன் வநப்பிரதேசத்தைஅடைந்துநியமத்துடன் வேதாந்த சாத்திர சிரவணஞ் செய்தான்.

௭. குணவான் என்னும் குமாரன் திருதிமான், சத்தியவான் என்னும் சகோதரர்களுடன் கூடிச் சித்தபுரத்திலிருந்து நீதியாக அரசியலை நடத்தினான்.

அ. இஃதிங்ஙனமிருக்க; குணவானொருவனல் போரிலே வெல்லப்பட்டுப் பாதிராச்சியம் பெற்ற கூட்டத்தினராகிய துர்முகன் முதாலனவர்கள் மிகவும் கவலையுற்றவர்களாய்த் தந்தையாகிய பலவானை வணங்கித் தாங்களும் தவஞ்செய்து மேன்மை அடைதலை விரும்பினோமென்று கூறி, விடைபெற்றுக்கொண்டு திருநாரையூரை அடைந்து,' பொல்லாப் பிள்ளையாரையும் சிவலிங்கப் பெருமானையும் பூசித்து, இருதயத்திலே சதாசிவனைத் தியானித்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைச் செபித்துக்கொண்டு பெரிய தவத்தைச் செய்தார்கள்.

கூ. இங்ஙனம் அதுமுதல் மூன்றுவருடம் தவஞ்செய்த பிறகு அவர்களுக்கு முன்பு பரமசிவன் இலிங்கத்தினின்றும் வெளிப்பட்டுத் தோன்றினார். துர்முகன் முதலியோர் பார்வதி சமேதராகிய பரமசிவனைத் தரிசித்துப் பன்முறைவணங்கிப் பல துதிகளாற்றோத்திரஞ் செய்தார்கள். உடனே பரமசிவன் அவர்களைப் பார்த்து நீவிர் விரும்பிய வரங்களைக் கேண்மின் தருகின்றோம் என்று திருவாய்மலர்ந்தருளினார். துர்முகன் முதலியோர் எம்பெருமானே! யாங்கள் குணவானையும், அவன் சகோதரர்களையும், போரிலே வெல்லுமாறு எங்கட்கு அஸ்திர சஸ்திர முதலியவைகளையும் ஆற்றலையும் அளிக்க வேண்டுமென்றுபிரார்த்தித்தலும், சிவபிரான் நாராயணாஸ்திரம், பிரமசிரிடம், அகோரம், ரௌத்திரம், சூரியாஸ்திரம், சாத்தம், பாசுபதம், மகாபாசுபதம் முதலிய அஸ்திரங்களை உபதேசித்தார். நாராயணர் முதலிய அஸ்திராதிட்டான தேவதைகளும் அப்போது அவர்கட்கு வடிவுகொண்டு வெளிப்பட்டிருந்தார்கள்.

கo. துர்முகன் நாராயணம் பிரமசிரிடம் என்னும் அஸ்திரங்களைப் பெற்றுக்கொண்டான். அவ்வளவு வலியிலாகிய அவன் தம்பிமார் பிரமசிரிடம் என்ற அம்பை மாத்திரம் பெற்றனர். உக்கிரன் முற்கூறிய இரண்டுடன் அகோராஸ்திரத்தையும், சூதசைபுத்திரனாகிய சயன் ரௌத்திராஸ்திரத்துடன் இரண்டையும், சாத்துவான் முற்கூறிய நான்குடன்சூரியாஸ்திரமும் சேர்த்துஐந்தையும் தாங்கினர். வித்தையிற் பாண்டித்தியமுடையவனாகிய வாக்குமி மேற்கூறிய ஐந்துடன் சாத்தம் என்னும் அஸ்திரத்தையும், மகாபலமுடையவனாகிய விருஷசேநன் இந்த ஆறு அஸ்

திரங்களுடன் பாசுபதாஸ்திரத்தையும், விரதவான் என்னும் வீரன் இவ்வேழுவித்தையுடன் மகாபாசுபதவித்தையும் சேர எட்டுவித்தைகளையும் பயின்றுகொண்டார்கள். பரமேசுரன் விரதவானைப் பார்த்து அவனுக்கு மகாபாசுபதகவசத்தையும் அளித்துச் சித்தபுருடனாகிய குணவான்என்பவன் கணபதி வடிவமாகிய எம்மைத் தியானித்து, அத்தியானசித்தியில் என்னுடைய வலிமையை அடைந்தான். அதில் ஒன்றும் சந்தேகமில்லை.

கக. அவன் போர்க்களத்தில் பிரம விஷ்ணு ருத்திரர்களாலும் செயிக்க முடியாதவன். மகாபாசுபதகவசத்தை அணிந்தவனுடைய உடலில் மகாபாசுதம் முதலிய அஸ்திரங்களும், ஆதயுங்களும், சக்கரம், சூலம், கதை முதலியவைகளும் நுழையா. இதில் ஐயமில்லை. அக்கவசந்தரித்தவனைப் பிரமன் முதலியவர்களும் பாணங்களால் தாக்கவல்லரல்லர். அக்கவசந் தரித்தவனுடைய கைவிரலின் நகநுனியில் சஸ்திர பாணங்களால் அடிக்கப்பட்டால் அக்கவசம் தரித்தவனை விட்டு எம்மிடம் வந்துசேரும். இதிற் சந்தேகமில்லை. ஆதலால் உங்களுக்குள்ளே விரதவான் பலமும் வீரியமுமுடையவன். மகாபாசுபதத்துடன் கூடியவன். அவனே குணவானேடு போர்புரியவல்லன் ஆவான். அவனையல்லாத நீவிர் மகாபலமுடையிராயினும் குணவானைச் செயிப்பதற்குச் சமர்த்தரல்லீர். அவனுடைய எனைச் சகோதரர்களை முறையே வெல்லவல்லீர். இப்படி உங்களுக்கு வரமானது கொடுக்கப்பட்டது. எங்கே தருமமுண்டோ அங்கே செயமுண்டு என்று சொல்லிஉமாபதியானவர்அவ்விலிங்கத்துள்ளேமறைந்தருளினர்.

கஉ. துர்முகன் முதலானவர்கள் மகிழ்ச்சியுடன் கிரிவிரச நகரத்தை அடைந்து பிதாவை அன்புடன் வணங்கிப் பரமசிவன் கொடுத்த வரத்தையும் மொழிந்து மகிழ்ந்தார்கள். அதுகேட்டுப் பலவானும் பிள்ளைகளோடு அளவிலாத பேரானந்தத்தை அடைந்தான்.

கஙு. திருநாரையூரில் எழுந்தருளியிருக்கும் பரமசிவனது இத்திருவிளையாடலை யாவன் அன்புடன் படிக்கின்றுனே அவன் விரும்பிய பேற்றை அடைவான்.

ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

பத்தாவது
பலவான்மைந்தர் போர்புரிந்த அத்தியாயம்.

க. பலவான்மக்கள் வரம்பெற்ற வரலாற்றைக் கேட்ட முனிவர்கள் சண்முகப் பெருமானை வணங்கி, ஆறுமாமுகத்துப் பன்னிருதடந்தோளருட்பெருங்கடலே! கொடியஎண்ணமுடைய துர்முகன் முதலாகிய அரசகுமாரர்கள் மகாதேவரிடமிருந்து வரம்பெற்றபின் என்ன செய்தார்களென்பதை அடியேங்கட்குக் கூறியருள வேண்டுமென்று பிரார்த்திக்க முருகப் பெருமான் கூறத் தொடங்கினர்.

உ. பலவானாகிய அரசன் துர்முகனைப் பார்த்து என்காதல் மைந்த! நீ சிவபிரானது வரதானத்தால் மகாபலவானான குணவானைப் போரில் வெல்லவல்லையோ இதனைக் கூறுவாயாக என்று வினவினன்.

ந. துர்முகன் அதனைக் கேட்டுக் கூறுவான். சிவபிரானுரைத்தவாறு குணவான் சிவனுக்குச் சமமான ஆற்றலுடையவன் என்பது நிச்சயமாகத் தோன்றுகிறது. சிவபிரானுற்றாப் பட்ட கவசம் பாசுபதாஸ்திரம் முதலியவற்ருல் அவனோடு பொருதற்கு எங்களுக்குள்ளே விரதவான் சமர்த்தன். பகைவர்களால் விடப்படுகின்ற அநேக விதமான அஸ்திர சஸ்திரங்களும் கவசம் தரித்தவன்மையால் விரதவானுடைய உடலைப் பரிசிக்கவும் மாட்டா. விரதவானல் யுத்தத்திற் குணவான் மிகுதியாக அடிக்கப்படுவானேல் சகிக்கவொண்ணாத துன்பத்தால் அவன் யுத்தத்தினின்றும் மீளுவான். மீளாதிருப்பின் இறந்துவிடுவன். இது நிச்சயம். அவனது ஏனைச் சகோதரர்கள் எங்களோடு பொருதற்கு ஆற்றலில்லாதவர்கள்; எம்மைச் சரணமடைவார்கள். அல்லது போர்க்களத்தில் எதிர் நிற்பார்களேயாயின் எங்களால் அடிக்கப்பட்டு யமலோகத்தை அடைவார்கள் என்றான்.

ச. துர்முகன் கூறியதைக் கேட்ட விரதவான் தந்தையை வணங்கிக் கூறுவான். எந்தையே! முன்னே நடந்த போரில் குணவானுடைய பாண்டித்தியமும் எளிமையும் என்னால் நன்கறியப்பட்டன. ஆதலால் நான் நூற்றிலொரு பங்கும் அவனுக்கு ஒப்பாகேன். மகாபாசுபதாஸ்திரம் முதலிய அஸ்திரங்களை அவ

னும் நன்கறிந்தவனே. ஐயமில்லை. என் கவசத்தைப் பேதிக்க வும் அவன் வல்லனென்பது எனக்குத் தோன்றுகிறது. அவ னாற் புதிதுபடைத்தநகரமும் நம்மாற் காணப்பட்டது. அவனே கௌதமர் வாக்கினாலும் சிவனுடைய வாக்கினாலும் ஒன்றை ஆக்கவும் அழிக்கவும், வேறொன்றாக மாற்றவும் வல்லவன். அன் றியும் குணவான் எப்போதும் தருமசிந்தை உடையவன். அந் நகரிலுள்ள அந்தணர்கள் எப்போதும் இடைவிடாது வேள்வி களைப் புரிபவர். அதனால் இந்திரனுள்ளிட்ட தேவர்களும், கௌ தமர் முதலிய இருடிகளும் சதா அந்நகரில் விளங்கிக் காணப்படு கின்றனர். முன்னே குணவான் தன்னால் வெல்லப்பட்ட ராச்சி யத்தையும் நமக்களித்தான். நாம் அவனைக் கொல்ல முயலுகி றோம். பரமசிவனும் எங்கே தருமமுண்டோ அங்கே செயம் என்று நம்மைப் பார்த்துக் கூறியிருக்கிறார். தருமாத்மாவாகிய அவனே உண்மையாக வெல்லுவான். இது நிச்சயம். ஆதலால் நாம் அவர்களோடு மித்திரப்பான்மையளவிலே வசிக்கவேண்டும். அவ்வாறிருப்பின் எல்லா அரசர்களும் நமக்குத் திறையளிப்பார். நாம் குணவானைப்பகைப்போமாயின் அவனால் தோல்வியடைந்து இராச்சியத்தினின்றும் நீக்கப்படுவோம், சந்தேகமில்லை. அல் லது அவனது கோபத்தால் நிச்சயமாக மரணமடைவோம் என்றான்.

ரு. அதைக் கேட்ட வாக்குமி பிதாவைப் பார்த்துக் கூறுவான்— சிவபெருமான் குணவானை வெல்லச் சத்தி தர வில்லை. நாங்கள் தருமசேநன் முதலியவர்களை வெல்லவல்லோம். சகோதரர்களுடன் தருமசேநன் பாடலிபுரத்தில் வசிக்கிறான். உலகம் புகழும் குணவான் தருமனுக்கு மாற்றாந்தாயின் புதல் வன். அவன் தன் சித்திவலியால் நிருமிக்கப்பட்ட நகரில் சகோதரர்களோடும் வசிக்கிறான். இப்போது நாம் விரைவிற் பாடலிபுரத்திற்குச் செல்லவேண்டும். சகோதரர்களோடுகூடிய தருமசேநனோடு போர் செய்யவேண்டும். நாம் சென்று தரும சேநன் முதலியவர்களோடு பொருதால் அவர்களும் க்ஷத்திரிய தருமத்தைப் பின் பற்றிப் போர் செய்ய வருவார். நாம் தரும சேனனைச் சகோதரர்களோடு கொன்று பாடலிபுரத்தைக் கைப் பற்றிவிடலாம். அவர்கள் மரணத்தைக் கேள்வியுற்றுக் குண வான் கோபத்தோடு பொருக்குவரின் நாம் முனிவர்களாலும்

நீதிவாக்கியங்களாலும் அவனைச் சமாதானப்படுத்திக் கொள்வோம். அவன் தருமமுடையவனாதலால் நமக்கே பாடலீபுரத்தைத் தந்துவிட்டுத் தான் சித்தபுரத்திலேயே தங்கிவிடுவான். இதில் ஐயமில்லை. தண்டகத்திலுள்ள குணவான் இங்கே வருவதற்குள் நாம் சென்று விரைவில் தருமன்முதலியோரைத் தாக்கவேண்டும் என்றான்.

சு இவ்வாறு வாக்குமியால் உபாயங் கூறக்கேட்ட துர்முகன் முதலிய அரச குமாரர் பதினாறு பேரும் அதுவே நன்று நன்றென்று ஆமோதித்துப் பதினாறு தேசத்தரசர்கள் துணையுடனும், அவர்களுடைய சேனையுடனும், பாடலீபுரத்தையணுகி யுத்தபேரியை முழக்கினார்கள்.

எ. அவ்வொலியைக் கேட்டதும் தருமசேநன் நிகழ்ந்ததைத் தூதர் மூலமாக அறிந்துகொண்டு சித்தபுரத்துக்கு உத்தமமான ஒரு தூதனை அனுப்பிவிட்டுத் தன் சகோதரனாகிய சாபவானை நோக்கி முன்னே போரிலே நம்மால் வெல்லப்பட்ட துர்முகன் முதலியோர் உயிருடன் விடப்பட்டார்கள். இப்போது அவர்கள் எவர்களுடைய பலத்தைக்கொண்டு போருக்கு வந்திருக்கிறார்கள். யுத்த பண்டிதனாகிய சாபவானே உன்னால் அறியப்பட்டிருப்பின் எனக்குக் கூறுக என்றான்.

அ. அதைக்கேட்டதும் சாபவான் கூறுவான்:—முன்னே நம்மால் வெல்லப்பட்ட துர்முகன் முதலிய இவர்கள் துவேஷத்தோடு கூடினவர்களாய்ப் போரில் நம்மை வெல்லுதற்குத் திருநாரையூரையடைந்து பெரிய தவத்தைச் செய்தார்கள். பெரிய சித்தர்களால் வணங்கப் பெறும் நமது சகோதரனாகிய குணவான் அதனை அறிந்து பிரமசிரசு, நாரசிங்கம், அகோரம், ரௌத்திரம், என்னும் அஸ்திரங்களையும், சதக்கினி என்னும் ஆயுதத்தையும், சத்தியவானுக்கு மகிழ்ச்சியோடு கொடுத்தான். திருதிமானுக்கு இந்நான்குடன் சௌரம் என்னும் அஸ்திரத்தையும், நந்தகம் என்னும் பெயரையுடைய வாளையும் அளித்தான். மருத்துவானுக்குப் பாசுபதவித்தையையும் கௌமோதகமென்னும் தண்டையும் அளித்தான். எனக்கு அட்டாபதம், பினாகம், மகாபாசுபதம் முதலியவற்றையும் அஸ்திர சஸ்திரங்களின் சூக்குமததியையும் களிப்புடன் கற்பித்தான். முன்னே கௌமார சத்

தியையும் என் கையில் தந்துளான். இதை அநுசரித்தே திரு நாரையூர்ப் பெருமானும் அவர்களுக்கு வரமளித்திருக்கின்றார். அவர்களுக்குள் விரதவான் சிறந்தவன். மகாபாசுபதவித்தை பெற்றவன். அவன் தரித்த மகாபாசுபதகவசம் பேதிக்க முடியாதது. அதைப் பெற்றமையால் அவன் நம்மை வெல்ல வந்தான். என்றால் அக்கவசத்தைப் பேதிக்குமுறை குணவா னிடமிருந்து உணரப்பட்டது. நான் சென்ற மாதம் பிதாவைக் காணச் சென்றபோது மேல்வருஞ்செய்தி முழுவதையும் குண வான் அப்போதே கூறினன். நாம் அவர்களைப் போரில் வெல்லவல்லோம், இதில் சந்தேகமில்லை என்றான்.

௯. இவ்வாறு தன் சகோதரனான சாபவானது மொழி யைக் கேட்டதும், அறத்தில் கருத்துடைய தருமசேநன் ஓர் அக்குரோணி சேனையுடன் சகோதரர்கள் இருவரும் சூழப் போர்க்களத்தை அடைந்து அவர்களோடு போரைத் தொடங் கினன். அப்போது சித்தபுரத்தினின்றும் திருதிமான் சத் தியவான் என்னுமிருவரும் ஓர் அக்குரோணிசேனையுடன் குண வானுடைய ஆணைப்படி விரைவில் வந்துசேர்ந்தனர்.

௰. இரண்டு அக்குரோணி சைநியத்தையும் சாபவான் வியூகமாக வகுத்துத் தான் முன்னணியில் வில்லைக் கையில் ஏந்திச் சிவனுக்குச் சமானனாக நின்றான். விரதவானும் அப் படியே தன்னணியை வகுத்துக்கொண்டு தன் முனையின் முன்னே நின்றான்.

௧௧. நீதிநெறியினனாகிய தருமவான் போரைத் தொடங் கும்படி சட்டளையிட்டான். சாபவான் விரதவானோடும் மருத் துவான் பகைவராகிய மற்றைச் சகோதரர்களோடும் சத்திய வான் சரத்துவானுடனும் வாக்குமி திருதிமானுடனும் இணை யுத்தஞ்செய்தனர். இயமனையொத்த உக்கிரனும் சயனும் புகுந்து பகைவர் சேனையைக் கோபாவேசத்தாற் கொல்ல முயன்றார்கள். சாபவான் கைவன்மையால் விரதவானுடைய இரதங்களை உடைத்துச் சாரதிகளையுங்கொன்று அவனையும் தொழிலற்று ஒயச்செய்தான். வலியும் வீரமும் பிரதாபமுமுடையவனாகிய மருத்துவான் கதையேந்திய கையனாய்த் துர்முகன் முதலிய வர்களை மூர்ச்சையடைவித்து உக்கிரனோடும் போர்செய்தான்,

தருமசேநன் சூதசை புத்திரனுகிய சயனென்பவனுடன் போர் செய்தான். சாபவான் சத்துருசேனையிற் புகுந்து கைவிரைவி ஞற் பலவாறு நாசப்படுத்தினன். மருத்துவானும் உக்கிரனைக் கதையினல் மூர்ச்சையடைவித்துச் சேனையிற் புகுந்து கோபத் தால் பகைவர் கூட்டங்களைக் கொன்ருன். மகாபலவானுகிய சத்தியவான் சரத்துவானை மயங்கவைத்து நூற்றுவரைக்கொல்லி என்னும் படையால் சேனைகளை நூறுநூருகக் கொன்ருன். திருதிமான் வாள் தாங்கிய கையனுய் வாக்குமியையும் மூர்ச்சை அடைவித்துச் சத்துருசேனைகளை ஒரு கணப்பொழுதில் வெள் ளரிப்பழம்போல் பிளந்தான்.

கஉ. இவ்வாறு ஒரு முகூர்த்தத்துக்குள் சத்துருசேனை களை அழித்துத் தொலைக்க, விரதவான் தனது சேனையின் துன்ப ஒலியைக் கேட்டுக் கோபமுற்றுத் திவ்வியாஸ்திரங்களைப் பகைவர்மீதேவினன். சாபவான் அவற்றை அவ்வவற்றின் எதிர் அஸ்திரங்களால் மாற்றினன். பிறகு விரதவான் கோர மாகிய மகாபாசுபதத்தைப் பிரயோகிக்கச் சாபவானும் அத னலேயே மற்றதைத் தடுத்தான்.

கங. அதைப் பார்த்து மூர்ச்சை தெளிந்த சகோத ரர்கள் பதினறு பேரும் ஒருங்கு சேர்ந்து சாபவானை முற் றிப் போர் செய்தார்கள். சாபவானது சகோதரர்களும் துர் முகன் முதலியவர்களைச் சூழ்ந்து பொருதனர். திடவீரியமுள்ள சாபவான் விரதவானுடைய கைவிரனுனிகளில் அடித்துக்கவசத் தை வியர்த்தமாகச் செய்தான். விரதவான் அப்போது பயந்து போர்க்களத்தினின்றும் புறப்பட்டு ஓடலானன். அதைப் பார்த் துத் துர்முகன் முதலியோரும் போர்க்களத்தினின்றும் ஓடினர்கள்.

கச. இவ்வாறு தருமசேநன் முதலியோர் பகைவர் கூட் டங்களை வென்று, தமது சைநியங்களோடு சயவாத்தியங்கள் முழங்கத் தமது நகரை அடைந்தார்கள்.

பத்தாவது அத்தியாயம் முற்றிற்று.

பதினோராவது
தருமசேனன் யாகம் புரிந்ததும் குணவான் முத்தி பெற்றதுமுரைத்த அத்தியாயம்.

க. துர்முகன் முதலியவர்கள் போரிலே தோற்றுத் தமது நகரத்தை அடைந்து நிகழ்ந்த விருத்தாந்தத்தைத் தந்தைக்குக் கிரமமாகக் கூறினார்கள்.

உ. அதைக் கேட்ட பலவான் கூறுவான்:— குணவானுடைய வைபவத்தினாலே அவனுடைய சகோதரர்கள் இப்படிப்பட்ட வல்லமையுடையவர்களாயினார்கள். எப்பொழுதும் தருமத்துடன் கூடியிருப்பதாலும் சயத்துடன் விளங்குகின்றனர். ஆதலால் என் மைந்தர்களே! இனி நீங்கள் அவர்களிடம் பகைமையை விட்டுச் சகோதரபாவத்துடன் நண்புத்தளையால் பிணிக்கப்பட்டவர்களாய் ஒழுகவேண்டும் என்றான்.

ங. என்றிவ்வாறு பிதாவாற் கூறப்பட்ட நல்லுரையைக் கேட்டு மகிழ்ந்த சிந்தையுடையனாய் விரதவான் கூறுவான். சிவபெருமானாலே கொடுக்கப்பட்ட கவசத்தையும் குணவானிடத்திற் பயின்ற வித்தையால் விற்போரில் அருச்சுனனுக்குச் சமமான சாபவான் அறுத்தான். ஆகையால் அவர்களோடு மித்திரராயொழுகுதலே எனக்கும் பொருத்தமாகத் தோன்றுகிறது. அரசனே! சாபவானை யுத்தமுனையில் வெல்பவன் மூவுலகத்தினும் இல்லை இல்லை என்றான்.

ச. இவ்வாறு பிதாவின் ஆணைப்படியே துர்முகன் முதலிய மைந்தர்களனைவரும், தமது துவேஷத்தை விட்டுத் தருமசேனன் முதலியவர்களிடத்தில் முறையால் நட்புடையராகவிருந்து சித்தர்பெருமானாகிய குணவானிடத்தில் அன்புற்றவர்களாய்த் தமக்குள்ளதாகிய கிரிவிரசநகரத்தைப் பரிபாலித்திருந்தனர்.

ரு. ஒரு காலத்திற் சித்தனாகிய குணவான் தருமசேனனைக் காண்பதற்காகப் பாடலீபுரத்தை அடைந்து தருமசேனனால் உபசரிக்கப்பெற்றிருந்தான்.

சு. அப்போது தருமசேனன் அன்புடன் குணவானுக்குக் கூறுகின்றான்:— கணபதியாகிய பிரமப்பொருளின் தத்துவத்

தையுணர்ந்த சித்தர்களுக்குட் சிறந்தகுணவானே! உன்னால் யாங்கள் பெறும்பேறு பெற்றோரும், உயர்ந்தவர்களும், பரிசுத்தர்களுமாயினேம். இவ்வுலகத்திற் பழிப்பற்ற பெரும்புகழ் பெறுவதன் பொருட்டு ஆயிரம் அசுவமேதயாகமும் நூறு ராசசூயயாகமும் செய்யவிரும்புகிறேன்; அது நின்கருணையாற்பெறத் தக்கது என்பது எனது உறுதியான எண்ணம். ஆதலால் கணபதியருள் பெற்றோயே! நீயே அந்த யாகங்களை எனக்குப் பூர்த்தியடையச் செய்யவேண்டும் என்றான்.

எ. இவ்வாறு சகோதரன் மொழிந்த மொழியைக் கேட்ட குணவான் அவனைப் பார்த்துக் கூறுவான். "நீ யாகத்தின் பொருட்டு மன்னர்களுக்கெல்லாம் விரைவில் அழைப்புப் பத்திரம் அனுப்புக. அரசனே! நீ செல்வத்தின்பொருட்டு அவ்வரசர்களை வருத்துதல் வேண்டா. தருமநெறியாற்றேடப்படாத செல்வங்களாற் செய்யப்படும் யஞ்ஞமானது உயர்ந்த பலனுடையதாக ஆகாது. யாகத்தின்பொருட்டு வேண்டிய பொருள்கள் யாவற்றையும் யானே தருவேன்" என்று தன் சகோதரனாற் கூறப்பட்ட வார்த்தையைக் கேட்டுத் தருமசேநன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான்.

அ. குணவான் மறுநாட்காலையில் தியானஞ் செய்யும்போது விநாயகப்பெருமானையும், தனக்குத் தாயர்களாகிய சித்தி புத்தியென்னுமிருவரையும் திடபத்தியால் மகிழ்வுறச்செய்தான். சித்திபுத்திகளாகிய இருதேவியரோடும் விநாயகப்பெருமான் எதிரே தோன்றியருளினர். அப்போது மகிழ்ச்சியோடு கூடிய குணவான் கணபதியையும், சித்திபுத்திகளையும் தரிசித்து வணங்கி எனக்கு ஆயிரம் அசுவமேதயாகங்களுக்கு வேண்டிய குதிரைகளும், ஏனை உபகரணங்களும், இன்னும் நூறு ராசசூய யாகங்களுக்கு வேண்டும் பொருளும், தக்க இடமும் ஆகிய இவற்றை அளிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தான்.

கூ. அப்போது சித்திதேவியார் குணவானைப் பார்த்துக் குழந்தாய்! கிரிவிரசவநப்பக்கத்தில் கிருத்சமாச்சிரமத்துக்கு முன் தருமவானுடைய இராச்யத்தின் எல்லையில் சகல உபகரணங்களுடன் கூடிய ஒரு நகரம் உன் பிரார்த்தனைக்காக இப்போது என்னால் படைக்கப்பட்டது. அங்கே நினக்கு வேண்

டிய குதிரைகளும், சம்பத்துக்களும், அநேக மணிகளும், யாகோபகரண திரவியங்களும், அநேக சிந்தாமணிகளும், கற்பகச் சோலைகளும், அநேக காமதேனுக்களும், அநேக தாசர்களும், தாசிகளும் உண்டு. உனது தமையனாகிய தருமவானது கையால் அவ்யாகங்களை முடிப்பாயாக என்று கூறி, விநாயக பத்தனாகிய குணவானுக்கு வரமளித்துப் புத்திதேவியுடனும் விநாயகருடனும் அவ்விநாயகருருவிலே மறைந்தருளினர்.

ம. உடனே குணவான் சகோதரர்களோடும் போசனம் முடித்துக்கொண்டு புதிய நகரத்தையடைந்தான். சிந்தாமணிக் கற்களாலும், பொன்சாந்துகளாலும், அமைக்கப்பட்டுப் பலவித அழகோடு கூடியதும், ஏழு மதில்களோடு விளங்குவதும், அமிர்தமயமான வாவி கிணறு முதலியவைகளுடன் கூடினதும், சத்துருக்களுக்கு மோகத்தைத் தருவதும், மித்திரர்களுக்கு ஆச்சரியத்தை விளைப்பதும், நவநிதிகளும் நிறைந்த மூல பண்டாரங்களால் நிறைந்ததுமான அப்புதுநகரைக் கண்டதும் குணவான் மிக்க ஆச்சரியமுடையவனானன். தருமசேநன் முதலியவர்கள் குணவானுடைய பாக்கியத்தால் புதிது காணப்பட்ட சிறந்த நகரைக் கண்டதும் ஆநந்தமடைந்தார்கள்.

கக. அநேக தேசங்களினின்றும் முன்னரழைக்கப்பட்ட அரசர்களெல்லாம ஆயிரமாயிரமாக வந்துசேர்ந்தனர். திருதிமான் அவர்கட்கெல்லாம் தகுந்தபடி இடவசதியளித்தான். யாகங்காணும் விருப்பத்தால் கௌதமன் முதலிய முனிவர்கள் எல்லாம் வந்தனர். திருதிமான் இரண்டாவது வீதியில் அவர்களுக்கு இடவசதி செய்தான். மற்றும் அந்தணர்களெல்லாம் அநேக தேசங்களிலிருந்து யாகத்துக்கு வந்துசேர்ந்தனர். அவர்கட்கெல்லாம் திருதிமான் மூன்றுவது வீதியில் இடம் அளித்தான். பின்பு வந்த ஏனை அரசர்கட்கு நான்காம் வீதியிலும், வைசியர்கட்கு ஐந்தாம் வீதியிலும், வேளாளர்கட்கு ஆறும் வீதியிலும், மற்றையோருக்கு ஏழாம் வீதியிலும் அவரவர் விரும்பியபடி திருதிமான் இருப்பிடமளித்தான். குணவான் அங்கங்கே காமதேனுக்களையும், கிங்கரர்களையும், சிந்தாமணிகளையும், கற்பகங்களையும் முறையே வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயுமாறு பணித்தருளினன். பலவாறும் தன் புத்திரர்

கீளாடு யாகங்காண வந்துசேர்ந்தான். வீரியவானுகிய தந்தையும் மூவர் மனைவியருடன் வந்து அங்கே தங்கினுன். தருமசேநன் முதலியோர் அனைவரும் முதல் வீதியிலேயே அமர்ந்தார்கள்.

கஉ. அவ்விடத்திலேயே தருமசேநன் விதிப்படி யாகத்தைச் செய்தான். தருமசேநன் கௌதமன் கூறிய விதிப்படியே ஆயிரம் அசுவமேத யாகங்களையும் நூறு ராசசூய யாகங்களையும் செய்து முடித்து யாகத்துக்கு வந்தவர்களனைவரையும் கொடையால் இந்திரர்களைப்போலாகச் செய்தான். வந்தவர்களெல்லாம் நன்குபசரிக்கப்பட்டு மிக்க மகிழ்ச்சியோடு குணவானைப்புகழ்ந்து வாழ்த்திச் சென்ருர்கள். தருமசேநனும் யாகங்களை நிறைவேற்றிக்கொண்டு, தனது பாடலீபுரத்தை அடைந்தான். அப்போது யாகத்தின் பொருட்டுப் புதிதுண்டாகிய நகரமும் மாயமாக மறைந்தது.

கங. தருமசேநனும் பூவுலகிற்றேவேந்திரனைப் போல இருந்து மகிழ்ச்சியோடு சார்வபௌமனுக எல்லா ராச்சியத்தையும் ஆண்டு வந்தான். குணவான் சகோதரர்களுக்குத் தெரிவித்து விடைபெற்றுக்கொண்டு சித்தபுரத்துக்குச் சென்ருன். துர்முகன் முதலியவர்களும் குணவானுடையமகிமையையும், ஆற்றலையுமறிந்து சிறிதும் துவேஷமில்லாமல் சுகமாகவாழ்ந்தனர்.

கச. இங்ஙனம் ஒரு லக்ஷம் வருஷம் குணவான் பிதா மாதாக்கள் சகோதரர்களுடன் சுகமாக உலகில் வாழ்ந்து பின் மீளப்பிறப்பின் வாராத ஆனந்தபூமியை அடைந்தான். கணேசரருள் பெற்ற பெரியோர் குணவானுக்குப் பிரமப்பிரியன் என்னும் நாமத்தைச் சூட்டினுர்கள். சித்தர்பெருமானுகிய குணவான் கணேசப்பெருமானுக்குச் சமீபத்திலே வாழ்ந்திருந்தான்.

கரு. எல்லா விருப்பங்களையும் நிறைப்பதும், பிரமத்தன்மையைத் தருவதும், பொல்லாப்பிள்ளையார் பத்தர் வலைப்படுந்திறத்தை உணர்த்துவதும் ஆகிய இவ்வத்தியாயத்தை எவர்கள் அன்புடன் ஓதுகின்றனரோ அவர்கள் இட்டசித்திகளை எய்தி மீளாத சுககதியையும் பெறுவார்கள்.

பதினேராவது அத்தியாயம் முற்றிற்று.

பன்னிரண்டாவது
பொல்லாப்பிள்ளையாரது இரண்டாவது திருவிளை யாடலாகிய விப்பிரகன்னிகைக்கு அருள் புரிந்த அத்தியாயம்.

க. இருடிகள் கந்தப்பெருமானைப் பார்த்துக் குணவானது மண்ணுற் சமைத்த மோதகத்துக்கு மகிழ்ந்த கணேசப்பெருமான் மகாசித்தி முதலிய சித்திகளைக் கொடுத்தருளியலீலைகளை உணர்த்தியருளினை. இன்னும் அக்கணபதி அங்கே செய்த லீலைகளை எங்களுக்கு உணர்த்தியருள வேண்டுமென்று பிரார்த்திக்கத் துரும்புகளைச் சமர்ப்பித்து வரம் பெற்ற கதையையும் சண்முகப்பெருமான் அவர்கட்கு உணர்த்தத் தொடங்கினுர்.

உ. முன்னே ஒரு கிருதயுகத்தில் கணபதி உபாசனையிற் சிறந்த ஒரு பிராமணன் இத்திருநாரையூரில் இருந்தான். அவன் பெயர் சுசிலன் என்பது. கணேசதத்துவங்களில் விருப்புடையவன். அப்பெருமானுடைய தருமங்களை நன்குணர்ந்தவன். அவன் வைகறையிலே நித்தியகன்மங்களை முடித்துக்கொண்டு நல்ல பூமியிலே சென்று ஆயிரம் அறுகந்துணர்களை மந்திரத்தோடு பறித்து இருபத்தொரு அறுகுகளால் ஐம்பது முடிச்சாகக் கட்டி அழகிய அம்மாலையைத் திருநாமங்களோடு திருநாரைப்பிள்ளையாருக்கு மாலைக்காலந்தோறும் சமர்ப்பித்துவந்தான்.

ங. மிக்கவறியவனும் மனையாள் இல்லாதவனுமாகிய இந்த அந்தணன் ஐந்து வயதுள்ள கன்னிகையாகிய தன் புத்திரியை அநாதையாக விட்டு மரணமடைந்தான். அன்னையையும் பிதாவையுமிழந்த மங்கலையென்னும் பெயருள்ள அந்தக் குழந்தையை அவ்வூரிலுள்ள பிராமணர்கள் வளர்த்துவந்தார்கள்.

ச. விளையாட்டில் விருப்பமுள்ள அக்கன்னிகை துரும்புகளால் மாலை கட்டித் திருநாரைக்கணபதிக்கு நாடோறும் சமர்பித்துவந்தாள். அதனைக்கண்டு தேவபூசை செய்யும் அருச்சகன் கோபங்கொண்டு அவளை அடித்தான், அக்கன்னிகை அவ்வடியைப் பொறுத்துக்கொண்டு விநாயகருக்குத் துரும்பு மாலை சாத்திவந்தாள்.

ரு. அவ்வூரில் அரதாசன் என்னும்பெயருடைய சிவார்ச்சகன் ஒருவன் இருந்தான். அவனுக்குச் சிவனருளால் ஓரழகிய ஆண்குழந்தை பிறந்தது. அச்சிவப்பிராமணன் அக்குமாரனுக்கு உரிய வயதில் வேதாகமமுதலியவைகளை ஓதுவித்தான். அச்சிறுவன் பதினாறு வயதுக்குள் வித்தைகளில் பாண்டித்தியமடைந்தான்.

சு. அக்குமாரனுக்கு மாமனானவன் தனது கன்னிகையை அவனுக்கு மணம் செய்ய நினைந்து சிவசந்நிதியை அடைந்து சுவாமீ! அடியேன் பெற்ற கன்னிகையாகிய சுசீலை என்பவளைச் சுத்தனென்னும் என் சகோதரி மகனுக்கு மணம்செய்ய விரும்புகிறேன். தேவரீர் அநுக்ஞை தந்தருள்க என்று சங்கரனைப் பிரார்த்தித்தான். அப்போது சிவபெருமான் சிவலிங்கமத்தியிலே அசரீரியாகவிருந்து, அன்பனே! உன் மருமகன் விவாகம் செய்த ஐந்தாநாள் முதலையின் வாயில் அகப்பட்டு இறப்பது நிச்சயம் என்று அருளிச்செய்தார்.

எ. இங்ஙனம் பரமசிவனுடைய அசரீரிவாக்கைக் கேட்ட சுத்தனது மாமன் மிகவும் வருந்தி அச்செய்தியை இரகசியமாகத் தனது மனைவிக்கு அன்போடு மொழிந்தான். அவள் தான் நீராடப்போகும்போது மிக்க ஆதரவோடு தன் தோழிகளுக்கெல்லாம் கூறினாள். அத்தோழிகளும் இரகசியத்தைத் தங்கள் கணவர்களிடம் கூறினார்கள். பரமசிவனுடைய திருவாக்கு இப்படியே வெளியாகி, எல்லா ஊர்களிலும் எல்லாராலும் அறியப்பட்டதாயிற்று.

அ. இதனைக் கேள்வியுற்ற அந்தணர்களெல்லாம் சுத்தனுக்குப் பெண் கொடுத்தலை மறுத்தார்கள். பலராற் றடுக்கப்பட்டும் சுத்தனது தந்தை சுசிலனென்னும் அந்தணனுடைய மகளாகிய பத்து வயது நிறைந்த மங்கலை என்பவளைச் சகல ஆபரணங்களாலும் அலங்கரித்து விவாகமுறைப்படி தன் மகனுக்கு மனைவியாக ஏற்றுக்கொண்டான்.

கூ. மூடபத்தியாக விநாயகப்பெருமானுக்குத் தரும்புமாலை சாத்துபவளாகிய சுசீலை விவாக காலத்திலும் இரவிலே அத்தரும்புமாலையைத்தொடுத்து அன்போடு பரமான்மாவாகிய விநாயகப்பெருமானுக்குச் சாத்திலள்தாள்.

௰. விவாகமான ஐந்தாநாள் மணமகனாகிய சுத்தன் என்பவன் பந்துக்களோடுகூட இரவிலே போசனமுடித்துக்கொண்டு உதரபாதையால் வருந்தினான். அதன்பின் மலமோசனத்தின் பொருட்டு வெளியே போய் மலசலங்கழித்துக்கொண்டு அருகே உள்ள தடாகத்தையடைந்து விதிப்படி சௌசஞ்செய்துகொண்டு வேறு துறையிலே இறங்கி முகத்தைக் கழுவினான்.

௧௧. அப்பொழுது பயங்கரமான ஒரு பெரிய முதலை வந்து அவனுடைய காலைத் தன் வாயால் பிடித்துக்கொண்டு சலமத்தியில் உள்ளே இழுத்துக்கொண்டு போகவும் ஆரம்பித்தது. மகாவித்துவானாகிய சுத்தன் அம்முதலையினின்றும் தப்பிக்கொள்ளமாட்டாமல் துக்கத்தால் வருந்தித் தன்னைக் காத்துக்கொள்ளுமாறு அம்முதலையைப் பார்த்துக் கூறுகின்றான்.

௧௨. ஒ முதலையரசே! மகாபாக்கியசாலியே! தண்ணளியுடன் யான் மொழிவ ,தக் கேட்கவேண்டும். இளமையிலே தாய் தந்தையை இழந்தவளும், கிராமவாசிகளால் காக்கப்பட்டவளும் அநாதையும், குணமும் அழகும் நிறைந்தவளுமாகிய என் மனைவியைக் குறித்தே நான் வருந்துகின்றேன். அறிவுடையோய், பெருந்தன்மையுடையோய்! ஆதரவோடும் அவள்பால் கருணை செய்து என்னை விடுதலை செய்யவேண்டுமெனவேண்டினான்.

௧௩, அந்தணரேறே! அறிவாளனே! நான் உணவுண்டு மூன்றுயாமத்துக்கு மேலாகிறது. பசியால் வருந்துகின்ற நான் கையிற் கிடைத்த உணவை எப்படி விடுவேன் என்று முதலை கூறிற்று.

௧௪. சுத்தன் கூறுவான்— முதலைகட்கரசே! அப்படியாயின் என்னைச் சற்றே விடுக. யான் இல்லிற்போய் மனைவிபாற் கூறி அவளை ஆற்றுவித்து வைத்துவிட்டு மீண்டு ஒரு முகூர்த்தத்தில் உன்பால் வருவேன். இதில் ஐயம் வேண்டா என்றான்.

௧௫. இங்ஙனம் சுத்தனும் முதலையும் விவாதஞ்செய்து கொண்டிருக்கும்போது சுத்தனது மனைவியாகிய மங்கலையானவள் விநாயகாலயத்துக்குச் சென்று நியமப்படி விநாயகப் பெருமானுக்குத் திருப்புமாலையை அன்பினாலே சூட்டி நாய

கன் வீட்டுக்கு வருகின்றவள் வழியிலே உள்ள குளத்தில் முதலேக்கும் கணவனுக்கும் நடந்துகொண்டிருக்கும் சம்பாஷணையைக் கேட்டுக் கணவன் சமீபத்தை அடைந்தாள்.

கசு. கழுத்தளவினதாகிய சலத்தில் முதலையாற் பிடிக்கப் பட்டிருக்கும் கணவனைக் கண்டதும், நற்குணமுடையவளாகிய மங்கலை மிக்க துன்பமுற்றவளாய் முதலையைப் பார்த்து மொழி கின்றாள். ஓ முதலை அரசிறையே! என்மேற் றயைசெய்து எனது பதியாகிய சுத்தனை விடுத்து வேண்டுமானல் பயமின்றி என்னைப் புசிக்கலாம். இம்முனிகுமாரன் யானிறந்தாலும் வேறு கன்னிகையை நாடி மணந்து சுகத்துடன் வாழ்வானாக. இவனை விட்டு அநாதையாகிய நான் விதவையாக இருந்து யாது செய் வேன் என்றாள். முதலை அவளைப் பார்த்துப் பெண்ணாகிய உன்னை யான் உண்ணமாட்டேன். உன் கணவனை விடவும் மாட்டேன் என்று கூறியது.

கஎ. முதலை கூறியதைக் கேட்ட மங்கலையானவள் தன் கணவனுக்குமுன் தன் உயிரை விடத்துணிந்து ஓ நாதனே! உலகங்கட்கெல்லாம் தந்தையே! அன்பரைக் காப்பதிலே கருத் துடையோய்! எங்கணும் நிறைந்தோய்! எங்களிருவர்க்கும் உன் திருவடித்தாமரையைத் தருக என்று கூறித் திருநாரைப் பிள்ளையாரை இதயத்திலே தியானித்துக்கொண்டு நீரின் நடு விலே பாய்ந்தனள். அப்போது சித்திபுத்திகளாகிய தேவிய ருடன் கூடிய விநாயகப்பெருமான் தமது துதிக்கையால் அந்தப் பெண்ணைப் பிடித்துக்கொண்டார். அப்பெருமானுடைய பாச மானது அம்முதலையைக் கட்டி வெளியிலிழுத்துவிட்டது. முதலை யினின்றும் உயிர்தப்பிய சுத்தன்காயமில்லாமல் வெளியேறினன்.

கஅ. வேழமுகத்தை உடையவரும், மூஷிகவாகனமுடைய வரும் சித்திபுத்தி சமேதரும் ஒற்றைக்கொம்பையும் மூன்று திருக்கண்களையும் உடையவரும், பாசம், அங்குசம், வரதம், அப யம் என்னுமிவற்றைத் தரித்தவரும், செந்நிறமும் தொங்கிய வயிறும், சிவந்த வஸ்திரமும், முறம்போலுஞ்செவிகளுமுடைய வருமாகிய விநாயகப்பெருமானைத் தரிசித்து அந்த மங்கலை மிக்க மகிழ்ச்சியோடு பேரானந்தமெய்தி அன்போடும் விநாயகப் பெருமானைப் பலமுறை வணங்கி நின்றனள்.

௧௯. கணநாதர் அந்த மங்கலையைத் துதிக்கரத்தாலெடுத்துத் தமது திருமுடிமீது வைத்துக்கொண்டு பெருங் கருணையால் திருவாய்மலர்ந்தருளுவார்.

௨0. ஓ மங்கலையென்னும் எமது குமாரியே! தினந்தோறும் அறுகு கிடையாமையால் நீ அன்போடும் விருப்பத்தோடும் துரும்புகளால் திருமாலைகளைத் தொடுத்துச் சாத்திவந்தாய். என் குழந்தாய்! உன்னால் சாத்தப்பட்ட ஆரங்களில் எமக்குண்டாகிய பிரீதி பிரமணியும் சுவர்ணஆரங்களிலும் உண்டாகாது. இஃது உண்மை. உன்னுடைய அன்பு நெறியால் நாம் மிக மகிழ்ச்சியுற்றோம். அதனால் நாம் எம்மையே உனக்களிப்போம். எமது சத்தியாகிய சித்தியிடத்தில் எந்த வலிமை உண்டோ அந்த வலிமையை உனக்களித்தோம். அந்த வலிமை உன்னிடத்து நிலைபெறும். நீ நமதாணையால் முத்தொழிலும் செய்யும் ஆற்றலுடையை ஆவாய். இந்தக் கணவனோடு கூடிப் பதினாயிரம் வருடம் பாரிலே அநேக போகங்களையும் அநுபவித்து வாழ்ந்திருந்து பல மாந்தர்களுக்கும் அநுக்கிரகித்துத் தேகமுடிவில் உன் பதியோடு கூட எமது உலகத்தை அடைவாயாக.

௨௧. எமது குமாரியாகிய நீ சத்தியாகிய புவனேசுவரி போற் பூவுலகில் விளங்குக. புவனேசன் சத்தியின் அமைதல் போல் உன் பதியாகிய சுத்தனும் உன்னிடத்திலமைந்து வாழ்க. நீ பிதாவாகிய எம்மையும் தாய்மாராகிய சித்திபுத்திகளையும், எப்போது நினைக்கின்றாயோ அப்போது நாங்கள் உன்முன் காணநிற்போம். அணிமா முதலான சித்திகளும், பதினான்கு வித்தைகளும் அறுபத்து நான்கு கலைகளும், எட்டு ஐசுவரியங்களும் கிரியை முதலாகிய அட்ட சத்திகளும் எமது ஆணையால் உனக்கு ஏவன்மகளிராக வேண்டுவன செய்யும், என்று திருவாய் மலர்ந்தருளிச் சித்திபுத்திகளோடு கூடத்திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் திருவுருவில் மகிழ்ச்சியோடு மறைந்தருளினார்.

௨௨. விநாயகப்பெருமானது பாசம் பரிசித்ததனாலே முதலையானது ஒளியுருவாகி ஒரு விமானத்தை அடைந்து இந்திரலோகத்தை அடைந்தது. தெய்வப்பேரொளியையடைந்து விளங்குகின்ற சுமங்கலையாகிய மங்கலை களிப்புற்றவளாய்த் தன் கணவனுடன்கூடக் கணவனுடைய இல்லத்தையடைந்தாள்.

உஙு. சாம்பவதேசசை அடைந்து விளங்கிய சுத்தன் தன் பிதாவுக்கு நிகழ்ந்த செய்திகளையெல்லாம் மகிழ்ச்சியோடு கூறினான். அதனைக்கேட்ட பிராமணோத்தமனாகிய சுத்தனது தந்தை தனது மனைவி முதலிய பந்துக்களோடு மருமகளைப் புகழ்ந்து கொண்டாடினான்.

உச. அப்போது மங்கலையானவள் இந்திரனுடைய மாளிகைபோல ஓரில்லத்தைப் படைத்துத் தனது மாமன், மாமி, கணவன் என்னும் இவர்களோடு மகிழ்ச்சியுடன் வாழ்ந்து திருநாரையூரில் எழுந்தருளியிருக்கும் பொல்லாப்பிள்ளையாரையும் விதிப்படி அன்புடன் பூசித்துக்கொண்டு உலகில் பலரையும் உய்யப்பண்ணி இந்திரச்செல்வமாகப் பல போகங்களை அநுபவித்துப் புத்திரபௌத்திராதிகள் சூழப்பெற்றவளாய்ப் பலநாள் வாழ்ந்து பின் மாமன், மாமி, கணவன் இவர்களுடன் விநாயகப்பெருமானது அருளால் வந்த தேவவிமானத்திலேறிக் கொண்டு நிரதிசயானந்த வீட்டுலகத்தை அடைந்தாள். யோக சித்தி வாய்ந்த மங்கலை விநாயகப்பெருமானுடைய சத்தியாகிய சித்திதேவியின் தோழியானாள்.

உரு. பார்ப்பனக்கன்னிகைக்குத்தீர்க்கமாங்கலியங்கொடுத்ததும் விரும்பிய பேறெல்லாம் தருவதுமாகிய திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையாரது இரண்டாவது திருவிளையாடலாகிய இச்சரிதத்தை அன்புடன் யாவர் படிக்கின்றார்களோ அவர்கள் விரும்பிய சர்வாபீஷ்டங்களையும் எய்துவர். இது சத்தியம், முக்காலும் சத்தியம். பிராமண முகமாக இக் கதையைக் கேட்பினும் தீர்க்கமாங்கலியத் தன்மையுண்டாகும்.

உசா. இவ்விதமாகிய உயர்ந்த கதையாகிய மங்களாதேவியின் 'இச் சரிதை பாபங்களைப் போக்குவது' சகல காமங்களையும் அளிப்பது; மனிதர்களுக்கு அபமிருத்து வாதையைப் போக்குவது; இதனை உங்கட்குக் கூறினோம். இன்னும் நீவிர் எதனைக் கேட்க விரும்புகின்றீர்கள் என்று குமாரக்கடவுள் திருவாய்மலர்ந்தருளினார்.

பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

பதின்மூன்ருவது
ஏமாங்கன்சரிதங்கூறிய அத்தியாயம்

க. முனிவர்கள் முருகப்பெருமானைப் பார்த்துச் சுத்த னது மனைவியாகிய மங்களை சிவசத்தி போன்ற சத்தி வாய்ந்து என்னென்ன செயல்களை உலகத்திலே செய்து பெருமை பெற்ருள் என்பதையுங் கூறியருளவேண்டும் என்று கேட்க, விநாயகப் பெருமானது திருவருளால் உலகத்திலே மங்களையாற் செய்யப் பட்ட மிகுந்த அற்புதமான சரிதத்தை உங்கட்குக் கூறுவோம் என்று சண்முகப் பெருமான் கூறுவாராயினர்.

உ. மாகிஷ்மதி என்னும் நகரத்தில் கிருதவீரியன் வமிசத்தில் உதித்த ஓரரசன் இருந்தான். அவனது பட்டத்து அரசியாகிய மூத்தமனைவி கருப்பமுற்றிருந்தாள். அப்போது இளையவளாகிய குடிலை என்பவள் அசூயையாற் பிடிக்கப்பட்டவளாய் அவளது உணவிலே விடத்தைக்கலந்து நயவஞ்சகமாய்க்கொடுத்து அவளை உண்பித்தாள். அவ்விடவேகத்தால் மூத்தவள் குட்டரோகத்தை அடைந்தாள். பின்பு அவ்விடத்தினுல் குட்டரோகத்தோடுகூடிய புத்திரனைப்பெற்ருள். அதைக் கண்ட அரசன் அப்பொழுதே புத்திரனேடு கூடிய அவளை ஊரினின்றும் வெளியேற்றினுன். அவ்வரசி வநத்தை அடைந்து மிகவும் வருந்தி ஒரு வேடனுற் காப்பாற்றப்பட்டாள்.

௩. அப்புத்திரனுக்கு ஓராண்டு நிறைந்தபொழுதில்தாயானவள் நோயாற் பிடிக்கப்பட்டிறந்தாள். வேடன் குட்டரோகத்துடன் கூடிய அக்குழந்தையைத் தன்னுலியன்றவரை காப்பாற்றி வந்தான். அக்குழந்தை ஐந்தாம் வயதை அடைந்தபொழுது அவ்வேடனும் இறந்தான்.

௪. பிறகு அவ்வேடன் மனைவி அக்குழந்தையை எடுத்துக்கொண்டு பட்டினத்து வீதிகளில் பிச்சை எடுத்து அதிக அன்புடன் காப்பாற்றி வந்தாள்.

௫. இங்ஙனம் நாடோறும் கிராமத்துக்குக் கிராமம் அலைந்து திரிகின்றபோது ஒருநாள் தெய்வகதியாகப் பிச்சையின் பொருட்டுத் திருநாரையூரை அடைந்து மங்கலையின் வீட்டையடைந்

தாள். அப்போது மங்கலையின் இல்லத்தில் வேலை செய்வா ளொருத்தி ரோகமுடைய புத்திரனோடு கூடிய அவளைப்பார்த்து அக்குழந்தையிடத்தில் ராச சின்னமுடைமை கண்டு அவ்வேட்டு விச்சியிடம் அக்குழந்தையின் சரிதையை விருப்பத்தோடு வினு வினுள். அவ்வேட்டுவிச்சியும் தான் அறிந்த சரிதத்தை உண் மையாகக் கூறினுள்.

சா. வேலைக்காரி அதைக் கேட்டு எசமானியை அடைந்து அச்செய்தியைத் தெரிவித்தாள். உடனேமங்களாம்பிகை வெளி யே வந்து குட்டரோகத்தால் துன்புற்ற அக்குழந்தையைப் பார்த்து இரங்கிக் குண்டலினி ரூபமாகிய ஆதிசேடனது மத் தகத்திலே நடனஞ் செய்யும் கணேசப் பெருமானை இருதயத் திலே தியானித்து விபூதியை அபிமந்திரித்துப், பிரீதியுடன் மகிழ்ந்து, அக்குழந்தையின் கையில் கொடுத்தாள். மங்களாம்பி கையின் கட்டளைப்படி அக்குழந்தை அவ்விபூதியை உடம்பிலே உத்தூளனமாகப் பூசிக்கொண்டு எஞ்சியதைப் பத்தியோடு உட் கொண்டது. உடனே அக்குழந்தை உடலிலே உள்ள நஞ்சுவெப் பம் நீங்கி நோய் நீங்கப் பெற்றது.

எ. ஐந்து வயதுடையவனும், காய்ச்சிய பொன் போல் ஒளிர்கின்ற சரீரத்தையுடையவனும், சக்கிரவர்த்தி லக்ஷணங்களை உடையவனுமான அக்குமாரனைப்பார்த்து மங்கலை முதலிய அனை வரும் ஆச்சரியமும் மகிழ்ச்சியுமடைந்தார்கள்.

அ. அப்போது மங்கலை அக்குழந்தைக்கு ஏமாங்கதனென்று நாமகரணஞ் செய்து தன் வீட்டிலேயே வைத்து அன்போடு முயன்று வளர்த்து வந்தாள். அவ்வேட்டுவிச்சிக்கும் அங்கேயே சீவனோபாயத்தை ஏற்படுத்தினுள்.

கூ. மங்கலையின் கணவனுகிய சுத்தன் அக்குமாரனுக்குக் கலைகளெல்லாவற்றையும் அத்தியயனம் செய்வித்தான். ஏமாங் கனுக்குப் பதினுறு வயது ஆனவுடனே உலகத்துக்கு மங்கலையா கிய மங்கலை பொன்மயமான ஒரு பெரிய வில்லையும், அழிவிலாத இரண்டு அம்பறாத்தூணிகளையும், வாள் சங்கு இவைகளையுங் கொடுத்து அன்போடு கூறுகின்ருள்.

கO. ஓ குழந்தாய் ! ஏமாங்கதனே ! எனது குமாரனே ! நீ ஓர் அரசகுமாரன், உனது தந்தை பெருவலியுடையனுகிய மாகிஷ்

மதி நகரத்தை ஆளும் வேந்தன். உனது தாய் மாற்றாந்தாயாற் றப்பட்ட நஞ்சினையுண்டதனால் பட்டத்துத் தேவியாகிய அவள் நகரத்தினின்றும் தூரத்தப்பட்டு இறந்துபோனாள். குட்டநோயுற்றிருந்த உன்னை ஒரு வேட்டுவிச்சி கொண்டுவந்து என் கையில் தந்தாள். நீ நோயினின்றும் நீங்கி என்னால் பாதுகாக்கப் பட்டாய். ஆதலால் என்னையே மாதாவாக நீ நினைத்திருக்கின் றாய். உனது மாற்றாந்தாய் ஒரு பிள்ளையைப் பெற்றிருக்கிறாள். உருவத்தால் அழகிய அவனுக்கு இப்போது வயது பன்னிரண்டு ஆகின்றது. மதுராபுரிக்கரசனாகிய ஓர் அரசன் உன் தகப்பனை யுத்தத்தில்வென்று மனைவிமக்களுடன் சிறையில் வைத்துவிட்டுத் தானே மாகிஷ்மதி நகரத்திலிருந்து அரசு செய்கின்றான். ஆதலால் நீ நான் தரும் இரதத்திலேறிக்கொண்டு மகிழ்ச்சியோடு மாகிஷ்மதி நகரத்தை அடைந்து சத்துருவை எளிதாக வென்று உன் தகப்பனைச் சிறை மீட்பாய் என்று கூறினாள்.

௧௧. ஏமாங்கன் மங்கலையின் வாய்மொழியைக் கேட்டதும் சுத்தனாகிய பிதாவையும் வணங்கித் தாய் தந்தையராகிய அவ்விருவர்பாலும் விடைபெற்றுக்கொண்டு தெய்விகத் தேரிலேறி மாகிஷ்மதி நகரத்தை அடைந்து அங்கே அரசாளும் பகைவனைப் போருக்கழைத்தான். அவனும் போருக்கு வந்தான். வந்ததும் ஏமாங்கன் அவனை வென்று, தேருருளையிற் கட்டி இராச்சியத்தையும் வசப்படுத்திக் கொண்டு, தாய் தந்தையர்களைச் சிறையினின்றும் வெளிப்படுத்தித் தன் தந்தையை அன்போடு வணங்கிக் கை கூப்பித் தந்தைமுன் நின்றான்.

௧௨. அவ்வரசர் பெருமான் ஏமாங்கனைப் பார்த்து ஓ அரசரேறே! நீ யார்? எனது இராச்சியத்தையும், என்னுயிரையும் காப்பாற்றித் தந்தாய். ஆதலால் நான் உனது தாசனைப் போல உனக்குப் பிரீதி செய்யக் காத்துக்கொண்டிருக்கிறேன் என்று கூறினான். ஏமாங்கன் தந்தையை மீட்டும் வணங்கி, ஓ அரசர் பெருமானே! நான் உனது குமாரன் என்று சொல்லித் தனது சரித்திரத்தையும் முறையே தந்தைக்குக் கூறினான். அதைக் கேட்ட தந்தை தன் குமாரனை அன்போடு மார்பிலணைத்துத் தழுவித் தனது இளைய மனைவியைக் கடிந்து கோபித்து ஏமாங்கனுக்கே இளவரசு முடி சூட்டி மிகுந்த மகிழ்ச்சியோடிருந்தான்.

கங. ஏமாங்கன் என்னும் அரசகுமாரன் மங்களாதேவியின் அநுமதிப்படி தேவர், அசுரர், மனிதர்களோடு கூடிய பல லோகங்களையும் யுத்தங்களிலே வென்று, நூறு அசுவமேத யாகங்களையும், நூறு ராசசூயயாகங்களையும், யூபமில்லாத கணயாக முதலிய அநேக மகா யாகங்களையும் விதிப்படி செய்தான். பதினுயிர வருடம் இப்பூமியை மநுநெறி கோடாது மங்களாதேவியின் ஆணைப்படி அரசாண்டான். கணபதி உபாசனையோடு கூடிய அவன் பிறகு தனது இராச்சியத்தை மைந்தனிடத்தே ஒப்புவித்து மங்களாதேவியுடன் நித்தியானந்தமாகிய சிவலோகத்தை அடைந்தான்.

கச. மங்களாதேவியால் உலகாநுக்கிரகத்தின் பொருட்டு நன்மை தருவனவாகிய பல செய்திகள் செய்யப்பட்டன. அச்சரித்திரங்களெல்லாம் கூறின் விரிவாகுமென்று கருதி ஈண்டு இந்தச் சரிதம் ஒன்று மாத்திரம் கூறப்பட்டது.

கரு. ஏமாங்க சரிதமாகிய இதனை எவர்கள் பூமியில் படிக்கின்றார்களோ எவர்கள் அந்தணர்முகமாகக் கேட்கின்றார்களோ அவர்கள் மகா ரோகங்களினின்றும் நீங்கி இராச்சியத்தையும், செல்வத்தையும் அடைந்து வாழ்வார்கள். சந்தேகமில்லை.

பதின்மூன்றுவது அத்தியாயம் முற்றிற்று.

பதினுன்காவது
குவலயாசுவன் சரிதமுரைத்த அத்தியாயம்.

க. ஏமாங்கனுடைய சரிதத்தைக் கேட்ட முனிவர்கள் முருகவேளைப் பார்த்து பேரறிவாள! சிவகுமார! மங்களாதேவியின் கணவனுகிய சுத்தனை முதலை பிடித்தது எந்தக் குளத்திலே? அத்தீர்த்தம் யாரால் சுவாமி சந்நிதியில் அமைக்கப்பட்டது? அதனைத் தேவரீர் கருணை கூர்ந்து கூறியருள வேண்டுமென்று கேட்கச் சண்முகப் பெருமான் கூறுவாராயினர்:—

உ. மாதிஷ்மதி நகரிலே பெரும் புகழ் பெற்றவனுகிய ஏமாங்க அரசனுடைய பிதாவுக்குப் பாட்டனுகிய அரசன் ஒருவன் இருந்தான். அவன் கீர்த்தி பெற்ற உயர்ந்த ஞானியாகி

மூன்றுலகத்திலும் புகழப்பட்டவன். அவனுடைய பாட்டன் உயர்ந்த சத்தியவானென்று பேசப்படுபவன். அவ்வரசன் தனது பராக்கிரமத்தினாலே மூன்று உலகங்களையும், ஆண்டு வந்தான்.

௩. அவனுடைய புதல்வன் குவலயாசுவனென்பவன் பதினாயிரம் யானைப் பலமுடையவன். அவன் வீரியம், குணம், புத்தி, சாந்தம், அடக்கம், பொறிவழிச்செல்லாமை என்னும் இவைகளையுடையவன். வில் வித்தையிற் பண்டிதன். தந்தை சொற் கடவாதோன். பதினாறு வயது நிரம்பிய காளைப் பருவத்தனாய் கோடி மன்மதரழகெலாந் திரண்டாலொத்த அழகனாக இருந்தான்.

௪. ஒருகாலத்தில் முனிவர்கள் எப்போதும் யாகங்களை அழிக்கின்றவனாகிய பாதாளகேது என்பவனால் வாசபேயம் முதலிய யாகங்கள் அழிவுறாமல் பாதுகாக்க வேண்டிச் சத்தியவானென்னும் அரசனை வேண்டிக்கொண்டார்கள். அவன் தன் மைந்தனாகிய குவலயாசுவனை அம்முனிவர்கள் யாகத்தைக் காக்கும் நிமித்தம் அனுப்பினான். குவலயாசுவன் வில்லை வளைத்து நாணொலியெழுப்பிக்கொண்டு முனிவர்களோடு கூடச் சென்று காவல் புரிந்தான். முனிவர்கள் பயத்தைவிட்டு முறையாக யாகங்களைச் செய்தனர்.

௫. பாதாள கேது என்னும்அசுரன் ஒருபன்றி வடிவத்தை எடுத்துக்கொண்டு அவர்கள் யாகத்தை அழிக்கும்பொருட்டுப் பயமின்றி அங்கே வந்தான். வந்தவன் வில்லேந்திய கையனாகி நிற்கும் அரசனைப்பார்த்து ஓட ஆரம்பித்தான். அரசனும் முனிவர்கள் பணித்தபடி அப்பன்றியை பின்தொடர்ந்து துரத்தினான். அப்போது பயத்தினாலே பாதாள மார்க்கமாகிய ஒரு பிலத்தினுள்ளே நுழைந்த அசுரனாகிய பன்றியைக் குவலயாசுவன் சிரமப்பட்டுக்கொன்றான். அசுரருள் அதமனாகிய பாதாள கேது பாதாளத்தை அடைந்து இறந்தான்.

௬. அவனோடு பாதாளத்தை அடைந்த மிக்க பலவானாகிய அவ்வரசகுமாரன் அவ்வசுரனாற் கனகமயமாக அங்கே நிருமிக்கப் பட்ட பட்டிணத்தைக் கண்டான். கண்டதும் இந்திரலோகத்தை காட்டிலும் சிறந்து விளங்கும் அந்நகரிலே அரசன் பிரவேசித்தான்.

எ. மிக்க பலவானாகிய குவலயாசுவன் அவ்வசுரனது அரண்மனை மாளிகையிலே அநேக பெண்களாற் சூழப்பட்ட சுந்தரியாகிய ஒரு கன்னிகையைப் பார்த்துக் கூறுவான்:— அழகிற் சிறந்த மாதே! மாகிஷ்மதி நகரத்தை ஆளும் மன்னனது குமரன் யான். முனிவர்களுடைய யாகத்தை இந்தப் பாதாள கேது என்னும் அசுரன் அழித்துக்கொண்டு வந்தான் அந்த யாகங்களைக் காக்க விரதம் பூண்ட யான் அவனால் இழுக்கப் பட்டு இங்கே வந்தேன். வராக ரூபத்தைக்கொண்டு ஓடி வந்த அவனும் என்னாற் கொல்லப்பட்டான். மனிதரில்லாத இடமாக இருந்தபடியால் நான் இவ்விடத்தை நாடி வந்தேன். பெண்ணே நீ யாருடைய குமாரி? இங்கே யாரால் கொண்டு வந்து வைக் கப்பட்டிருக்கின்றாய். கோடி இரதியரினும் சிறந்த மாதே உன் வரலாற்றை எனக்குக் கூறுவாயாக என்றான்.

அ. அவ் வார்த்தையைக் கேட்டதும் மதாலசை என்ற பெயரையுடைய அக்கன்னிகை அரசனைப்பார்த்து விநயத்துடன் நமஸ்கரித்துக் கூறுகின்றாள்:— ஓ அரசனே! யான் கந்தர்வ அரசனாகிய விசுவாவசுவின் புதல்வி. மதாலசை என்பது என் பெயர், பாதாளகேது என்ற இவ்வசுரன் என் தகப்பனை யுத் தத்திலே வென்று என்னையும் அபகரித்து வந்தான். எந்த மூடன் இப்போது உன்னாற் கொல்லப்பட்டானோ அவனாலேயே நான் இங்கே நிறுவப்பட்டேன். அந்தத் துர்த்தன் தனது பிரம சாபத்தால் என்னைப் பலாற்காரஞ் செய்யாமல் விட்டிருந் தான். ஓ பிரபுவே! இத்துர்த்தனை எவன் வெல்லுகின்றானோ அவனே எனக்குத் தலைவனாவான் என்று யான் விரதம் பூண்டு கொண்டிருந்தேன். ஆதலால் என்னை நீ வென்று கொள்ளல் வேண்டும் என்று கூறி, அவ்வரச குமாரனை முறைப்படி உண் பித்தாள்.

கூ. குவலயாசுவன் அந்த மதாலசையை அழைத்துக்கொ ண்டு முனிவர்களிடம் வந்து நிகழ்ந்தவற்றைக் கூறி விடைபெற் றுக்கொண்டு, தனது நகரத்தையடைந்து, தந்தையை அன்போடு வணங்கி நடந்த செய்தி முழுவதையும் கூறிப் பிதாவின் அனு மதிப்படி மதாலசை என்னும் அப்பெண்மணியை அவள் பிதா வின் உடன்பாட்டோடு திருமணஞ்செய்து கொண்டான். குவ

லயாசுவன் மனைவிமாட்டு மிக்க அன்புடையனைப் பிதாவின் ஆணைகடவாமல் இளவரசனைக முடிசூட்டப் பெற்று பூமியை ஆண்டுவந்தான். இங்ஙனம் இளவரசன் எழுவருடம் சுகமாய்க் காலங்கழித்தான்.

௧0. அப்போது பாதாளகேது என்னும் அசுரனது தம்பியானவன் தன் சகோதரனைக் குவலயாசுவன் கொன்றதையும், மதாலசை என்பவளைக் கொணர்ந்து மணந்ததையும், கேள்வியுற்று, அவ்வரசனைக் கபடமாகவெல்ல வேண்டுமென்று நினைத்து ஒரு விப்ரமுனிவன் வேடந்தாங்கிச் சத்தியவானாகிய பேரரசன் பாலடைந்து, அவனால் உபசரிக்கப்பட்டு என் தவத்தைக் காக்கும்பொருட்டு உனதுபுத்திரனை அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அரசனும் உடன்பட்டு இளவரசனைப் போய் வரப் பணித்தான்.

௧௧. முனிவன் வேடம் பூண்ட அசுரன் நருமதை நதிக் கரையை அடைந்து மூன்று மாதம் தவஞ் செய்தான். பின்பு அரசகுமாரனைப் பார்த்துக் கூறுகின்றான். நான் ஒரு மாதம் நீருக்குள்ளிருந்து தவஞ்செய்ய வேண்டும், மகாபுத்திசாலியே நீ கரையிலிருந்து எனக்கு இடையூறு வராமல் என்னைக் காக்க வேண்டும் என்று கூறி, உனது மோதிரத்தையும் என் கையிற் கொடு என்று கேட்டான். அரசகுமாரன் தன் மோதிரத்தை அவன் கையிற் கொடுத்தான்.

௧௨. பெருந்திறல் படைத்த அவ்வசுரன் அம்மோதிரத்தை அணிந்துகொண்டு நருமதை நதியில் மூழ்கி மூன்று நாள் அதற்குள்ளிருந்து நாலாநாள் மாயையினாலே அரசனது நகரத்தை அடைந்து, பெரிய அரசனைக் கண்டு ஓ அரசனே! என் தவத்திற்கு இடையூறு செய்யுந் துட்டனாகிய பாதாளகேது என்னும் பன்றி வடிவுற்ற அசுரனுக்குத் தம்பியாகிய அசுரனால் உன் மகன் கொல்லப்பட்டான். உன் மகனது மோதிரம் அடையாளமாக என்னால் கொண்டுவரப்பட்டது. இதனைக்காண்பாய் என்று அரசன் கையில் கபட முனிவேடந் தாங்கிய அவ்வசுரன் மோதிரத்தைக் கொடுத்தான்.

௧௩. அரசன் அம்மோதிரத்தைப் பார்த்துத் துன்புற்றிரங்கி அழுதான். மந்திரி சேனாபதி முதலாகிய நகரத்தினரெல்

லோரும் அழுதார்கள். குவலயாசுவன் மனைவியாகிய மதால சை என்பவளும், தனது கணவன் இறந்ததைக் கேட்டு, கணவனை நெஞ்சில் தியானித்துக்கொண்டு அக்கினியிற் பிரவேசித்தாள். சத்தியவானாகிய அரசன்மருமகள் இறந்ததைக்கண்டு மேலும் புத் திரசோகம் அதிகப்பட்டுத் தனது இராச்சியத்தை மந்திரிவசத் தில் ஒப்புவித்துத்தான் சோக நிலயத்தை அடைந்திருந்தான்.

கச. அசுரன் மதாலசை இறந்தாளென்பதை அறிந்து கொண்டு தான் கொடுத்த மோதிரத்தைக் கவர்ந்துகொண்டு, மிக மகிழ்ந்து; நருமதைச் சலமத்தியிலிருந்து வெளியே வந்து, மோ திரத்தை அரசன் கையிற்கொடுத்து, அரசனே ! என் தவத்தை நினைத்தபடி சாதித்துக் கொண்டேன். நீ சுகமாக ஊருக்குத் திரும்பிப் போகலாம் என்று விடைகொடுத்துத் தனதிருப்பி டம் போய்ச் சேர்ந்தான். அரசனும் மகிழ்ந்து இவன் வஞ்சனை யை அறியாமல் நகரத்தை அடைந்து மகிழ்ச்சியால் தன் பிதா மாதாக்களை வணங்கினான்.

கரு. இறந்தானென்ற மகன் திரும்பிவந்து காணப்பட்ட மையில் அரசன் களிப்புற்றுவருத்தத்துடன் தன்மகன்பால் நிக ழ்ந்த செய்திகளையெல்லாம்கூறினான். மனைவியின் பிரிவையாற்றாத வனாகிய அவ்வரசகுமாரன் மிகுந்த தைரியத்தால் உடலை விடாத வனாகித் தன் மனைவி இறத்தற்குக்காரணனாயிருந்த வஞ்சகனாகிய அசுரனைக்கொல்லும்பொருட்டுப் பிரமசிரசு என்னும் அத்திரத் தை ஏவினான். அப்பிரமசிரசு என்ற அஸ்திரம் அவ்வசுரனதுபய ங்கரமான சிரசைக்கொய்துவந்து அரசகுமாரன் முன்வைத்தது. உடனே இராசகுமாரன் அச்சிரசை ஏவலராற் சுடுவித்தான்.

கசு. அதன்பின் குணக்கடலாகிய அவ்வரசகுமாரன் மதா லசை என்னும் தன் மனைவி இறத்தலால் வந்த சோகந்தணிதற் பொருட்டு அநேக தேசத்து அரசிளங் குமாரராகிய தோழர் களையெல்லாம் அழைப்பித்து, அவர்களோடு விருந்துண்ணலா லும், சங்கீத நடனங்களாலும், புராணங் கேட்டல் முதலியவற்றா லும், பலவகை விளையாட்டுக்களாலும், எல்லார்க்கும் பிரீதி செய் பவனாய் அவர்களையும் மகிழ்வுறுத்தித் தானும் மகிழ்வுற்றுக் காலங்கழித்திருந்தான்.

௬எ. இவனது நட்பினால் அவ்வரச் குமாரர்களும் இவனொடு தானே தங்கியிருந்தார்கள். பாதாள உலகத்திலிருந்து விளையாட்டின் பொருட்டு பூவுலகத்தெய்திய இரண்டு நாககுமாரர்கள் குவலயாசுவனுடைய குணங்களைக் கேள்வியுற்று வந்து இராசகுமார வேடந்தாங்கி மற்றை அரசிளங்குமாரரோடிருந்தார்கள். அவர்கள் குவலயாசுவனிடத்தில் நிறைந்த நட்பினராய் அவனது நட்பினாற் பிணிப்புண்டு அவனோடேயே பொழுது போக்காய் விளையாடிக்கொண்டு மூன்று வருஷகாலம் இருந்தார்கள். மற்றை அரசகுமாரர்கள் அடிக்கடி ஊருக்குப் போய்வந்தார்கள். இவ்விரு நாககுமாரர் மாத்திரம் இவனுடனேயே மிக்க மகிழ்ச்சியுடன் வசித்தனர். குவலயாசுவனும் எல்லாரினும் இவர்களிடத்தில் மிக்க அன்புடையனாயிருந்தான். ஆதலால் அரசனும் நாக குமாரர்களும் ஒருவருக்கொருவர் பிராண சிநேகிதர்களாய் மனமொத்துக் கூடியிருந்தார்கள்.

௬அ. ஒருகாலத்தில் நாகபுத்திரர்கள் அரசனிடத்துவிடைபெற்றுக்கொண்டு மிக்க மகிழ்ச்சியோடு பாதாளபுவனத்திலுள்ள தமது மாளிகையை அடைந்து தமது தந்தைக்குத் தங்கள் ஆருயிர் நண்பனாகிய குவலயாசுவனது குணநலங்களையும் அன்புரிமையையும் எடுத்துக் கூறினார்கள்.

௬௯. அரசகுமாரனது சரிதத்தைக் கேட்ட நாகராசன் தன் புத்திரருக்குப் பிரியம் செய்பவனாகி அவ்வரச குமாரனை மகிழ்விக்க எண்ணினான். பிறகு நாக புத்திரர்கள் தமது தந்தையிடத்து விடைபெற்று, மீண்டும் அரசகுமாரர் வடிவோடு குவலயாசுவன் நகரத்தை அடைந்து அவனொடு கூடி விளையாடி இருந்தார்கள்.

பதினைன்காவது அத்தியாயம் முடிந்தது.

பதினைந்தாவது
திருநாரையூர்ச் சிவன்றிருவிளையாடலாகிய மதாலசையையுயிர்ப்பித்த அத்தியாயம்.

சண்முகப் பெருமான் முனிவர்களைப் பார்த்து மேலுங் கூறுகின்றார்:—

க. நாகராசன் முற்கூறிய அரசிளங்குமரனை மகிழ்வுறுத்த வேண்டி இறந்துபோன அவனது மனைவியாகிய மதாலசை என்பவளை உயிர்ப்பிக்கும்பொருட்டுப் பாதாளத்தில் வசிக்கும் சித்தராகிய கபில முனிவனையடைந்து விநயத்துடன் தக்கதோருபாயத்தை வினவினான். அதற்குக் கபிலமுனிவனும் நாகராசனைக் கருணையோடு பார்த்துக் கூறுவான்.

உ. ஓ நாகர்க்குத் தலைவனே! மகாபாக்யசாலியே! இறந்தவர்களை உயிர்ப்பிப்பதில் மகாதேவர் ஒருவரே வல்லவர். தேவர்களில் வேறொருவரும் வல்லரல்லர். ஆதலால் நீ நியமத்துடன் லக்ஷார்ச்சனை விதிப்படி இலிங்க வடிவமாகிய மகாதேவரை ஒரு மண்டலம் பூசிப்பாயாக. அதனால் மகிழ்ச்சியடைந்த பகவான் பிரசன்னராகி உனது கருத்தை நிச்சயமாகப் பூர்த்தி செய்வார் என்றான்.

ங. இவ்வாறு கபிலன் கூறிய வாக்கியத்தை நாகராசன் கேட்டுத் திருமாலின் அம்சமாகத் தோன்றிய சித்தர் பெருமானே! விரைவில் சித்தியைத் தருகின்ற லக்ஷார்ச்சனை விதியைக் கருணை கூர்ந்து எனக்கு உபதேசிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தான்.

ச. அதைக் கேட்டுக் கபிலமுனிவன்கூறுவான்:— விதிப்படி பிராதக் காலத்தில் ஸ்நானஞ் செய்து நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு, பின்னர் பூசாங்கமாகிய ஸ்நானஞ் செய்ய வேண்டும். பிறகு நீலோற்பல புட்பம் இரண்டாயிரமும், வில்வ தளங்களில் முன்னூறும் எடுத்துவைத்து, நைவேத்தியங்களையும், அமைத்துக்கொண்டு, முதலில் விநாயகப் பெருமானைப் பூசித்துப் பின்னர் துவார பூசை, பீடபூசை, கலசபூசை, சங்கபூசை இவைகளைச் செய்து, சிவ மூலமந்திரத்தை ஆயிரம் உருச் செ

பித்து, பிறகு மகாதேவரை ஆவாகனஞ்செய்து, ஆசனங்கொடுத்துப் பாத்தியம், அருக்கியம், ஆசமனியம்,மதுபர்க்கம்,இவைகளையும் கொடுக்க வேண்டும். பின்னர் ஸ்ரீருத்திரத்தைப் பதினொரு ஆவிர்த்தியாகச் செபித்து, சமகமந்திரங்களாலும் அபிடேகஞ் செய்யவேண்டும். அப்போது நிவேதனஞ் செய்து மூலமந்திரத்தை ஆயிரமுருச் செபித்துப் பின் புருடசூக்கத்தால் சங்கரரை அபிடேகஞ் செய்யவேண்டும். பிறகு வஸ்திரம் முதலியவைகளையும், யக்ஞோபவிதம், சந்தனம், முதலியவைகளையும், சமர்ப்பித்துப்பவன் முதலிய அட்ட நாமங்களைக் கூறி, மகாதேவரை வில்வத்தால் அருச்சிக்க வேண்டும்.

ரு. பிறகு தூபதீபங்களைக் கொடுத்து அன்போடு நைவேத்தியங்களை நிவேதித்துத் தியானத்துடன் சிவ மூலமந்திரத்தை ஆயிரம் உருச்செபித்து, சகச்சிர நாமஞ்சொல்லி, நீலோற்பல புட்பங்களால் அருச்சிக்கவேண்டும். பின்னர் உருத்திரதிரிசதி நாமத்தால் வில்வார்ச்சனை செய்தல் வேண்டும். அதன் பின்னரும், சகசிரநாமஞ்சொல்லி, நீலோற்பல புட்பங்களாலருச்சிக்க வேண்டும். அநேகவிதமான நல்ல பக்ஷணங்களையும், அநேகவிதமான பழங்களையும், சிறந்த அன்போடு நிவேதித்துத், தாம்பூலம், தக்ஷிணை, இவைகளைச் சமர்ப்பித்துப் பின்பு கர்ப்பூர நீராசனம் செய்து, பின்னர் பிரதக்ஷிண நமஸ்காரங்களை இயன்றவரை இருபத்தொருதாஞ் செய்து, வேதபாதஸ்தவத்தாலும், ஸ்தவராசத்தாலும், சுவாமியை தோத்திரஞ் செய்து, பிறகு சிவ மூலமந்திரத்தை ஆயிரம் உருச்செபித்து இவ்வாறு பூசையை முறையாகச்செய்துமுடித்து, இறைவன்பால் விரும்பிய பயனைப் பிரார்த்திக்கவேண்டும். லக்ஷார்ச்சனை விதிகளிலே விரைவில் இட்டசித்திகள் எய்துமென்று கூறப்பட்டிருக்கிறது. ஆதலால் இவ்விதிப்படியே நீ மகாதேவனைப் பூசிப்பாயாக, என்று இவ்வாறு தபவுடன் கூடியவனாகிய கபிலமுனிவன் நாகராசனைப் பார்த்துக் கூறினன்.

சு. அதைக் கேட்டதும் நாகராசன் பாதாளத்தினின்றும் காவேரியின் கரை வழியே பூமிக்கு வந்து, பிராசாதத் தலமாகிய இத் திருநாரையூரை யடைந்து இங்கே எழுந்தருளியிருக்கும் விநாயகமூர்த்தியையும், சிவலிங்கப் பெருமானையும் கண்டு தரி

சித்து மகாலிங்கத்தைப் பூசிக்கவிரும்பித்தேவதச்சனாகிய துவட்டாவை வரும்படி எண்ணினான். உடனே துவட்டா வந்து நாகராசனை வணங்கினான். நாகராசன் அவனைப் பார்த்து இங்கே சுவாமிசந்நிதியில் சந்திரசேகாருடைய பூசைக்காக ஒரு நீலோற்பல தடாகத்தை உண்டுபண்ணுவாயாக என்று கூறியவுடன் அந்தத்துவட்டாவானவன் கங்காசலத்தால் நிரப்பப்பட்டதும், நீலோற்பலத்துடன் விளங்குவதுமான ஒரு தடாகத்தை உடனே உண்டுபண்ணி நாகராசனது அனுமதி பெற்றுக்கொண்டு தனது இடத்தை அடைந்தான்.

எ. பிறகு நாகராசன் அந்தத் தலத்திலே இருந்து விதிப்படி நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு, நீலோற்பல புட்பங்கள் இரண்டாயிரத்தையும் பறித்துக்கொண்டு, கபிலன் கூறிய விதிப்படி பரமேசுரனைப் பூசை செய்தான். இவ்வாறு ஒன்றரை மாதம் பரமேசனுடைய லக்ஷார்ச்சனையைச்செய்து அமுதத்துக்கொப்பான அன்னங்களால் பிராமண போஜனமும் நடத்தி வந்தான்.

அ. நாகராசன் இவ்வாறு நீலோற்பல மலரால் நடத்திய லக்ஷார்ச்சனையால் திருவுள்ள மகிழ்ந்த திருநாரையூர்ப் பரமசிவன் இலிங்கமத்தியிற்றோன்றி உமாதேவியாரோடு இடபாரூடராய்ப் பிரமதகணங்களோடும் எழுந்தருளினார். நாகராசன் பார்வதி சமேதராகிய பரமசிவனை நாமமந்திரங்களைக் கூறிக்கொண்டு வணங்கி ஆயிரநாமங்களால் அன்போடு தோத்திரஞ் செய்தான். அவனைப் பார்த்துத் திருநாரையூரில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் கருணைகூர்ந்து மகாமதியையுடைய நாகராசனே! உனக்குவேண்டிய வரத்தை எம்மால் கேட்பாயாக பிரமனுக்குங் கிட்டாத அவ்வரத்தைத் தருவோம் என்று பணித்தருளினார்.

கூ. சிவபிரானருளியதை நாகராசன் கேட்டு அஞ்சலிகூப்பி நின்று குவலயாசுவனென்னும் அரசனதுபட்டமகிஷியாகிய மதாலசை என்பவள் ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஓரசுரனது மாயையாற் கொல்லப்பட்டாள். அவளை இதுகாறும் சென்ற வயதுடனும், வடிவுடனுங் கூடியவளாக மீட்டும் உயிர்ப்பித்தருள வேண்டும் என்று பரமேசனைப் பிரார்த்தித்தான். நாகராசனது பிரார்த்தனையைக் கேட்ட பரமசிவன் மகிழ்ந்து அப்படியே அவளை உயிர்ப்பித்தருளினார்.

௧0. பூர்வஞானம் பெற்றுப் பிரமஞானமுங் கைவரப் பெற்றவளாகி உயிர்த்தெழுந்த மதாலசையைப் பரமசிவன் பார்த்து ஏ குழந்தாய்! நீ முன்னே ஓரசுரன் மாயையாலிறந்தாய். இப்போது (இந்த நாகராசனது பிரயாசையால் உயிர்ப்பிக்கப் பெற்ருய். ஆதலால் நீ இப்போது) நாகராசன் குமாரியாக ஆனுய். அவனது ஆணைப்படி உன் கணவனுகிய குவலயாசுவனைப்பதியாக அடைந்து யோகசித்தியோடு பதினுயிரம் வருடகாலம் பூமியில் வசித்து, உனது கணவனேடு நமதுபதத்தைஅடைவாயாக என்று அருளிச்செய்து,நாகராசனைப்பார்த்து ஓ மகா பாக்கியசாலியாகிய நாகராசனே! நமது சந்நிதியில் உன்னுலுண்டாக்கப்பட்டதடாகத்தில் அன்போடு எவர்கள் ஸ்நானஞ்செய்கின்ருர்களோ அவர்கள் எல்லாப் பாவங்களினின்றும் நீங்கி, எல்லாச் செல்வங்களையும் தீர்க்கமான ஆயுளையும், எமது அருளால் அடைவார்கள். இந்தப் புண்ணிய தீர்த்தமானது நாகதீர்த்தமென்றும், சிவகங்கை என்றும் சொல்லப்படும். இது நமது சந்நிதியில் கற்பபரியந்தம் நிலை பெறுவதாக என்று திருவாய் மலர்ந்து அவ்விலிங்கத்தினுள்ளே மறைந்தருளினர்.

௧௧. சகலாபரணங்களாலும் அணிபெற்றமதாலசையாகிய தன் மகளை நற்குணக் கடலாகிய நாகராசன் அழைத்துக்கொண்டு தனது இருப்பிடமாகிய நாகலோகத்தை அடைந்தான். பின்னரொருநாள் பிதாமாதாக்களைக் காணும்பொருட்டு நாகராசனது குமாரர்களிருவரும் குவலயாசுவனுக்குத் தெரிவித்துக்கொண்டு தங்கள் பாதாள உலகத்தை அடைந்து, பிதாமாதாக்களை அன்போடு வணங்கி மூன்று நாள் அங்கேயிருந்தார்கள். பின்பு பிதாவின் உத்தரவுப்படி பூலோக ராசகுமாரனுகிய குவலயாசுவனை அடைந்து அவனேடு பத்துநாள் இருந்தார்கள். இருக்கும்போது அவர்களில் மூத்த நாக குமாரன் தன் தோழனுகிய குவலயாசுவனைப் பார்த்து எம் நண்பனுய அரசர் பெரும! நாங்களிருவரும் உனது மாளிகையில் இந்நாள்காறும் வசித்தோம் எங்கள் பிதா உன்னைக் காணவும், உபசரிக்கவும் விரும்புகின்ருர். ஆதலால் நீயும் ஒருமுறை எங்கள் மாளிகையையடைந்து எமது நட்புரிமையை வளர்த்தல் வேண்டுமென்று வேண்டிக்கொண்டான்

கஉ. அதுகேட்ட குவலயாசுவன் அவ்விருவரையும் அரச குமாரர்களாகவே எண்ணி அவர்களோடு கூடப் புறப்பட்டு நரு மதை நதிக்கரையிலுள்ள ஒரு சிறந்த நகரத்தை அடைந்தான். அடைந்ததும் நாகபுத்திரர்கள் அவ்வரச குமாரனைத் தங்கள் தேவமாயையால் மயங்கச் செய்து, பாதாள நகரத்துக்குக் கொண்டுபோய்த்தங்கள் நாகவடிவத்தைக்காட்டினார்கள். அவர் களுடைய நாகவடிவத்தைக் கண்டு வியப்படைந்த அரசகுமாரன் அவர்களோடு மகிழ்ந்து, நாகராசனது மாளிகையை அடைந்து நாககுமாரரிருவரோடும் நாகராசனை வணங்கினான். உடனே நாக ராசன் அவ்வரசிளங்குமாரனைக் கட்டித் தழுவி உச்சிமோந்து முறைப்படி கௌரவப்படுத்தினான்.

கங. நாகராசனால் உபசரிக்கப்பெற்ற குவலயாசுவன் அங் கே மூன்று நாள் இருந்தான். பின்பு நற்குணக் கடலாகிய குவ லயாசுவன் நாகராசனை வணங்கி பெருமையிற் சிறந்த நாகர் வேந் தே! எனது நகரத்தை அடைய விரும்புகிறேன் எனக்கு விடை தரல் வேண்டுமென்று கூறினான். அதுகேட்ட நாகராசன் கூறு கின்றான். மன்னருட் சிறந்த மைந்த! மக்கள் வாழும் பூவுலகத் தில் பெறுதற்கியலாத அரியபொருளை என்னிடம் பெற்றுக் கொண்டு உன் நகரத்தை அடைந்து நகரமாந்தரைப் பரிபால னஞ் செய்வாயாக என்றான்.

கச. குவலயாசுவன் நாகராசனைப்பார்த்துக் கூறுகின்றான். நாகர் வேந்தே! எனக்குக் கிடைத்தற்கரிய பொருள் உனதில் லத்தில் இல்லை என்று எனக்குத்தோன்றுகிறது என்று கூறி னான். அதைக் கேட்ட நாகராசன் மனைவியைப் பிரிந்த அரச ரேறே! கட்டழகும் இளமையுமுடைய நாக கன்னிகைகள் பலர் இங்கிருக்கிறார்கள். அவர்கள் பூவுலகிற் பெறுதற்கரியர். அவர் களை உனது போகார்த்தம் பெற்றுக்கொண்டு செல்க என்றான். அது கேட்ட அரசன் அறிவிற்சிறந்த நாகராசனே! நான் ஏக தாரவிரதமுடையவன். மதாலசை என்பவளைத் தவிர வேறு பெண்களைமனதாலும் விரும்பேன். ஏனைய மகளிரெல்லாம் எனக் குத் தாயர்கள் என்று கூறினான். அருளிற்சிறந்த நாகராசன் மீண்டும் கூறுவான்:— ஓ அரசனே! இங்கேயுள்ள பூசாக்கிரு கத்தில் உனக்கருமையாகிய ஒரு பொருள் இருக்கிறது. அது

உன்னால் பெறத்தக்கதாயின் பெற்றுக்கொள்க. அன்றெனில் என் புத்திரரிருவரோடும் உன் நகரத்துக்குச் சுகமாகச் செல்க. இதன்கண் ஐயமில்லை என்றான்.

கரு. அதுகேட்ட அரசகுமாரன் நாகராசனுடைய பூசை யிடத்தை அடைந்து அங்கே சுவாமி சந்நிதியில் நாக கன்னியர் கள் சூழன் மத்தியில் இருந்த தனது மனைவியாகிய மதாலசை என்பவளைக் கண்டு, ஆச்சரியத்தோடு அளவில்லாத ஆனந்தம் அடைந்து, அ ஆ! மதாலசையே! என்று கூறி ஓடிப்போய் அவளைக் கட்டி அணைத்தான். அப்போது அவளைக் கண்டதனு லுண்டான ஆனந்தமிகுதியால் உணர்விழந்து மூர்ச்சித்தான். அவனைக்கண்ட மதாலசை சீதநீர் தெளித்துபசரித்தாள். அதனால் அரசன் மூர்ச்சை தெளிந்து உணர்வு பெற்றான்.

கசு. பின்பு நாகராசன் அரசகுமாரனுக்கு நிகழ்ந்த செய்தி எல்லாம் கூறி மதாலசையை நாகமணிகளாலும், ஆடையணிகளா லும் அலங்கரித்து, அவ்விராச குமாரனுக்குச் சமர்ப்பித்தான். அரசகுமாரன் பின்னும் மூன்றுநாள் அங்கே இருந்து நாகராசன் பால் விடைபெற்றுக்கொண்டு, நாகர் கூட்டங்களால் உபசரிக்கப் பெற்று மாகிஷ்மதி நகரத்தை அடைந்து, தனது பிதாவையும், மாதாவையும் மனைவியோடு வணங்கினான். அவன் தந்தை முன் நெருப்பில் வீழ்ந்திறந்த மதாலசையைக் கண்டு, மிக்க ஆச்சர்ய மடைந்து நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் வினவினான். குமார னும் நாகராசன் செய்த செய்திகளையெல்லாம் கூறினான்.

கஎ. அதுகேட்ட அரசன் நாகராசனைமுறைப்படி நன்கு பூசித்து மிகவும் புகழ்ந்து பெருமைப்படுத்திக் கொண்டாடினான். நாகராசன் குவலயாசுவனுக்கும், குமாரிக்கும் தெரிவித் துக் கொண்டு தன் புத்திரரிருவருடன் கூடத்தனது நாகலோகத்தை அடைந்தான்.

கஅ. மதாலசை என்னும் மனைவியுடன் கூடிக் குவலயாசு வன் என்னும் அரசிளங்குமாரன் பூமியைப் பதினாயிரம் வருடம் அறநெறியால் அரசுபுரிந்து, பின்னர் அலர்க்கன் என்னும்பெயரு டைய ஞானியாகிய தனது வீர புத்திரனிடத்தில் தன்னரசுரிமை யை அளித்து எல்லாராலும் பூசிக்கப்படும் கைலைப் பதத்தை நண் ணினான்.

௧௯. திருநாரையூர் மகாலிங்கப் பெருமானுடைய இரண்டாவது திருவிளையாடலாகிய இறந்த உயிரை உயிர்ப்பித்தளித்த கதையை எந்த மனிதன் படிக்கின்றானோ அவன் பரமேசுவரனருளால் விரும்பிய பேறெல்லாம் பெறுவான். இது சத்தியம்.

௨௦. புனிதமாயும் தீர்த்தமகிமையோடு கூடியதாயும், லக்ஷார்ச்சனை விதியோடு கூடியதாயும் உள்ள மதாலசையின் சரித்திரமுமாகிய இக்கதை உங்கட்குக்கூறப்பட்டது. முனிவர்களே! இன்னும் எந்தச் சரிதையைக் கேட்க விரும்புகின்றீர்கள் என்று சண்முகப்பெருமான் கேட்க முனிவர்கள் கூறுவார்.

பதினைந்தாம் அத்யாயம் முற்றிற்று.

பதினாறுவது
அலர்க்கனுக்கு அருள் புரிந்த அத்தியாயம்.

௧. அகில நாயகனான ஆறுமுகப்பெருமானே! தத்துவங்களனைத்தினையுந் தானே அறிந்தவனே! எங்கணும் நிறைந்தோயே! இவ்வலர்க்கன் என்னும் அரசன் பல நூல்களிலும் பலபடியாகக் கூறப்படுகின்றான். இவனுக்கு இவ்வளவு மகிமைக்குக் காரணம் யாதென்று அடியேங்கட்குத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று முனிவர்கள் பிரார்த்திக்க குகப்பெருமான்கூறத் தொடங்கினர்.

௨. ஓ முனிவர்களே! புண்ணியப்பாடல்களையுடைய அலர்க்கனுடைய சரிதத்தை உள்ளவாறு உங்கட்குக் கூறுவேன். காதலோடும் சிரத்தையோடும் கேண்மின்கள். யோகியாகிய குவலயாசுவனுக்கு மதாலசையிடத்து ஒன்பது பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களுக்கு மதாலசை இளம்பருவத்திலே தொட்டிலின்கண்ணேயே ஞானத்தை உபதேசித்தாள். அக்குழந்தைகளெல்லாம் அவ்வுபதேசத்தைக் கேட்டு மகிழ்ந்து வைராக்கியமுற்றுத் தவத்தின்மேற் சென்றார்கள்.

௩. குவலயாசுவன் இராச்சியத்தில் வெறுப்படைந்த புத்திரர்களைக் கண்டு கவலையுற்று இது மதாலசையாற் செய்யப்பட்ட

தென்று அதிகோபங்கொண்டு இராச்சிய தருமத்தில் நிபுணனு கையால் அரசியற்காரியங்களில் மந்திரிகளை நியமித்து இரகசிய மாக தண்டகவனத்தை அடைந்தான். அடைந்து காட்டுமார்க்க மாகச் செல்கின்ற அரசன் திருநாரையூரை எய்தி, அங்கே உறை யும் முனிவர்களுடன் வநவிருத்தியால் சிவித்திருந்தான்.

ச. தன் கணவன் சென்றதன் காரணத்தை மதாலசை யானவள் மந்திரிமுகமாக அறிந்துகொண்டு அவனைத்தேடி வரு பவள் திருநாரையூர் வந்து சந்தித்து அவனை விநயத்தோடும் அன்பால் வணங்கி ஓ அரசே! என் உயிர் காதலனே! எதன் பொருட்டு பிராணசகியாகிய என்னைத் துறந்து இவ்வனத்தில் வந்திருந்தனை? என்னுற் பிழை செய்யப்பட்டிருந்தாலும், அதைப் பொறுத்தருளவேண்டும். உனது கட்டளையை நான் மீறமாட்டேன். நான் சத்தியமாகச் சொல்லுகின்றேன் என்று மதாலசை அழுதுகொண்டு கணவனைப் பார்த்துக் கூறினுள்.

ரு. அரசன் அவளை அன்பாற்றழுவி வருத்தத்துடன் கூறு வான்:— அழகிய முகத்தையுடைய மதாலசையே! உன்னிடத் திற் பிறந்த என் குழந்தைகள் எல்லாம் உன்னுடைய உபதேசத் தால் செல்வத்தில் வைராக்கியமுற்றுக் குழவிப்பருவத்திலேயே ஞானத்தால் என்னையும் இராச்சியத்தையும் துறந்து எல்லாரும் வனத்தை அடைந்தார்கள். என் இராச்சியத்தை ஆள்வதற்கு எனக்குப் பின் புத்திரர் ஒருவருமிலர். ஏழு புத்திரர்கள் வைராக் கியமுற்று வநத்தை அடைந்தபொழுதே இவர்களுக்கு உபதே சம் செய்யாதே என்று யான் கூறினேன். என் வார்த்தையை யும் நீ அநாதரவு செய்து உபதேசித்தாய். மதாலசையே நீ கணவன் வெறுக்குங் காரியத்தைச் செய்பவளாயினை. அதனுல் நான் ஒரு புத்திரனுமில்லாதவனுனேன். ஆதலால் நான் காட்ட கத்தை அடைந்தேன். நீ ஏன் இங்கு வந்தாய்? என்றுன்.

சு. அதைக் கேட்ட மதலாசை அரசனை வணங்கி மீட்டுங் கூறுவாள். அரசே! இந்த ஒன்பது பிள்ளைகளும், பிரமபுத்திரர் களாய்ப் பிரமலோகத்தில் வசிப்பவர்கள். பிரமாவின் சாபத்தால் உன் பிள்ளைகளாய் வந்து பிறந்தனர். பிரமதேவனுடைய வாக்கி யப்படி என் முகமாகத் தத்துவ உபதேசம் பெற்று உடனே வனத்தை அடைந்தனர். உனக்கு இன்னுமொரு புத்திரன்

பிறப்பான். அவன் உனது இராச்சியத்திற்கு யோக்கியனாவான். ஆதலால் இறைவனே ! நகரத்துக்கு வருக. வந்து இராச்சியத்தைக் காத்தல் செய்க என்றாள்.

எ. மதாலசையின் வார்த்தையைக் கேட்டு அரசன் கூறுவான்:— அழகிய தொடையையுடைய மாதே ! இராச்சியத்தில் பற்றுள்ள புத்திரனைக் கண்டு தான் நான் இனி ராச்சியத்திற்குத் திரும்புவேன்: ஆதலால் நீ என்னோடு இங்கிருப்பதானால் இரு அல்லது போ என்றான். இவ்வாறு கூறிய கணவன் மொழியைக் கேட்ட மதாலசை கணவனுக்குப் பிரியமானதைச்செய்ய விரும்பினமையால் அவனோடுகூடவிருந்து அவனுக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தாள். அப்படி அங்கேயேதங்கியிருந்த மதாலசையானவள் கருப்பமுற்று கோடி மன்மதாழகை உடைய ஒரு புத்திரனைப்பெற்றாள். சக்கிரவர்த்தி லக்ஷணமுடைய அக்குமரனை மதாலசை அன்புடன் வளர்த்தாள்.

அ. அரசன் அக்குழந்தை பிறக்கும்வரை அலர்க்க பத்திரத்தை உண்டு, தபசிலிருந்தபடியால் அக்குழந்தைக்கு அலர்க்கனென நாமமிட்டான். அவ்வரசகுமாரன் ஒருநாள் யாரோ கூறிய கம் என்ற சொல்லைக்கேட்டு அன்றுமுதல் அழும்போதும் சிரிக்கும்போதும், பேசும்போதும், விளையாடும்போதும், கம், கம், கம் என்றே கூறுவானாயினன்.

கூ. அக்குழந்தைக்கு இரண்டு வயது நடக்கும்போது அரசன் மனைவியோடும் புத்திரனோடும் ஒரு துவாதசியாகிய நன்னாளில் விடியற்காலத்தில் ஸ்நானஞ்செய்தற்குத் தடாகத்தை அடைந்து, அரசன் தான் முன்னர் நீராடிக்கொண்டு வீட்டிற்குச் சென்றான். மதாலசை ஸ்நானஞ் செய்துகொண்டு தடாகத்தில் இருந்தாள், கரையிலிருந்த குழந்தை சிவாலயத்துள் நுழைந்தது.

க0 மதாலசை ஸ்நானஞ்செய்துகொண்டு கரையேறி அங்கே கரையிலிருந்த குழந்தையைக் காணாமையால் கணவனோடு வீட்டுக்குப் போயிருக்குமென்று நினைத்து வீட்டிற்குச் சென்றாள். முனிவர்களே ! கோயிலுக்குள் நுழைந்த குழந்தை பிதா மாதாக்களைக் காணாமையால் இருட்டினாலே கம் கம் கம் என்று சொல்லிக்கொண்டு அழுதது. அப்போது கம் என்ற பிசத்துக்

குத் தேவதையாகிய விநாயகப் பெருமான் அந்தப் பீசமந்திர செபத்துக்கு மகிழ்ந்து அக்குழந்தைக்கு எதிரே தோன்றினர். உலகங்களுக்கெல்லாம் தந்தையாகியவரும், சித்தி புத்தி தேவிக ளோடு கூடியவருமாகிய விநாயகர் பிதாவைப்போல் பிரீதியோடும் அக்குழந்தையைக் கையாலெடுத்து அணைத்து புன்னகையோடு புத்திதேவியின் கையிற் கொடுத்தார்.

கக. புத்திதேவி குழந்தையை வாங்கித் தனது திருமுலைப் பாலைப் பருக்கினள். அக்குழந்தை அப்பாலை உண்டதனால் அறுபத்துநான்கு கலைஞானமும் பெற்றது. விநாயகர் மீண்டும் அக்குழந்தையை வாங்கி சித்திதேவி கரத்திலளித்தார். அவளும் அன்போடு தனது திருமுலைப்பாலை அக்குழந்தைக்குப் பருக்கி னள். அப்போது அக்குழந்தை மின்னற் கூட்டம் போன்ற திவ்ய ஒளியையும், இலக்கம் யானை பலத்தையும், யோகசித்தர் களின் தன்மையையும் பெற்றது. விநாயகப்பெருமான் அக்குழந் தைக்கு ஒருவராலும் பேதிக்கமுடியாத ஒரு கவசத்தை அணிந்து தோள்களில் இரண்டு அம்பறாத்தூணிகளைச் சேர்த்துக் கைகளில் ஒரு வில்லையும், ஒரு கதையையும் கொடுத்தார். அப்போது சித்தி தேவி சிந்தாமணி ஆபரணங்களால் அலங்கரித்து, சித்தி களைத் தரும் ஒருமைபால் நெற்றியில் ஒரு திலகத்தையிட்டனள். புத்திதேவி அட்ட கந்தங்களுடன் கூடிய சந்தனத்தைச் சரீரத்தி லேல பூசி, சண்பகமலர் வாசனையையுங் கொடுத்து மகிழ்ச்சியால் ஞானாஞ்சனத்தையுங் கண்ணிலே தீட்டினள். அப்போது இம் மூவர் திருவருளாலும் மெய்ஞ்ஞானம்பெற்ற அக்குழந்தை சித்தி புத்தி தேவிகளுடன் கூடிய விநாயகப் பெருமானை அன்புடன் தோத்திரஞ் செய்யத் தொடங்கியது.

கஉ. கிரியாசத்தி, ஞானசத்திகளாயிருப்பவர்களும் பெரு மையுடைய ஞானக்கினி, யோகாக்கினி, ரூபமுடையவர்களும், சத்து என்னும் விநாயகரின் பக்கத்தில் வசிப்பவர்களுமாகிய மகாசித்தி புத்தி தேவிமாரையும், மகாவாக்கிய ரூபரும், பரம் என்ற பே ரையுடையவரும், அதிட்டான தேவதையுமாகிய விநாயகப் பெரு மானையும் வணங்குகின்றேன்.

கங. பிரவிருத்திக்கும் நிவிருத்திக்கும் ஏதுவாயிருப்பவர் களும்ா, விங்குகின்ற பொன்னிறத்தையும், பனிக்கட்டி நிறத்

தையும் முறையே உடையவர்களும், சாதுக்களுக்குச் சித்திபுத்தி களை அளிப்பவர்களுமாகிய மகாசித்திபுத்திதேவிமார்களையும், கணங்களுக்கிறைவரும் சிவந்த நிறமுடையவரும், மூலத்துக்கும் மூலமானவருமாகிய விநாயகப்பெருமானையும் வணங்குகின்றேன்.

௧௪. அநேக அண்டங்கட்குத் தலைவிகளும், அறுபத்து நான்குகோடி சித்திகளையும், வித்தைகளையும் உணர்த்துகின்றவர் களும், மயில்கள் போன்ற சாயலையுடையவர்களுமாகிய மகாசித்தி புத்தி தேவிமார்களையும், சுதந்திரமாகிய செல்வ அரசரும், பெரிய விக்கிநங்களுக்கு நாதரும் ஆகிய விநாயகப் பெருமானையும் வணங்குகின்றேன்.

௧௫. அரிபிரமன்முதலிய பெருந்தேவர் கூட்டத்தால் வணங் கப்படுகின்றவர்களும், தனம் முதலியவற்றையும் வித்தைகளையும் அளிப்பவர்களும் ஆகிய சித்திபுத்திதேவிமார்களையும், அரி பிர மன் முதலியவர்களைத் தமது கடைக்கண்ணால் ஏவுகின்றவரும், தமக்குத் தாமே தலைவரும் ஆகிய விநாயகப் பெருமானையும் வணங்குகின்றேன்.

௧௬. கரணவுணர்வாற் குறிக்குங் குறியைக் கடந்தவர்களும் காண்டல் முதலிய அளவைகளால் அளக்கவொண்ணாதவர்களும், செங்கழுநீர் மலர் சண்பகமலர் மாலைகளை அணிந்த அழகுடைய வர்களுமாகிய சித்தி புத்தி தேவிமார்களையும், அநேக அண்டங் களுக்கு இறைவரும், வேதாந்தத் தெளிவாஞ்சைவ சித்தாந்தமா கிய சிவாகமத் தொகுதியைத் திருமேனியாக உடையவருமாகிய விநாயகப் பெருமானையும் வணங்குகின்றேன்.

௧௭. மூன்று மாத்திரையுடைய ஓங்கார ரூபமுடையவர்க ளும் திருமாலுக்கும் அவருடைய நாபிக்கமலத்திற்றோன்றிய பிரமனுக்கும் புத்திரிகளானவர்களும் அமிர்தத் தானத்தில் இருப்பவர்களுமாகிய மகாசித்திபுத்திதேவிமார்களையும், ககார சொரூபியும், வக்கிர துண்டமுடையவரும், வணங்குகின்றவர்களுக் குக் கற்பகதருவாயுள்ளவரும், ஆகிய விநாயகப் பெருமானையும் வணங்குகின்றேன்.

௧௮. எப்போதும் அன்பர்களுக்குத் திருவையும், மெய்யு ணர்வையும் அளிப்பவர்களும், எப்போதும் ஆநந்தத்தை அளிப் பவர்களும், மோகத்தை ஒழிப்பவர்களும் ஆகிய மகாசித்திபுத்தி தேவிமார்களையும் ஸத், ஓம், தத் என்னும் மூன்று பதங்களுக்

கும் ஒரே குறித்தபொருள் ஆவாரும், மூன்று கண்களையுடைய வருமாகிய விநாயகப் பெருமானையும் வணங்குகின்றேன்.

கக. நெருப்பின் ஒளியும் சூடும்போலச் சத் பதப்பொருளாகிய விநாயகரிடத்தில் இருப்பவர்களும், சாதுக்களுக்குப் பூரணவாக்கையும் செல்வத்தையும் அளிப்பவர்களும், ஆகிய மகா சித்திபுத்தி தேவிமார்களையும், ஓங்காரத்துடன் கூடிய சத்பத பீசமாகிய ககாரத்தின் பொருளும் சத்திபவடிவினரும் ஆகிய விநாயகப் பெருமானையும் வணங்குகின்றேன்.

உ௦. மனம் வாக்குக்களைக் கடந்தவர்களும், நல்ல மூலாதாரமாகிய அமிர்தத்தானத்தில் உறைபவர்களும், முத்தியாகிய விருக்ஷத்தில் விளங்கும் பழமானவர்களும் ஆகிய மகாசித்தி புத்தி தேவிமார்களையும் முனிவர்களாற்றியானிக்கப்படும் வடிவமுடையவரும், விருப்பில்லாதவரும், முதலில் பூசிக்கத்தக்கவருமாகிய விநாயகப் பெருமானையும் வணக்குகின்றேன்.

உக. ஒரு கோடி மின்னல் ஒளியும் கர்ப்பூர ஒளியும் போன்ற வடிவுடையவர்களும், வணங்கி நின்றவர்களுக்கு யோகத்தையும், பத்தியையும் கொடுப்பவர்களுமாகிய மகா சித்திபுத்தி தேவிமார்களையும், மயில்போன்ற சித்திபுத்தி கட்கு நாயகராதலால் தம் வயமுடைய அரசரும் உயிர்களின் செய்தியெல்லாம் கண்டு நிற்கும் வடிவமுடையவருமாகிய விநாயகப் பெருமானையும் வணங்குகின்றேன்

உஉ. அனேகத்துமாம் வடிவுடைமையால் வியாபகவடிவம் உடையவர்களும், இலக்குமி சரசுவதிகளின் தவத்தால் அவர்கட்குப் புத்திரிகளானவர்களுமாகிய மகாசித்திபுத்தி தேவிமார்களையும், பெருங்காலத்தை ஆளுந்தன்மையால் எப்போதும் முதலிற் பூசிக்கத் தக்கவரும், நிட்களப் பிரமமாகிய சிரசானவரும் ஆகிய விநாயகப் பெருமானையும் வணங்குகின்றேன்.

உங. அதிசூக்குமவடிவுடைமையால் ஆணவமல சம்பந்தமில்லாதவர்களும், மகேச தத்துவவாசிகளால் அருச்சிக்கப்படுந் தன்மையுடைமையால் மேலானவர்களுமாகிய சித்திபுத்தி தேவிமார்களையும். தமக்கு நிலைக்களமாகக் கொள்ளும் பிரமவடிவுடைமையால் மேலானவரும், தியானத்தால் அறியத்தக்கவருமாகிய விநாயகப் பெருமானையும் வணங்குகின்றேன்.

௨௪. மகாசித்திபுத்திகளாகிய தேவிகளுடையதும், கணபதியினுடையதுமான உண்மையோடு கூடிய இந்தத் தோத்திராசம் என்னும் பாடல்களை மூன்று சந்தியிலும் மகிழ்ச்சியுடன் பத்தியுடையவர்களாகிச் செப தியானங்களுடன் எவர்கள் படிக்கின்றார்களோ அவர்கள் அலர்க்கராசன்போல ஆவார்கள்.

௨௫. பெருமை வாய்ந்த அவ்வரசிளங்குமரன் இவ்விதம் சித்திபுத்தி தேவிகளையும் கணபதியையும் துதித்துக்கொண்டு கணேசப்பெருமானது சந்நிதியில் நின்றான்.

௨௬. அப்போது அரசனது தேவியாகிய மதாலசையானவள் வீட்டில் குழந்தையைக் காணமல் கணவனோடு கூடத் தீபத்தை எடுத்துக்கொண்டு சிவாலயத்தை அடைந்து குழந்தையைக் கணபதி சந்நிதியில் நிற்கக்கண்டாள்.

௨௭. சித்தி புத்தி கணேசப்பெருமான் என்னுமிவர்களுடைய அருளைப் பெற்று நிற்பவனும், மின்னற்கூட்டம் போன்ற ஒளி உடையவனும், சிந்தாமணிகளால் அலங்கரிக்கப்பட்டவனும், கணேசப்பெருமானுடைய அடையாளங்களுடன் கூடிய கவசத்தால் போர்க்கப்பட்டவனும், சன்பகமலர் வாசனையுடையவனும் வில் கதைகளோடு விளங்குபவனும் ஆகிய புத்திரனை அரசன் மனைவியோடு கண்டு நிகழ்ந்த வரலாற்றை அறியவேண்டி விநாயகப் பெருமானை மேலான பத்தியோடு பிரஹ்மணஸ்பதி சூத்தத்தினாலே துதித்தான்.

௨௮. விநாயகப் பெருமான், அசரீரியாகிய தமது திருவாக்கால் இவ்வாறு உண்டானது இக்குழந்தை கூறிய கம் என்னும் மந்திரத்தின் பிரபாவத்தால் என்று நிகழ்ந்த செய்தி எல்லாவற்றையும் விளக்கமாகக் கூறியருளி, அரசனே! நீ இக்குழந்தையை அழைத்துக்கொண்டு உனது நகரத்துக்குச் செல்வாயாக, எமது கட்டளையால் புத்திசாலியாகிய இவன் மநுவேந்தன் போலவே நகரத்தை நன்கு பரிபாலனஞ் செய்யக்கடவன்; இலக்ஷ வ்ருஷம் பூமியை ஆண்டு அநேக யாகங்களால் தேவதைகளை மகிழ்வித்துத் தத்தாத்திரேயரது உபதேசத்தால் யோகஞ் செய்து என்னை அடைவான் என்று விநாயகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளக் கேட்ட அரசன் அங்குள்ள முனிவர்களுக்குக் கூறி விடை பெற்றுக்கொண்டு மனைவி மைந்தருடன் மாகிஷ்மதி நகரத்தை அடைந்து சந்தோஷத்துடன் ராச்சியபரிபாலனஞ் செய்து வந்தான்.

பதினாறுவது அத்தியாயம் முற்றிற்று.

பதினேழாவது

அலர்க்கனைச் சோதனை செய்த அத்தியாயம்.

க. சண்முகப் பெருமான் முனிவர்களைப் பார்த்து மேற் கூறுகின்றார்:—

விநாயகோபாசகர்களிற் சிறந்த அலர்க்கனுனவன் யௌவனப் பருவத்தை அடைந்து இளவரசுப்பட்டம் பெற்று, மூவுலகையும் வென்று வசப்படுத்திப் பிதாவின் சொற்கடவாமல் தருமத்தோடு நகரபரிபாலனமுஞ் செய்துவந்தான். முனிவர்களே! அவன் அரசாளும்போது அவைதிக மதத்தர்களும், நாத்திகர்களும், வாம மதத்தினரும் ஆகிய புறச் சமயிகள் ஒருவருமில்லை.

உ. எந்த வருணத்துக்கு எந்தத் தருமம் முனிவர்களாற் கூறப்பட்டனவோ அவ்வத் தருமங்களில் விருப்புடையவராய் அவ்வவ் வருணத்தார் நின்றார்கள். எவன் தீய நெறியை நினைத் தானோ அவனெதிரே இவ்வரசன் தோன்றி நின்று அவனைத் தனது கதையால் அடித்துக் கொன்று விடுவான். ஆதலால் எல்லா மனிதர்களும், அரசனது தண்டத்துக்குப் பயந்து தமது தருமத்தில் பற்றுடையவர்களாக நடந்தார்கள்.

ங. அவனாட்சியிலே பிறர் குற்றங்கூறல் கோள் தீயசெயல் இவைகளில்லை. எல்லாரும் தருமபரராயிருந்தனர். யாவரும் தத்துவம் தெரிந்தவர்கள். காணபத்தியம் முதலிய ஆறு மதங் களும் பூமியில் பரவியிருந்தன. எவன் எதை வந்து யாசித்தானோ அதை அரசன் அவனுக்குமறாமல் ஈந்துவந்தான். அவனது ராச்சியத்தில் வேதியர்களெல்லாம் எப்போதும் யாகமுடையவர்களா யிருந்தார்கள். அரசர்கள் யாகஞ்செய்தலும், இயன்றவரைதானஞ் செய்தலும் உடையவராயிருந்தார்கள். வைசியர்கள் நேர்வழியிற் செல்பவர்களாயும் எப்போதும் தானஞ் செய்பவர்களாயும் இருந் தார்கள். சூத்திரர்கள் மூவர்க்குமுரிய பணிகளைச் செய்பவராக வும், இயன்ற தானங்களைச் செய்பவராகவும் இருந்தார்கள். பூமி யிலுள்ள சனங்கள் அவரவர் வருணதர்மங்களில் சிரத்தையுடைய வராகவும், சமய தருமங்களில் பற்றுள்ளவராகவும், பொதுத் தருமங்களில் ஈடுபட்டுமிருந்தார்கள்.

ச. இவ்வரசன் ஆணையால் இராக்கதர்கள் மனிதரேவலை யும் அசுரர்கள் தேவரேவலையும் கேட்டு நடந்தனர். செந்நாய் புலி முதலியவைகள் பசுக்களைச் சேவித்தன. இலக்ஷம் அந்தணர் கள் தினந்தோறும் அரசன் பந்தியில் புசித்துவந்தார்கள். இடப ரூபமாகிய தருமதேவதை நான்கு கால்களுடன் நடனஞ் செய் தது. அவனது இராச்சியத்தில் நோயாளி தரித்திரன் அற் பாயுளுடையவன் துட்டன் கோபி முதலியவர் ஒருவருமிலர். யாவரும் கொடையாளராதலின் கொள்வோர் யாருமிலர் அலர்க்கனென்னுமரசன் ஆயிரம் அசுவமேதமும், ஆயிரம் இராச சூயமும், ஆயிரம் கணயாகமும், அநேக உருத்திர பாசுபத விரதங்களும் செய்தான். தைத்தியர், தானவர், இராக்ஷசர் முத லியோர் முனிவர்களையும் தேவர்களையும் வெறுப்பதில்லை.

ரு. இவ்வலர்க்க மகாராசனை இந்திரன் சோதிக்கவேண்டிப் பிராமணவேடம் பூண்டு இவனது சபையை அடைந்து அரசனை ஆசீர்வதித்து ஓ அரசர்பெருமானே! யான் பிறவிதொட்டுக் குருடன். யான் இப்போது விருத்தாப்பியமுற்றேன். கண்களால் என் புத்திரனைக் காணும் வேட்கையுடையேன். அதற்காக அசு வினி தேவதைகளைக் கேட்டேன். அவர்கள் யௌவனமான ஓர் அரசனது கண்களைக்கொண்டு வருவாயானால் உன் கண்களின் கோளங்களில் அவற்றைப் பொருத்தி மருந்தின் வன்மையால் உன்னைக் கண்ணுடையவனாகச் செய்வோம். பிறகு உன் புத் ரனை நீ காண்பாய் என்று கூறினார்கள். ஆதலால் அரசரேறே! உனது அழகிய கண்களைத் தயைசெய்து எனக்குக்கொடுக்கவேண் டும் என்று விருப்பத்துடன் கேட்டான்.

சு. அதனைக் கேட்டதும் அரசன் தன் கண்களை எடுத்து அவன் கையிற் கொடுத்தான். அதைப் பெற்றுக்கொண்டு இந் திரனாகிய அந்தணன் மறைந்தான். பிறகு இந்திரன் முப்பத்து முக்கோடி தேவர்களுடன் வந்து அரசனுக்கு முன்போற் கண் களை உண்டாக்கி வேண்டிய வரங்களையும் கொடுத்துத் தேவர்களா லும் முனிவர்களாலும் சேவிக்கப்பட்டவனாய்த் தன்னுலகம் புக்கான்.

எ. அலர்க்க ராசனுடைய மகிமைகளையும், தான சீலத்தை யும் இந்திரன் முகமாக அறிந்து இலக்குமி பதியான திருமாலா னவன் ஒரு பசு ரூபத்தை எடுத்துக்கொண்டு இவ்வரசன் சபை

யை அடைந்தான். அப்பசுவானது ஓ அரசர் பெருமானே! ஒரு வனத்தில் ஒரு புலியானது தன் பசியால் என் கன்றைப் பிடித்துக்கொண்டது. நான் அதனைப் பார்த்து என்னைப்பிடித்துக்கொண்டு கன்றை விட்டுவிடு என்று பிரார்த்தித்தேன். அப்போது அப்புலி என்னைப் பார்த்து அலர்க்க ராசனுடைய சரீரத்தில் உத்தமமான வலது பாகமானது எனக்குக் கொடுக்கப்படுமானல் உன் கன்றை விடுவேன். இஃது உண்மை. ஐயமில்லை என்று கூறிற்று. ஆதலால் நான் உன்னை அடைந்தேன். நீ என் மீது தயை கூர்ந்து எனது கன்றைக் காப்பாற்றும் பொருட்டு உனது சரீரத்தில் வலது பாகத்தைத் தருக என்று யாசித்து மிகவும் அழுதது.

அ. அதைக்கேட்ட அரசன் மிகவும் மகிழ்ந்து அப்பசுவைப்பார்த்து நான் என் உடலை உடைவாளால் இரண்டாகப் பிளக்கிறேன். நீ வலது பாகத்தை எடுத்துக்கொண்டுபோய்ப்புலியினிடம் கொடு என்று சொல்லி, உடனே தனது புத்திரனை இராச்சியத்தில் முடிசூட்டித்தனது தேகத்தை உடைவளால்இரண்டாகப்பிளந்துகொண்டான். தேனுவடிவாகியபகவானுன இலக்குமி நாயகன் சங்கு சக்கர கதா தாரியாய் அவ்வரசனுடைய உடற்பிளவிரண்டையும் ஒன்றாகச்சேர்த்துத்தனதுகையாற்றடவினன். உடனே அரசன் மறுவும் காயமுமின்றி எழுந்து கேசவனை அன்புடன் வணங்கினன். விலங்கினுக்கும் வேண்டியது செய்பவனுகிய அரசர் பெருமானுக்குக்கேசவன் அநுக்கிரகித்துத் தனது வைகுண்டத்தை அடைந்தான். அரசன் அளவில்லாத பெருமகிழ்சசியோடு இருந்தான்.

கூ. திருநாரையூரில் எழுந்தருளியிருக்கும் கேடிலியாகிய உமாநாதரும் அவனைச் சோதிக்க எண்ணி நான்காவது ஆச்சிரமத்தைக் கடந்த திருவடிவுகொண்டு அலர்க்க பூபதியின் சபையை அடைந்து அவனுல் பூசிக்கப்பெற்று எனக்கு இட்டமான போசனம் வேண்டுமென்று அரசனைக்கேட்டார். தானசூரனுகிய அரசனும் இட்டமான போசனமளிப்பேன். உமக்கு இட்டமான போசனம் யாதென்று யதியைக் கேட்டான். மிக்க அழகும் குணமுமுடைய யுவராசனுன உன் பிள்ளையை உரிய முறைப்படி பக்குவமாகச் சமைத்துத் தந்தால் உண்ணவிரும்புகிறேன்.

அப்புதல்வனைத் தாயின் மடியில் படுக்கவைத்து உன் கையால் வெட்டி, உன் மருமகளாற் சமைப்பித்து அந்த மாமிசத்தை எனக்குக் கொடு என்று யதி வேந்தர் மகிழ்ச்சியோடு கூறினார்.

கo. அதைக் கேட்டு மகிழ்ச்சியுற்ற மனத்தனாய அரசன் மனைவிமடியில் தன் மைந்தனாகிய சுதர்மனைக் கிடத்தித் தானே அவனை வெட்டி, மருமகளாற் சமைப்பித்து, யதிக்குப்போசனங் கொடுத்தான். பார்வதீ காந்தராகிய திருநாரையூர்ப் பெருமான் அவனது செயற்கருஞ் செயலைக்கண்டு, பெரிதுந்திருவுளமகிழ்ந்து அவனுக்கு வெளிப்பட்டருளினார். ஐந்து முகமும் மூன்று கண்ணும் பாதிமதியணிந்த சடைமுடியும் பத்துக் காமும் பார்வதீ பாகமும், வெண்மையான திருமேனியும் உடைய இறையவர் திருக்கோலத்தைத் தரிசித்து, அரசன் மிக மகிழ்ந்து தேவியோடும் மருமகளோடும் வணங்கிப் பத்தியுடன் நமக மந்திரங்களால் சருவேசுவரனைத் துதித்தான்.

கக. பரமசிவனுடைய கிருபாகடாக்ஷத்தால் அரசன் புதல்வனாகிய சுதர்மனும் உயிர்பெற்றெழுந்து முன்னையிலும் அதிகமான அழகும் பலமும் வித்தையும் வீரியமும் குணமும் பெற்றுப் பரமசிவனைத்தெரிசித்து வணங்கித் தந்தை பக்கத்தில் மகிழ்ந்து நின்றான். பரமசிவன் அரசன் முதலியவர்களுக்கு அருள்செய்து அவர்களால் விரும்பப்பட்ட வரங்களை அளித்துப் பார்வதிசமேதராய்த் திருநாரையூரை அடைந்தார்.

கஉ. அலர்க்கனுடைய சரிதையைச்சொல்லப்புகின் அநேக சன்மங்களிலும் முற்றுறாது. அவன் செய்கைகளிற் சிலவற்றை உங்கட்குக் கூறினேன். அலர்க்கனது தெய்வசோதனையும் திருநாரையூர்ப் பெருமானது பிக்ஷாடனத் திருவிளையாடலும், ஏகாக்ஷர சொரூபியாகிய விநாயகப் பெருமானது வைபவமும் ஆகிய இக்கதையை எந்த மனிதர்கள் அன்புடன் படிக்கின்றார்களோ அவர்கள் கணபதியையும் சிவனையும் பூசித்து இவ்வுலகில் எல்லா இன்பங்களையும் அநுபவித்து முடிவில் மேலான சிவபுரத்தை அடைவார்கள்.

பதினேழாவது அத்தியாயம் முற்றிற்று.

பதினெட்டாவது
மௌசலன் வரம்பெற்ற அத்தியாயம்.

க. சண்முகப் பெருமான் முனிவர்களைப் பார்த்துக் கூறுவாராயினர்:— மௌசலன் என்று பிரசித்திபெற்ற ஓரந்தணன் ஒரு பிராமணியின் புத்திரன். அவன் வித்தையின் பொருட்டுக் குருபத்தியோடு வசிட்டரை அடைந்தான். அவன் வசிட்டருக்குச் செய்யும் பணிவிடையால் அவரை மகிழ்வித்தான்.

உ. யோகிகட்கிறைவராகிய வசிட்டர் ஒருநாள் அவனை அன்புடன் பார்த்துக் கூறுவார்:— ஓ சிடனே! விதவையாகிய உனது தாய் கூடாவொழுக்கமுடையவளாய்க் குலத்தை விட்டு விரும்பியபடி நடப்பவளாய் ஒரு வேடனால் உன்னைப் புத்திரனாகப் பெற்றாள். தன்னகரமாகிய காசி க்ஷேத்திரத்தை விட்டு நீக்கப் பட்டவளாய் ஸ்ரீநகரை அடைந்து பிராமணர்களைக்கொண்டு உனக்குப் பிராமண சம்ஸ்காரங்களைச் செய்வித்தாள். வேட குமாரனாகிய நீயும் உன்னைப் பிராமணனாக நினைந்து வித்தியாப்பியாசத்தின் பொருட்டு என்னை வந்தடைந்தாய். நானும் உன் பணிவிடையால் மகிழ்ந்தேன். வேடனால் பிராமணியிடத்துப் பிறந்த நீ வேத வித்தைக்கு உரியையல்லை. நீ சாதியால் பஞ்சமனுக்கு ஒப்பாவாய். எனக்குப் பணி பூண்டமையால் பஞ்சமரைக் காட்டிலும் உயர்ந்தவனாய் மிலேச்சர்களுக்குத் தலைமைபெற்றாய். ஆதலால் உனக்கு மிலேச்சதந்திரங்களை அன்புடன் கூறுவேன். அம்மிலேச்ச தந்திரங்களில் பாண்டித்தியத்தையும் சித்திகளையும் பார்வதிசமேதராகிய பரமசிவனுடைய திருவருளால் நிறையப் பெற்று என்னுடையகட்டளைப்படி எனது காமதேனுவின் புத்திரர்களாகிய மிலேச்சர்களுக்குக் காவலனும் குருவுமாவாய் என்றார்.

ங. அந்த மௌசலன் வசிட்டரது வார்த்தையைக் கேட்டு அவரிடமிருந்து முறைப்படி மிலேச்ச தந்திரங்களை உபதேசிக்கப் பெற்றுத் திருநாரையூரை அடைந்து மிலேச்ச தந்திரமார்க்கப்படி இருதயத்திலே மகாதேவரைத் தியானித்து மேலான தவத்தைச் செய்தான்.

௪. திருநாரையூருக்குத் தலைவராகிய மகாதேவர் அவன் தவத்திற்கு மகிழ்ந்து மறைந்திருந்து அசரீரியாகக் கூறுவார்;— ஓ குழந்தாய்! யோகியாகிய மௌசலனே! உன் மனத்திலுள்ள வரங்களைக் கேட்பாயாக; நீ பரம பத்தனுகையால் நீ விரும்பியதை அளிப்போம். இதன் கண் ஐயம் வேண்டா என்றார்.

௫. அதுகேட்ட மௌசலன் ஓ மகாதேவரே! தேவரீர் வேத சம்பந்தமான மார்க்கத்தாலேயே காணத்தக்கவர். அடியேனால் அநுட்டிக்கப்பட்ட மிலேச்சமார்க்கத்தாலும் மகிழ்விக்கப் பட்டீர். ஆதலால் தேவர்கள் இருடிகளைக் காட்டிலும் எனக்கும் என் மார்க்கத்தை அநுசரித்தவர்களுக்கும் பூலோகத்தில் சிறப்பையும் சம்பத்துக்களையும் கொடுக்கவேண்டும். ஓ சதாசிவரே! பெருமையாளரே வேதங்களைக் காட்டிலும் மிலேச்ச தந்திரங்களுக்குச் சீக்கிர சித்தியை அளிக்கவேண்டும். மறைபொருளாகிய தேவரீர் எப்போதும் என் மார்க்கத் தெய்வமாக இருக்க வேண்டும் என்று திருநாரையூர் நாயகரைப் பிரார்த்தித்தான்,

௬. அசரீரியாகிய மகாதேவர்மௌசலனை அருளோடுபார்த்துக் கூறுவார்:— பிராமண க்ஷத்திரிய வைசியர்களுக்கு வேதாகம ஆசாரங்களும் சூத்திரர்களுக்கும் சங்கரர்களுக்கும் தந்திரநெறிகளும் முன்பே எம்மால் கூறப்பட்டன. சங்கரர்களுள்ளும் தாழ்ந்தவர்கட்கு யக்ஷ பூத உபாசனை சொல்லப்பட்டது, பூதப் பிரேத பிசாச யக்ஷ ராக்ஷசர்களுடைய ஆராதனையே சிறப்பாக உன் மிலேச்ச தந்திரங்களில் உரைக்கப்பட்டது.

௭. எமது ஆணைப்படி உன்னுடைய தந்திரத்திற் கூறப்பட்ட மந்திரசித்தியால் அத்தேவதைகள் பிரீதியுடையனவாய் விரைவில் பயன்றருவனவாகும். அவ்வாறே நாமும் வெளிப்படாத வடிவுடையோமாயும், அக்கினியிலும் மண்டலத்திலும் தமோகுணமிக்குடையோமாயும் இருப்போம். நாம் வெளிப்படாத வடிவுள்ளபோது எங்கணும் நிறைந்திருப்போம். தாமச பாகத்தை அதிட்டித்து நிற்பது பற்றித் தாமசத்தில் இருப்பவனுகியும், பூதநாதனுகியும் மண்டலத்துக்கு அபிமுகமான இடத்திலிருப்போம். உனது தந்திரத்தில் கூறப்பட்ட நெறியே வழிபடுவோருக்கு அதிற் கூறப்பட்ட சித்தியையும் கொடுப்போம். உண்மை முத்தியைக் கொடுப்போமல்லோம். மிலேச்ச தந்திர மார்க்கப்படி உபாசித்தால் பூதமண்டல வாசத்தை அளிப்போம்.

அ. வசிட்டருடைய காமதேனுவின் பால் உற்பவித்த மிலேச்சர்கள் கேகய தேசத்தின் நிருதிதிக்கிலுள்ள காடுகளில் வசிக்கின்றார்கள். சமதக்கினியினது காமதேனுவின்பால் உற்பவித்த மிலேச்சர்கள் அப்படியே காந்தார தேசத்துக்கு நிருதி திக்கிலுள்ள வனங்களில் வனவாசிகளாய் இருக்கின்றார்கள். ஓ முனிவனே! என் கட்டளைப்படி அவர்களை எல்லாம் நீ வசிகரித்து அவ்வனங்களை எல்லாம் நாடுகளாக்கி அவர்களுக்கு அன்போடு உனது மிலேச்ச தந்திரங்களை உபதேசித்து அவர்களுக்குத் தலைவனாயிருந்து அவர்களைப் பரிபாலிப்பாயாக.

கூ. இயக்கர் பூதர் முதலிய தேவதைகள் உன் சுவாதீனத்தில் இருப்பார்கள். அம்மிலேச்ச சாதியார்கள் துவாபரயுகத்திலே உன்னுடைய மதத்தை அநுசரித்து மௌசலேயர் என்று உலகத்திற் பிரசித்தி பெற்றவர்களாய் வசு தேசவாசிகளாயும் தேசத்தலைவர்களாயும் ஆவார்கள். துவாபரமுடிவில் எமதுகட்டளையால் பூமியானது க்ஷத்திரியரையிழந்ததாகும். பின்பு அநேக மாந்தர்கள் உன்மார்க்கத்தை அநுசரிப்பார்கள். உனது வமிசத்தவர்களாகிய மௌசலேயர்கள் உயர்ந்த பாரதகண்டத்தில் புகுந்து அரசாளுவார்கள். உன்னுடைய மதத்தையும் நிலைபெறுத்துவார்களென்று இவ்வாறு அசரீரியாகிய பரமசிவன் மௌசலனுக்கு வரமளித்தார்.

க0. மௌசலமுனிவன் திருநாரையூர்ப்பெருமானது வரங்களைப்பெற்று மிலேச்ச கணங்களையெல்லாம் தன் வசப்படுத்திக் கொண்டு பூதங்களின் பிரபாவத்தால் அநேகபட்டணங்களைப் புதிதாக உண்டுபண்ணி வசிட்டராற் கூறப்பட்ட மிலேச்ச மார்க்கத்தை அவர்களுக்கு உபதேசித்து அநேக மிலேச்ச கன்னிகைகளையும் மணந்துகொண்டு அவர்களை அன்போடு பரிபாலித்து வந்தான். மௌசலமுனிவன் அம்மனைவியரிடத்தில் எட்டுப்புத்திரர்களைப் பெற்று அவர்கட்குத் தனது இராச்சியத்தைப் பிரித்துக் கொடுத்துத்தான்யோக நிலையிலிருந்து கிடைத்தற்கரிய முத்தியையும் பெற்றான்.

கக. இவ்வாறு ஒரு வேடனாகிய மௌசலன் திருநாரையூர் மகாதேவருடைய அநுக்கிரகத்தினாலே சூரிய சந்திரர்கள் உள்ளவரை நிலைபெற்ற ஒரு மதத்தையும் பூமியில் நிலைபெறச் செய்து மீளாத கதியாகிய முத்தியின்பத்தையும் பெற்றான்.

பதினெட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

பத்தொன்பதாவது
புறச்சமய வரலாறுரைத்த அத்தியாயம்.

க. முனிவர்கள் சண்முகப் பெருமானைப் பார்த்து ஓ பார்வதி புத்திரரே! பிரபுவே! பிரமபுத்திரரும் பிரமஞானிக ளுட் சிறந்தவருமாகிய வசிட்ட முனிவர் மிலேச்சதந்திரத்தை எதற்காக எப்போது செய்தார். அம்மதத்தினுடைய சித்தாந் தம் யாது? அதனைச் சுருக்கமாக எங்களுக்குத் திருவாய் மலர் ந்தருளுக என்று கேட்பக் குமாரக் கடவுள் கூறியருளுகின்றார்.

உ. வசிட்டருக்கும் விசுவாமித்திரருக்கும் நேர்ந்த யுத்தத் திலே காமதேனு வருணாச்சிரமங்களைப் புறஞ்செய்தவர்களான வீரர்களை உண்டு பண்ணிற்று. அவர்கள் விசுவாமித்திரருடைய சேனைகளை அழித்துவிட்டார்கள். பிரமபுத்திரராகிய வசிட்டர் அம் மிலேச்சர்களை நன்னெறிப்படுத்தற்பொருட்டு மிலேச்சதந்திரத் தை இயற்றினர். அச்சாத்திரம் விளங்குதற்பொருட்டு நற்குண முடைய சீடனாகிய மௌசலனுக்கு அதை உபதேசித்தார்.

ங. அம்மிலேச்ச தந்திரத்திலே அவ்வியத்தரும், குணி யும், சுத்தரும், சாக்ஷியும், சர்வகாரணரும், ஆதிபுருடரும், ஈசா நரும், புருகூதரும், புருவாற்றுதிக்கப்பட்டவரும், வியோமாதி காரணமுமாகிய பொருள் காரணமாம் என்று அறிக. அதிட் டானதேவதைகள் அதிலேகூறப்படவில்லை. ஆதலால் அத்தந்திரத் திலே சுவர்க்க முதலிய உலகங்களும், இந்திரன் முதலியவர்களும் கூறப்படவில்லை. அதில் தேவசாதிகளாகிய பூதப்பிரேத பிசா சங்களும், அசுரர், இராக்கதர், இயக்கர்கள் நாகர்கள் முதலியவர் களும் சிறப்பாகக் கூறப்பட்டிருக்கிறார்கள். அவ்வியத்தோபா சனையின் சித்தியால் இந்தச்சமயிகள் பிரமத்தன்மையை நிச்சய மாக அடைகிறார்கள். மண்டலோபாசனை அக்கினியுபாசனைகளின் சித்தியால் இந்த மார்க்கத்தவர்கள் இம்மையின்பங்களையும், சித்த சுத்தியையும் அடைவார்கள்.

ச. யோகநெறியில் தவறியவர்கள் தேவகட்டளைப்படி ஆகா யத்தில் வசிப்பார்கள். இது சத்தியம். தேவகிங்கரர்களாகிய பூதங்களையும், பூதமுதல்வர்களையும் உபாசிப்பவர்கள் அவ்வப்

பூதங்களின் பிரசாதத்தால் அதற்குரிய சித்தியை அடைவார்கள். அல்லது பூதலோகத்திலே நிலையாக என்றும் வசிப்பார்கள். அவர்களுக்குப் பொதுத் தருமங்களை முக்கியமாகச் சிறப்பித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவ்வியத்தமும் சூரியனும் அக்கினியுமே இந்த மதத்துக்குத் தேவதைகளாம் என்று குமாரக்கடவுள் அருளிச்செய்தார். அதுகேட்டமுனிவர்கள்வினவுகின்றார்கள்.

ரு. தேவசேனே! பார்வதி மைந்தனே! முற்காலத்திலே கிருதயுகத்தின் முடிவில் சிவாஞ்ஞைப்படி விட்டுணு முதலியவர்களால் அசுரர்களை மோகப்படுத்த நிமித்தம் பௌத்தம் சைனமென்னும் சமணம் முதலிய நூல்கள் செய்யப்பட்டன. திரேதாயுகத்தின் முடிவில் யௌதேயம் ஔணம் மிலேச்சம் என்னுந்தந்திரங்கள் முனிவர்களால் ஆக்கப்பட்டன. மறுபடியும் கலியுகத்திலே பூமியில் ஒவ்வொரு கண்டத்தில் மாத்திரம் அவைகள் வியாபித்திருக்குமென்று கலியுகதர்மத்தில் பெரியோர்களால் உணர்த்தப்பட்டன. மிலேச்சர்களுடைய வரப்பேறும் தேவரீரால் கூறப்பட்டது. புண்ணியயுகங்களிலும் கலியுகத்திலும் எந்த எந்தத்தேசங்களில் வேதத்துக்குப் புறம்பான மதங்கள் அதிகமாக இருந்தன. அதனை எங்கட்குக் கருணையோடு கூறியருள வேண்டும் என்று பிரார்த்திக்கச் சண்முகப் பெருமான் அருளிச் செய்கின்றார்.

சு. உவர்க்கடலின் நடுவிலுள்ளது நாவலந் தீவாகிய கரும பூமி. சமமான விரிவுடைய அது ஒன்பது வருடங்களை உடையதாகும். அவ்வொன்பது வருடங்களும் புண்ணிய பூமி, பாப பூமி, மிச்சிரபூமி என ஒவ்வொன்றும் மும்மூன்றுவகைப்படும். அவற்றுள் புண்ணிய பூமியிலே எப்போதும் வேதாகம மார்க்கப் பற்றுடையவர்கள் வசிப்பார்கள். அசுரர் முதலியோர் மிச்சிர பூமிகளில் வசிப்பர். மிலேச்சர் முதலியோர் பாபபூமிகளில் வசிப்பார்கள்.

எ. கிம்புருட முதலிய வருடங்களிலுள்ள புண்ணிய பூமிகளில்தேவர்கள்வசிப்பார்கள். வேதாகமமார்க்கபரர்களாகியமனிதர்கள் முறையே மிச்சிரபூமிகளில்வசிப்பார்கள். கடினசித்தமுடைய வேடர் முதலியவர்களும் மிலேச்சர்முதலியவர்களும் பாபபூமிகளில் வசிப்பார்கள். திரேதாயுகத்திலே அரிவருட இளாவிருத

வருட கிம்புருடவருடங்களிலுள்ள பாபபூமிகளில் மூன்றுவகைப் பட்ட யூதர்கள்வசிப்பார்கள். இப்பூதலமானது தனியேவேதாகம மார்க்கத்தால் நிறையப் பெற்றிருந்தது. துவாபரயுகத்திறுதியி லே பாரதகண்டத்திலுள்ள பாபபூமிகளாகிய துருக்க பாரசீக தேசங்களில் மிலேச்சர்கள் வியாபித்திருந்தார்கள். ஆபீரர், யவ னர்,மிலேச்சர்,சகர், பர்ப்பரர் என்னும் ஐந்து மிலேச்ச சாதியார் கள்பாபகாரிகளாய் இராச்சியாதிபத்தியம் பெற்று வாழ்ந்தார்கள்.

அ. மிலேச்சர்களில் அநேகர் வேடர்களைப்போல மலைகளி லும், வனங்களிலும், அரசர்களாய் மகிழ்ந்திருந்தார்கள். ஊணர் என்னும் மனிதர்கள் உரோம மார்க்கத்தவர்கள். மனிதருள்ளே தாழ்ந்தவர்களாகிய இவர்கள் வேடர்களைப் போல வனத்தில் வசிக்கிறவர்கள். திரேதாயுகாந்தத்தில் ரமணவருடத்தில் கிரியா கூலத்திலும், உரோமகத்திலும் அரசர்களாயிருந்து அவ்வவ்வநங் களில்வசித்துவந்தார்கள். அவர்கள்மிலேச்சருக்குச்சமமாவர். அவ் வாறே யோதமார்க்கமுடைய யௌதேயர் எனப் பிரசித்திபெற்ற வேடர்கள் மிலேச்சருக்குச் சமானமானவர்களாயும் நல்ல நெறியு டையவர்களாயுமிருந்தார்கள். இவர்கள் பத்திராசுவகண்டத் திலே மத்திமக் கடலுக்கு அருகே மலைகளிலும், பௌத்தமார்க்க முடையவர்கள் சீநம் முதலிய தேசங்களிலும் வனங்களிலும் வசித்து வந்தார்கள்.

கூ. மகாபாரதயுத்தத்தில் கிம்புருட முதலியகண்டங்களில் வசித்த க்ஷத்திரிய சாதியார்கள் அருச்சுனனுற் கொல்லப்பட் டார்கள். க்ஷத்திரியர்களின்மையால் அவ்வத்தேசங்கள் அவ்வவற் றின் பக்கத்திலேயிருந்த மிலேச்சர்முதலானவர்களால்வசப்படுத் தப்பட்டன. அங்கேயிருந்த மூன்றுவருணத்தவர்களும், தங்கள் தேசவாசங்களைவிட்டு மேன்மையான பாரதகண்டத்தை அடை ந்து பாரததேசவாசிகளால் நன்கு மதிக்கப்பெற்று வேதமார்க்க முடையவர்களாகவே இருந்தார்கள். அங்கே தங்கிய மற்றவர்க ளெல்லாம் மிலேச்சர் முதலியவருடன்கூடி அவர்களுடையமார்க் கத்தினராகவே ஆகிக் கலியாற் பீடிக்கப்பட்டவராயினர்.

க0. கலியினுடைய ஆயிரவருட முடிவிலே பாரதகண் டம் தவிர நாவலந்தீவு முழுவதும் வேதாகம தருமத்தை விட் டதாயிற்று. இன்னும் மிலேச்சர் முதலிய புறமதத்தவரால்

உலகம் நிறைந்ததாகும். கலியுகமுடிவில் ஒரு பிராமணேத்தம ணேத்தவிரப் பாரதகண்டத்தில் உள்ளவர்கள் எல்லோரும் மிலேச் சர்களாவார்கள்.

கக. முனிவர்களே! இந்தப் பிரகாரம் மௌசல யோகீந்திர னது சரித்திரத்தின் இயைபுபற்றிப் புறச்சமயங்களின் விரிவும் உங்களுக்கு உரைக்கப்பட்டது.

பத்தோன்பதாவது அத்தியாயம் முற்றிற்று

இருபதாவது
கலிபுருடனுக்கு வரங்கொடுத்த அத்தியாயம்.

க. இருடிகள் சண்முகப் பெருமானைப் பார்த்து உலக குருவாகிய சண்முகப்பெருமானே! காலத்தினுடையபலத்தினு லேயே பூமியிலே தருமமும் அதருமமும் குறைவதும் வளர் வதுமாயிருக்கின்றன. ஆதலால் அக்காலபுருடனே மகாபுருட னுயிருக்கின்முன். யாருடைய பிரசாதத்தினுலே அந்தக்காலபுரு டனுக்கு அவ்வளவு பெருமை எய்திற்று? அதனைத் தண்ணளி யோடு எங்களுக்குத்திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த் திக்கச் சண்முகப் பெருமான் கூறுகின்றூர்.

உ. காலரூபியாய் நின்று காலசக்கரத்தைச் சுழற்றுபவர் பரமேசுவரரே. அவர் சத்துவகுணத்தைப் பிரேரித்தபோது தருமயுகமெனப் பெயர்பெற்ற கிருதயுகம் பிறந்தது. இராசத குணத்தைப் பிரேரித்தபோது துவாபரயுகம் பிறந்தது. சத்து வம், இராசதம் என்னுமிரண்டையும் பிரேரித்தபோது திரேதா யுகம் பிறந்தது. தமோகுணத்தைப் பிரேரித்தபோது கலியுகம் பிறந்தது. கிருதயுகமானது தேவர் முனிவர்களையும், திரேதா யுகம் இயக்கர் கந்தருவர்களையும், மனிதர்களிலே அரசர் வணி கர்களையும், துவாபரயுகம் தைத்தியர் இராக்கதர்களையும், மனி தர்களில் சூத்திரர்களையும், கலியானது தேவயோனிகளில் பூதர் முதலியவர்களையும், மனிதர்களில் மிலேச்சர் முதலியோர்களையும்

பற்றி நின்று, சத்துவ முதலிய குணத்துக்கேற்றதொழிலேயுடையனவாயிருக்கும். கிருதயுகத்துக்கு வைதிக சைவாசாரமும், திரேதாயுகத்துக்குக் கலப்பு ஆசாரமும், துவாபரத்துக்கு அவைதிக தாந்திரிகாசாரமும், கலியுகத்துக்குப் புறமான ஆசாரமும் பிள்ளைகளாம்.

ந. நான்கு யுகங்களின் அதிதேவதைகளும் ஸ்ரீகாசிக்ஷேத்திரத்திலே துண்டிவிநாயகப் பெருமான் சந்நிதியில் அவரையே தியானித்துக்கொண்டு மகா உக்கிரமாகிய தவத்தைச் செய்தார்கள். விநாயகப்பெருமான் கிருதயுகம் திரேதாயுகம் துவாபரயுகம் என்னும் மூன்றினுக்கும் வேண்டிய வரங்களை அளித்தருளிக் கலியுகத்தை நோக்கித் திரேதாயுகத்தில் என்னுடைய தண்டகவனத்தில் தவஞ்செய்து நீ வேண்டிய வரங்களைப் பெறுவாய் என்று கட்டளையிட்டருளினர்.

ச. திரேதாயுகத்தின்முடிவில் கலிபுருடனானவன் தண்டகவனத்திலுள்ள திருநாரையூரிலே விநாயகப் பெருமான் சந்நிதியில் கடுமையான தவஞ்செய்தான். அப்போது விநாயகப்பெருமான் வெளிப்பட்டருளி ஓ கலியே! உனக்கு வேண்டும் வரங்களைக் கேள் என்று பாபபுருடனாகிய கலியைப்பார்த்துக்கூறினர்.

ரு. அப்போது கலியானது கணேசப்பெருமானை வணங்கி இறைவரே! பிரமதகணங்கட்கு நாதரே! கிருதயுகம் முதலிய மூன்று யுகங்களும் எனக்கு மூத்த சகோதரர்கள். அவர்கள் விரும்பிய வரங்களைப் பெற்றுத் தம்மைச் சார்ந்த தேவர் மனிதர்களைத் தங்கள் பிள்ளைகளாலும், தங்கள்செய்கையாலும் முறையே ஆனந்தமுறுத்துகின்றார்கள். என்னால் அடுக்கப்பட்ட பூதர் முதலியவர்களையும், மனிதர்களுள் மிலேச்சர் முதலியவர்களையும், நான் ஆனந்தமுறுத்துவதற்குரிய மார்க்கத்தையும் உரியகாலத்தையும் எனக்குத் திருவாய்மலர்ந்தருளல் வேண்டும் என்று இவ்வாறு விநாயகப்பெருமானை வேண்ட அவர் கலியைப் பார்த்துக் கூறுவார்:—

சா. முதலாவது யுகத்திலே வேதத்திற் கூறிய ஆறு சமயங்களே யுள்ளன. அந்த யுகத்திலுள்ள தேவர்களும், மனிதர்களும், மூவகைத் தருமங்களோடு கூடினவர்களாய் அவ்வாறுசமயங்களைப் பற்றினவர்களாயிருந்தார்கள். அந்த யுகத்திலுள்ள மனி

தர்கள் நான்கு வருணத்தார்களாகவே தோன்றித் தத்தம் வருண நெறியிலே பற்றுடையவர்களாகவும், சத்தியமாகத் தருமங்கள் எல்லாவற்றிலுங் கருத்துடையவர்களாகவும், வேதத்திற் கூறிய சமயங்களில் ஒழுகுபவர்களாகவும், எமதாணைப்படி பதினேழி லக்கம் வருடங்கள் இவ்வாறு இருந்தார்கள்.

எ. பின்னர்த்தேவாந்தகன் நராந்தகன் என்னும் இரண்டு துட்ட அசுரர்கள் வேதமார்க்கங்களை அழிப்பார்கள். அப்போது பிராமணர் முதலியோர் உன்னுற் பீடிக்கப்பட்டு மூவகைத் தரு மங்களினின்றும் நழுவினவர்களாவார்கள். காசியபர் முதலிய முனிவர்கள் உன்னுலும் அசுரர்களாலும் பீடிக்க முடியாதவர்க ளாய்ச் சுத்தராய்த் தருமத்தில் நிலைபெற்று நிற்பார்கள்.

அ. தேவர்களுடைய பிரார்த்தனையாலும், முனிவர்களு டைய பிரார்த்தனையாலும், நாம் காசிபருடைய புத்திரனுய்வந்து அவ்வசுரர்களைக் கொன்று அசைவற்ற ஆதார ரூபியாய்த் தரு மத்தை நிலை நாட்டுவோம்.

கூ. குணங்களில் விருப்பமுடையவனும் கிருதயுக தேவ தையுமான கனகனும் நமதாணைப்படி தனதுஇடத்திலே சிறந்த நான்கு சிடர்களால் மற்றை அறுபத்துநான்கு மதங்களும் வேத விரோதமாதலின் அவற்றை வேருடன் களைந்து, ஆறு பிரிவுடன் கூடிய வைதிகத்தையும், சுத்தாத்துவிதத்தையும் உலகங்கட்கு நன்மைசெய் விருப்பினுல்பிரமாண்டத்திலே நிலைபெறுத்தினுன்.

க0. அதன் பின்னர் இருபதினுபிரம் வருடங்களின் முடி வில் இரணியகசிபு என்னும் மூடனுகிய அசுரன் வேதமார்க்கங் களை அழிப்பான். அப்போது எமது கட்டளைப்படி திருமால் அக்கொடிய அசுரன்பாலுதித்த மைந்தனுகிய பிரகலாதனைக் காப்பாற்ற வேண்டி நரசிங்கவடிவுடன் தூணிலே தோன்றி அவ் வசுரனை அழிப்பான். தான் வதரிவன நடுவிற் செல்பவனுவன்.

கக. பிறகு எமதாணைப்படி திரேதாயுகம் பூமியில்தோன் றும். அப்போது காணுபத்திய முதலிய மார்க்கத்திலுள்ள அந்தணர் முதலியோர் மிச்சிர மார்க்கத்தை மேற்கொண்டவர்க ளாய் ஆசுரம் காந்தருவம் என்னும் மணத்தைச் செய்வார்கள். நான்கு வருணங்களிலும் துவைதமார்க்கிகள் உண்டாகுவார்கள்.

கஉ. அதன் பின் முற்கலன் என்னும் சிறந்த சித்தபுருடன் எமது உத்தரவுப்படி மூன்று வருணங்களிலும் உயர்ந்தோர்பால் வேதாகமங்கள் கூறும் அத்துவிதமார்க்கத்தையும், காணுபத்திய முதலிய மார்க்கங்களிலுள்ள அந்தணர் முதலியவர்களிடத்திற் சிறந்த மிச்சிரமார்க்கத்தையும் காணுபத்தியம் முதலிய ஆறு மதங்களையும் தாபனம் செய்வான்.

கங. முற்கலனுற் கூறப்பட்ட பெரிய நெறியிலே அந்தணர் முதலியோர் பன்னிரண்டு இலக்கம் வருடம்வரை நிற்பார்கள். அதன் மேல் திரேதாயுகத்தின் அபிமான தேவதையாகிய சூரியனுடைய தமோகுண அமிசத்தாற் புத்திமானுகிய சிந்து என்னும் அசுரன் தோன்றுவான். அவன் பூமியிலுள்ள வேதநெறிகளை அழிப்பான். அதனுல் அந்தணர் முதலியோர் தத்தம் வருணங்களினின்றும் நழுவுவார். அப்போது உமாசமேதராகிய பரமசிவன் திரிசந்தி என்னும் க்ஷேத்திரத்திலே எண்பத்தெண்ணுயிரம் இருடிகளுடன் எழுந்தருளியிருப்பார். அக்காலத்தில் நாம் பார்வதி குமாரனுய் வந்து அவ்வசுரனை அழிப்போம். பிருகு முதலிய இருடிகள் பிரத்தியும்நன் முதலிய நான்கு வியூகங்களுடன் கூடிய நாராயணனது அமிசத்தோடு கூடித் தோன்றுவர். யாக்ஞவல்கியன், பிருகு, நாரதன், வசிட்டன், நந்திகேசன் என்னுமிவர் எமது உத்தரவுப்படி உலகத்திலே துவாபரயுகத்துக்கு அநுகூலமாக முற்கலன் கூறிய நெறியால் சுத்தாத்துவிதத்தையும் மிச்சிரமார்க்கத்தையும் துவிதத்தையுணர்த்துந்தந்திரமார்க்கங்களையும் பூமியில் நாட்டுவார்கள்.

கச. நான்குவருணத்திலும் பிறந்த குண்டர் கோளர் முதலிய சாதிகள் அரசராணைப்படி வைதிக சைவங்கட்கு வேருன மார்க்கங்களைப்பற்றி நின்று துவாபரயுகத்திலே எட்டிலக்க வருடங்கள் முறையாக நிலைபெறுவார்கள்.

கரு. மிக்க வலியுடையவர்களான சிந்துரன் முதலிய இராக்கதர் அசுரர்முதலிய துட்டர்கள் பூமியிற்றோன்றிவேதநெறிமுதலியவற்றையழிப்பார்கள். அப்போது நாம் வரேண்ணியர் என்பவருக்குப் புத்திரராகத் தோன்றிப் பாபசிந்தையுடைய அவ்வசுரர்களையெல்லாம் கொன்று உலகம் முழுவதையும் பரிபாலிப்போம். அப்போது எமதாணையால் திருமால் பராசர புத்திர

ளுய்த் தோன்றி எமக்குத் தம்பி என்று உலகத்திலே புகழப் பட்டு வேதமுதலியவைகளையும் புராணங்களையும் முறையாக வகைப்படுத்தி அத்துவிதத்தையும், மிச்சிரமார்க்கத்தையும், தாந்திரிக மதத்தையும் நிலைபெறுத்துவான்.

கசு. கிருதயுகத்திலே கலியாகிய உன்னைப் பற்றியவர்கள் மிகச் சிலரே இருப்பார். திரேதாயுகத்திலே பூமண்டலத்தில் மூன்று பங்கு தருமநெறியுடையவர்கள் இருப்பார்கள். உன் னெறியைப் பற்றின பேர் ஒரு பங்குதானிருப்பார்கள். துவா பரயுகத்திலே இரண்டு பாகம் தருமநெறியுடையவர்களும், உன் னையாசிரயிப்போர் இரண்டு பங்குமிருப்பார். உன் அதிகாரத் தோடு கூடிய நாலாவது யுகத்திலே உன்னையாசிரயிப்போர் மூன்று பாகம் ஆரம்பித்துப் பின் முழுவதும் உன்னுடைய நெறி யினரே ஆவார்கள், பொதுவான தருமத்தில் நிற்பவர்கள் பூமி யில் மிகச் சிலரே இருப்பார்கள்.

கஎ. இந்தப் பாரதகண்டத்திலே வருணாச்சிரம தருமத்தி லுள்ளவர்கள் யுகாந்தம் வரையில் குறைந்த சிரத்தையுடைய வர்களாக இருப்பார்கள். பூமியிலே வேதநெறியிலுள்ளவர்கள் நாளடைவில் குறைந்த தருமமுடையவர்களாவார்கள். சிறந்த இப்பாரதகண்டத்திலும் அத்தன்மையராகவே இருப்பார்கள். அநேகர் அசிரெளத தந்திர நெறியினராகவும் இருப்பார்கள்.

கஅ. பாரதயுத்தத்தின் பிறகு கிருட்டினனதுகட்டளைப் படி கிம்புருட வருடம் முதலியவைகளிலுள்ள மூன்று வருணத் திற் பிறந்தவரனைவரும் வேதமார்க்கத்திற் பற்றுள்ளவர்களாயும் வருணதருமங்களை மேற்கொண்டவர்களாயும் பாரதகண்டத்தை அடைந்து அருச்சுனனுக்குப் பௌத்திரனும் விவேகியுமாகிய அரசனால் அபிமானித்துப் பூசிக்கப்பெற்று வேதநெறியினராக இருப்பார்கள்.

கசு. கிம்புருடவருடம் முதலிய வருடங்களிலுள்ளோர் எல்லோரும் வருணாசாரம் நீங்கி வாமமத ஆசாரத்தில் விருப் புள்ளவர்களாய் மகிழ்ந்திருப்பார்கள். அங்குள்ள தேவசாதியின ரும் சிறந்த முனிவர்களும் மனிதர்களாற் காணப்படாமல் குகை களில் வசிப்பார்கள். இவ்வாறு ஆயிரம் ஆண்டுகளின் முன் பாரத

கண்டம் தவிர நாவலந்தீவு முழுவதும் வருண தருமமின்றியும் வேதாகம நெறியினீங்கியும் இருக்கும். ஐயமில்லை.

௨0. ஓ கலியே உனது யுகத்தில் ஓராயிரம் வருடம் வரையில் பரதகண்டத்தை க்ஷத்திரியர்கள் ஆள்வார்கள். அங்கேயுள்ளவர்கள் வைதிகநெறியிலும் வருணதருமங்களிலும் நிற்பார்கள். நாலாயிரம் வருடம் வரை க்ஷத்திரிய வித்திற் பிறந்த பலவகை வேந்தர்கள் பரதகண்டத்தை ஆள்வார்கள். அப்படியே பரத கண்டத்திற் சிலரே அத்துவித சைவப்பற்றுடையவராகவும், பிறரெல்லாம் வாமமார்க்கத்தினராகவும் நிற்பார்கள். அதன்மேல் பரதகண்டத்தில் சூத்திரர்களும் மிலேச்சர்களும் பௌத்தர்களும் உனது உதவியினாலே அரசாளுவார்கள். பின்பு நான்கிலக்ஷ பரியந்தம் மனிதர்களெல்லாம் உனது ஆணையின்படியே எப்போதும் பாபசிந்தையுடையவர்களாயிருப்பார்கள். இடையிடையே சிலபேர்கள் வேதாகம தருமநெறியில் விருப்புடையவராகவும் வருணநெறியிற் கருத்துடையவராகவும் இருப்பார்கள்.

௨௧. கலியுகமுடிவிலே நாம் கலியோடு கூடித் தூமிரவிக்கினேசனாகத் தோன்றி மிலேச்சர்களையெல்லாம் அழித்துக் குகைகளிலுள்ள அந்தணர் முதலியவர்களை அழைத்துக்கொண்டுவந்து பூமியில் நிலைபெறுத்திச் சந்திரவமிசத்திற் பிறந்த தேவாபி என்பவனையும், சூரியவமிசத்திற் பிறந்த மருத்துவானையும் பூமியில் அரசர்களாகச் செய்து வேதாகம மார்க்கங்களை நிலைபெறுத்திப் பின்னர் எமது இத்தலத்தை அடைவோம்.

௨௨. பிறகு சநகர் முதலாகிய ஐந்து யோகிகள் பூமியில் எமது உத்தரவுப்படி நிகரற்ற அத்துவித சைவமார்க்கத்தை நாட்டுவார்கள். ஆகையால் ஓ கலியே ! நீ பூமியில் இருந்து எம்மாற் கூறப்பட்டநெறியே முறையாக உலகத்தைவசீகரித்து உன் புத்திரர்களோடும்பரிபாலிப்பாயாக. உன்னதிகாரத்திற்குட்பட்ட நான்கிலக்கம் வருடத்துள் எப்போதெப்போது உனது மார்க்கங்களுக்குக் குறைவு ஏற்படுமோ அப்போதப்போது உலகத்திலே மிலேச்சர்களைப்பற்றினவனாகிய நீ உனது வடிவத்தை அஞ்சாது தோன்றச் செய்து அதருமத்தின் முன்னேற்றத்தைச் செய்வாயாக. சகல மதங்களுக்கும் நாதனாகிய நாம் கலிப்பிரிய கணேசன் என்று பெயர்பெற்று மிலேச்ச சாதிகளுடைய மதங்களுக்குரிய தெய்வரூபமாகவும் இருப்போம் என்றருளிச் செய்தார்.

உ௬. இந்தப் பிரகாரம் கணபதியானவர் கலிக்கு வரங்களைக்கொடுத்து மறைந்தருளினர். கணநாதர் கலிதேவதைக்கு வரதானஞ்செய்த லீலையாகிய இக்கதையை எவன் பத்தியோடுபடிக்கின்றானோ அவன் கலி பீடையினின்றும் விடுபட்டுத் திவ்விய ஞானம் கைவரப்பெற்றுப் பரமான்மாவோடு கூடி இன்புறுவான் என்று சண்முகப்பெருமான் முனிவர்களுக்குக் கூறியருளினர்.

இருபதாவது அத்தியாயம் முற்றிற்று

இருபத்தோராவது

பாண்டு மன்னனுக்கு வரமளித்த அத்தியாயம்.

க. துவாபரயுகத்தில் திருநாரையூரின்கண் எழுந்தருளியிருக்கும் விநாயகப்பெருமானும் பரமசிவனும் என்னென்ன லீலைகளைச் செய்தார்கள், அவற்றை எங்களுக்குக் கருணையோடு கூறவேண்டுமென்று முனிவர்கள் பிரார்த்திக்க அறுமுகக் கடவுள் கூறுகின்றார்:—

உ. சந்திரவமிசத்திலே சந்தனுவென்று கூறப்படும் அரசனொருவனிருந்தான். உயர்ந்த தருமசிந்தையுடைய அவன் வருணனது அமிசமாகப் பிறந்தவன். அவ்வரசன் பிரமாவின் சாபத்தாற் பூமியிற் பிறந்த கங்கையையும், வசுராசன் புத்திரியாகப் பிறந்து பரதவர் இல்லத்தில் வளர்ந்த யமுனையையும் முறைப்படி மணந்துகொண்டான்.

௩. அவனுக்குக் கங்கையிடத்துப் பிறந்தவன் புத்திமானாகிய காங்கேயன் என்னும் வீட்டுமன். பரதவ புத்திரியாகிய சத்தியவதியினிடத்துப் பிறந்தவன் விசித்திரவீரியன் என்பான். அரசன் விசித்திர வீரியனுக்கு இராசசியத்தைக்கொடுத்துச் சாபத்தினின்கி உள்ளமகிழ்ச்சியுடையனாகித் தன்னிடமாகிய வருணலோகத்தை அடைந்தான்.

௪. கங்கையின் மைந்தனாகிய வீட்டுமன் இளையோனாகிய விசித்திரவீரியனிடத்திலேயே இராச்சியத்தையமைத்து மகிழ்ச்சியோடு இராச்சியபரிபாலனஞ் செய்வித்தான். விசித்திரவீரியன் நோயால் வருந்தி இளமைப் பருவத்திலேயே இறந்தான்.

ரு. விசித்திரவீரியனுடையபத்தினிகளிடத்தில் வியாசனால் இரண்டுபுத்திரர்கள் பிறந்தார்கள். மூத்தவனாகிய திருதராஷ்டிரன் அதிக பலமுடையவனாய்ப் பிறவிக்குருடனாயிருந்தான். இரண்டாவது மைந்தன் பாண்டு என்று பிரசித்தி பெற்றவன். அவன் பாண்டுரோகமுடையவன். அவன் வியாசன் கட்டளைப்படிபாண்டு ரோகநிவிர்த்தியின்பொருட்டுத்திருநாரையூரையடைந்து முறைப்படி அங்கேயுள்ள பொய்கையின்மூழ்கி நித்தியகருமங்களை முடித்துக்கொண்டு பின்பு தேவாலயத்தை அடைந்து விநாயகப்பெருமானையும் திருநாரையீசராகிய பரமசிவனையும் சிவாகம விதிப்படி பூசித்து நூற்றெட்டுப் பிரதக்ஷிணம் தினமுஞ் செய்து வணங்கிப் பலவித தோத்திரங்களால் இயன்றவரை துதித்துக் கணபதியினுடைய ஆறெழுத்து மந்திரத்தையும், பரமசிவனுடைய ஆறெழுத்து மந்திரத்தையும் இயன்றவரை ஆயிரமுருவுக்குக் குறையாமல் செபித்துப் பின்பு கந்தமூலங்களைப் புசித்துக்கொண்டு மாலைக் காலத்திலும் இவ்வாறே நீராடிப் பகலிற்போலவே பிரதக்ஷிண செபங்களைச் செய்வான். இவ்வாறே ஒன்றரை மாசம் வழிபாடு செய்தான்.

சு. பாண்டு மன்னன் இரண்டு கைகளையும் குவித்து இருதயத்தில் வைத்துக்கொண்டு காலோடுகாலை வைத்து இருதயத்திற் பரமேசுவரனைத் தியானித்துக் கணேசருக்கும் சிவபெருமானுக்குமுள்ள சகச்சிரநாமத்தோத்திரங்களைச்செபித்துக்கொண்டு முறைப்படி பிரதக்ஷிண நமஸ்காரங்களைச் செய்வானாயினான்.

எ. இப்படிப் பதினாயிரம் பிரதக்ஷிணஞ் செய்தமையால் பார்வதிபதியாகிய பரமசிவன் திருவுளமகிழ்ந்து அவனுக்கு எதிரே இலிங்கத்தினின்றும் வெளிப்பட்டருளி நந்தி முதலிய கணங்களோடு இடபத்தின்மீது சோமாஸ்கந்தராகக் காட்சியளித்தார்; பரமேசுரரைத் தரிசித்தவுடனே பாண்டுமன்னன் நமக மந்திரங்களைக் கூறி வணங்கிக் கைகளைக் கூப்பிக்கொண்டு அதர்வசிகைகளைச் சொல்லித் துதித்தான்.

அ. ஓ அரசனே! உன்னாற் செய்யப்பட்ட பிரதக்ஷிணங்களால் நாம் மிக மகிழ்ந்தோம். உனக்கு இந்திரனுக்குங் கிட்டாத வேண்டிய வரங்களைத் தருவோம் என்று கருணையோடு பரமசிவன் திருவாய்மலர்ந்தருளினார்.

௯. அவ்வுரையைக் கேட்ட பாண்டுவேந்தன் மிக மகிழ்ந்து சிவபெருமானைப் பலமுறை அன்போடு வணங்கி நின்று எம்பெருமானே! அடியேனுக்குளதாகிய பாண்டு நோயை நீக்கித் தேவரீருடைய காந்திபோன்ற சரீரகாந்தியையும் தேவரீருடைய திருக்குமாரர்கள்போன்ற புத்திரர்களையும் இவ்வுலகில் அரசசெல்வத்தையும் தந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தான்.

௧0. பரமசிவன் அப்பாண்டு மன்னனைக்கருணையால் நோக்கியருளி அரசனே! உன் வியாதியெல்லாம் நம்மால் தீர்க்கப்பட்டன. ஆநந்தத்தை அளிக்கும் எமது சரீரகாந்தி உனது சரீரத்துக்குத் தரப்பட்டது. நீ பூமியிலே சக்கரவர்த்தித் தன்மை பெற்றாய். ஐயமில்லை. வில்வித்தையிற் சதுரனும், யுத்தத்தில் வல்லவனும் ஆகுவாய். நீ முற்பிறப்பிலே பிரமதத்துவமுணர்ந்த ஒரு முனியினால் அடுத்த பிறப்பிலே பிள்ளையில்லாதவனாகக் கடவாய் என்று சபிக்கப்பட்டாய். ஆதலால் அம்முனிவன் வாய்மொழிப்படி இம்மையில் உனக்குப் புத்திரப் பேறில்லை. அவ்வாறாயினும் இத்திருநாரையூரில் வந்து எம்மைவழிபட்டு எமது கருணையைப்பெற்றமையால் உன்மனைவிகளிடத்தில் தேவர்களால் உனக்கு நிச்சயமாக ஆறு புத்திரர்கள் பிறப்பார்கள். அவர்கள் உலகமெங்கும் புகழ்படைத்தவராவர்.

௧௧. பிரமனும் திருமாலும் உருத்திரனும் சாத்தனும் கந்த கணாதிபரும் ஆகிய இவ்வறுவரும் எம் குமாரர்கள் என்று கூறப்படுவர். தருமதேவதை ஏழாவது குமாரன் ஆவான்.

௧௨. இவர்களுள் விக்கினேசனைத் தவிர மற்றையவர்கள் எமதாணைப்படி உனக்குப் புத்திரர்களாக வருவார்கள். பத்தர்களுக்குள்ளே சிறந்தவனும் இடபவடிவினனுமான தருமனும் அவனது பத்திமையால் எமக்குப் புத்திரனாகஎண்ணப்பட்டான். அத்தரும தேவன் யமதருமனது அமிசத்தை அதிட்டித்து உனக்கு மூத்த புத்திரனாவான். உருத்திரன் வாயுதேவன் அமிசத்தை அடைந்து இரண்டாவது புத்திரனாவான். குகன் கேசவனமிசத்தையும் இந்திரனமிசத்தையும் அதிட்டித்து மூன்றாவது புத்திரனாவான். இந்த முறையாகவே சாத்தாவும் பிரமாவும் நாலாவது ஐந்தாவது பிள்ளைகளாகவும் ஆவார்கள். இவர்களைவரும் மகாவீரர்களாகவும், தருமநெறியினடப்பவர்களாகவும் ஆவார்கள். இவர்கள் முற்பிறப்பிலே உன்னால் மிகவும் உபாசிக்கப்பட்டவர்கள்.

கந. சகச்சிரகவசன் என்னுமசுரன் சூரியாமிசங்கலந்து கொடை முதலிய தருமத்தால் யாவரும் உண்மையாக நன்கு மதிக்கும்படி உனக்குப் புத்திரனாகத் தோன்றுவான். இவன் உனது ஐந்து புதல்வர்க்கும் பகைவனுய்ச் சத்துருமனையில் வசிப்பான். இந்தப் பிள்ளைகள் மகாவீரர்களாய்ப்பகைவர்களைப் போர்க்களத்திலே தருமநெறியால் கொன்று நாவலந்தீவு முழுவதையும் பரிபாலனஞ் செய்வார்கள். இவர்கள் எமது கட்டளைப்படி அசுவமேதங்களையும் இராசசூயங்களையும் செய்வார்கள்.

கச. நீ உனது சேட்ட புத்திரனுக்கு ஒன்பது வயதான போது முனிவன் சாபத்தால் இவ்வுடலை நீத்துப் புண்ணிய லோகத்தை அடைந்து தருமராசனுடைய சபையிலே ஐம்பது வருடங்கள்காறும் அவனாற் பூசிக்கப்பட்டிருந்து பின்பு உன் மைந்தர்கள் செய்யும் இராசசூயபலத்தால் இந்திரசபையை அடைந்து நூறு யுகம் வரை மகிழ்ந்திருந்து அதன்மேல் எமது சிவலோகத்தை அடைந்து எமது சாரூப்பியத்தோடு நூறு கற்பங்காறும் களிப்புடன் வசிப்பாய். பின் எமது கணேசனை அடைவாயென்று இவ்வாறு பாண்டு மன்னனுக்குத் திருநாரையூர்ச் சிவபிரான் வரங்களளித்து மறைந்தருளினர்.

கரு. பாண்டுமன்னன் வரங்களைப்பெற்றுப் பாண்டுநோயினீங்கிச் சந்திரகாந்திபோன்ற ஒளிபெற்று உலகமயங்கும் அழகுடையவனுய்த் தந்தையாற்கிடைத்த இராக்சியத்தையுமடைந்து சக்கரவர்த்தியாகி முந்நூறுவருடகாலம் தருமநெறியாற் பூமியை ஆண்டு பின் வனத்தையடைந்து பரமசிவனுடைய வரத்தின்படி தருமன் முதலிய பிள்ளைகளைப் பெற்று மூத்த புத்திரனது ஒன்பதாம் வயதில் மனித உடலை நீத்துத் தருமனது சபையிலிருந்து பின் இந்திர சபையை அடைந்து அவனுல் பூசிக்கப்பெற்று மகிழ்ந்திருந்தான்.

கசு. பாண்டு மன்னனுக்கு வரமளித்த காதையாகிய இதனைப்பத்தியோடு பரமசிவனைப் பூசித்துக்கொண்டு யாவன் படிக்கின்றானே அவன் பாண்டுநோய் குட்டநோய்களினின்றும் நீங்கிச் சிவபெருமானது ஆணையால் விரும்பியபடி தருமநெறியினிற்கும் பிள்ளைகளையும் பெருஞ்செல்வங்களையும் அடைந்து மறுமையிலே தேவேந்திரனது பதவியையுமடைவான். இதில் சந்தேகமில்லை.

இருபத்தோராவது அத்தியாயம் முற்றிற்று.

இருபத்திரண்டாவது
பாண்டவர் வரலாறுரைத்த அத்தியாயம்.

க. உலகெலாந்தொழுதற்குரிய ஆறுமுகப்பெருமானே! தெய்வயானையம்மையாரது மனத்துக்கு இனியவரே! கந்தன் விட்டுணு முதலியவர்கள் பாண்டுவுக்குப் புத்திரராகிய தன்மையடைந்து பூமியிலே என்ன செய்தார்கள்? அவர்கள் மனிதத்தன்மை யாது காரணத்தாலடைந்தார்கள்? அவர்களுடைய சரித்திரத்தை அடியேங்களுக்குக் கூறியருள வேண்டுமென்று முனிவர்கள் பிரார்த்திக்க ஆறுமுகப்பெருமான் கூறியருளுகின்றார்:—

உ. அப்புண்ணியக் கதையை உங்கட்குக் கூறுவேன்; கேண்மின்கள். பிரமா, விட்டுணு, உருத்திரன், சாத்தா, கந்த விநாயகர்கள் என்னும் இவர்கள் மகேசருக்குக்குமாரர்கள் எனக்கூறப்படுவர். இவர்கள் தொழிலால் வேறுபாடுடையவர்கள். பிரமா படைப்பவன். விட்டுணு காப்பவன். காலருத்திரன் அழிப்பவன். சாத்தா பூதகணத் தலைவன். கந்தன் சேனைத்தலைவன். விநாயகர் விக்கினங்கட்கு இறைவரும் சகல சித்திகளையும் தருபவருமாவர். இவருள் மனிதவடிவமும் யானைவடிவமும் உடைய விநாயகர் சத்பிரமமாகிய சகளாகள வடிவுடையவர் ஆதலால் நிட்கள சிவனுக்குக் கீழானவராகவும் சகள சிவனுக்கு மேலானவராகவும் எண்ணப்படுகின்றார்.

௩. சத்பிரமமாகிய கணநாதர் சகுண நிர்க்குணமான வடிவுடையவர்; அவ்வியத்தமான நிலையில் பிரமரூபர் என்றும் வியத்தமாகிய நிலையில் சிவகுமாரர் என்றும் வேதாகம உண்மைகளை அறிந்தவர்களாலே புகழப்படுகின்றார். இவர் சிவன் முதலியவர்களால் எப்போதும் பூசிக்கத்தக்கவர். சிவனுக்கு உயிராக உள்ளவர் கணேசானர். இவருக்குத் தேகமாகவுள்ளவர் பார்வதிபதியாம். ஆதலால் தேகி கணநாதர் என்றும் தேகம் சம்பு என்றும் எண்ணப்படுவர்.

௪. முன்னொருகாலத்தில் பிரமா விட்டுணு முதலானவர்கள் செருக்குற்றவர்களாய்த் தங்கள் பிதாவாகிய பார்வதிநாதரையும் மூத்தபிள்ளையாகிய விநாயகரையும் அவமதித்துத் தம்மை

யே பரமான்மாவாகிய சர்வகாரணராக மதித்தனர். அதனுல் மகாதேவர் கோபங்கொண்டு வைரவமூர்த்தியாகி அவர்களிடத்திலே இரத்தபிக்ஷையை ஏற்ருர். பிரம விட்டுணு முதலியோர் வைரவருடைய கபாலத்தை நிறைக்க முடியாதவராகி நாங்கள் பூமியிலே தோன்றிப் பெரிய பாரத யுத்தத்தில் இதை நிரப்புவோம் என்றிங்ஙனம் வைரவமூர்த்தியை வேண்டிக்கொண்டார்கள். அதன்பொருட்டு விட்டுணு முதலாகிய தேவர்களெல்லாம் மலைகளுட் சிறந்த மேரு மலையிலுள்ள மகேசுவரருடைய சபையிலே பெருங் கூட்டமாகக்கூடி ஆலோசித்தார்கள்.

ரு. அப்போது விட்டுணு மகிழ்ச்சியோடு பிரமாவைப் பார்த்து நான்கு வியூகமூர்த்திகளுடன் கூடிய நான் துவாபரத்தில் பூமியில் தோன்றி அசுரர்களையும் துட்ட அரசர்களையும் சேனைகளுடன் கொன்று வைரவமூர்த்தியின் கபாலத்தில் பாதியை நிறைப்பேன் ஐயமில்லை. உங்கள் கருத்திற்கிசைந்ததைக் கூறுமின்கள் என்று கேட்ப, நரன் என்பவன் தனது தோழனுகிய நாராயணனைப் பார்த்துக் கூறுகின்ருன்; துவாபரயுகத்திலே உன்னேடுகூட நானும் உலகத்தில் தோன்றித் துட்டர்களாகிய அசுரர்களைக்கொன்று வைரவருடைய கபாலத்திலே குறைவதில் பாதியை நிரப்புவேன் என்று கூறினுன்.

சு. கந்ததேவன் விட்டுணுவைப் பார்த்து மகிழ்ச்சியோடு கூறுகின்ருன்; நான் உயர்ந்த நரன் என்பவனைக் கலந்து நின்று மகிடாசுரன் முதலாகிய அசுராமிசமான துட்டர்களாகிய இரண்டு அக்குரோணி அசுரர்களை அழிப்பேன். அதுபோலப் பாரதயுத்தத்திலும் எட்டக்குரோணி சேனைகளையும் வதைப்பேன். ஐயமில்லை; எனது வலது பாகத்தில் தோன்றிய சாகன் என்னும் சத்திபுத்திரன் பிரபாசனன் என்னும் வசுவாகிய வீட்டுமனைக் கலந்து நின்று யுத்தத்தில் அக்குரோணியை அழிப்பான்; எனது வாமபாகத்தில் உதித்த விசாகன் என்பவன் தேவகுருவைச் சார்ந்து நின்று போர்க்களத்தில் அவ்வளவு சேனையை அழிப்பான்; எனது பின்பக்கத்தில் தோன்றிய நிகமன் என்பவன் அதிற் பாதியை அழிப்பான்; அக்கினி புதல்வனுகிய கந்தன் காலருத்திரனைப் பற்றி நின்று போர்முனையிலே அவ்வளவு அக்குரோணியை அழிப்பான்; நான் வைரவ கபாலத்தைச் சிறிது குறைய நிறைப்பேன் என்ருன்.

௭. உருத்திரன் விட்டுணுவைப் பார்த்து, நான் வாயு அமிசத்திற் கலந்து நின்று பதினாயிரம் யானை பலங்கொண்ட துட்ட அசுரர்களை எல்லாம் கொல்லுவேன். பாரத யுத்தத்தில் ஒன்றரை அக்குரோணி சேனைத்தலைவர்களையும் வதைப்பேன் என்று கூறினான். அசுவினிகளைக் கலந்து, உருத்திரர் கூறியதிற் பாதி சேனைகளை அழிப்பேன் என்று பூதநாதனாகிய சாத்தா கூறினான். பிரமாவும் அவ்வாறே கூறினான். அங்கே வந்திருந்த இந்திரன் முதலியவர்களெல்லாம் அவ்வாறே ஆக என்று முறையே கூறினார்கள்.

௮. இவ்விதம் தேவர்களெல்லாம் ஆலோசனை செய்து முடித்துச் சிவனது கட்டளைப்படி துவாபரயுகத்திலே பூமியில் வந்து தங்கள் அமிசத்தால் தோற்றமுற்றார்கள். நாராயணன் வசுதேவன் குமாரனாகவும், நரன் அருச்சுனனாகவும் ஆயினார். வீட்டுமன், துரோணன், கிருபன், அசுவத்தாமன், திருட்டத்தியும்நன், பாண்டவர்கள்என்னுமிவர்கள் கந்தனுடைய அமிசமெனக் கூறப்பட்டுப் பூபாரந்தொலைக்கும் முயற்சியை உடையவர்களானார்கள். இவர்களுடைய சரித்திரத்தைச் சுருக்கமாகவும் சாங்கமாகவும் கூறுகிறேன்.

௯. விசித்திரவீரியனுக்குத் தமையனாகிய வீட்டுமன் சத்திய பராக்கிரமமுடையவன். இவன் சாகனுடைய அமிசத்தோடு கூடிய பிரபாசவசு என்று சொல்லப்படுவான். வசிட்டனது சாபத்தால் பிரபாசவசுவின் மனைவியானவள் காசிராசன் மகளாகிய அம்பையாகப் பிறந்தாள். நீ மனைவியைத் துறக்க என்ற வசிட்டன் சாபத்தாலே வீட்டுமனோடு அவளுக்குப்பகையுண்டாயிற்று. ஆதலால் அவள் இவனை யுத்தத்திற் கொல்லுவேனென்று சிகண்டி ஆனாள். இவள் பாஞ்சாலன் புத்திரியாகப் பிறந்து பின்னர் இயக்கனுடைய அநுக்கிரகத்தால் ஆண்மகனானாள்.

௧௦. முற்காலத்திலே பிருகஸ்பதியின் மனைவிகாரணமாக அவனுக்கும் சந்திரனுக்கும் கொடுமையான யுத்தம் உண்டாயிற்று. அப்போது இந்திரன் முதலிய தேவர்கள் குருவைச் சார்ந்து நின்று சந்திரனோடு யுத்தம் செய்தார்கள். செவ்வாய், சுக்கிரன், சனி, இராகு என்பவர்களும், அசுரர்களும் விசுவதேவர்களும், அக்கினியும், அக்கினி புத்திரனாகிய ஆறுமுகனும், சந்

திரனைச் சார்ந்து நின்று குருபக்கத்தைச் சார்ந்தவரோடு பொருதார்கள். போரிலே பேரறிவுடைய அக்கினிபுத்திரன் குருவைக் கொல்லச் சென்றான். உரோகிணிமைந்தனாகிய சோமன் தேவர்களைக் கொல்லத் தலைப்பட்டான். அப்போது பிரமா அவர்களைத் தடுத்து நீங்கள் எனது வாய்மொழிப்படி பூமியிலே பிறந்து உங்கள் பகையை முடித்துக்கொள்ளுங்கள் என்று சமாதானப்படுத்தினான். பிரமாவின் கட்டளைப்படி அவர்கள் பாண்டு பாஞ்சால வமிசங்களிற் பிறந்தார்கள்.

கக. பிரமன், சாத்தா, நரன், உருத்திரன், தருமன் என்னும் இவர்கள் பாண்டு புத்திரர்களானார். அசுரேந்திரன் முதலிய அசுரர்கள் திருதராட்டிரனுக்குப் புத்திரராயினர். ஆயிரக்கவசன் என்னும் தைத்தியன் சூரியனது அமிசத்தோடு அவன் மகன் கர்ணனாய்த் தோன்றினான். இங்ஙனம் தேவர்களும் அசுரர்களும் ஆகிய அவரெல்லாம் பூமியில் தோன்றிப் புண்ணிய பாபங்களை வளர்ப்பவரானார்.

கஉ. பாண்டு புத்திரர்களெல்லாம் சத்தியமும் மரியாதையும் பொறியடக்கமுமுடையவர்கள். திருதராட்டிரன் புத்திரர்கள் மூடர்களாய்ப்பாபாசாரங்களைமுக்கியமாகக்கொண்டவர்கள். கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் அணுக முடியாத கொடிய போர் உண்டாயிற்று. அந்தப் போர்க்களத்திலே பாண்டு புத்திரர்களால் கௌரவர்கள் பதினொரு அக்குரோணி சேனைகளோடு கொல்லப்பட்டார்கள். பாண்டவர்களுடைய ஏழு அக்குரோணி சேனைகளும் தலைவர்களும் கௌரவர்களால் கொல்லப்பட்டார்கள்.

கங. அப்போது சம்புவினது கபாலமானது இரத்தத்தால் பூரணமாக நிரப்பப்பட்டது. பாண்டவர்கள் ராசசூயம் முதலான யாகங்களையும் மூன்று அசுவமேதங்களையுஞ் செய்து ஆநந்தத்துடன் கூடி நூறு வருடங்களிருந்து பின் மகாதேவரது கட்டளைப்படி தங்கள் தங்கள் இடங்களை அடைந்தார்கள்.

இருபத்திரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

இருபத்துமூன்ருவது
வச்சிரன்மகனுக்கு வரமளித்த அத்தியாயம்

சண்முகப்பெருமான் மேலும் கூறியருளுகின்ருர்:—

க. முனிவர்களே! பாண்டவர்களுக்குப் பின் அருச்சுன னுக்குப் பேரனுகிய பரீக்ஷித்து என்பவன் பகைவரஞ்சும் பராக்கிரம முடையவனுகி அத்தினுபுரியில் அரசுபுரிந்துவந்தான். கிருட்டினனுக்குப் பேரனுகிய வச்சிரன் என்பவன் அருச்சுனனுல் இந்திரப்பிரத்தத்தில் அரசனுகத் தாபிக்கப்பட்டான். அவன் அவ்விந்திரப்பிரத்த நகரிலிருந்து அதனைப் பரிபாலனஞ் செய்தான்.

உ. தக்ஷகனுகிய துட்டநாகத்தால் கடிக்கப்பட்டுப் பரீக்ஷித்து இறந்தான் என்பதைக் கேட்டுப் பகைவரஞ்சும் பெருவலியுடைய வச்சிரன் மிகவுங் கோபமுடையவனுகித் திப்பியமாகிய தனது தேரிலேறிக்கொண்டு பதாளலோகத்தை அடைந்து தக்ஷகனேடு யுத்தஞ்செய்து மிக்கவீரத்தோடு வருத்தமின்றி மாயூரம் காருடம் * நாகுலம் என்னும் பாணங்களைப் பிரயோகித்தான்.

ஈ. அந்தப்பாணங்களினின்றுந் தோன்றிய மயில்களும் கருடன்களும் கீரிகளும் அங்குள்ள நாகங்களையெல்லாம் உண்ணத்தொடங்கின. அதனைக்கண்ட தக்ஷகன் என்னும் நாகவேந்தன் தனது நஞ்சைக்கக்கி அம்மயில் முதலியவற்றை அப்போதே அழித்தான். யுத்தபண்டிதனுகிய வச்சிரன் மயூரி என்னும் அஸ்திரத்தைப் பிரயோகித்தான். அதைப்பார்த்துத் தக்ஷகன் தேவநாயகனுகிய இந்திரனைத் தியானித்தான். தேவர்க்கரசனுகிய இந்திரன் வந்து வச்சிரனைச் சமாதானஞ்செய்தான். தக்ஷகன் இந்திரனுடைய சொற்படி வச்சிரனைச் சரணமடைந்து தன் மகளை வச்சிரனுக்கு விவாகஞ்செய்து கொடுத்தான். வச்சிரன் அவளை அழைத்துக்கொண்டு தனது நகரத்தை அடைந்து மகிழ்ந்திருந்தான். பெருமையிற்சிறந்த அந்த வச்சிரனுக்கு அந்த நாககன்னிகையிடத்தில் வடிவழகுடைய ஒரு புத்திரன் பிறந்தான்.

---

* கீரியின சம்பந்தமுடையது.

ச. பரீக்ஷித்து மன்னனுடைய புதல்வனாகிய சனமேசயன் சிறுபாலனாக இருந்தமையால் வச்சிரன் அவனுடைய இராச்சியத்தையும் அன்போடு பரிபாலித்து வந்தான்.

ரு. சாலுவதேசாதிபதியாகிய ஒரு வீரராசன் அநேக அரசர்களுடன் கூடி அத்தினாபுரியை அடைந்து யுத்த பேரியை முழக்கினான். அப்போது வச்சிர ராசனுடைய ஆணையினாலெழுகும் மந்திரிகள் போர்புரியத் தொடங்கினார்கள். மிலேச்ச மார்க்கத்தவனாகிய சாலுவேசன் மந்திரிகளை வென்று அத்தினாபுரியைக் கைப்பற்றினான். அப்போது இந்நிகழ்ச்சியை வச்சிரன் கேள்வியுற்றுத் தன் சேனையுடன் அத்தினாபுரியை அடைந்து சாலுவராசனுடன் போர்புரிந்தான். அப்போது சாலுவராசனது உத்தரவுப்படி சீனத்தரசர் முதலிய ஐந்து யவனர்கள் வச்சிரனுடைய இந்திரப் பிரத்தத்தை அடைந்து தலைநகரத்துட் புகுந்து அந்த ராச்சியத்தைத் தம் வசப்படுத்திக்கொண்டு அவ்வச்சிரனுடைய மனைவியை வஞ்சித்து அவனுடைய இரண்டு வயதுள்ள குழந்தையைக் கபடமாக எடுத்துச் சென்று அதனைக் கத்தியால் இரு துண்டாக வெட்டி நகரின் புறத்தேயுள்ள பயங்கரமான ஒரு பெரிய கிணற்றில் வீழ்த்தி அத்தினாபுரியை அடைந்தார்கள்.

சு. இந்த நிகழ்ச்சிகளைத் தூதர்வாயிலாக வச்சிரனறிந்து கோபத்துடன் அம்மிலேச்சர்களையெல்லாம் திவ்வியாத்திரங்களால் கொன்று சாலுவராசனையும் பிணித்து அந்த இராச்சியங்களை எல்லாம் மந்திரிகளுக்குத் தானஞ் செய்தான்.

எ. புத்திரசோகத்தால் வாட்டமுற்ற அரசன் சனமேசயனைத் தன் புத்திரனாகப் பரிபாலித்து வந்தான். கர்க்க முனிவனுடைய சீடர்கள் கிணற்றில் வீழ்த்தப்பட்டிறந்து கிடந்த அக்குழந்தையைக் கண்டு எடுத்து மகிழ்ந்து தமது குருவாகிய கர்க்க முனிவன்பால் கொடுத்தார்கள். அந்த முனிவன் அக்குழந்தையின் வரலாற்றையறிந்து அதனை உயிர்ப்பித்துத் தனது பிள்ளையைப்போல் வளர்த்து வந்தான்.

அ. ஒரு காலத்தில் கர்க்க முனிவன் சில முனிவர்களோடு க்ஷேத்திரயாத்திரையின் பொருட்டுப் புறப்பட்டுத் திருநாரையூரை அடைந்து அங்கே மூன்று நாள் தங்கினான். பிதாவாகிய கர்க்க முனிவனால் பூசிக்கப்படும் விநாயகரைத் தரிசித்தும் விநா

யகப் பெருமானது சந்நிதியில் கணேச கணேச என்று இவ்வாறு முனிவர்களால் செபிக்கப்படும் கணேச நாமமந்திரத்தைக் கேட்டும் வச்சிரன்குமாரனாகிய விளையாட்டு விருப்புடைய நாகசுந்தரன் தானும் கணேச கணேச என்று பத்தியோடு செபிக்கத் தொடங்கினான். அச்சிறுவன் பூர்வ புண்ணிய விசேடத்தால் பசி தாக முதலியனவுமின்றிப் பத்தியோடு மகிழ்ந்து திடசித்தத்துடன் அதையே தியானித்துச்செபித்துக் கொண்டிருந்தான்.

கூ. ஒரு யாமவரையும் செய்த செபத்தினாலேயே திருவுளமகிழ்ந்த கணநாயகர் அக்குழந்தைக்கு முன்பாக வெளிப்பட்டு அவனை எடுத்தருளி அன்போடு தழுவி ஓ குழந்தாய்! கிருட்டினனுக்குப் பேரன்மகனே! உனக்குப் பதினெட்டு வித்தைகளும், அட்டலக்குமிகளும், மகாபாக்கியங்கள் பதினெட்டும் எம்மால் அளிக்கப்பட்டன என்று கூறியருளினார்,

கO. இவ்விதம் விநாயகப் பெருமான் அக்குழந்தைக்கு அநுக்கிரகஞ் செய்து மறைந்தருளினார். அந்தப் பாலகன் ஞானச் செல்வனாகி முனிவன்பால் அடைந்தான். விநாயகப் பெருமானால் குழந்தைக்குத் தரப்பட்ட வரதானத்தைக் கர்க்க முனிவன் அறிந்து அக்குழந்தையைத் தழுவி மகிழ்வுற்றான்.

கக. வச்சிரராசன் புதல்வனாகிய அச்சிறுவன் வில்வித்தை முதலியவைகளில் தானாகவே பயின்று வல்லமைபெற்றான். கணேசப்பெருமானது உண்மைநிலையை உணர்ந்த கர்க்கமுனிவன் மறுபடியும் தனதாச்சிரமத்தை அடைந்து வச்சிர புத்திரனாகிய நாகசுந்தரனை அருளோடு பார்த்து ஓ குழந்தாய்! நாகசுந்தரனே! நீ இந்திரப்பிரஸ்த நகரையாளும் அரசனாகிய வச்சிரனுடைய புதல்வன்; அதமர்களாகிய மிலேச்சர்களால் நீ கொல்லப்பட்டுக் கிணற்றிலே வீழ்த்தப்பட்டாய். பின் என் சீடர்களால் என்னிடம் கொண்டு வரப்பட்டனை. உன் பாட்டனுக்குத் தந்தையாகிய விட்டுணுவின் தியானத்தால் நீ உயிர்ப்பிக்கப்பட்டாய். கணநாதருடைய திருவருளால் வித்தைகள் முதலியன எல்லாம் நீ பெற்றுக்கொண்டனை. இனி நீ உன் பிதா மாதாக்களையடைந்து உன் விளையாடல்களால் அவர்களை மகிழ்விப்பாயாக என்று சொல்லிப் பிள்ளையைக் கொண்டுபோய் வச்சிரராசன் கையில் ஒப்புவித்து நிகழ்ந்த செய்தியெல்லாவற்றையும் அவ்வரசனுக்குக் கூறி அவன்

பால் விடைபெற்றுக்கொண்டு சிவயோகியாகிய கர்க்க முனிவன் தனது சிறந்த ஆச்சிரமத்தை அடைந்தான்.

கஉ. இறந்துபோன தன் புத்திரனைப் பெற்று மிக்க மகிழ்ச்சியுற்ற வச்சிரன் திருமாலைத் தியானித்துக்கொண்டு தனது இராச்சியத்தைத் தருமநெறியால் பரிபாலித்து வந்தான். புத்திமானாகிய பரீக்ஷித்தின் புதல்வனும் வச்சிரனால் அபிமானிக்கப்பட்டு வளர்ந்து தன் இராச்சியத்தில் அவனால் அபிஷேகஞ்செய்ய பெற்றுப் பூமியைப் பரிபாலனஞ் செய்தான்.

கங. வச்சிரனுடைய புத்திரனாகிய நாகசுந்தரனும் தன் இராச்சியத்தில் அபிடேகஞ் செய்யப் பெற்றுத் திக்குவிசயத்தை வியாசமாகக்கொண்டு மிலேச்ச அரசர்களையெல்லாம் அழித்து அவர்கள்பால் வெறுப்புடையனாகி அவ்வத் தேசங்களினின்றும் அவர்களைத் துரத்தி அவர்களுடைய இராச்சியங்களை எல்லாம் வேடர்களுக்கு மகிழ்ச்சியோடு கொடுத்தான். மிலேச்ச மார்க்கங்கள் வேருடன் களையப்பட்டன. கீர்த்திபெற்ற தௌமியனுடைய சீடன் நான்கு வருணக்கலப்பினாலுண்டான சாதிகளுக்குக் கூறப்பட்ட சமயங்களை அந்த மிலேச்ச தேசங்களிலே தாபனஞ் செய்தான்.

கச. அறத்துறையிற் கைதேர்ந்த அவ்வரசன் மிலேச்சர்களையெல்லாம் தாழ்வாகிய விருத்தியில் ஏவினான். ஓ முனிவர்களே! எவ்வெத் தேசங்களில் எவர்களுடைய க்ஷேத்திரங்களுண்டோ அவ்வவ்விடங்களில் அவர்களுடைய மதங்களைத் தாபித்தான். ஒரு தேவதை பிரதானமாகிய ஊரில் தனியாக அவ்வொரு மதத்தையும், இரண்டு தேவாலயத்துடன் கூடிய ஊரில் அவ்விருதிறத்தாருடைய மதங்களையும், பஞ்சாயதக க்ஷேத்திரங்களில் அவ்வைந்துதிறத்தாருடைய மதங்களையும் ஸ்தாபித்து வச்சிரமன்னன் சகமேசயனுடன் கூடிப் பூமி பரிபாலனஞ் செய்து வந்தான். அதன் பின் நூறு வருடங்களின் முடிவில் தன்னிராச்சியத்தைத் தன் புத்திரனிடத்தே வைத்துவிட்டுத்தான் மீண்டும் பிறவியில் வாராத ஆனந்த பதவியை அடைந்தான்.

கரு. இவ்வாறு பரமான்மாவாகிய கணேசப்பெருமான்வச்சிராசன் குமாரனுக்கு அருள் செய்த இந்தத் திவ்விய சரிதத்தை எவன் அன்போடு படிக்கின்றானோ அவன் எல்லாச் செல்வங்களையும் பெற்றுப் பேரானந்த பதவியையும் அடைவான்.

இருபத்துமூன்றுவது அத்தியாயம் முற்றிற்று.

இருபத்து நான்காவது
அசுவத்தாமாவுக்கருள்புரிந்த அத்தியாயம்.

க. சண்முகப் பெருமான் முனிவர்கட்கு மேலுங் கூறுகின்றார்:—

ஒருபோது மந்திரிகளாற் சூழப்பெற்றுச்சுகமாக வீற்றிருக்கின்றவனும், மகாவீரனும், தனக்கு நண்பனும், அரசருட்சிறந்தவனுமாகிய வச்சிரன்மகனை அருச்சுனனுக்குப் பேரன்மகனாகிய சனமேசயன் அன்போடு நோக்கி ஓ நண்பனே! கர்க்க முனிவரது ஆச்சிரமத்தில் குழந்தையாயிருந்த உனக்கு எப்படிக் கணேசரிடத்திலே பத்தி உண்டாயிற்று? அதை அன்போடு கூறவேண்டுமென்று கேட்டான். அதனைக் கேட்ட நாகசுந்தரன் கூறுகின்றான்.

உ. ஒருகாலத்தில் கர்க்கமுனிவர் என்னோடும் தனது மனைவியோடும் சீடர்களோடும் திருநாரையூர் என்னும் கீர்த்தி பெற்ற சிறந்த க்ஷேத்திரத்தை அடைந்தார். அங்கே சுவாமி சந்நிதியிலே தியானத்திலிருந்த தபோநிதியாகிய கர்க்கமுனிவரை நோக்கி அவருடைய சீடர்கள் கேட்பாராயினர். எங்கள் குருநாதனே! இந்தத் துவாபரயுகத்திலே இந்தத் தலத்தில் இவ் விக்கினேசுரரையும், சிவலிங்கப் பெருமானையும் பூசை செய்து விரும்பிய வரங்களைப் பெற்றவர்கள் யாவர்? அவர்களுடைய சரிதையை எங்களுக்குக் கூறவேண்டுமென்று பிரார்த்திக்க முனிவர் கூறுகின்றார்.

ந. இத்திருநாரையூரில் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானும் சிவபெருமானும் செய்த திருவிளையாடல்களை உங்களுக்குக் கூறுவேன் கேளுங்கள்: பரத்துவாசனுக்கு மகனாகிய புகழ்பெற்ற துரோணனென்பவன் சாலிகோத்திரன் என்னும் மாமுனிவனிடத்திலே சகல வித்தைகளையும் பயின்றான். அப்படியே பிருகுவின் மகனாகிய இராமமுனிவன்பால் வில்வித்தையைப் பெற்றுக்கொண்டான். அவ்வேதியன் விதிப்படி கிருபனுடைய தங்கையாகிய கிருபியை விவாகஞ்செய்து இல்லற தரு

மத்தைமேற்கொண்டு வனங்களில் வசித்துவரும் காலத்திலே க்ஷேத்திரயாத்திரையை முக்கியமாகக்கொண்ட அவன் திருநாரையூரை அடைந்து அங்கேயிருந்து அன்போடுகூடிய இலக்ஷக்கணக்கான நமஸ்காரங்களாலும் ஆருணநமகங்களாலும் மகாதேவரைத் திருவுள மகிழ்வித்தான்.

ச. அதனாற் பிரீதியடைந்த திருநாரையூர்ப் பிரபுநாயகர் இலிங்கமத்தியினின்றும் சோமாஸ்கந்த வடிவமாகக் கணங்களோடுந் தோன்றியருளினர். துரோணன் மகாதேவரை நமஸ்கரித்து அதர்வமந்திரங்களாற்றுதித்தான். பார்வதிசமேதராகிய பெருமான் துரோணா! உனக்கு வேண்டிய வரங்களைக் கேள், அவற்றைத் தருவோம். இதில் ஐயமில்லை என்றுதிருவாய்மலர்ந்தருள, துரோணன் அன்போடு வணங்கி அஞ்சலி செய்துகொண்டு நின்று எம்பெருமானே! அடியேனுக்கு உமது திருவடிக்கீழ் உறுதியாம்அன்பும், குறைவிலா வாழ்வும், தேவரீரிடத்தில் அன்புள்ள ஒரு புத்திரனும் தந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்கப் பரமேசுவரர் திருவாய்மலர்ந்தருளுகின்றார்.

ரு. கந்தனுடைய தேகத்தினின்றும் உண்டானவர்கள் ஆறு குமாரர்கள் மகாபலமுடையவர்கள். அவர்கள் முசுகுந்தன் காரணமாக முற்காலத்தில் கந்தனால் சபிக்கப்பட்டனர். இவர்களுள் சாகன் என்பவன் வசுவின் அமிசத்தோடு கூடிச் சந்தநுவின்புத்திரனானன்.நிகமன் என்பவன் சரக்கூட்டிதிலுதித்துக்கிருபன் எனக்கூறப்பட்டான். குருவமிசங் கலந்து துரோணத்திற் பிறந்து துரோணனெனப்படும் நீ விசாகன் என்பவன் ஆவை. பாவகி என்பவன் துருபதன் பிள்ளையாய்ப் பூமியில் சேனாபதியாக இருக்கிறான். கந்தன் நானுடைய அமிசங் கலந்து தேவேந்திரனுக்குப் புத்திரனாய்க் குந்தியிடத்துத் தோன்றினான். எமது கட்டளைப்படி அவன் உனக்கு உத்தம சீடனாவான். சுசாகன் வீரருத்திராமிசங் கலந்து உனக்குப் புத்திரன் ஆவான். சந்தேகமில்லை. உன் வாழ்க்கையின்பொருட்டு இந்த மணியைப் பெற்றுக்கொள். இது சிவரத்தினம். இதைத் தினமும் பூசை செய். இது அநேக இரத்தினங்களைத் தரும். சந்தேகமில்லை. என்றைக்கு இந்த இரத்தினம் உன்னால் பூசிக்கப்படவில்லையோ அன்றைக்கே இஃது உன்னை விட்டு நீங்கும். நீ வறுமையையும் அடைவாய்.

௬. ஒ துரோணனே! கந்தனுடைய அமிசமாய்த்தோன்றிய பாண்டு புத்திரனாகிய சிறந்த பார்த்தனை நீ எப்போது காண்பையோ அப்போதே மீண்டும் சம்பத்துக்களை அடைவாய். நீ அரசர்களால் பூசிக்கத் தக்கவனாகவும் அரசர்களுக்குக் குருவுமாவாய். இஃது உண்மை. இதில் ஐயமில்லை. உன்னிடத்தினுள்ள விசாகாமிசம் உன்னிடத்தினின்றும் யோகமார்க்கத்தால் பிரமலோகத்தை அடைந்து மீளக் கந்தலோகமெய்தும், விசாகாமிசம் நீங்கியபின் குருவினமிசம் போர்க்களத்திலே துருபத புத்திரனால் கொல்லப்பட்டு விண்ணுலகை எய்தும். உனக்கு ஒரு முனிவனது சாபங் காரணமாகப் புத்திரசோகத்தால் மரணமுண்டாம். எம்மிடத்தில் பத்தி உனக்குத் திடமாக உண்டாகுக. நீ முத்தியை அடைவாய் என்று திருவாய் மலர்ந்தருளிப் பரமசிவன் .இலிங்கத்தினுள்ளே மறைந்தருளினர்.

௭. துரோணன் மனைவியோடுகூடக்காசியிலே சிவரத்திநத்தின் வைபவத்தால் அநேக பிராமணர்களுக்கு அன்னமளித்துக் கொண்டு இருந்து யௌவனத்தின் முடிவில் அழகிய ஒரு பிள்ளையைப் பெற்றான். பிராமணர்கள் கூறியபடி அக்குழந்தைக்கு அசுவத்தாமா என்று பெயர்வைத்து மனைவியோடுகூட வளர்த்து வந்தான்.

அ புத்திமான்களிற் சிறந்த துரோணன் தன் குழந்தையோடு விளையாடும் விருப்பமுடையவனாய்ச்சிவரத்தினத்தை மறந்து வெளியே வைத்துப் பூசையறைக் கதவை அடைத்தான். அக்குழந்தை சிவரத்தினத்தைப் பார்த்து அதை எடுத்து விழுங்கி விட்டது. நாகத்தின் சிரசிற்றோன்றிய நாகரத்தினம் அக்குழந்தையின் சிரசை அடைந்தது. துரோணன் மணியைக் கைவிட்டமையால் மிக்க வறுமையை அடைந்து அத்தினபுரி நகரத்தை அடைந்து விட்டுமனால் உபசரிக்கப்பட்டு மகிழ்ச்சியோடும் அங்கேயிருந்து கௌரவர் பாண்டவர் முதலியவர்களுக்கு வில்வித்தைகளைக் கற்பித்தான். கும்பத்திற் பிறந்த அத்துரோணன் விட்டுமனாற்றரப்பட்ட நூறு கிராமங்களையும் அருச்சுனனாற்றரப்பட்ட பாஞ்சால தேசத்திற் பாதியையும் அநுபவித்து வந்தான்.

௯. துரோணனுடைய பிரியமான மாணவகன் பாண்டு மைந்தனாகிய அருச்சுனன், அசுவத்தாமாவைக் காட்டிலும் இவனை பிரீதிக்குப் பாத்திரமாயிருந்தான். அசுவத்தாமாவும் பார்த்தனும் தோழர்களாயிருந்தார்கள். அத்திரசத்திரங்களி லும் எளிமையிலும் அவ்விருவரும் சமமாக இருந்தார்கள். வீரி யத்திலும் நூலறிவிலும் மதிநுட்பத்திலும் நற்குணத்திலும் குருபத்தியிலும் வெற்றியோடு கூடிய அருச்சுனன் அசுவத்தா மாவைக் காட்டிலும் எப்போதும் மேலானவனாக விளங்கினான்.

௧௦. பாண்டவர்கள் காட்டுக்குப்போயிருக்குங்காலங்களில் ஒரு நாள் அசுவத்தாமா துரியோதனனாற் பயமுறுத்தப்பட்டுக் காட்டிற் போயிருந்தான். அவன் காட்டில் திரிந்துகொண்டிருக் கும்போது ஒருநாள் திருநாரையூரை அடைந்து அங்கேயுள்ள சிவபெருமானைப் பாசுபத யாகத்தால் மகிழ்வுறுத்தினான். அந்த யாகத்தால் திருவுளமகிழ்ந்த திருநாரையூர்ப் பெருமான் தமது கணங்களோடு அக்கினி குண்டத்தினின்றும் வெளிப்பட்டருளி னார். அப்போது அசுவத்தாமா பரமசிவனை அன்போடு வணங் கிப் பிரார்த்திக்கின்றான்.

௧௧. எம்பெருமானே! பாண்டவர்கள் எனக்குத் தோழர் கள். அவருள்ளும் அருச்சுனன் எனக்குப் பிராண சகாயன். துரியோதனன் பேராசனாயினும் தீய சிந்தையுடையவனாய்ப் பாபச் செய்கையிற் பற்று மிக்கவன். அவன் பாண்டவர்களைச் சூதிலே வென்று நாட்டினின்றும் வெளியேற்றினான். அதனாற் கோபமுற்ற பாண்டவர்கள் கௌரவர்களைக் கொல்வோமென்று பிரதிக்ஞை செய்தார்கள். அதனாற் பயங்கொண்ட மூர்க்கனாகிய துரியோதனன் உணர்வுடையனாகி, வீட்டுமனையும் என் தந்தையா கிய துரோணனையும் சரணமடைந்தான். அவனுக்கு அவ்விருவரும் அபயமளித்தனர். அப்போது நான் கோபத்தாற் கண் சிவந்து தந்தையைப் பார்த்து ஒ அந்தணருட் சிறந்த எந்தையே! முன் னே வீட்டுமனால் சீவனத்திற்காக உனக்கு நூறு கிராமங்கள் தரப்பட்டன. துரியோதனனுடைய பாதிப்பங்கில் அந்தக்கிராமங் கள் இருக்கின்றன. ஆதலால் துரியோதனனுக்கு நீ சகாயஞ் செய்யவேண்டும். பதினைபிரங்கிராமங்களுடன் கூடியது துருபத னுடைய பாதிராச்சியம். அஃது அருச்சுனனால் உனக்குத் தரப்பட்டது. ஆதலால் நூறுமடங்கு உதவி அருச்சுனனுக்குச்

செய்யவேண்டும் ஆதலால் யோகியர்களுடைய நீ இருவருக்கும் சமாதானத்தை உண்டுபண்ணுக. அல்லது இருவருக்கும் உதவி செய்யாது விடுக என்று சொன்னேன்.

கஉ. அது கேட்ட தந்தை என்னை நோக்கி மைந்தனே! உன்னாற் கூறப்பட்டது உண்மையே. அதில் சந்தேகமில்லை. ஆயினும் அடைக்கலம் புகுந்தவரை எப்போதும் காத்தல்வேண்டுமென்பது சாத்திரங்களில் அறியப்பட்டது. துரியோதனன் அருச்சுனனுக்குப் பயந்து என்னைச் சரணமடைந்தான். ஆதலால் என்னாலும் உன்னாலும் இயன்ற உதவி அவனுக்குச் செய்ய வேண்டுமென்று கூறினன். அதனைக் கேட்ட யான் பாண்டவர்களோடு நான் போர் புரியேன் என்று தந்தைக்குக் கூறினேன்.

கங. நான் கூறியதையெல்லாம் திருதராட்டிரனுடைய குருவாகிய கால முனி என்பவன் கேட்டு என்னைப் பார்த்து ஓ துரோண மைந்தனாகிய அதமனே! நீ பாண்டவர்பாற் பிரியுடையை. நீ என் சாபத்தால் பாண்டவரிடத்து வெறுப்படையக் கடவாய். பாண்டவர்களை வெல்ல முடியாதவனுமாவாய். ஓ பிராமண அதமனே! நீ பாண்டவ புத்திரர்கள் துயிலும்போது அவர்களைக் கொன்று மகாபாபத்தையுமடையக்கடவாய். பார்த்தனிடத்துப் பிரியுடைய நீ பார்த்தனாலேயே கொல்லவும் படுக என்று இவ்வாறு யோகியாகிய அவன் என்னைச்சபித்தான். அப்போது நானும் கோபித்து ஓ காலமுனியே! தீய சிந்தையுடையோய்! நீ துரியோதனன்பால் விருப்பமுடையை. அவனுக்கு இதமானதை விரும்புகிற நீ அத்துரியோதனன் செய்கைபோன்ற செய்கையால் மரணத்தை அடைவாய் என்று சபித்து அப்போது துரியோதனனால் பயமுறுத்தப்பட்டேன். பரமேசனே! அடியேனுடைய சாபநீக்கம் பெறும்பொருட்டுத் தேவரீரைச் சரணமடைந்தேன். என்னிடத்தில் மிக்க அன்புகொண்ட என் தந்தை எனது பிரிவால் இறந்துபடுவான். ஆதலால் கருணைக் கடலாகிய பெருமானே எனக்குச் சிரஞ்சீவித் தன்மை அளிக்கவேண்டும். ஏனைய வரங்களையும் பொருத்தியவாறு தந்தருள வேண்டும். என்னுடைய தியானத்தினாலேயே எப்பொழுதும் அடியேனுக்கு எதிர் தோன்றியருளல் வேண்டும் என்று பிரார்த்தித்தான்.

கச. இவ்வாறு அசுவத்தாமா செய்த பிரார்த்தனையைக் கேட்டுத் திருநாரையூர் மகேசர் அருளிச் செய்வாராயினர். ஓ அசுவத்தாமாவே! நீ சுசாகனது அமிசத்தாற்றோன்றியவன் ஆதலால் சண்முகனது கிங்கரன். எனது கிங்கரன் வீரருத்திரன் என்பவன் கச்சியபனது சீடனாயிருந்தான். இந்திரன் முன்னொரு காலத்தில் திதி என்பவளின் கருப்பத்தை அழித்தான். அப்போது கச்சியப யோகியின் சீடன் இந்திரனைப் பழித்தல் செய்தான். அதனாற் கோபமுற்ற இந்திரன் அடுத்த பிறவியிலே இந்த மருத்துக்கள் எழுவரையும் நித்திரைசெய்யும்போது கொல்வாயாக. அதனால் நீ பூமியிலே பழிக்கத் தகும் பிறப்பையும் அடைக என்று வீரருத்திரனைச் சபித்தான். அப்போது இச்சாபத்தைக் கேட்ட விசுவேதேவர்கள் கோபமுற்று ஏ இந்திரனே! தீய செய்கையையுடைய நீ பிரமகத்தியை அடைக என்று சபித்தனர். இந்திரன் கணங்களோடு கூடிய விசுவதேவர்களை நோக்கி நீங்கள் ஐவரும் எனது ஆணையால் பூமியிற் பிறந்து இம்முனி சீடனால் நித்திரையால் மரணத்தை அடைக என்று சபித்து இந்திரன் தன் சுவர்க்கலோகத்தை யடைந்தான்.

கரு. அந்த எழு மருத்துக்களும் பூமியில் பாஞ்சால புத்திரர்களாய்ப் பிறந்தார்கள். அவர்களுள் மிக்க வலியுடையவனாகிய திருட்டத்தியும்நன் கந்தனுடைய அமிசத்தோடு கூடினவன். விசுவதேவர்களனைவரும் பாண்டவபுத்திரர்களாகி உபபாண்டவர்கள் எனப் பெயர் பெற்றனர். விசுவேதேவர்களுடைய கணங்கள் பிரபத்திரகர் என்னும் அரசர்களானார்கள். அடைக்கலம் புகுந்தவனைக் காப்பது காரணமாக நீ துரியோதனனைச் சாரக்கடவாய். அரசரது தொழிலை மேற்கொண்டு நீ பாண்டவர்களோடு போர் செய்வாய். பாண்டு புத்திரர்கள் போரிலே உன்னாற் கொல்லப்படமாட்டார்கள். யுத்தத்திலே மூன்றுநாள் மாத்திரம் நீ பாண்டவர்களுக்குப் பகைவனாவாய். உன் பிதாவைக் கொலை செய்த கோபத்தால் பாண்டவர்களைக் கொல்லவேண்டும் என்று போரிலே திவ்வியபாணக்கூட்டத்தை விடுவாய். அதனை அருச்சுனன் மாற்றுவான். துரியோதனனை வதைத்தது காரணமாகக் கோபமுற்ற நீ பாசறையிலிருக்கும் உபபாண்டவர்களைக் கொல்லும்படி அப்பாசறையை விரைவாகவே அடைவாய். அங்கே அருச்சுனனால் நிறுவப்பட்ட பூதகிங்கரனுக்குப் பயந்து நீ

எம்மை நினைக்கும்போது உன்னை வீருருத்திரன் ஆவேசித்து நின்று இந்திரனுடைய சாபத்தால் பாசறையில் நித்திரைசெய்த உபபாண்டவர்கள் ஐவரையும் கொல்வான். அருச்சுனன் உனது சிரோரத்தினத்தைக் கவர்வான். வீருருத்திரன் கலியோடு கூட உனது தேகத்தினின்றும் நீங்குவான். அப்போது நீ துயின்றவரைக்கொன்ற தோடத்தால் பச்சாத்தாபம் எய்தி இத் திருநாரையூரை அடைந்து எம்மைப் பூசை செய்து அப்பழியி னின்றும் நீங்குவாய். போரிலே உன்னைக் காப்பதன்பொருட்டு உனக்குச் சிரஞ்சிவித் தன்மையளிக்கப்பட்டது. அருச்சுனன் உன்னைக் கொல்ல நினைத்தால் அப்போது உனக்கும் மரணமுண் டாம். வேறு வழியால் மரணமில்லை. எமது வரதானத்தால் மீளவும் உயிர் பெறுவாய் என்று திருவாய்மலர்ந்தருளி வேறு பல வரங்களையும் அசுவத்தாமாவுக்குக் கொடுத்தருளிப் பார்வதி நாயகர் கணங்களோடும் விரைவாக மறைந்தருளினர்.

கசு. அசுவத்தாமா வரங்களைப் பெற்றுக்கொண்டு தந்தை யின் சமீபத்தை அடைந்து மகேசரிடம் வரம்பெற்றதைக் கூறி னன். இச்செய்தியைத்துரியோதனன் கேட்டு விசேட தனங்களா லும் மிக இனியமொழிகளாலும் அன்போடு அசுவத்தாமாவைப் பூசித்தான். பாரதப்போரின் பின் கலியோடுகூடிய வீருருத்தி ராமிசம் தன்னுட் கலக்கப்பெற்ற அசுவத்தாமா பாசறைகளி லே நித்திரை செய்துகொண்டிருந்த திருட்டத்தியும்நன் முதலி யவர்களைக் கொன்றான். காலத்தாற்றூண்டப்பட்டவனுப் பிர பத்திரகர் என்னும் அரசர்களையும் உபபாண்டவர்களையுங்கொன் றான். பிறகு சாபத்தாற் பிடிக்கப்பட்டுத் தனது இரத்தினத் தையும் அருச்சுனனுக்குக் கொடுத்துத் துயின்றோரைக்கொன்ற பாபத்தை நீக்குதற்பொருட்டுத் திருநாரையூரை அடைந்து அங்கேயுள்ள நாகதீர்த்தத்தில் ஒரு மண்டலம் அன்போடு ஸ்நா நானஞ் செய்தான். அந்தத் தீர்த்த ஸ்நானமகிமையால் தனது தோடம் நீங்கப்பெற்றுப் பரமசிவனது திருவாயால் சிவாகமங் கள் முழுவதும் உபதேசிக்கப் பெற்றுப் பின் சிவயோகம் பயின் றிருந்து சிவயோக நிலையும் கைவரப்பெற்றுச் சிவபெருமானது பிரசாதத்தால் சாவர்ணிய மநுவின் காலத்திலே வியாசராந்தன் மையையும் அடைந்தான்.

கஎ. இங்ஙனம் திருநாரையூரில் எழுந்தருளியிருக்கும் சிவ பெருமானது திருவருளினாலே அசுவத்தாமா துயின்றோரைக் கொன்ற தோட நீக்கத்தையும் சிரஞ்சீவித்தன்மையையும், வியா சராந்தன்மையையும் யோகிராசர் தன்மையையும் சிவஞானத்தை யும் அடைந்தான், இங்ஙனம் விரைவிலே சித்தியைத் தருபவர் திருநாரையூரிலெழுந்தருளியிருக்கும் சிவபெருமானே என்ப தும் எல்லாத் தலங்களிலுஞ் சிறந்த தலம் இத்திருநாரையூரே என்பதும் உங்களுக்கு விரித்துக் கூறப்பட்டன என்று கர்க்க முனிவர் சீடர்களாகிய முனிவர்கட்குக் கூறினார்.

இருபத்து நான்காம் அத்தியாயம் முற்றிற்று.

இருபத்தைந்தாவது
பாண்டுமைந்தர் அருள்பெற்ற அத்தியாயம்.

க. திருநரையூர்ப் பெருமானாகிய சம்புவின் பெருமை எங்களால் கேட்கப்பட்டது. அந்தத் தலத்திலெழுந்தருளியி ருக்கும் பொல்லாப் பிள்ளையாரது வைபவத்தையும் எங்களுக்குச் சொல்லவேண்டுமென்று சீடர்கள் கேட்பக் கர்க்க முனிவர் கூறு கின்றார். பாண்டவர்கள் இராச்சியத்தை இழந்து காமியக வநத் தில் வசித்தனர். பாஞ்சாலர்கள் யாதவர்கள் சோழர்கள் முத லியவர்கள் பாண்டவர்களைக் காணவந்தனர். வந்தவர்கள் அவர்க ளாற் பூசிக்கப்பெற்று அங்கே மூன்றுநாள் வசித்தார்கள்.

உ. திருட்டத்தியும்நன் வாசுதேவனை நோக்கி உலகுக்கு இறைவனாகிய கண்ணனே! பாண்டவர்கள் வீரருள்ளே மேலான வர்கள். உனது பத்தர்கள். இராசசூய யாகத்தால் உன்னை மகிழ் வித்தவர்கள். யாகத்தில் முனிவர்கள் நன்கு பூசிக்கப்பெற்றனர். அரசர்கள் முதலானோர் கொண்டாடப் பெற்றார்கள். அப்படிப் பட்ட பாண்டவர்கள் எல்லாரும் இராச்சியத்தினின்று நீங்கி வனத்தை அடைந்தார்கள். யாகத்தால் உண்டாகியது பெரும் புண்ணியம். அது எப்படி வீணாகும். பெரியோர்களுடைய ஆசி மொழிகள் எப்படி வீணாகும். ஓ வாசுதேவனே! அன்பனாகிய

என்னிடத்துக் கிருபையோடு அதனைக் கூறவேண்டும் என்று வணக்கத்துடன் கேட்க வாசுதேவன் திருட்டத்தியும்நனைப் பார்த்துக் கூறுவான்.

௩. மகாவீரனே! உன்னால் நன்கு வினவப்பட்டது. அது மனசுக்கும் விருப்பந்தருவது. எல்லா யாகங்களையும் செய்கின்ற சிறந்த பத்தர்களால் செய்யப்படும் யாகத்தின் ஆரம்பத்தில் பலசித்தியின்பொருட்டு விநாயகரை மகிழ்வுறுத்தும் கணபதியாகம் விதிப்படி செய்யத்தக்கது. அந்தக் கணபதி யஞ்ஞம் செய்யப்படுமேயானால் மேற் செய்யப்படும் யாகமானது இடையூறின்றி முடிந்து தன் பலனையுந்தரும். கணபதி யஞ்ஞம் செய்யாவிட்டாலும் விக்கின சாந்திக்காகக் கணபதிபூசையை முதலில் செய்து இட்டமான யாகத்தை விதிப்படி செய்தால் அந்த யாகம் இடையூறின்றி முடிந்து தன் பயனை நிச்சயமாக அளிக்கும் அப்படிக்கணபதி யஞ்ஞமும் கணபதிபூசையும் செய்யாமல் இட்ட யாகம் செய்யப்படுமேயானால் அது பூரணமடைவதில்லை.

௪. முன்னே பாண்டவர்களால் இந்தக் கணபதி யஞ்ஞத்தைவிட்டு இராசசூய மகாயாகமானது விதிபூர்வமாகச் செய்யப்பட்டது. அந்த இராசசூயமும் இடையூறின்றி முடிவடைந்தது. முடிவடைந்தும் பாண்டவர்கள் சாத்திரங்களிற் காணப்பட்ட யாக பல சித்தியை அடையவில்லை. பாண்டுவானவன் முன் கண யஞ்ஞம் செய்ததனால் யஞ்ஞ பலசித்தியை அடைந்தான். பாண்டவர்கள் யாக ஆடம்பரத்தினால் வாரணாவதத்திலே எழுந்தருளி இருக்கும் தங்கள் குல தேவதையாகிய விநாயகப் பெருமானுக்கு உற்சவத்தைச் செய்திலர். அதனால் அக்காலத்தில் கணபதி கிங்கரனாகிய விக்கினமென்னும் காலபுருடன் கோபமுற்று மயூரியோடுகூடிப்பாண்டவர்களை இவ்விதஞ்செய்தானென்று கூறினான்.

௫. பாண்டவர்களும் கிருட்டினனுடைய வார்த்தையை உண்மையாக அங்கீகரித்தனர். அப்போது தருமபுத்திரன் வாசுதேவனை வணங்கி ஓ கருணாகரனே! மிகத் துன்பமாகிய வனவாசத்தை விட்டு இராச்சியத்தை அடையும்பொருட்டு ஓர் உபாயத்தைக் கருணையோடு எனக்குக்கூறுக என்றுகேட்கக் கண்ணபிரான் கூறுவானாயினன்.

௬. ஓ தருமபுத்திரனே! கேட்பாயாக; கணபதி விரதங்களுக்குள்ளே சங்கடகாணம் எனச் சிறந்த விரதம் ஒன்றுண்டு,

நீங்கள் மாசிமாசம் தொடங்கி அதனை ஒரு வருடம் அநுட்டிக்க வேண்டும். அப்போது கணநாதர் பிரசன்னராய் வேண்டிய வரங்களையெல்லாம் தருவார். கிருட்டினபக்க சதுர்த்தசியின் இரவில் விக்கின விநாயகரைக் கணேசபூசாவிதிப்படி நியமத்தோடு பூசித்துச் சந்திரனுக்கு அருக்கியங்கொடுத்துப் பிராமணர்களை உண்பித்து அவருடைய இருபத்தாறு திருநாமங்களைச் செபித்து ஒருவருக்குங்கிட்டாத அவ்விநாயகருடைய பிரசாதத்தை அடைந்து வீட்டுமன், துரோணன், கர்ணன் முதலியவர்களைப் போரில் வெல்லும் வன்மையை யான் கூறியபடி நீங்கள் அடைவீர்கள். இஃது உண்மை, சந்தேகமில்லை என்று கண்ணபிரான் கூறினன்.

எ. அதனைக்கேட்ட தருமபுத்திரன் ஞானிகளிற் சிறந்த கண்ணனே! சித்திபுத்தி சமேதராகிய விநாயகருடைய விரைவிற்சித்தியைத்தரும் இருபத்தாறு திருநாமங்களையும் எனக்குக் கூறுக என்று கேட்பக் கண்ணன் கூறுவானுனன்:—

1. கணேச்வரன், மகாசித்தி, மகாபுத்தி
2. கஜாநநன், மகாலக்ஷ்மி, மகாவாணி
3. விக்கினராசன், ரமா, மதி
4. விநாயகன், சித்திலக்ஷ்மி, பாரதி
5. கணநாயகன், கமலா, சாரதா
6. கௌரீபுத்ரன், சித்தி, சரச்வதி
7. ஏரம்பன், வல்லபை, வாணீ
8. ப்ரஹ்மணும் ப்ரஹ்மணஸ்பதி, லக்ஷ்மி, புத்தி
9. சம்புசுதன், வந்தியா, ஸ்ரீ
10. பிரஹ்மணஸ்பதி, பிரகிருதி, விகிர்தி
11. பிரஹ்மம், விஷ்ணுஜா, பிரஹ்மநந்தினீ
12. த்வைமாதுரன், பஞ்சதேவஜநநீ, வேதரூபிணீ
13. லம்போதரன், கிரியாசத்தி, ஞானசத்தி
14. திரிலோசனன், அஜா, வாகீச்வரீ
15. சத்தியன், யோகினீ, ஞானரூபிணீ
16. கணஞ்சயன், ப்ரஹ்மபாவசித்தி, நிர்க்குணசம்ச்ரயா
17. சத்ப்ரஹ்மம், மூலப்ரகிருதி, மகாவாகீச்வரீ
18. கஜன், புஷ்டி, துஷ்டி

19. வக்கிரதுண்டன், முக்திதா. ஞானதாயினீ
20. விகடன், சுந்தரீ, மேதா
21. நிர்க்குணன், சர்வசித்திதா, நிருபாதிமகாமாயா
22. பாலசந்திரன், க்ஷமா, த்ருதி
23. மகோத்கடன், மகாநந்ததாயினீ, மோகநாசினீ
24. ராஜபுத்ரன், மகாராஜ்ஞீ, சம்ராஜ்ஞீ
25. கச்யபாத்மஜன், தாரித்ரியசமனீ, கீர்த்திவர்த்தனீ
26. பக்தபாலகன், வைநாயகாபீஷ்டதாத்ரீ, வைநாயகப்ர [வர்த்தினீ

அ. சித்தி, புத்தி. கணபதி இவர்களுடைய இந்த இருபத்தாறு திருநாமங்களையும், எவர்கள் படிக்கின்றார்களோ இந்நாமங்களால் எவர்கள் கணபதியைப் பூசிக்கின்றார்களோ அவர்கள் சீக்கிரத்திற் சித்தியையடைந்து விரும்பியவைகளைக் கணபதியிடத்தினின்றும் பெறுவார்கள்.

௯ உதாரபுத்தியுடைய தருமராசன் கண்ணனது வாக்கினால் இவ்விதங் கேட்டு, பீமன், நகுலசகாதேவர் இவர்களுடன் மகாசங்கடநாசனம் என்னும் விரதத்தை விதிபபடி ஒரு வருடம் செய்தான். துவைதவனமுதலாகிய பதினொரு கணேசக்ஷேத்திரங்களிலே முறையாக ஒவ்வொரு மாசம் பூசித்துச் சிறந்த பன்னிரண்டாவது மாசத்திலே உயர்ந்த திருநாரையூராகிய இந்தத் தலத்தில் மனைவி சகோதரர்களோடு கூட விநாயகப்பெருமானை அன்பால் பூசித்தான்.

க0. அப்போது விநாயகப்பெருமான் பாண்டவர்கட்கெதிரே திருநாரையூர்ப்பொல்லாப்பிள்ளையார் என்னுந் திருவுருவமத்தியினின்றும் கணங்களோடு வெளிப்பட்டருளிப் பாண்டவர்களைக் கருணையால் பார்த்தருளித் திருவாய்மலர்ந்தருளுவார். மிகவும் புனிதமான சந்திரவமிசத்திலே சுத்தவர்மன் முதலாக உங்கள் வமிசத்தவர்க்கு நாமே குலதேவதையாக இருந்து அநேக தாமரைப்பூக்களால் அருச்சிக்கப்பட்டோம். விசித்திரவீரியன் இடையில் எம் பூசையைச் செய்யாது விட்டான். அதனால் அவன் சந்தானமில்லாமல் நோயாற் பீடிக்கப்பட்டிறந்தான். வியாசனால் உணர்த்தப்பட்டு வீட்டுமன் எம் பூசையைச் செய்தான். உங்கள் பிதாவாகிய பாண்டுமன்னன் எமது பூசையைச்

செய்தான். அதனாற் பிரீதியடைந்த நாம் அருச்சுனனுக்கு இளமையிலேயே அநேக வரங்களையளித்தோம். பாலியத்தி லிருந்தே அவன் தினந்தோறும் எம் பூசையைச் செய்துவரு கிறான். அதனால் அவன் சகல குணங்களோடு எப்போதும் வெற்றியுமுடையவனானான்.

கக. முன்னே ஒரு வருடம் உங்களால் வாரணாவதத்திலே உயர்ந்த பத்தியோடு விதிப்படி பூசிக்கப்பட்டோம். அப்பூசை மகிமையால் இராச்சியத்தையும், அநேக பெண்களையும், சக்கிர வர்த்தித் தன்மையையும் நன்கு பெற்று உங்களால் அரசுரிமை இடையூறின்றி அநுபவிக்கப்பட்டது. முன்னே இராசசூய ஆரம்பத்தில் உங்களால் எமது கணயாகம் செய்யப்படவில்லை. ஆதலால் அரசுரிமை நீங்குதல் முதலாகிய இந்தச் சங்கடம் உங்களால் அடையப்பட்டது. நீங்களும் விக்கினத் தாற் றுன்புறுத்தப்பட்டீர்கள். இனி உங்கட்குச் சங்கடங்கள் நீங்கிவிடும். இதில் சந்தேகமில்லை. தேவகாரியசித்தியின் பொருட்டுப் பாரதயுத்தஞ்செய்யவேண்டியதே. துரியோதனனை நிமித்தமாகக்கொண்டு பூமியானது அரசர்களில்லாததாகும்.

கஉ. புத்திமானாகிய காலருத்திரனுடைய கபாலத்தை நிறைப்பதன்பொருட்டுப் பதினெட்டு அக்குரோணிசேனைகள் பாரதப்போரிலே தேவருட் சிறந்த திருமாலால் கொல்லத் தக்கவைகளாகும். விட்டுணுவின் மாயையால் சேனைவீரர்கள் மோகமடைந்தவர்களாய் ஒருவருக்கொருவர் பொருது நாச முறுவார்கள். பாரதப்போரிலே பாண்டவர்களாகிய நீங்கள் ஐவீ ரும் சினியின் மகனாகிய சாத்தியகியும் எமதாணைப்படி உங்கள் பக்கத்திலே எஞ்சியவர்களாக ஆவீர்கள். அருச்சுனனுடைய புத்திரர்களில் மூவர் யுத்தத்தில் இறப்பர். வீமன் புத்திரர் களில் வீரராகிய இருவரும் மற்றையவர்களுடைய புத்திரர்கள் ஒவ்வொருவரும் இறப்பார்கள். உங்களுடைய மற்றைப் புத் திரர்கள் உயிர்பிழைத்திருப்பார்கள். திருதராட்டிரனுடைய பிள்ளைகளில் ஒருவன் எஞ்சியிருப்பான். மகாபலவானாகிய அருச்சுனன் எம்மிடமிருந்து வைநாயகம் என்னும் அஸ்தி ரத்தை அடைந்தான். பாசுபத அஸ்திரத்துடன் கூடிய அருச் சுனன் எப்போதும் ஒருவராலும் வெல்லமுடியாதவன். வீட் டுமன், துரோணன், அசுவத்தாமா, கிருபன் என்னும் இவர்

கள் சுப்பிரமணிய வியூகமூர்த்திகளின் அமிசமாய்த் தோன்றியவர்கள். அவர்கள் இந்திரன் முதலிய தேவர்களாலும் வெல்லமுடியாதவர்கள். உருத்திராமிசமாகிய வீமன் சமயங்களில் கிருபனையும் துரோணனையும் அவன் புத்திரனையும் வெல்லுவான். அவர்களும் வரத்துடன் கூடியவர்கள். ஆதலால் வீமனையும் வெல்லுவார்கள். எமது வரத்துடன் கூடிய வீட்டுமனை யுத்தகளத்தில் போரில் வீமன்வெல்லமாட்டாதவனுவான்.

கஙு. கர்ணன், சகச்சிரகவசன் என்னும் அசுரனது அமிசத்தாற் பிறந்தவன். சூரியபத்தியுடையவன். சூரியனது வரத்தோடு கூடியவன். கொடையிற் சிறந்தவன். பிரதாபமுடையவன். சமயங்களில் வீமனையும் வெல்லக்கூடியவனே. ஐயமில்லை. அவன் சூரியனுடைய வரதானத்தால் சூரியவாக்கியத்தை நினைந்துகொண்டு யுத்த ஆரம்பதினமுதல் பத்துநாள் வரை அதர்வணவேதமந்திரத்தால் சிவசூரியனுடையயஞ்ஞத்தை வேறு சிந்தனையின்றிச் செய்வான். பதினோராவது நாள் யாககுண்டத்திலிருந்து யுத்தகிரவியங்களுடன் அழிவில்லாததாகிய ஒரு மகாரதத்தை நிச்சயமாகப் பெறுவான். அந்த ரதத்தைக் காலையும் மாலையும் நான்குநாள் அவன் பூசிப்பான். நாலாவது நாள் இராத்திரியில் அவன் அநேக சேனைகளை அழிப்பான். பதினேழாநாளில் அந்த இரதத்தில் அரியமா என்னுஞ்சூரியன் வந்து பிரவேசிப்பான். அந்நாளில் அந்தக் கர்ணனை வெல்பவன் மூவுலகிலும் இல்லை. நாகாஸ்திரத்தையும் சூரியாஸ்திரத்தையும் பார்க்கவாஸ்திரத்தையும், அந்தத் தினத்திலே கர்ணன் வரங்கள் பெற்றிருப்பதனுல் அருச்சுனனைக் கொல்ல நினைத்து பிரயோகிப்பான். சத்திதேவதையுடன் கூடிய நாகாஸ்திரமானது மயூரியஸ்திரத்தில் வல்ல அருச்சுனனைக் கொல்லமாட்டாது. போரிலே அவனுடைய கிரீடத்தை மாத்திரம் கெடுக்கும். வைநாயகாஸ்திரத்துடன் கூடிய அருச்சுனனை அந்தச் சூரியாஸ்திரமானது கணநேரம் மயங்கச்செய்யும். வேறொன்றுஞ்செய்யாது. பிறகு ஒரு முகூர்த்தத்தில் அருச்சுனன் கர்ணனைக் கொல்வான், ஐயமில்லை. வீட்டுமன், துரோணன், கிருபன், அசுவத்தாமா, கர்ணன் முதலியவர்களினின்றும் எப்போதும் உங்களை அருச்சுனன் காப்பான் சந்தேகமில்லை. வெல்லுதற்கரிய பகையை வெல்லும்பொருட்டு நாம் உங்கட்கு

உருத்திரசத்தியைத் தருகின்றோம் என்று சொல்லி, விநாயகப் பெருமான் பாண்டவர்களுக்கு உருத்திரசத்தியைக் கொடுத்து மற்றும் வேண்டிய வரங்களையும் கொடுத்து மறைந்தருளினர்.

கச. பாண்டுபுத்திரர்கள் விநாயகப்பெருமானுடைய அநுக்கிரகங்களைப் பெற்றுக்கொண்டு தௌமியர் முதலிய முனிவர்களுடன் மறுபடியும் துவைதவனத்தை அடைந்தார்கள். அன்று தொடங்கிப் பாண்டவரனைவரும் கண்ணனைவலால் தௌமிய முனிவனைக்கொண்டு கணேசப்பெருமானுடைய பூசையைத் தங்கள் ஆன்மார்த்தபூசையாகச் செய்வித்தார்கள். கிருஷ்ணபக்க சதுர்த்தியில் பாண்டவர்கள் தாமே பூசித்தார்கள். சங்கட கணநாதருடைய பூசையின் பிரபாவத்தால் பாண்டவர்கள் கௌரவர்களைக் கொன்று அரச செல்வத்தை அநுபவித்தார்கள்.

கரு. போசன், அந்தகன், விருஷிணி என்பவர்களுடைய வமிசங்களில் பிறந்த சிறந்த யாதவர்கள் போசதேசத்தரசனை கஞ்சன் என்னும் துட்டனால் துரத்தப்பட்டார்கள். சூரசேனன், சினி, மகாபெலவானாகிய கிருதவர்மன் என்னும் இவர்கள் யதுவமிசத்தவர்கள், போசராசனுக்குச்சகோதரர்கள். இவர்கள் உக்கிரசேனனுக்குச் சிற்றப்பன் மக்கள். சமீபதேசங்களிலிருப்பவர்கள். உக்கிரசேனனுக்கு மகனுந் துட்டனுமாகிய கஞ்சன் நாரதர் கூறியபடி தேவாமிசமான யாதவர்களைத் துர்ப்புத்தியால் வருத்தினன். அக்குரூரன் முதலிய சிலர் அந்தக் கஞ்சனை அநுசரித்து இருந்தார்கள். சிலர் பாஞ்சால முதலிய தேசங்களிற்போய்ச் சுகமாக இருந்தார்கள். பலபேர் கட்டதசையை அடைந்து எளிய சீவனஞ்செய்துகொண்டிருந்தனர்.

கசு. விட்டுணுமூர்த்தி சூரசேனன் மகனுக்குப் புத்திரராய்த் தோன்றிக் கோகுலத்தில் வசித்தார். கர்க்கமுனிவருடைய உபதேசத்தால் அவர் நியமத்தோடு சங்கட்டகாண விரதத்தை அநுட்டித்தார். அவருக்குப் பகவானாகிய விநாயகப்பெருமான் பிரசன்னராகி வேண்டிய வரங்களைக் கொடுத்தார். அவர் அவ்விரதத்தின் மகிமையால் மாமனாகிய கஞ்சனென்னும் மூர்க்கனைக் கொன்று உக்கிரசேனனாகிய மாதாமகனுக்கு இராச்சியத்தை அளித்தார். நூறு கிராமத்துடன்

கூடிய இராச்சியத்தைச் சினி என்பவனுக்கு மகிழ்ச்சியோடு கொடுத்தார். அப்படியே சூரனாகிய கிருதவர்மனுக்கு ஆயிரம் கிராமங்களைப் பிரீதியோடு அளித்தார். சத்திராசித்து முதலிய யாதவவேந்தர்களுக்கும் முற்கூறியதுபோலவே இராச்சியங்களை மகிழ்ச்சியோடு கொடுத்தார். பலராமனும் கண்ணனும் உக்கிரசேனனுடைய கட்டளைப்படி மகிழ்ந்து பரிபாலனஞ் செய்தார்கள்.

கஎ. சினியினுடைய புத்திரனும் மகாவீரனுமாகிய சாத்தியகி அருச்சுனனுடைய உபதேசத்தால் சங்கட்டகாணவிரதத்தை அநுட்டித்துக் கணபதியினுடைய கிருபையை அடைந்து போரிலே எவராலும் வெல்லக்கூடாதவனாய் அநேக தேசங்களை வென்று அரசனாகி மற்றையரசர்களைத் திறை தரும்படி செய்தான். பாண்டவர்களையும் பாஞ்சாலர்களையுந் தவிர மற்றை அரசர்களை எல்லாம் வென்றான். இவ்வாறு கணபதியின் திருவருளால் பாண்டவர்களும், யாதவர்களும், தாங்கள் தாங்கள் விரும்பிய பேறுகளைப் பெற்றார்கள் என்று சர்க்கமுனிவர் கூறினார்.

கஅ. அச்சரிதங்களைக் கேட்டு எனக்கும் கணநாயகரிடத்தில் பத்தி உண்டாயிற்று. குலதேவதையாகிய கணேசப் பெருமானும் என்னிடத்தில் தயைசெய்தருளினார் என்று இவ்வாறு வச்சிரன் முகமாகச் செனமேசெயன் என்னும் அரசன் கேட்டுணர்ந்து தானும் கணநாதரை அன்போடு பூசித்துத் தான் விரும்பிய பேறுகளை அடைந்தான். பாண்டுவின் வழித்தோன்றலாகிய செனமேசெயன் புத்திசாலியான வச்சிர புத்திரனோடுகூட மநுநெறிமுறையே பூலோகத்தை ஆண்டு முடிவிலே முத்தியையும் அடைந்தான்.

இருபத்தைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

இருபத்தாருவது சிவதாசசிவாசாரியருக்குப் புத்திரப்பேறளித்த அத்தியாயம்.

க. முனிவர்கள் சண்முகப்பெருமானைப் பார்த்து, ஆறு முகப்பெருமானே ! இக்கலியுகத்திலே திருநாரையூரில் கணேசப் பெருமானுலுஞ் சிவபெருமானுலுஞ் செய்யப்பட்ட திருவிளை யாடல்களைத் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க அறுமுகக்கடவுள் கூறுகின்ருர்.

உ. அகண்டமாய்ச் சச்சிதானந்தமாய்ப் பழிப்பற்றதாய் நிர்மலமாய்ப் பரத்துக்குப் பரமாய்ச் சிவஞானத்தாலறியப் படுவது பரப்பிரமப்பொருளாம். அது சுத்த மாயையைக் காரியப்படுத்தும்பொருட்டு நோக்கிநின்ற நிலையில் நிட்களசிவம் என்று சொல்லப்படும். வைகரிவடிவாய் நின்ற பிரணவத்தை அதிட்டித்து நின்ற நிலையில் பகவான் மகேசனும் என்று வேதங் கூறும். சகளமும் நிட்களமுமாகிய இருநிலையையும் உடைய போது சத்து என்று பெரியோர்களால் கூறப்படும். இங்ஙனம் பரப்பிரமப் பொருள் மூன்றுவித வடிவத்தைத் தன் விருப்பி ஞற் கொண்டதென்று உண்மைநூலுணர்ந்தோர் கூறுவர்.

ஙு. இந்த மூன்று வடிவத்துள் முதலாவது வடிவம் சிவம் என்னும் பெயராற் கூறப்படும். இரண்டாவது வடிவம் ஒளி வடிவமான சதாசிவம் எனப் பெயர்பெறும். மூன்ருவதாகிய சகளம் வைகரிநாத வடிவை அதிட்டித்து நிற்பதாம். சூக்கும மான சொரூபத்திலிருந்து ஆதிசிருட்டியில் பஞ்ச சத்திகள் உளவாயின. இறைவன் அவைகளோடு கூடிச் சூக்கும வடி வுடையனுய் அதில் வியாபித்து நின்று பாசிவன்எனப் புகழப் படுவன். பின்னர்த் தூலமாகிய சத்திகளால் தூலவடிவத் தைக் கற்பித்து இறைவன் அதனுள் வியாபித்து மகேசுரன் என்று எண்ணப்படுகின்ருன்.

ச. இாாசதகுணங் காரணமாகப் பிரமாவையும் சத்துவ குணங்காரணமாக விட்டுணுவையும் தமோகுணங் காரணமாக உருத்திரனையும் பூமி முதலிய ஐம்பெரும் பூதங்களும் காரியங் கட்கு மேலாகிய மாயையும் ஆகிய இவற்றை இயக்குகின்ற ஆறு

குணங்களாகிய சத்திகளால் கந்தர் என்னும் மூர்த்தியையும் சிற்குணமுண்மையும் பிராகிருதகுணமின்மையுமாகிய இயைபினுல் விநாயகமூர்த்தியையும் பரமேசுவரன் தோற்றுவித்தருளினுர்.

௫. பிரமனையும் விட்டுணுவையும் உருத்திரனையும் பரமசிவன் சிருட்டித்துப் பிரமனுக்குச் சிருட்டியையும் விட்டுணுவுக்குப் பரிபாலனத்தையும் உருத்திரனுக்குச் சங்காரத்தையும் குகனுக்குச் சேனுபத்தியத்தையும் கணபதிக்கு விக்கினேசத் தன்மையையும் பரமசிவன் அளித்தார்.

௬. விநாயப்பெருமான் சத்தாகிய சிவமயமேயாதலால் சிவவடிவங்களினும் முதலிற் பூசிக்குந் தன்மையும் சித்திதருந் தன்மையுங் கொண்டருளினுர். சிற்குணமுடையவரும் மாயாகுணமில்லாதவருமாகிய விநாயகப்பெருமானைச் சிவபெருமானும் பூசைசெய்து விக்கினேசன் என்னும் பெயர்ப்பொருளை விளக்கியருளினுர்.

௭. "இந்த அருவமே முதலில் இருந்தது அதனினின்றும் உருவந் தோற்றிற்று" என்னுஞ்சுருதியால் அருவம் என்னும் பெயருடைய மகாமாயையை அதிட்டித்து நின்ற திருவுருவமுடைய பரமசிவனிடமிருந்து உருவமுடைய கணநாயகர் தோன்றினுர் என்று சிலர் கூறுவர். தத்துவ ஆராய்ச்சியுடைய வேறுசிலர் சத்து என்னும் பதப்பொருளாகிய அறிவுமயமா. மெய்ப்பொருளானது அருவமெனப் பெயருடைய மகாமாயை இயங்குதற்குக் காரணமாதலின் அக்காரண சொரூபமாகிய கணநாதரிடமிருந்து திருவுருச்சிவனுக்குத் தோற்றங்கூறுவர். ஒன்றேயாகிய பிரம சொரூபமே சிவவடிவாகவும் விக்கினேச வடிவாகவும் தோன்றியருளிற்று என்று மற்றுஞ்சிலர் கூறுவர்.

௮. கணேசப்பெருமான் பெரும்பான்மையாக எப்போதும் பிள்ளைமைத் திருவிளையாட்டுடையவராய்ச் சிவபிரான் முதலியவர்களுக்குப் புத்திராந்தன்மையில் அமர்ந்தருளி அவர்களை மகிழ்விக்கின்றுர். முதலில் சிவபுத்திரத்தன்மையானபடியால் சிவபுத்திரரெனப்படுகின்றுர். பிரமா விட்டுணு உருத்திரன் ஈசுவரன் சதாசிவன் பராசத்தி என்னும் இவர்கள் பூமி முதலியவற்றையியக்கும் அறுவகைச்சத்திதேவதைகளெனப்படுவர். அச்சத்திகளின் சமட்டி மூர்த்தியேசண்முகமூர்த்தியெனப் படும்.

கூ. பரப்பிரமமாகிய கணநாதர் துவைமாத்திரேயர் எனக் கூறப்படுவர். இந்தத்துவைமாத்திரேயர் சண்முகருக்குமூத்தவர் என்று எண்ணப்படுவர். பிரமாவும்விட்டுணுவும் உருத்திரனும் கந்தனும் இந்திரனும் ஆகிய இவர்கள் உலகதேவதைகள் ஆவார். சராசரமான இவ்வுலகமெல்லாம் பிரமனாற் படைக்கப்பட்டது.

கo. தேவர்களும் முனிவர்களுஞ் சிவலிங்கத்திலே சிவ பெருமானையும் கணேசப்பெருமானையும் பூசித்துத் தங்கள் பதங்களைப் பெற்றார்கள். தேவர் முதலியவர்களால் உலகத்திலே தாபிக்கப்பட்ட இலிங்கங்களை உலகத்தாருக்கு இதமுண்டாதற்பொருட்டு அன்போடு பூசிப்பதற்காக அத்தேவர் முதலியவர்களால் பிரார்த்திக்கப்பட்ட பரமேசுவரன் திருவுள்ளமகிழ்ந்து தமது ஐந்து திருமுகங்களினின்றும் ஆதிசைவர்களாகிய கச்சியபர் முதலிய ஐந்து சிவப்பிராமணர்களைப்படைத்தருளினார். பரமசிவனது கட்டளைப்படி பரமேசுவரி அம்முனிவர்களுக்கு ஐந்து பெண்களைப் படைத்தருளினாள். சிவபெருமானது ஆணையின்படி திருநந்திதேவர் அவ்வைந்து முனிவர்களுக்கும் காமிக முதலிய சிவாகமங்களை உபதேசித்தார். கச்சியபர் முதலியவர்களும் அவர்களின் மரபில் வந்தவர்களும் சிவலிங்க முதலியவைகளை அருச்சனை செய்துகொண்டு வந்தார்கள்.

கக. அவ்வைந்து சிவத்துவிசமுனிவர்களுக்குள்ளே அகத்திய முனிவர் கோத்திரத்தில் உற்பவித்த அரதாசன் எனக் கூறப்படும் புகழ்பெற்ற ஆதிசைவன் வியாச முனிவனுக்கு மாணாக்கனுய் அறிவாளிகளுட் சிறந்தவனாயிருந்தான். அவன் வியாசமுனிவன் கட்டளைப்படி காந்தமகாபுராணத்தின் உபபுராணத்தைச் செய்தான். அவன் துவாபரயுக முடிவிலே பூமியில் சைவத்தை நிலைபெறுத்தினான். அவ்வாதி சைவன் மரபிலே தோன்றியவர்கள் பிராசாதத் தலங்களுள் சிவப்பிராசாதத் தலங்களிலே சிவலிங்க ரூபியான ஈசுவரனைப் பூசை செய்தார்கள்.

கஉ. அரதாச சிவாசாரியன் வமிசத்திலே தோன்றிய சிவதாச சிவாசாரியனென்பவன் கலியுகம் நாலாயிரஞ் சென்ற காலத்திலே திருநாரையூரிலிருந்து திருநாரைச்சிவலிங்கப் பெருமானையும் பொல்லாப்பிள்ளையாரையும் பூசித்து வந்தான். அவன்

புத்திரசந்தான விருத்தியின்பொருட்டு மனைவியோடு கூடப் பிரதோட விரதம்பூண்டு நியமமாகப் பரமேசனை அருச்சனை செய்து வந்தான். இவ்வாறு மூன்றுவருடம் உத்தமமாகிய பிரதோட விரதத்தை அநுட்டித்தான். சதாசிவப் பெருமானுடைய திருவருளால் அவன் மனைவி கருப்பமடைந்து பத்தாமாசத்தில் அபராபரசிவன்போலச் சுத்தப்படிக ஒளியும் இருபுயமும் உடையனும் சிவபிரானது அமிசமாகத் தோன்றிய ஒரு பாலனைப் பெற்றாள்.

கங. சிவதாசன் மகிழ்ச்சியோடு அநேக பிராமணர்களுக்குப் பலதானங்களைச் செய்தான். பதினோராம் நாள் பெருமகிழ்ச்சியோடு பிராமணர்களின் சட்டைப்படி புத்திரனுக்குச் சந்திரசேகரன் என்று நாமகரணஞ் செய்தான். அந்தப் பிராமணோத்தமன் குழந்தையை மிகுந்த ஊக்கத்தோடு பாதுகாத்து வந்தான்.

கச. அப்பாலகன் வளர்பிறைச் சந்திரன்போலப் பொழுதொருவண்ணமாய் எல்லாரையும் வசிகரிப்பவனாய் வளர்ந்து வந்தான். அவன் திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாருடைய அநுக்கிரகத்தைப் பெற்றுக் கணேசப் பெருமானுடைய கட்டளைப்படி எல்லா வித்தைகளையும் ஆறு பேதமாக விளங்குஞ் சைவத்தையும் அப்படியே நான்கு பேதமாக விளங்கும் ஒப்பில்லாத காணாபத்தியத்தையும் உலகத்திலே நிலை நாட்டினான். பற்றில்லா நெறியாகி நாகத்தைத் தருவனவாகிய பௌத்தம் முதலிய மதங்களையும் வைணவம், காபாலம், வேதத்தால் நிந்திக்கப்பட்ட சாத்தம், முதலான மதங்களையும் கண்டித்தான். இவன் ஐம்பது வருடங்கள் பூமியில் வாழ்ந்து பின் சிவபதம் அடைந்தான்.

கரு. இந்தப் புனிதமாகிய புத்திரப்பேற்றைத் தரவல்ல அற்புதமாகிய சந்திரமௌலி சிவாசாரியனுடைய சரித்திரத்தைப் பரமசிவனைப் பூசித்துப் பத்தியோடு எந்த மனிதர்கள் படிக்கின்றார்களோ அவர்கள் புத்திர சம்பத்து முதலிய எல்லாப்போகங்களையும் இம்மையிலே பெற்று அநுபவித்துத்தேகாந்தத்திலே பரமேசனுடைய சாயுச்சியத்தையும் நிச்சயமாக அடைவார்கள்.

இருபத்தாறுவது அத்தியாயம் முற்றிற்று.

இருபத்தேழாவது
சைவபேதமுரைத்த அத்தியாயம்.

௧. முனிவர்கள் சண்முகப்பெருமானைப் பார்த்து ஆறுமுக முடைய அகில குருவே! சந்திரசேகர சிவாசாரியர் ஆதிசைவ குலத்திற் பிறந்தவர் என்பதும் அவர் அறுவகைச் சைவரையும் பூமியில் நிலைபெறுத்தியவரென்பதும் தேவரீரால் எங்கட்குணர்த் தப்பட்டன. உலகத்திலே ஆதிசைவர்கள் எனக் கூறப்படுபவர் யாவர்? அவர்களுடைய உற்பத்தியையும், சைவர்களுடைய இலக் கணத்தையும் சந்திரசேகர சிவாசாரியரது சரிதத்தையும் எங் கட்கு முறையே கூறியருளவேண்டுமென்று பிரார்த்திக்கச் சண் முகப்பெருமான் கூறுவாராயினர்.

௨. ஓம் தத் சத் என்ற பேதத்தால் பிரமம் மூவகைப் படும். ஓங்காரம் சகளமென்றும், தத்பதம் நிட்களம் என்றும் கருதப்படும். சத்பதமாகிய பரப்பிரமம் சகளநிட்களம் என்று கூறப்படும் நிட்களமாகிய பரப்பிரமம் நிட்கள சிவம் என்று கூறப்படும். சகளமாகிய பரப்பிரமம் மகேசன் என்று கூறப்ப டும். சத்பதமாகிய சகளாகளத்துக்கு நிட்களஞ் சிரசாகக் கூறப் படும், அந்தச் சத்பதத்துக்குச் சகளஞ் சரீரமாகக் கூறப்படும். சத்பதமான விநாயகர் சகளநிட்களமான சம்புவினின்றுந் தோன் றினவராதலால் சிவகுமாரர் என்று எண்ணப்படுகிறார். சத் வடிவினராகிய விநாயகர் சகளநிட்களத்தினின்றுந் தோன்றிச் சகள நிட்களமான மூர்த்தியுடையமையால் சகளத்தைக் காட்டிலும் மேலானவராகவும் நிட்களத்தைக் காட்டிலும் கீழானவராகவும் தத்துவ பண்டிதர்களால் கூறப்படுகின்றார்.

௩. நிட்களமாகிய பரமசிவன் பரிக்கிரக சத்தி என்னும் மாயையோடு கூடிச் சகளமெனப்படுகிறார். இவர் சிருட்டியாதி கிருத்தியங்களோடு கூடியவர். நிட்களம் என்னும் பரசிவம் முத் தியை அளிப்பவர். சகளநிட்களதேகமுடையவர் சத் வடிவின ராகிய விநாயகர். இவர் சிருட்டி முதலிய கிருத்திய ஞானத் தையும், கிருத்திய சித்தியையும் முத்திசாதன ஞானத்தையும் முத்திப்பேற்றையும் அளிப்பவர்.

ச. பிரமா, விட்ணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்னும் ஐவரும் பரசிவத்தினின்றும் தோன்றியவர்கள். இவர்களே பஞ்சபூதங்களுக்கு அதிதேவதைகள். இவர்களில் பிரமா, விட்டுணு, உருத்திரன் என்னும் மூவரும் குணமூர்த்திகள். மகேசன் சதாசிவன் என்னும் இருவரும் சிவனின் வேறுகாத சுதந்திர வடிவங்களாக எண்ணப்படுவர்.

ரு. பிரமாவினின்றும் பூமியிலே உண்டானவர்களாகிய பிராமணர் முதலியோரும் அப்படியே தேவர் முதலியோரும் அசுரர்களும் முனிவர்களும் பிரமஞானிகளும் ஆகிய எல்லோரும் முதலில் விநாயகரைப் பூசித்துப் பின்னர்ச் சிவலிங்கத்தையும் பூமியில் பிரதிட்டை செய்து பூசித்துத் தாங்கள் விரும்பிய வரங்களை அடைந்தார்கள்.

சு. உலகத்திற் பிரதிட்டிக்கப்பட்ட இலிங்கங்களை உலோகாநுக்கிரகத்தின் பொருட்டுப்பூசிப்பதற்காகப் பிரமன் முதலியவர்களாற் பிரார்த்திக்கப்பட்ட பரமேசுவரன் தமது ஊர்த்துவ முகத்தினின்று கௌசிகமுனிவனையும், சத்தியோசாத முகத்தினின்று கசியப முனிவனையும், வாமதேவ முகத்தினின்று பாரத்வாச முனிவனையும், தற்புருட முகத்தினின்று கௌதம முனிவனையும், அகோர முகத்தினின்று அகத்திய முனிவனையும் தோற்றுவித்தருளினர். பரமசிவனால் தீக்ஷிக்கப் பெற்ற இவர்கள் ஐவரும் சிவபுத்திரர்கள் எனப்படுவர். இவர்கள் பரமசிவனிடத்திலிருந்தே வேதசிவாகமங்களை உணர்ந்தார்கள். உபமந்நியு, சுவேதன், ததிசி, ருரு, தூர்வாசன் என்னும் இவர்கள் ஐவரும் அம்முனிவர்களுடைய புத்திரர்கள் எனப்படுவர்.

எ. கௌசிக முனிவன் எல்லாமறிந்த சைவனாகிய தூர்வாசனென்னும் புத்திரனை மந்தாரகாளீச புரத்து மடத்தில் மகிழ்ச்சியோடு குருவாகத் தாபனஞ் செய்தான். காசியபன் ஆமர்த்தகி என்னும் மடத்தில் தனது சிறந்தபுத்திரனாகிய ருருவைத் தாபனஞ்செய்தான். பாரத்துவாசன் கோளகிமடத்தில் தனது புத்திரனாகிய ததிசியைத் தாபனஞ் செய்தான். கௌதமன் புட்பகிரியில் சுவேதன் என்னுஞ் சாந்தனாகிய தன் புத்திரனைத்தாபனஞ் செய்தான். அகத்தியன் தனது புத்திரனாகிய சிறந்த உபமந்நியுவை இரணபத்திரத்திலே தாபனஞ் செய்தான், இவ்வாறு

ஐந்து புத்திரர்களையும் ஆறுவகைச் சைவத்தைப் பரிபாலிப்ப தற்காகத் தாபனஞ் செய்தார்கள்.

அ. இவர்களுடைய வமிசங்களிலே தோன்றியவர்கள் இருபிறப்பாளருட் சிறந்த ஆதி சைவர்கள். இவர்கள் உலகத்தின் நன்மைக்காகப் பரார்த்த லிங்க பூசை செய்பவர்கள். கௌசிகன் முதலிய பதின்மரே உலகத்திற் சிறப்பிக்கப்பட்டவர்கள். சிவோற்பவராகிய இந்த ஆதி சைவர்கள் பிரமசிருட்டியிற் படாதவர்கள்.

கூ. கௌசிகன் முதலிய இந்தப் பெயருடைய வேதவித்துக்களாகிய உலகப்பிரசித்திபெற்ற பல முனிவர்கள் பிரமசிருட்டியிலும் உண்டு. அவர்கள் சைவர்களெனக் கூறப்படார். அவர்கள் கேவலம் வைதிக மார்க்கிகள். அவர்கள் சுமார்த்தாசாரத்தை உடையவர்கள். கேவலாத்துவிதக் கொள்கையுடையவர்கள்.

கO. கௌசிகன் என்ற மற்றொருவிப்பிரன் அகமர்ஷணனிடத்துப் பிறந்தவன். இவன் விசுவாமித்திரனுடைய பௌத்திரன். இவனும் சுமார்த்த மார்க்கத்தினன். மரீசி புத்திரனாகிய கசியபனென்னும் பிரசாபதி வேறொருவனுண்டு. பாரத்துவாசனென்ற வேறொருவனும் பிருகஸ்பதிக்குப் புத்திரனாக உளன். அகலிகைக்குப் பதியாகிய தேவர்களும் வணங்கும் மற்றொரு கௌதமனும் உளன். பிருகு வமிசத்திற்றோன்றிய கும்பசம்பவனாகிய வேறொரு அகத்தியனும் உளன்.

கக. கௌசிகனுடைய புத்திரனாகிய துர்வாசன் சிவபௌத்திரனெனக் கூறப்படுவன். அத்திரிபால் தோன்றிக் கோபத்திற் சிறந்தவனாகிய வேறொரு துர்வாசமுனிவனும் உளன். பரத்துவாசனுக்கு மகனாகக் கூறப்பட்ட ததீசியே சிவபௌத்திரன். சியவன புத்திரனும், பிருகு பௌத்திரனுமாகிய தபோதனனாகிய ததீசியென்பவன் வேறு. அகத்திய புத்திரனாகிய உபமந்யுவே சிவ பௌத்திரனெனக் கூறப்படுவன். வியாக்கிரபாத புத்திரனும் தௌமியயோகிக்குத் தமையனுமாகிய உபமந்யு வேறு.

கஉ. பிரமசிருட்டியிற்றோன்றிய மனிதர்கள் பிராமணரும் க்ஷத்திரியரும், வைசியரும், சூத்திரரும், அநுலோமரும், பிரதிலோமரும் என ஆறுவகைப்படுவார்கள் என்று தருமசாத்திரம் உணர்ந்தோராற் கூறப்படுகின்றார்கள்.

கங. சைவசமயத்திலே ஆதிசைவர்களால் சிவதீக்ஷைசெய்யப்பெற்ற பிராமணர்கள் மகாசைவர் எனப்படுவர். க்ஷத்திரியர்களும் வைசியர்களும் அநுசைவர் எனப்படுவர். சிவதீக்ஷைபெற்ற சூத்திரர் அந்திய சைவர் எனப்படுவர். அநுலோமர் பாரசைவர் எனவும் பிரதிலோமர் அவாந்தரசைவர் எனவும் படுவர். இவ்வாறு சைவர்கள் வருணபேதத்தால் அறுவகைப்படுவர்.

கச. ஆதிசைவர்கள் இவ்வறுவகைச் சைவங்களிலும் குருக்கள் என்று சிறந்த அந்தணர்களால் சிறப்பித்துச் சொல்லப்படுவார்கள். இவர்கள் பஞ்சரிஷி கோத்திரத்தில் தோன்றியவர்கள். ஆறுவது கோத்திரம் பெறப்படுவதில்லை.

கரு. ஆன்மார்த்த பூசையும் பரார்த்த பூசையும் செய்தற்கு ஆதிசைவரே அதிகாரமுடையவர்கள். பிறர் ஆன்மார்த்தம் ஒன்றுக்கே உரியவர் ஆவர். ஆதி சைவரைத் தவிர வேறு எந்த மூடர்கள் பரார்த்த பூசையைச் செய்கிறார்களோ அவர்கள் தேவலகர் எனப்படுவர். இத்தேவலகர் சைவ கருமங்களிலும் வைதிக கருமங்களிலும் சுமார்த்த கருமங்களிலும் உரிமையில்லாதவர் எனச் சொல்லப்படுவர். அத்தேவலகர் மூன்று வகைப்படுவர். உலகத்திலே ஒருவருடைய வீட்டிலே பரார்த்தபூசையை எவர்கள் செய்கிறார்களோ அவர்கள் கர்த்திரு தேவலகர் எனப்படுவர். இவர்கள் எல்லாக் கருமங்களினும் நீக்கத் தக்கவர்கள். சிவாலயங்களிலே எந்த விப்பிரர் பரார்த்த பூசை செய்கின்றார்களோ அவர் கரும தேவலகர் எனப்படுவர். இவர்கள் சைவ கருமங்களிலும் சுமார்த்த கருமங்களிலும் நீக்கத் தக்கவர்கள். வைணவ ஆலயங்களிலே எந்த அந்தணர் பூசை செய்கின்றார்களோ அவர் கற்ப தேவலகர் என்று கூறப்படுவர். இவர்கள் எல்லாக் கருமங்களினும் நீக்கத்தக்கவர்கள்.

கசு. சிவபெருமானால் சிருட்டிக்கப்பட்ட ஆதி சைவர்கள் சிவத்துவிசர் என்று கூறப்படுவர். அவர்கள் வேதம் ஆகமம் புராணம் ஆகிய எல்லாவற்றிலும் அதிகாரமுடைவர்கள்.

கஎ. பிராமணனால் பிராமண கந்நியிடத்துக் களவிற் பிறந்தவன் வேதங்களில் அதிகாரியல்லனாம். இவன் ஆதிசைவன்பால் ஆகமங்களை ஓதிச் சிவாலயத்துக்கு வேறாயுள்ள சாத்தா துர்க்கை முதலிய தேவதைகளைப் பரார்த்தமாகப் பூசிக்கலாம். ஆதிசைவரால் நிக்ஷிக்கப்பட்டாலும் அவர்கள் சிவன் முதலியவர்களைப்

பார்த்தமாகப் பூசை செய்யலாகாது. இவர்கள் காநீந சைவர் எனப்பட்டு ஆதிசைவருக்கு ஏவலாளர் என்று சொல்லப்படுவார். இவர்கள் ஆதிசைவர்களென்று உலகத்திலே கூறப்படார். காநீநர்களாகிய இவர்கள் இவ்வுலகில் பாரசைவரினும் உயர்ந்தவராவார்.

கஅ. ஆதிசைவனால் அந்தியசைவப் பெண்ணிடத்துப் பிறந்த அநுலோமன் ஆதிசைவனால் தீக்ஷிக்கப்பட்டால் பாரசைவன் என்று சொல்லப்படுவன். அநுலோம பாரசைவனாகிய இவன் காளி முதலிய கிராமதேவதைகளின் பூசைக்குரியவன் ஆவன். ஆதிசைவனால் அந்தியசைவப் பெண்ணிடத்துப் பிறந்த இவன் பண்டாரம் என்றுங் கூறப்படுவன். இவன் பிரமவீரியத்திற்றோன்றியவன் ஆதலால்அநுலோமர் எல்லோருள்ளும் உயர்ந்தவனாவன். இதில் ஐயமில்லை. இவன் அந்திய சைவனிலும் மேலானவன். ஆதிசைவனாற்றோன்றிய இவன் ஆகமங்களை அத்தியயனஞ் செய்தற்கும் அதிகாரியாவன். ஐயமில்லை.

கக. அக்கினிகோத்திர முதலியவைகளைச் செய்தற்குச் சிவோற்பவனாகிய ஆதிசைவனே அதிகாரியாகும். சந்தேகமில்லை. காநீநன் எனச்சொல்லப்பட்டவன் அதிகாரியல்லன். காளி முதலிய தேவதைகளுக்கு விதிப்படி பூசை செய்வதற்குப் பாரசைவனென்னும் பண்டாரமும் காநீநதுவிசனும் முறையே பிரமாவினாலும் சிவனாலும் நியமிக்கப்பட்டார்கள். தாபனஞ் செய்தற்கண் பாரசைவன் எக்காலத்திலும் அதிகாரியாகான். தாபனத்திலும் பூசை செய்வதிலும் காநீநசைவனும் அதிகாரியாகான் என்று கூறப்படுகின்றான்.

உ௦. எல்லாத் தேவதைகளையும் தாபனஞ்செய்வதிலும் சிவாலயங்களிலே தாபிக்கப்பட்ட கணபதி, கந்தன், கௌரி, வைரவன் சிவன் என்னும் இவர்களைப் பூசை செய்தற்கண்ணும் சிவோற்பவர்களாகிய ஆதிசைவர்களே நியமிக்கப்பட்டார்கள். சிவாலயத்துக்கு வேறாகவுள்ள காளி முதலியவர்களின் அருச்சனையையும் நித்திய பூசையையும் ஆதிசைவன் செய்தால் அவன் பதிதன் ஆவான்.

உக. சூத்திரர்கள் நிறைந்த இடங்களில் காளிமுதலியவர்களின் பூசையைப் பாரசைவனாற் செய்யத்தகும். மற்றையஇடங்களில் காநீந துவிசனால் செய்யத்தகும் கௌரி கணேசன் கந்தன்

இவர்களுக்குச்சாத்திர விதிப்படி ஆதிசைவர்களைக்கொண்டே பூசை செய்யவேண்டும். பிறரால் ஒரு காலத்திலும் பூசை செய்யக்கூடாது. கணேச பூசை செய்வதற்கு யாவரும் அதிகாரிகள். அதுவும் பிரதிட்டைக்கிரமப்படி பூசை செய்யவேண்டும். வேறு விதிப்படி செய்யலாகாது.

௨௨. சைவாகமமுறையாலும் வைணவாகம முறையாலும் பிசாகம முறையாலும், காணேசாகம முறையாலும் சைவர்களும் வைணவர்களும் சுமார்த்தர்களும் கணராசரைப் பூசிக்கலாம். முனிவர்களே உங்களுக்கு இவ்வாறு சைவபேதம் கூறப்பட்டது. இனிச் சந்திரசேகர சிவாசாரிய சரிதத்தையும் உங்கட்குக் கூறுவேன். நீங்கள் ஊக்கத்தோடு சாவதான மனத்துடன் கேட்பீர்களாக என்று சுப்பிரமணியப் பெருமான் கூறியருளுகின்றார்.

இருபத்தேழாவது அத்தியாயம் முற்றிற்று.

இருப்பத்தெட்டாவது
சந்திரசேகரசிவாசாரியருக்கருள்புரிந்த அத்தியாயம்.

௧. கணேசபூசையும் சிவபூசையுமுடைய சிவதாசசிவாசாரியன் என்பவன் ஒருவனிருந்தான். அவன் ஆன்மார்த்தமாக இத்திருநாரையூர்க் கணபதியை நியமமாகப் பூசித்து வந்தான். திருநாரையூர்ப்பொல்லாப்பிள்ளையாருக்கு நிவேதித்ததைத்தான் புசித்து வந்தான். வீட்டில் பக்குவமான அன்னத்தை உத்தமமாகிய கணேசர் கோயிலுக்குக்கொண்டுவந்து விநாயகப்பெருமானை அன்போடு பூசித்து நிவேதனஞ் செய்துகொண்டு வீட்டுக்குச் செல்வான். இப்பிராமணோத்தமன் திருநாரையூர் விநாயகருக்கும் சிவபெருமானுக்கும் தனக்குரிய பாகத்திற்குப் பாதிமாசம் விருத்திப் பொருட்டுப் பரார்த்த பூசை செய்து வருவான், அவன் அந்தேசாத்திலும் இவ்வாறே பாதிமாசம் பரார்த்த பூசை செய்துவந்தான்.

௨. அவன் தனது குமாரனுக்கு ஐந்தாம் வயதிலே விரதபந்தத்தைச்செய்துவைத்தான். வைகாசிப் பௌர்ணிமை நன்னாளில்

தனது குமாரனாகிய சந்திரசேகரனைப் பார்த்துக் குழந்தாய்! இன்றையதினத்தில் நீ விநாயகப் பெருமானைப் பூசித்துத் திவ்வியமான அன்னத்தையும் நிவேதிப்பாய்; இது தினங்களுள் மிக மேலானது என்று கூறித் தான் மகிழ்ச்சியோடு அரங்தேசுரத்திற்குப் போனான்.

௩. சந்திரசேகரன் என்னும் அச்சிறுவன் பூசைக்குவேண்டிய உபகரணங்களை எடுத்துக்கொண்டு அந்நன்னாளில் விநாயகாலயத்துக்குச்சென்று அன்போடு கணபதியை அருச்சனைசெய்து திவ்வியமான அன்னத்தையும் மோதகங்களையும் விநாயகப் பெருமான் திருமுன்னே வைத்து ஒ தேவரே! பிரதமகணங்களுக்கு நாதரே! தேவரீர் இந்தத் திவ்வியமான அன்னத்தையும் இனிமையாகிய மோதகங்களையும் திருவமுது செய்தருளல் வேண்டும் என்று அவரை மேலான அன்பினால் மகிழ்ச்சியோடு பிரார்த்தித்தான். தன் பிரார்த்தனையைக் கேட்டும் மௌனமாகவிருந்ததைக்கண்டு அக்குழந்தை மீண்டும் விநாயகரை நோக்கி ஒ சுவாமீ! இன்றுமுதல் தினந்தோறும் தேவரீருடைய பூசையை என்னைச் செய்யும்படி என் தாதை எனக்கு ஆஞ்ஞாபித்தார். ஆதலால் தேவரீர் நான் நிவேதித்ததைத் திருவமுது செய்யவேண்டும். தேவரீர் திருவமுது செய்யாவிடில் நான் சரியாகப் பூசை செய்யவில்லை என்று எண்ணி என் தந்தை என்னை அடிப்பார். ஒ கணநாதரே தேவரீர் அடியேன்பாற் கருணைகூர்ந்து அன்னத்தையும் மோதகங்களையும் புசித்தருளவேண்டும் என்று கூறினான்.

௪. அவ்வாறு கூறிய அப்பிள்ளையின் பிரார்த்தனையைக் கேட்ட கருணாநிதியாகிய கணேசப் பெருமான் தமக்கெதிரே வைக்கப்பட்டிருந்த அன்னத்தையும் மோதகங்களையும் திருவமுது செய்தார். அதன் பின் வீட்டிற்குச் சென்ற அக்குழந்தையின் தாய் நைவேத்தியம் எங்கே என்று கேட்டாள். அச்சிறுவன் மகிழ்ச்சியடைந்த சிந்தையுடன் கணபதி திருவமுது செய்தார் என்றான். மகன்பால் அன்புமிக்க அத்தாய் குழந்தை உண்டுவிட்டது என்று எண்ணினாள்.

௫. ஒரு கிருட்டினபக்க சதுர்த்தியில் பிதாவாகிய சிவதாசன் மகனை நோக்கிக்குழந்தாய் இன்று இரவுவிநாயகப்பெருமானுடைய பூசையை நீ செய்யமுடியாதென்று நான் எண்ணுகிறேன்.

ஆதலால் இப்பொழுது நீயே பூசையை நன்றாகச் செய்து கொண்டு வீட்டிற்கு விரைவாக வருவாயாக என்று கூறித் தனது புத்திரனைக் கணபதி ஆலயத்திற்கு அனுப்பினான்.

சு. குழந்தை அப்படியே பூசைத்திரவியங்களை எடுத்துக் கொண்டு திருக்கோயிலுக்குப்போய்க் கணேசப்பெருமானை விதிப் படி பூசித்து நிவேதனத்தைத் திருமுன் வைத்து மகிழ்ச்சி யோடு பிரார்த்தித்தான். அவன் பிரார்த்தனைப்படியே விநாய கப் பெருமான் திருவமுது செய்தார். அச்சிறுவன் இவ்வாறு பூசையை முடித்துக்கொண்டு வெறும் பாத்திரத்துடன் வீட்டிற் குச் சென்றான்.

எ. அப்போது அப்பிள்ளையின் பிதாவாகிய சிவதாசன் நைவேத்தியம் எங்கே என்று வினவினான். அவன் விநாயகப் பெருமான் திருவமுது செய்தார் என்று கூறினான். அப்போது அவன் தாயானவள் இந்தப்பிள்ளை தினந்தோறும் வெறும் பாத் திரத்துடன் வீட்டிற்கு வருகிறான். பரமான்மாவாகிய பிள்ளை யார் புசித்தார் என்று கூறுகிறான்- காரணம் இன்னதென்ப தை யான் அறியேன் என்றாள்.

அ. அதைக் கேட்டதும் அக்குழந்தையின் பிதாவானவன் அன்றிரவு சந்திரோதய காலத்தில் திவ்வியான்னத்தையும் மோ தகங்களையும் ஏனைப் பூசை உபகரணங்களையும் எடுத்துக்கொண்டு தனது திருக்குமாரனோடும் கணபதி ஆலயத்திற்குச் சென்றான். சென்றதும் குழந்தாய் நீயே கணேசப் பெருமானுக்குப் பூசை யை வழக்கம்போல மகிழ்ச்சியோடு செய்வாயாக. நான் சிவ லிங்கப்பெருமான் சந்நிதிக்குப் போய் விரைவில் வருவேன் என்று தன் புத்திரனுக்குச்சொல்லி வெளியே கோமுகைத்துவா ரத்தில் நின்றனன்.

கூ. அப்போது சந்திரசேகரனென்னும் குமாரன் அப்படி யே விநாயகரைப் பூசித்து நைவேத்தியங்களைக் கணேசப்பெருமா னுக்கு எதிரே வைத்துத், தேவரே ; கணநாதரே! உமது கருணை யால் திவ்வியான்னத்தையும் மோதகங்களையும் திருவமுது செய் தருள வேண்டுமென்று பிரார்த்தித்தான். விநாயகப்பெருமான் திருவுளமகிழ்ந்து தமது துதிக்கையால் அவைகளை எடுத்துக் கணப்பொழுதில் திருவமுது செய்தருளினார்.

௧0. அந்த நிகழ்ச்சியை வெளியே நின்று கோமுகை வழியாகப் பார்த்துக்கொண்டிருந்த அப்பாலகனுடைய பிதாவானவன் மகிழ்ச்சியும் ஆச்சரியமும் எய்திக் குழந்தையின் சமீபத்தை அடைந்து விநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து ஓ தேவரே! உலகங்களுக்குத்தந்தையே! கணநாதரே! தேவரீரால் இவைகள் திருவமுது செய்யப்படுமேயானால் மனிதர்களாகிய யாங்களெல்லாம் உணவுக்கு என் செய்வோம் என்று விண்ணப்பித்தான். அவனது விண்ணப்பத்தைக் கேட்டு அங்கே ஓர் அசரீரி வாக்கானது "உன்னுடைய இந்தப் புத்திரனது பத்தியால் மகிழ்ந்த நாம் அவனுடைய பிரார்த்தனைப்படி எம்மிடத்திலேயே வைக்கப்பட்ட மனத்தோடு அவனால் தரப்பட்டவைகளைத் திருவமுது செய்தோம்" என்று உண்டாயிற்று. இவ்வாறெழுந்த அசரீரியைக் கேட்டு ஆநந்தமுற்ற பிதாவானவன் ஆநந்தப்பெருக்கால் செய்வதின்னதென்று அறியாது நின்றான்.

௧௧. அப்போது விநாயகப்பெருமான் மகிழ்ச்சியோடு ஒற்றைக் கொம்பும், மூன்று கண்ணும் பிறைமுடியும் பெருவயிறும் உடையராக அப்பாலனுக்கெதிரிலே வெளிப்பட்டருளினர். சிவதாசன் அவரைப் பார்த்து மூர்ச்சையுற்று விழுந்தான். சந்திரசேகரன் என்னுஞ் சிறுவன் கருணாகராகிய கணேசரைத் தரிசித்து அப்பெருமானருளாற் கிடைத்த ஞானத்தால் அவரைத் துதிக்க ஆரம்பித்தான்.

௧௨. பிறப்பில்லாதவனும் விகற்பமில்லாதவனும் வடிவில்லாதவனும் ஒருவனும் பற்றில்லாதவனும் இரண்டல்லாதவனும் இன்பநிறைவினனும் முன்னோனும் முக்குணமில்லாதவனும் விசேடமில்லாதவனும் விருப்பமில்லாதவனும் பரப்பிரமரூபனுமான கணேசப்பெருமானை நான் சேவிக்கின்றேன்.

௧௩. குணங்களைக் கடந்தோனும் முதலானவனும் அறிவின்ப வடிவினனும் உயிர்களின் அறிவை விளக்குவோனும் அனைத்தினும் நிறைந்தோனும் ஞானத்தால் அறியப்படுவோனும் முனிவரால் தியானித்தற்குரியோனும் ஆகாசவடிவினனும் மேலான இறைவனும் பரப்பிரம ரூபனுமான கணேசப்பெருமானை நான் சேவிக்கின்றேன்.

௧௪. உலகங்களுக்கு நிமித்தகாரணனும் காரணங்களைக் கடந்தோனும், ஆளுகின்றவனும் விண்ணோர்க்கு முதல்வனும்

இன்பத்திற்கு முதல்வனும் யுகங்கட்கு முதல்வனும் சிவ கணங்கட்கு இறைவனும் உலகெலாம் நிறைந்தோனும் அனைவராலும் வணங்குதற்குரியோனும் தேவர்களை ஆள்பவனும் பரப்பிரம ரூபனுமான கணேசப்பெருமானை நான் சேவிக்கின்றேன்.

கரு. வேதங்களை அறிந்தோனும் இராசதகுணச் சேர்க்கையால் எப்போதும் காரியங்களில் இச்சையுடையவனும் இருதயத்தால் சிந்திக்கத் தக்கவனும் உலகத்தைப் படைப்போனும் எல்லா வித்தைகட்கும் இருப்பிடமானவனும் ஆகிய பிரமாவின் வடிவத்தை அதிட்டிப்பவனும் பரப்பிரம ரூபனுமான கணேசப் பெருமானை நான் சேவிக்கின்றேன்.

கசு. எப்போதுஞ் சத்துவகுணச் சேர்க்கையால் மகிழ்ச்சியோடு விளையாடுகின்றவனும் விண்ணோர் பகைவரை அழிப்பவனும் உலகங்களைக் காப்பவனும் அநேக அவதாரங்களையுடையவனும் அன்பர் அறியாமையை நீக்குபவனுமான விட்டுணுவின் வடிவத்தை அதிட்டிப்பவனாகிய கணேசப்பெருமானை நான் எப்பொழுதுஞ் சேவிக்கிறேன்.

கஎ. மூன்று கண்களையுடையவனும் உலகங்களை அழிப்பவனும் பிறவிக்கடலை நீந்தச் செய்கின்ற ஞானத்துக்குக் காரணனும் எண்ணிறந்த ஆகமங்களால் தன் அன்பர்களை உணர்த்துபவனும் சிவபெருமானது வடிவுடையவனும் தமோகுணச் சேர்க்கையை உடையவனுமாகிய உருத்திரனது வடிவத்தை அதிட்டிக்கின்ற கணேசப்பெருமானை நான் எப்பொழுதுஞ் சேவிக்கின்றேன்.

கஅ. இருட்கூட்டங்களை அழிப்பவனும் அன்பர்களின் அறியாமையை நீக்குபவனும் மூன்று வேதத் தொகுதியின் சாரமாயுள்ளவனும் பரப்பிரம ரூபனும் (இருளின்) கரையாக உள்ளவனும் முனிவர்களுக்கு ஞானத்தைச் செய்பவனும் மிக்க தூரத்திற் சென்ற விகாரத்தையுடையவனுமாகிய சூரியவடிவத்தை அதிட்டிக்கின்ற கணேசப்பெருமானை நான் எப்பொழுதுஞ் சேவிக்கின்றேன்.

கக. தன்னுடைய கிரணக் கூட்டங்களால் பயிர்களையும் அமுதம் பெருகும் கலைகளால் தேவர் கூட்டங்களையும் மகிழ்விப்போனும் சூரியகிரண வெப்பத்தை நீக்குவோனும் இரு

பிறப்பாளர்க்கிறைவனுமாகிய சந்திரனது வடிவத்தை அதிட்டிக்கின்ற கணேசப்பெருமானை நான் சேவிக்கின்றேன்.

உ௦. ஒளியின் வடிவினனும் ஆகாயவாயு வடிவினனும் ஏனைக்காரிய முதலியவற்றிற்குக் காரணனும் கலையுங்காலமும் வடிவானவனும் பலவேறு தொழில் செய்யும் ஞானக்கிரியா சத்தி சொரூபமானவனும் அருளே திருமேனியாகவுடையவனுமாகிய கணேசப்பெருமானை நான் எப்பொழுதுஞ் சேவிக்கின்றேன்.

உக. மூலப்பிரகிருதியும் மகத்தத்துவமும் பூமியும் சலமும் திக்குப்பாலகர் முதலியோரும் அசத்தும் சத்துமாகிய விசுவத்துக்கு அந்தர்யாமியும் விசுவகாரணனும் விசுவரூபியுமாகிய கணேசப்பெருமானை நான் எப்பொழுதுஞ் சேவிக்கின்றேன்.

உஉ. விசாலமாய் விளங்குகின்ற சூரிய மண்டலத்திலிருக்கும் இந்தச் சனமானது இருளின் துன்பத்தை எப்படி அடையும் (அடையமாட்டாது) அதுபோல மனிதன் தன் மனத்தை உன்னுடைய திருவடித் துணையில் வைப்பானேயானால் இடையூறின் கூட்டத்தினல் துன்பத்தை அடையமாட்டான்.

உஙு. உலகத்தைத் தாங்குபவனே! முதல்வனே! நான் அறியாமைச் சேர்க்கையால் பல வருடங்களாக உன்னுடைய திருவடியை அடையாமல் எப்பொழுதும் சுழன்றேன். உன்னுடைய அநுக்கிரகத்தினாலேயே இப்பொழுதடைந்தவனானேன். அடைக்கலம்புக்க என்னை எஞ்ஞான்றுங் காத்தருள்க.

உச. அத்துதிகளால் மகிழ்ச்சியுற்ற கணேசப்பெருமான் சந்திரசேகரனைப் பார்த்துக் கூறுவாராயினர். பத்தர்களுட் சிறந்த மகாபாக்கியசாலியாகிய சந்திரசேகரனே! இந்தத்தோத்திரத்தை எந்தப்புத்திசாலியானவன் பிராதக்காலத்தே நித்திரை விட்டெழுந்து படிக்கின்றானோ மூன்று சந்திகளிலும் பரிசுத்தனாகி அன்புடன் தோத்திரிக்கின்றானோ அவன் புத்திரப் பேற்றையும் இலக்குமியையும் எல்லாவிருப்பங்களையும் அடைவான். அந்தியகாலத்தில் பரப்பிரம சொரூபத்தையும் அடைவான்.

உரு. நீ எமது சரணங்களிலேயே அழுந்திய உள்ளமுடையவனாகியகாரணத்தால்உனக்கு ஒருநம்பி என்னும் புனிதமாகியபெயர் எம்மால் அளிக்கப்பட்டது. ஓ குழந்தாய்! வைகாசிப் பௌர்

ணிமையிலே உனக்குத் தரிசனம் தரப்பட்டது. அன்றுமுதல் ஐந்து நாளும் உன்னால் தரப்பட்ட நிவேதனம் நம்மால் உண்ணப்பட்டது. அன்பனே வைகாசிப் பௌர்ணிமை உனக்குத் தரிசனமளித்த தினமாம். இன்று உனக்கு வரமளித்த தினமாம். ஆதலால் நீ விரும்பிய வரங்களைக் கேட்பாயாக என்று சொல்லியருளினார்.

உசு. அதனைக்கேட்ட சந்திரசேகரன் ஆனைமுகத்தெம்பெருமானே! அடியேன் உனது பாதாரவிந்தத்தில் அழுந்திய பத்தியையன்றி வேறொன்றையும் வேண்டேன் என்று கூறி ஆநந்தத்துள் அழுந்தி விநாயகப் பெருமானுக்கு எதிரே நின்றான். தேவர்கட்கிறையாகிய கணேசப் பெருமான் அக்குழந்தைக்குத் தேகவன்மையும் அழகும் வித்தையும் பத்தியும் சம்பத்துமாகிய இவைகளை அளித்தருளி ஓ குழந்தாய்! நீ நமது ஆணையால் நன்மையில்லாத சமயங்களை அழித்துச் சைவம், காணபதம் என்னும் இச்சமயங்களைப்பூமியில் நிலைபெறச்செய்து பூவுலக இன்பங்களையெல்லாம் நுகர்ந்து அதன்மேல் மீளாக்கதியாகிய நமது பதத்தை அடைவாயாக என்று சொல்லியருளிப் பிரீதியோடு அக்குழந்தையைத் தழுவித் தமது திருக்கரத்தை அக்குழந்தையின் சிரசின்மேல் வைத்துத்தீக்ஷை செய்தருளினார். அப்பொழுது சிவதாசன் குழந்தையையும் விநாயகப்பெருமானையும் உபதேசகோலமாக அதிக ஆவலோடு தரிசித்தான். உடனே விநாயகப்பெருமான் தமது திருவுருவினுள்ளே மறைந்தருளினார்.

உஎ. அப்போது சிவதாசனாகிய தந்தை விநாயகப்பெருமானுக்குப் பக்கத்திலே நிற்கும் புத்திரனைக்கண்டு முதிர்ந்தஅன்போடுகூறுகின்றான். மகாபுத்தியோடு கூடிய என் காதல் மைந்தனே! யானும் என் வமிசத்தில் பிறந்தோர்களும் புத்திரனாகிய உன்னால் பிறவிக்கடலைத்தாண்டினவர்கள் ஆனோம் என்றுசொல்லி புத்திரனைத் தழுவிக்கொண்டு மகிழ்ச்சியோடு வீட்டுக்குச் சென்றான். புத்திரனால் நிகழ்ந்த செய்திகளையெல்லாம் மனைவிக்குச் சிவதாசன் கூறினான்.

உஅ. அக்குழந்தையாகிய சந்திரசேகரசிவாசாரியன் விநாயகபூசை செய்யாது உண்பதில்லை. அவன் இராசேந்திர பட்டணத்தை அடைந்து சோழராசாவினால் உபசரிக்கப்பட்டு ஒப்

பில்லாத சைவ வித்தைகளைப் பிரகாசப்படுத்தினன். கணேசப் பெருமானருள் பெற்ற ஒருநம்பி என்று உலகமெங்கும் புகழ் பரவிற்று. அந்தநாள் தொடங்கி உலகெங்கும் நாரையூர்ப்பிள்ளை யாரும் சிறந்த அந்தணர்களால் துவிசப்பிரியகணேசர் எனக் கூறப்பெற்ருர்.

உகூ. யோகிகளாகிய முனிவர்களே! வைகாசிமாசத்துப் பௌர்ணிமையும் அதுமுதல் துவிசப்பிரிய பௌர்ணிமை என்று உலகெங்கும் கூறப்பட்டது. அன்றுமுதல் கிருட்டினபக்ஷசதுர்த் தியும் துவிசப்பிரியசதுர்த்தி என்று கூறப்பட்டது.

௩௦. சிவப்பிராமணனுகிய சந்திரசேகரன் என்னும் ஒருநம் பியும் சோழராசாவினுலே அபிமானிக்கப் பெற்று நன்மையில் லாத புறச்சமயங்களைக் கண்டித்துக் கணபதி மதத்தையும் அறு வகைச் சைவத்தையும் பெருமைப்படுத்தினன். இவ்வாறு ஒரு நம்பி என்னும் சிவாசாரியன் அநேக வருடங்கள் நிலைபெற்று வாழ்ந்து மீளாதகதியாகிய விநாயகபதத்தை அடைந்தான். இந்த ஒருநம்பிசிவாசாரியனது சரித்திரத்தை எவன் படிக்கின்றனோ எவன் கேட்கின்றனோ அவன் எல்லா விருப்பங்களையும் அடை ந்து கணேசபதத்தையும் அடைவான்.

இருபத்தேட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

இருபத்தொன்பதாவது
நம்பியாண்டார்நம்பிக்கு அருள்புரிந்த அத்தியாயம்.

க. சண்முகப் பெருமான் முனிவர்களைப் பார்த்து மே லுங் கூறுகின்றார். ஓ முனிவர்களே! சந்திரசேகரன் என்னுஞ் சிறுவன் பொருட்டு எந்தப் பௌர்ணிமைதினத்தில் பரமான் மாவாகிய கணேசப் பெருமானுல் நிவேதனந் திருவமுது செய் யப்பட்டதோ அந்தத் தினத்தில் பிராமணர்களால் வேண்டிக் கொள்ளப்பட்ட சோழராசன் பத்தபாலகராகிய கணேசப்பெரு மானுக்குத் திருவிழாச் செய்வித்தான்.

உ. சந்திரசேகரனுகிய ஒருநம்பிக்குப் பேரன்மகனுகிய அநந்தேசன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் தனது

குலதேவதையாகிய கணேசப் பெருமானை உறுதியான அன்போடு பூசை செய்துவந்தான். அவன் வைகாசிப் பௌர்ணிமையிலிருந்து சதுர்த்தி வரையில் விநாயகப் பெருமானுக்கு நியமத்தோடு சிறப்பாகத் திருவிழாவை நடத்தினன். அந்தச் சிவப்பிராமணன் அவ்வைந்து தினங்களிலும் நம்பியாண்டாராகிய விநாயகருக்கு மகாபூசை விதிப்படி பூசையைச் செய்தான்.

ங. நம்பியாண்டார் திருவருளாலும் பௌர்ணிமைப்பூசையின் மாட்சிமையாலும் அடுத்த வைகாசிப் பௌர்ணிமையில் சுவாதி நட்சத்திரத்தோடு கூடிய சிறந்த இடப லக்கினத்தில் சூரியோதயத்துக்கு முன் அவனுக்கு ஒரு அருட்புத்திரன் பிறந்தான். அவ்வாதிசைவக் குருக்கள் பேரொளிப் பிழம்பாகிய அப்பிள்ளையைக் கண்டதும் அளவில்லாத மகிழ்ச்சியுள் திளைத்துப் பிராமணர்களுக்குப் பசுக்கள் வஸ்திரங்கள் ஆபரணங்கள் இரத்தினங்கள் பொன் பூரிதக்ஷிணைகள் ஆகிய இவற்றை எல்லாம் கொடுத்தான். பின் சோதிடநூலறிஞர்கள் கூறியபடி கணேசப்பெருமானுக்கு உகந்த பத்தபாலகபத்தன் என்னும் பொருள்பட நம்பியாண்டார் நம்பி என்னும் பெயர் தமிழுலகத்தில் விளக்கமுறும்படி அக்குழந்தைக்கு நாமகரணஞ் செய்தான்.

ச. அக்குழந்தையானவன் பிள்ளைமைப் பருவம் நீங்கினதும் சில தோழர்களுடன் கூடி நம்பியாண்டாராகிய விநாயகரது பூசையிற் பற்று மீதூர்ந்து மகிழ்ச்சியோடு தேவாலயத்தை அடைந்து அறுகங்கொழுந்துகளால் கணபதியை நன்கு பூசித்துப் பாவனையால் தூபதீபங்களை வழங்கி மோதகங்களையும் திவ்விய அன்னங்களையும் கறிகளையும் இலட்டுகம் முதலான பட்சணங்களையும் தெரிந்தவரை இலைகளாலும் சேற்றாலும் மண்ணாலும் கற்பித்து நிவேதித்துக் காய்ந்த சருகுகளாற் செய்யப்பட்ட மாலையையும் விநாயகருக்குச் சாத்தினன். சந்தனமாகக் கருதிச் சேற்றையே அள்ளி அன்போடு பூசித் தக்ஷிணை பழம் முதலியவைகளைச் சங்கற்பமாகவே வழங்கிச் சுவாமிசந்நிதியிலிருந்து முழந்தாளை அடிப்பதையே வாத்திய ஒலியாக முழக்கி முகூர்த்தநேரம் ஆனந்தக் கூத்தாடி, சுவாமீ நிவேதனங்களைத் திருவமுது செய்க என்று அவ்விநாயக மூர்த்தியைப் பலவிதமாகப் பிரார்த்தனை செய்து அழுதான். அதனால் விநாயக சைதன்னியம் அம்மூர்த்தியிடம்விளங்கிற்று. அச்சிறுவனால் என்னஎன்ன பொருள்

என்ன என்ன நிவேதனமாகக் கருதிச் சுவாமியின் திரு முன்பு வைக்கப்பட்டிருந்ததோ அது அது அவ்வாறே ஆயிற்று. உடனே இலட்டுகங்களையும் மோதகங்களையும் பாயசத்தோடு கூடிய அன்னத்தையும் அவ்விநாயக மூர்த்தியானது அவ்வாறே உண்டது. அப்பாலகனுடைய பத்தியாலும் விநாயகப் பெருமானது அருளாலும் பாவனையாக அமைக்கப்பட்ட மண்சோறும் பூவும் பழமும் முதலாகிய எல்லாவற்றையும் உண்மைப் பொருளாக மாற்றிக்கொண்டு அவ்விநாயகவுருவம் சேதனமுடையதாகி இனிதாக அப்போதே உட்கொண்டது. உடனே மனமகிழ்ச்சி அடைந்த பாலகன் மற்றைத் தோழருடன் வீட்டிற்கு மகிழ்ந்து சென்றான்.

ரு. இவ்விதமாக அப்பாலகன் தினந்தோறும் விநாயக பூசையைச் செய்துவந்தான். ஒரு காலத்தில் அப்பிள்ளையின் தாயாகிய கலியாணி என்பவள் குழந்தையோடு கூடச் சிறகிழந்த நல்லூரிலுள்ள தன் தாய் வீட்டிற்கு விருப்பத்துடன் சென்றாள், அங்கே போசனஞ் செய்தற்குரிய மத்தியான காலம் வந்தவுடன் அச்சிறுவன் விநாயகபூசை தினந்தோறுஞ் செய்வதை நினைந்து பொல்லாப்பிள்ளையாரது சந்நிதியை அடைய விரும்பி வீட்டை விட்டுப் புறப்பட்டான். செல்லும்போது வழி தெரியாமல் ஓ பிரபுவாகிய கணேசரே ! நான் உம்முடைய சந்நிதியை அடையச் செய்யவேண்டும் என்று பிரார்த்தித்து அழுதான். துக்கத்தால் வருந்திய அப்பாலகன் உடனே விநாயகருடைய சந்நிதியைப் போய் அடைந்து பெருமகிழ்ச்சியோடு விநாயகப் பெருமானைப் பூசை செய்தான். பூசை முடிந்ததும் அப்பால சுந்தரன் இனித் தாயின் சமீபத்தை அடையவேண்டுமென்று விநாயகப்பெருமானைப் பிரார்த்தித்தலும் உடனே தாயின் சமீபத்தை அடைந்தான். பாட்டன் வீட்டிலிருந்தகாலத்திலும் அக்குழந்தையானவன் இவ்வாறே விநாயகப் பெருமானைப் பூசித்து வந்தான்.

சு. நம்பியாண்டார் நம்பியாகிய அச்சிறுவன் ஐந்தாம் வயதில் ஒரு அந்தணசிரேட்டனிடத்தில் அன்போடு கல்வி பயில்வதற்குப் பிதாமாதாக்களால் சேர்ப்பிக்கப்பட்டான். நம்பியாண்டார் நம்பியாகிய அப்பாலகன் அவ்வாசானை வஞ்சித்துத் தேவாலயத்துக்குப் போய்க் கணநாதரைப் பூசித்துக்கொண்டுவந்தான். இப்படி நிகழுங்காலத்திலே பொல்லாப் பிள்ளையாரது திருவரு

லால் பதினெட்டு மகாவித்தைகளிலும் அறுபத்துநான்கு கலை ஞானங்களிலும் வல்லமையடைந்த நம்பியாண்டார் நம்பியாகிய சிறுவன் நாள்தோறும் விநாயகபூசைமுடிந்ததும் பாடசாலைக்குப் போனான். கையிற் பிரம்பையுடைய அவ்வாசிரியன் அக்குழந் தையைப் பார்த்துக்கோபித்து விளையாட்டுக்காக வெளியேசென் றானென்று நினைந்து அவனை நன்றாக அடித்து, அடே துட் டா! நீ இவ்விடத்தை விட்டு எங்கும் போகக்கூடாது. பாட சாலைக்கு வெளியே போனால் நீ உண்மையாக இறந்துபோவாய், என்று கூற அப்பாலகன் தனது ஆசிரியனைப் பார்த்து 'ஓ தேவ ரே! நான் விளையாட்டிற்காக வெளியே செல்லவில்லை. என்னு டைய தேவபூசையின் பொருட்டுச் செல்வேன். இதுதான் உண்மை. உம்மிடத்தில் நான் வித்தை கற்பதன்பொருட்டு விடப்பட்டிருக்கிறேன். வேறொன்றுக்கும் இல்லை. என்னை வித்தைகளில் பரிசை செய்யலாம். நான் விடை கூறுவேன்' என்று பாலகன் கூறினான்.

எ. ஆசிரியனாகிய பிராமணன் அவ்வார்த்தையைக் கேட்டு, தைரியத்துடன் கூடிய அப்பாலகனைப் பார்த்து மற்றைப்பிள்ளை களின் கூட்டத்தில் வித்தைகளிலே பலவிதமாகிய வினாக்களைக் கேட்டான். அப்பாலகன் அவ்வினாக்களுக்கெல்லாம் முறைப் படி விடைகளைக் கூறினான். கூறுதலும் இவன் பதினெண் வித் தைகளிலும் திறமை வாய்ந்தவனென்று பிராமணன் தெரிந்து கொண்டு விரும்பியவாறே விளையாடும்படி அச்சிறுவனுக்கு அநு மதி கொடுத்தான்.

அ. பின்பு அவ்வுபாத்தியாயப் பிராமணன் மனமகிழ்ச்சியு டன் அப்பாலகனுடைய தந்தைபாற் சென்று ஓ அநந்தேசசிவா சாரியரே! என் மாணாக்கர் எல்லாருள்ளும் உமது புத்திரன் அறி வால் மேம்பட்டவன். ஆதலால் சுருங்கிய காலத்துள் எல்லா வித்தைகளையும் படிப்பித்தேன். பெருமைவாய்ந்த உமது புதல் வன் எல்லா வித்தைகளிலும் திறமையுள்ளவனாயினான். இனி நீர் உமது மகனைப் பரிசைசெய்து எனக்குத் தக்ஷிணை தர வேண்டுமென்று கூறினான். அதனைக் கேட்டு மகிழ்ந்த அநந் தேச சிவாசாரியன் கல்வியிற் சிறந்த பிராமணர்களை அழைத்து அவர்களைக்கொண்டு தன் மகனை வித்தைகளிலே பரிசை செய்

வித்து எல்லா வித்தைகளிலும் தன் மகன் வல்லனுயிருத்தலைக் கண்டு உபாத்தியாயனுக்கு வேண்டிய பொருளைக் கொடுத்து உபசரித்து அனுப்பினுன்.

௯. பின்பு அவ்வநந்தேசசிவாசாரியன் தனது புத்திரனுக்குச் சிவதீக்ஷை செய்து விக்கினேச பூசை செய்யும்படி தன் மகனையே அனுப்பினுன். அவனும் பூசைத் திரவியங்களுடன் தேவாலயத்தை அடைந்து கணேசப் பெருமானை அன்புடன் பூசித்து நைவேத்தியத்தைச் சுவாமி சந்நிதியில் வைத்துத் திருவமுது செய்தருளுக என்று அன்போடு பிரார்த்தித்தான். கணேசப்பெருமான் அவன் வேண்டுகோளின்படி விருப்பத்தோடு அதனைத் திருவமுது செய்தருளினுர். அக்குமாரன் வெறும் பாத்திரத்தைக்கொண்டு வீட்டுக்குச் சென்றுன். அப்போது பிதா பிள்ளையைப் பார்த்து நிவேதனம் எங்கே என்று கேட்டான். உடனே பாலகன் அது தேவரால் திருவமுதுசெய்யப்பட்டது என்றுன். அதைக் கேட்ட தாய் இஃது என்ன வியப்பாயிருக்கின்றது என்று சொன்னுள். அநந்தேசன் மனைவியை நோக்கிப் பெண்ணே! எமது தந்தையின் பாட்டனுருடைய சரித்திரம் என்னுற் கேட்கப்பட்டுளது. அது முதல் கணபதி நமக்குக் குலதேவதையாக ஆனுர். இச்சிறுவனது பிரார்த்தனைப்படி இவன்மீது வைத்த கருணையால் நம்பியாண்டாராகிய விநாயகர் இவன் நிவேதித்த அன்னத்தைத் திருவமுது செய்திருப்பார். ஆதலால் இவனேடு நானும் உடன் சென்று அந்நிகழ்ச்சியைச் சந்தேகமகலத் தேர்ந்து கொள்வேன் என்று கூறி அன்போடு மகனைத் தழுவிக்கொண்டிருந்தான்.

௧0. அதன் பின் அடுத்தநாள் சித்திரைப் பூரணையில் பூசைக்கு வேண்டுந் திரவியங்கள் முழுவதுங் குறைவின்றி எடுத்துக்கொண்டு பொல்லாப் பிள்ளையாரைப் பூசை செய்யும்படி மகனை அனுப்பினுன், அத்தினத்திலே தரிசனஞ் செய்வதற்காக அந்தணர் யாவரும் தேவாலயத்தை அடைந்தார்கள். அநந்தேச சிவாசாரியனும் மனைவியோடு கோயிலுக்குச் சென்றுன். அப்போது அப்பாலகன் பூசைத் திரவியங்களால் விநாயகப் பெருமானைப் பூசை செய்து இரட்டைமணிமாலை என்னுந் தமிழ்த்தோத்திரப் பிரபந்தத்தால் கணேசரை அன்போடு துதித்து மோதகங்களையும் அன்னங்களையும் சுவாமி திருமுன்பு

வைத்து எம்பெருமானே இவற்றைத் திருவமுதுசெய்யவேண்டு மென்று அன்போடு பிரார்த்தித்தான். அப்பாலகனது பத்தி யின் வசமாகிய பொல்லாப்பிள்ளையார் அவை எல்லாவற்றையுந் திருவமுது செய்தருளினர் அக்குழந்தையின் அன்பால் அங்கே நிகழ்ந்ததைக் கண்டாரனைவரும் ஆச்சரியமெய்தினர்கள். உட னே அந்தேசசிவாசாரியன் விநாயகப் பெருமானை வணங்கி 'ஓ எங்குல தேவதையே! கடவுளே! உலகத்தைப் படைத்தவ ரே! நம்பியாண்ட கணபதியே! விக்கினநாதரே! உமது அடி யார் பெருமையை அடியேன் அறிகிலேன்' என்றுகூறி மிக்க மகிழ்ச்சியோடு கணேசப்பெருமானை வணங்கினன்.

கக. அப்போது விநாயகப் பெருமான் பேரொலியுடன் கூடிய திருமொழியால் எல்லாருங் கேட்கும்படி, அப்பாலக னுக்கு மூன்றுவது வயதிலே பத்தியுண்டானதையும் அதனல் செய்த பூசையையும் அவனுடைய பத்திக்காகத் தாம் அவ னுக்கு அநுக்கிரகஞ்செய்ததையுங் கூறி, இவன் எமக்குக் கண கன்போல எமது பத்தர்களுக்குள்ளே சிகாமணியானவன். இவன் நம்பியாண்டார்நம்பி என்று அழைக்கப்படுவான். இவனது பத் தியால் இப்போது உங்களுக்கும் தரிசனந்தரப்பட்டது. இவன் பூமியில் எமதுபத்திமார்க்கத்தை நிலைநாட்டுவான். கணகனுடைய அமிசமாய்அவதரித்த இவன் பத்திமார்க்கத்துக்குக்குருஆவரன். உங்களுக்கு அநுக்கிரகஞ்செய்த தினமாகிய இன்றும் இப்பா லகன் அவதாரமான தினத்திலும் பத்தியோடு யாவர் எம்மை யும் எம்முடைய பத்தசிகாமணியாகிய இப்பாலகனையும் பூசிக் கின்றார்களோ அவர்களுக்கு நாம் அறம் பொருள் இன்பம் வீடாகிய நான்கு புருஷார்த்தங்களையும் அளிப்போம். எங்கள் இருவருக்கும் எவர்கள் விருப்பத்தோடு உற்சவம் செய்விக்கின் றார்களோ அவர்களுக்குப் பதினறு பாக்கியங்களையுங்கொடுத்து எமது உலகத்தையும் அளிப்போம் என்று பிராமணர் அனை வருக்குங் கூறியருளித் தமது பத்தனுகிய அப்பாலசுந்தரனை அன்போடு தழுவி ஓ நல்விரதமுடைய குழந்தாய்! நீ நமது ஆணையால் நமது பத்திமார்க்கத்தை உலகத்திலே நாட்டிப் பெரும்போகங்களை அநுபவித்து முடிவிலே நமது பதவியை அடைவாய் என்று திருவாய்மலர்ந்தருளித் தமது திருவுருவிலே மறைந்தருளினர்.

கஉ. அங்கே வந்திருந்த பிராமணர்களெல்லாம் அக்குழந்தையழகனை வணங்கிக் குருவாகக்கொண்டார்கள். மகிழ்ச்சியை அடைந்த தாயும் தந்தையும் தமது புத்திரனேடு வீட்டிற்குச் சென்று ஆநந்தபரவசராய் மெய்ம்மறந்தவர்களானர்கள்.

கங. நம்பியாண்டார்நம்பி சர்வசாரநிர்ணயமென்னும்நூலைச் செய்தான். அவனுடைய சரித்திரத்தைக் கேட்டுப்பலதேசங்களினின்றும் பிராமணர் முதலிய பலர் வந்து அவனையே குருவாகக்கொண்டு சர்வசாரநிர்ணயம் என்னும் நூலை உபதேசிக்கப் பெற்று அவனுக்குச் சமீபத்திலிருந்து அவனுபதேசித்த பத்தி மார்க்கத்தில் விருப்புற்றிருந்தார்கள்.

கச. நம்பியாண்டார்நம்பிசிவாசாரியனுக்குக் கணேசாது கிருபையால் அட்டசித்திகளும் உண்டாயின. அவன் பூமியிலே பலவிதமான சித்திலீலைகளையுஞ்செய்து கணேச பத்திமார்க்கத்தைத் தாபனஞ் செய்து கணேசப் பெருமானது நெறியிலே அவரையே முக்கியப் பொருளாகக்கொண்டிருந்து அடிக்கடி மயூரேச யாத்திரை செய்துகொண்டிருந்தான்.

கரு. அக்காலத்திலிருந்த அபய குலசேகர சோழராசன் இந்த நம்பியாண்டார் நம்பியினுடைய பெருமையைக் கேள்விப்பட்டு ஆச்சரிய மெய்தித் தனது நாட்டிலுள்ளார் அனைவரோடுங்கூடி மோதகமும் அப்பமும் பலவகைக் கறிகளுடன் கூடிய திருவமுதும் பாயசமும் முதலிய உண்பன தின்பன பருகுவன நக்குவன என்னும் நால்வகையாகிய பொருள்களையும் விருப்பத்தோடு திருநாரையூருக்குக் கொண்டுவந்து பூமியில் பத்துயோசனை தூரமளவும் பரப்பிவைக்கும்படி செய்வித்து நம்பியாண்டார் நம்பியைப் பத்தியோடு சாட்டாங்கமாக வணங்கி இந்த நைவேத்தியங்களையெல்லாம் கணேசப்பெருமானுக்கு நிவேதனம் செய்தருளுக என்று பிரார்த்தித்தான். உடனே நம்பியாண்டார் நம்பி மந்திரத்தோடுகூடிய நிரீக்ஷணத்தால் அவைகளையெல்லாம் சுத்தஞ்செய்து பொல்லாப்பிள்ளையாருக்கு நிவேதனஞ் செய்தான். அப்பொருள்களையெல்லாம் பிள்ளையார் தமது துதிக்கையினல் எடுத்துத் திருவமுது செய்தார். சோழராசா அந்த அற்புதச் செயலைக் கண்டு நம்பியை அன்போடுவணங்கி, சுவாமீ! மறைந்திருக்குந் தமிழ்வேதமாகிய தேவாரத்தையும் திருத்தொண்டர் சரித்திரத்தையும் பூமியிலே விளங்கும்படி செய்தருள

வேண்டுமென்று பலமுறை வேண்டிக்கொண்டான். அரசனது பிரார்த்தனையால்மனமகிழ்ந்த நம்பி பொல்லாப்பிள்ளையாரது அநுக்கிரகத்தால் திருத்தொண்டர் சரித்திரத்தையும், சிதம்பரத்திற் சிற்சபைக்குப்பக்கத்திலுள்ள ஓர் அறையில் தேவாரத்திருமுறைகள் முழுவதுமிருப்பதையும் உள்ளபடி அறிந்து அரசனோடுகூடச் சிதம்பரத்தையடைந்து நடேசப்பெருமானை வணங்கி, கோயிற்றிருப்பண்ணியர்விருத்தமென்னும் தமிழ்த்தோத்திரத்தால்பேரன்போடு துதித்தான். பின்பு மகிழ்ச்சிமிக்க மனமுடைய அரசனால் தேவார ஏடுகளை வெளிப்படுத்தி அவ்வரசன் வேண்டிக்கொண்டபடி தமிழ் வேதங்களைத் திருமுறையாக வகுத்தான். திருத்தொண்டர் சரித்திரத்தையும் அந்தாதிப் பிரபந்தமாகச் செய்தான். திருஞானசம்பந்தப் பிள்ளையினிடத்தில் பேரன்புடையவனாய் ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி முதலிய ஆறு பிரபந்தங்களைச் செய்து அச்சம்பந்தன் பாதங்களுக்குச் சமர்ப்பித்தான். திருவேகாதசமாலை என்னுந்தமிழ் மாலையைத் திருவாகீசமூர்த்தியுடைய மார்பிலே சூட்டினான். இங்ஙனந் தான்செய்த பிரபந்தங்களைப் பதினோராந்திருமுறையிலேசேர்த்துக் கோவைசெய்து நடேசப்பெருமானை வணங்கிக்கொண்டு திருநாரையூரை அடைந்தான்.

கசு. நம்பியாண்டார்நம்பி மகத தேசாதிபனுஞ் சக்கரவர்த்தியுமாகிய தருமசித்தன் என்னும் பெயருடைய நந்தராசனால் சிறப்பாக ஆராதிக்கப்பட்டு அநேக சீடர்களால் சூழப்பட்டவனாய் நூறு வருடம் பூமியில் வாழ்ந்து பிதாமாதாக்களோடும் நந்தராசனோடும் சிறந்த விமானமீதூர்ந்து அநேக வாத்திய முழக்கங்களுடன் பிரமா இந்திரன் முதலியவர்களால் துதிக்கப்பட்டு மீண்டு வாராத ஆநந்தமயமாகிய முத்தியுலகை அடைந்தான்.

கஎ. இத்தன்மைத்தாகிய உயர்ந்த புண்ணியமானதும் எல்லாப் பாவங்களையும் போக்குவதும் மிகுந்த ஆச்சரியமுடையதுமாகிய இந்த நம்பியாண்டார் நம்பியின் சரித்திரத்தை எவன்படிக்கின்றானோ எவன் கேட்கின்றானோ அவன் இம்மையிலே கணநாதருடைய திருவருளால் சகல போகங்களையும் நுகர்ந்து முடிவில் சிவானந்தப் பேற்றையும் பெறுவான்.

இருபத்தோன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

முப்பதாவது
புதன்கதையுரைத்த அத்தியாயம்.

க. சண்முகப்பெருமான் மேலுங்கூறுகின்றார்:—

கௌடதேசத்தின் தலைநகரில் முற்காலத்திலே ஒரு அந்தணன் இருந்தான். அவன் தவமும் ஞானமும் நிறைந்தவன். தேவபூசையும் பிராமண பூசையும் உடையவன். அவனுக்குச் சாகினி என்னும் மனைவியிடத்தில் ஒரு சிறந்த புத்திரன் பிறந்தான். அக்குமாரன் ஒரே பிள்ளை என்னும் பிரியத்தால் அநேக ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு அழகின் மிக்கவனாய் மன்மதனைப் போல விளங்கினான். அவனுடைய தாய் தந்தையர்கள் அச்சிறுவனை ஒரு கணமும் பிரியமனமில்லாமல் இருந்தார்கள்,

உ, அக்குமாரன் யௌவனபருவத்தை அடைந்து தனது மனைவியின்பால் விருப்பமின்றி அவளைவிட்டுப் பரதாரங்களில் விருப்புற்றுத் தினந்தோறும் பிறரை நிந்தித்தலையே முக்கியமாகக்கொண்டு பிதா வாக்கைக் கடந்து பாபச் செய்கையிலேயே நிற்பவனானான்.

ந. ஒருநாள் மனிதர்களைமயங்கச்செய்யும் வேசை ஒருத்தி அவ்வூரிலே வந்தாள். பிராமணரில் அதமனாகிய அச்சிறுவன் அவளிடத்திலே சென்ற மனமுடையவனாகி என்ன செய்தான் என்பதை முனிவர்களே! நீவிர் கேண்மின்கள். தானே தன் ஆபரணங்களையெல்லாம் கழற்றிப் பிதாமாதாக்கள் காணும்படி பெட்டியில் வைத்தான். பிறகு அவைகளைக் களவாக எடுத்துக் கொண்டுபோய் அவ்வேசி கையிற்கொடுத்து அவளோடு மிகவும் காமலீலைகளில் கலந்திருந்தான். வேறு புலன்களில் வேட்கை ஒன்றுமிலனாய்ச் சந்தன முதலிய நறுமணப்பொருள்களையணிந்து யோகியானவன் பிரமப் பொருளிடத்திலழுந்துதல்போல அவ் வேசியிடத்திலேயே அழுந்தி மதங்கொண்டவன் கள்ளுண்டலால் வருந்துதல் போலக் காமத்தீயினால் உடலம் வெதும்பிக்கிடந்தான்.

ச. தன் மகனைக் காணப் பெறாத தந்தை பெருந் துன்பமுற்றுப் பசி தாகங்களையுந் துறந்து வீதிகளிலுள்ள வீடுகளிலெல்லாந் தேடியும் புத்திரனைக் காணாமல் உச்சுவாச நிச்சுவாசங்கள்

மேற்கொண்டு அன்று இரவில் மனைவியைப் பார்த்துப் புதன் என்னும் நமது புத்திரன் எங்கே சென்முன்; அவன் இல்லாமையால் நமது வீடு இரவில் தீபமில்லாத வீடுபோலவும் நீரில்லாத குளம்போலவும் குழந்தையில்லாத பெண்போலவும் பயனற்றதாக இருக்கிறது. எனது பிராணனைக் காப்பாற்றக் கூடிய அவனது காட்சி எப்போது உண்டாகும் என்று கேட்க மனைவி கூறுகின்முள். என் நாதனே பசியாலும் தாகத்தாலும் வருந்தி மனக்கவலையும் புத்திரசோகமும் மீதூர்ந்து ஒன்றுந் தோன்முதிருக்கின்றேன். நமது புத்திரன் எங்கே சென்முனென்பதை அறியேன். என்மகனைக் கண்டால்தான் உயிர் வாழ்வேன் இல்லாவிடிற் பிழையேன் என்று சொன்னுள்.

ரு. அதைக் கேட்ட அந்தணன் மறுபடியும் வீதிவாய்ப் புறப்பட்டுக் கையில் ஒரு தடியைப் பிடித்துக்கொண்டு சென்முன். வழியிலே கண்டவர்களையெல்லாம் தன் மகனைப் பற்றி உசாவினுன். அவ்வேதியன் எப்போது பசியால் களைப்புற்முனே அப்போதே மயக்கத்தையுமடைந்தான். அப்போது மிக விருத்தனும் மிக்க பயங்கரனும் வேறு சாதிக்காரனுமாகிய பீமன் என்பவன் அந்தணனுல் மகனைப்பற்றி வினுவப்பட்டுத் தெளிவாகக் கூறுவான்.

சு. உன்னுடைய மகன் புதன் என்பவன் வேசைவீட்டில் காமவிருப்பமுடையவனுய்ச் சுகமாக மகிழ்ச்சியோடு விளையாடிக் கொண்டிருக்கிறுன். எவனுக்குப் பிள்ளை! எவனுக்குத் தாய் எவனுக்குத் தந்தை (ஒருவருக்கு ஒருவர் என்ன தொடர்பு, ஓ பிராமணு நீ என் கவலை அடைந்து கொண்டிருக்கிருய் என்று கூறத்தூர்வன் என்னும் அவ்வந்தணன் கூறுவான்.

எ. என்னுடைய மகன் புதன் என்பவன் வேசைபால் எப்படி மனமுற்றவனுனன் என்று சொல்லிக்கொண்டே அவ்வந்தணன் உடனே அவ்வேசியின் வீட்டை அடைந்து அங்கே பித்துப் பிடித்தவன் போன்றவனும் கள்ளுக்குடித்துச் சிவந்த கண்களையுடையவனும் மதத்தால் கலங்கியவனும் ஆகிய மகனைக் கண்டு அவனைக் கையிலே பிடித்துக்கொண்டு சந்திரனிடத்துக் களங்கமுண்டானதுபோல அதமனுகிய நீ என் குலத்தில் எப்படிப் பிறந்தாய்? உன்னைக்காட்டிலும் முள் மரமும் கல்லும்

நல்லனவென எண்ணப்படும். மூர்க்கனே! நீ ஏன் இறவாமல்இருக்கிருய்? நீ பிழைத்திருப்பதால் பயன் யாது? என்று கோபத்தோடு கண்டித்தான்.

அ. தந்தையின் மொழியைக் கேட்டுக் கோபமுற்ற புதன் என்னும் மைந்தன் பிதாவினுடைய முகத்திலே அடித்தான். அடித்தவன் ஓ கிழ்மகனே! என்னுடைய கிரீடைக்காலத்திலே புழு வண்டு முதலியவற்றுக்கும் பொதுவாயுள்ள சுகத்திலே நீ எப்படி இடையூறு செய்தாய்? தெய்வச்செயலாக இந்தக் காக விட்டை எப்படி என் மீது விழுந்தது? என்று சொல்லிக்கொண்டே பின்னும் அடியால் அடித்துப் பிதாவின் உயிரைப் பிரித்தான். பிராணன் பிரியும்போது தந்தை திருநாரையூரப்பனே என்று அலறி இறந்தான். அவன் மகன் மிகக் களிப்புற்றுத் தந்தையின் காலிலே கட்டித் தூரத்திலே இழுத்தெறிந்துவிட்டு மறுபடியும் கவலையற்றுக் கள்ளைக் குடித்து விரும்பியபடி வேசியோடு கூடி ஆடினன்.

கூ. மறுநாட்காலையில் தனதுவீட்டிற்குப்போய்த் தாயைப் பார்த்தான். தாய் மகனைக் கண்டதும் மகிழ்ந்து தழுவி அன்பினுல் பால்சுரந்த தனங்களையுடையவளாய்க் குழந்தாய்! இதுகாறும் நீ எங்கே சென்ருய்! எங்கே இருந்தாய்? என்ன செய்தாய்? எனக்கு விரிவாகக் கூறுக. உன் தந்தை மிக வருந்துகின்ருர். நானும் ஆகாரமின்றி உண்ணீருமின்றி இரவிலே நித்திரையும் விட்டு உன்னையே எதிர்பார்த்து நிற்கின்றேன். பிதாவும் உன்னைத் தேடிச்சென்று வெகு நேரமாயிற்று. நீ போய் உன் பிதாவைப் பார்த்துவா என்று அடிக்கடி சொன்னுள். இவளாலேயே பிதா தூண்டப்பட்டிருந்தான் என்று கோபித்து அப்புதல்வன் அவளைக் காய்ந்த விறகால் தலையில் அடித்தான். உடனே தாய் ஆற்ருது கீழே விழுந்தாள். உணர்ச்சியற்றவளாய்க் கிடந்த அவளையும் காலிலே கட்டி வெளியே இழுத்துப் போட்டான். தான் உடனே வேசிவீட்டை அடைந்து அவளோடு விளையாடினன். சாதுக்களாகிய பெரியோர்கள் அத்தம்பதிகளுக்கு ஈமக்கிரியைகளைச் செய்துமுடித்தனர். தண்டிக்கப்படுதற்குரியவனுகிய அப்பாதக மறையோனைப் பிராமணனென்று கருதி அரசனும் தண்டியாதொழிந்தான்.

கo. பின்பு ஒரு நாள் வீட்டிற்கு வந்த அப்பாதகனைப் பதிவிரதையாகிய அவன் மனைவி சாவித்திரி என்பவள் பார்த்து மெல்லப் பேச ஆரம்பித்தாள். ஓ பிராணநாதரே! அறியாதவளாகிய யான் ஒன்று கூறுவேன். எல்லாந்தெரிந்த நீங்கள் கேட்க வேண்டும். மிகப்புனிதமாயும் மிகப் புகழ்பெற்றதாயுமுள்ள பிராமணகுலத்திற் பிறப்புடைய உங்களைப்போன்றவர்களுக்குமாறுபட்ட கூடாவொழுக்கம் விவேகத்தால் நீக்கத்தக்கது. எதனால் மறுமையிற்சுகமோ அக்கருமத்தை இம்மையிற் செய்யவேண்டும் எதனால் வயோதிகத்திற் சுகம்வருமோ அக்கருமத்தை இளமையிற் செய்யவேண்டும். எதனால் மழைக்காலத்திற் சுகங்கிடைக்குமோ அதனை மற்றை எட்டு மாசங்களினுஞ் செய்யவேண்டும். எதனால் இராவிலே சுகங்கிடைக்குமோ அக்காரியம் பகலில் செய்யப்படவேண்டும். பிதாவிடத்திலுள்ள மதிப்பாலும் பிராமணன் என்பதாலும் அரசன் பொறுத்துக்கொண்டிருக்கிறான். எல்லா அவயவமும் நிரம்பினவளும் சௌந்தரியமுடையவளும் உம்மைப் பின்பற்றி நடப்பவளும் தருமபத்தினியுமான என்னைவிட்டு வேசைபால் எங்ஙனம் பற்றுள்ளவரானீர்? உலகம் எங்கும் பழிக்கின்றது. ஆனால் பயந்து உமக்கு எதிரில் ஒன்றுஞ்சொல்வதில்லை. சனங்கள் என்னை நோக்கி ஓ சௌபாக்கியவதி உன் கணவன் எப்படி? என்று கேட்கின்றார்கள். நான் அப்போது நாணத்தால் தலை குனிந்து பிராணனைவிட நினைக்கிறேன். என் நாதரே! விரும்பியவாறெல்லாம் இரவும் பகலும் என்னோடு கூட மகிழ்ச்சியுறக் கடவீர். அதனால் ஒருவரும் ஒன்றுஞ்சொல்ல மாட்டார்களே. பெரிதாகிய பழியொன்றும் வாராதே. நான் சொல்லுவது உமக்கு இதமாகத் தோன்றினால் உமது விவேகத்தால் அவ்வேசியை விட்டு, யான் கூறியபடி செய்க. அறியாமையாலோ மயக்கத்தாலோசெய்த செய்கையை அறிஞன் பின்பு விடவேண்டும். இது உம்மால் செய்யப்பட்டால் அது எனக்கு இட்டமாகும். அல்லது அது எனக்கு எப்போதும் அப்பிரியமே ஆகும். அது உறுதியாகச் செய்யத்தக்கதுமன்று. பாபத்தைச் செய்யும்புருடனுக்கு இம்மையுமில்லை மறுமையுமில்லை என்றாள்.

கக. புதன் இவ்வாறு மனைவியின் வாக்கியமாகிய பாணங்களால் மருமந்துளைபட்டவனாகிக் கோபம் மூண்டு வன்கண்மை உடையவனுக் கொதிப்படைந்து மனைவியை நோக்கி ஏ நாணம்

இல்லாதவளே! கடிந்துகூறும் கடினசித்தமுடையவளே! முதிர்ந்தவளே பொல்லாதவனுகிய நான் கோபித்துக்கொண்டால் என் பிதாமாதாக்கள் என்ன கதியை அடைந்தார்களோ அக்கதியை நீயும் அடைவாய் என்று கூறினன்.

கஉ. அதனைக் கேட்ட சாவித்திரி கூறுகின்றுள்:— தண்டித்தற்குரியவர்களும் சுதந்திரமுடையவர்களுமாகிய பிதாமாதாக்களிடத்திலேயே எவனல் மரியாதை செய்யப்படவில்லையோ அவன் அத்தன்மையில்லாதவளும் காப்பாற்றத் தக்கவளுமான என்னை எப்படிக்காப்பாற்றுபவனுவான். கணவன் கையால் இறப்பதுவே கற்புடைய பெண்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் பெருமையாகும் என்றுள். இவ்வாறு கூறிய மனைவியை அக்கொடியவன் உடனே கூந்தலிற் பிடித்து விறகுகளாலும் ஓடுகளாலும் கற்களாலும் முட்டிகளாலும் அவளையடித்தான். கற்புடையவளாகிய அப்பெண்மணி மிகுந்தபுண்ணியத்தால் கணேசப்பெருமானைத் தனது கணவன் வடிவமாகத் தியானித்துக்கொண்டு மருமஞ் சிதறி உடனே இறந்தாள். இறந்தவள் விண்ணுலகத்தை அடைந்து தேவசரீரம் பெற்று உயர்ந்த இன்பத்தை அநுபவித்தாள். அப்பாதகன் அவளையும் காலிலே கட்டி இரவில் வெளியே இழுத்தெறிந்தான். பின்பு வேறு தடையில்லாதவனுகி மகிழ்ச்சியோடு வேசையுடன்கூடி ஆடல் செய்தான். அதிபாதகங்களாகிய அச் செயல்களால் அவன் வெண்குட்ட நோயை அடைந்தான்.

கங. வேசியும் நோயாளனுகிய அவனைவிட்டுப் பொருளாசையால் வேறொரு தனிகனை அடைந்தாள். சனங்களால் பழிக்கப்பட்ட குட்டரோகி வேசியாலும் விடப்பட்டான். அந்த அதமன் பசிதாகங்களாற் களைப்புற்று அலைந்து இத்திருநாரையூரை அடைந்தான். அங்கே திருநாரையீசராகிய மகேசரைப்பூசை செய்கின்ற பிராமணர்களுடைய வெளியிற்போட்ட எச்சிலை உண்டான். திருநாரைச் சிவபிரானது நைவேத்தியம் பிராமணருக்கு உணவு. அப்பிராமணருடைய எச்சிலே மூன்று மாசகாலம் அவனல் உண்ணப்பட்டது. இவ்வாறிருக்கும் போது அவன் காலகதியால் இறந்து இயமதூதரால் யமலோகத்தை அடைந்தான். இவன் இங்கே ஏன் கொண்டுவரப்பட்டான்.

நாகங்களிற்றள்ளப்படுக என்று இயமன் கூறினன். இயமன் கூறியதைக் கேட்ட தூதர்கள் அவனை அப்பொழுதே நாகங்களில் தள்ளினர்கள். அங்கே பிரளயகாலம் வரையும்நாகவேதனையை அநுபவித்த அவன் பின் ஒரு வைசிய குலத்திலே பிறந்து முற்பிறப்பிற் செய்த கொடிய பாவத்தால் பின்னுங்குட்டரோகி ஆனன். வைசிய புத்திரனுகிய அவன் தனது நோய் நீக்கத்தின் பொருட்டுப் பல தீர்த்த யாத்திரைகளைச் செய்துவருங்காலத்தில் புண்ணியவசத்தால் தெய்வச்செயலாகச் சிறகிழந்த நல்லூர் என்னும் நகரத்தை வந்தடைந்தான்.

முப்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

முப்பத்தோராவது
வைசியனுக்குக்குட்டநோய் நீக்கிய அத்தியாயம்.

௧. முனிவர்களுக்குச் சண்முகப்பெருமான் பின்னுங் கூறுகின்றார்.— அவ்வைசியன் வழிநடந்த களைப்பால் ஒரு பிராமணன் வீட்டில் தங்கினன். தங்கினவன் அவ்வந்தணனை இவ்வூர்ப் பெயர் யாது என வினவினன். அவ்வந்தணன் சிறகிழந்த நல்லூர் என்று கூறினன். அதைக் கேட்ட வைசியன் ஓ அந்தணர் பெருமானே! எதனுடைய சிறகு இவ்வூரில் இழக்கப் பெற்றது? மூர்த்திதல தீர்த்தங்களைத் தொழுதாடி வருகின்ற எனக்கு அக்கதையைக் கூறவேண்டும் என்று வேண்டிக் கொண்டான்.

௨. அதுகேட்ட பிராமணன் வைசியனே கேட்பாயாக என்று கூறத்தொடங்கினன். நாரை என்னும் ஒரு பட்சியாசு மார்க்கண்டேயர் முகமாகப் பகமுனிவாது மகிமையைக் கேட்டுணர்ந்து பகேசாகிய பரமேசுவாரைப் பத்தியோடு செபத்தியானங்கள் முதலாகப் பூசை செய்தது. இவ்வாறு நெடுங்காலம் செய்துகொண்டிருந்தும் பார்வதி நாயகர் திருவுளம் மகிழவும் இல்லை. அப்பறவைக்குக் காட்சி அளிக்கவும் இல்லை. அதனல் அந்நாரையானது நாரதமுனிவர் உபதேசப்படி கங்காதீர்த்தத்

தால் அபிடேகஞ் செய்வதில் பெரிதாய நியமம் பூண்டு வைகறை யிலே கங்கைக்கரையை அடைந்து அதில் விதிப்படி அன்போடு மூழ்கிக் கங்காதீர்த்தத்தைச் சிறகுகளிலும், கண்டத்திலும் எடுத் துக்கொண்டுவந்து நாரையூர்ப் பெருமானை அபிடேகித்து உறுதி யாகிய அன்போடு பூசித்து வந்தது.

ங. சிவபெருமான் அந்த நாரையின் பத்தியைச் சோதித் தற் பொருட்டு அதன் சத்தியைக் கவர்ந்தார். பறப்பதற்குச் சத்தியில்லாத பறவையாசு சிரமத்தால் வாடிக் கங்கை அபிடே கஞ் செய்வதில் சிரத்தை மிகுந்து சிரமத்தோடு பறக்கத்தொ டங்கிற்று. அப்போது அதன் சிறகுகளிரண்டும் அதனுடம்பி னின்றுங் கழன்று பூமியில் விழுந்தன. அப்போதே அப்பறவை பரமசிவனை நினைந்துகொண்டு பூமியில் விழுந்து மூர்ச்சையுற்றது. பின் மூர்ச்சைதெளிந்து ஓ மகாதேவரே! பரமேசுவரரே! கருணு கரரே! பத்தர்க்கு நாதரே! மிக வருந்துகின்ற என்னைக் காத்த ருள்க. கடவுளே! சிறகிழந்த என்னை இவ்வாபத்தினின்றுந்தூக்கி அருளுக என்று பரமசிவனைப் பிரார்த்தித்தது. அப்போது பரம சிவன் கருணைகூர்ந்து அதன் சரீரத்தில் முன்போலப்பலத்தைக் கொடுத்தருளினுர். சிறகிழந்த அப்பறவையானது கால்களா லே தத்தித் தத்திச் சென்று திருநாரையூரையடைந்து பரமே சுவரனைப்பூசித்து, ஓ கடவுளே! அனைத்துயிர்களுக்குந்தந்தையே! கருணைப்பெருங்கடலே! தேவரீரை அபிடேகஞ் செய்வதற்காகக் கங்கையின் தீர்த்தங் கொண்டுவருதற்பொருட்டு என் சிறகு களைத் தந்தருளுக, கங்கை நீரால் அபிடேகஞ் செய்யாவிடில் எனது விரதம் பிழைபடும். என் தெய்வமே! கருணையங்கடலே! விரதம் பிழைபட்ட பின்னும் உயிர் வாழ்தலால் பயனில்லை. ஆதலால் யான் உம்மையே நினைத்துக்கொண்டு உமது சந்நிதியி லே உயிரை விடப்போகிறேன் என்று சொல்லி அந்நாரையா னது வாங்கிடந்தது.

ச. அப்போது பரமசிவன் கருணைகூர்ந்து அந்நாரைக்குச் சிறகுகளைக் கொடுத்து அம்பிகாசமேதராகக் காட்சியும் அளித்து அதன் சாபநீக்கத்தையும் விரும்பிய வரங்கள் பலவற்றையும் கொடுத்தருளினர். நாரையின் சிறகுகள் எந்தத்தலத்தில் விழுந் தனவோ அந்தத் தலம் சிறகிழந்த நல்லூர் என்று உலகத்திலே

புகழப்பட்டது; இந்த ஊரே அந்தத் தலமாகும் என்று அந்தப் பிராமணன் கூறினன்.

ரு. அதைக்கேட்டுக் குட்டரோகியான வைசியன் திருநாரையூரை அடைந்து திருநாரையீசனையும் பொல்லாப்பிள்ளையாரையும் தீர்த்தத் திருமஞ்சனத்தால் விதிப்படி அபிடேகஞ் செய்து பூசித்து வந்தான். இவ்வாறு அங்கேயுள்ள தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்துகொண்டு ஒரு மண்டலம் உணவின்றி அதிக பத்தியோடு பெருமானைப் பூசித்திருந்தான்.

சா. ஒரு மண்டல முடிவில் வைசியனுடைய மூக்குத் துவாரத்திலிருந்து கரியமுகத்தையுடைய ஒரு குறள் பூமியில் விழுந்தது. உடனே அது மிகப் பெரிதாகி வளர்ந்து ஏழு பனை உயரமாயிற்று. அது பயங்கரமும் திறந்த வாயும் அச்சந்தரத்தக்க நாக்கும் சிவந்தகண்களும்நீண்டகைகளும்சடாதாரணமும்உடையதாய் வாயினின்று எங்கும் அக்கினியையும் சி இரத்தங்களையும் கக்கிக்கொண்டு வேறொரு இருள்போலப் பார்ப்போர் கண்களை மறைத்துக்கொண்டு நின்றது. அதைக் கண்டு அந்நகரிலுள்ள அந்தணர் முதலியவர்களெல்லாரும் ஓடினார்கள்.

எ. வக்கிரதந்தங்களின் ஒலிகளால் பத்துத் திசைகளையும் நிறையச்செய்யும் அந்த அற்புத புருடனை அவ்வைசியன் எதிரே கண்டு நீ யாவன்? உன் பெயர் யாது?எனக்குக்கூறுக என்றுகேட்டான். அப்புருடன் வைசியனை வணங்கி நின்று நான் உயிர்களெல்லாவற்றினுடைய சரீரங்களினும் இருப்பவன். என் பெயர் பாபபுருடன், உன்னுடைய ஸ்நான பூசைகளின் புண்ணியத்தினல் உனது தேகத்தின்றும் வெளிவந்தேன் என்று அவ்வைசியனுக்கு விடை கூறி அவ்விடத்தினின்றும் அப்பாப புருடன் நீங்கி வெளியே போனான். பின்பு அவ்வைசியன் குட்ட நோயினின்றும் நீங்கி மகிழ்வுற்றுத் திடபத்தியுடன் திரிபுரசுந்தரி சமேத சுவயம்பிரகாச சுவாமியைப் பூசை செய்வித்தான்.

அ. திருநாரையூர்ப் பரமசிவன் கார்த்திகை மாசத்தில் வரும் அட்டமி திதியிலே அவ்வைசியனுக்கு எதிரில் தமது கணங்களோடு வெளிப்பட்டருளி ஓ வைசியருட் சிறந்த உயர் மதியுடையோய்! நீ எல்லாப் பாவங்களினின்றும் நோய்களி

னின்றும் நீங்கினய் ஐயமில்லை. நிகரற்ற செல்வத்தைப் பெற்று விரும்பிய போகங்களையெல்லாம் அநுபவித்துத் தேகாந்தத் தில் எம்பால் வைத்த அன்பின் பெருமையால் ஒருவருக்குங் கிட்டாத கைலாசபதவியை எமது பிரசாதத்தால் அடையக் கடவாய். கிருட்டிணட்டமியாகிய இன்று உனக்கு அருள் செய்த தினம். இத்தினத்தில் இந்தத் தலத்திலே எம்மை முழுமுதற் கடவுளாக எண்ணி யாவர் அருச்சனை செய்கின்றார்களோ அவர் களுடைய பெரு நோய்களும் பெரும் பாவங்களும் அழிந்தொழி யும். அவர்களுக்கு அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கையும் போகத்தையும் நாம் கொடுப்போமென்று திருவாய் மலர்ந்தருளிச் சிவபெருமான் கணங்களோடும் மறைந்தருளினர்.

கூ. உடனே வைசியன் திவ்விய தேகம் பெற்றுத் தனது நகரத்தை மகிழ்ச்சியோடு அடைந்து பெரும் போகங்களை அநு பவித்து முடிவிலே கைலாசத்தையும் அடைந்தான்.

கO. திருநாரையூர்ப் பெருமானுடைய திருவிளையாடலா கிய இக்கதையை எவர்கள் படிக்கின்றார்களோ அவர்கள் எல்லா நோய்களினின்றும் நீங்கி எல்லாச் செல்வங்களையும் அடைவார் கள். முனிவர்களே இவ்வாறு திருநாரையூரின் பெருமை உங் களுக்கு எம்மால் கூறப்பட்டது. திருநாரையூரின்கண் எழுந் தருளியிருக்கும் பொல்லாப்பிள்ளையாரையும் சுயம்பிரகாசசுவா மியையும் பூசித்துப் புண்ணியமாகிய இந்தத்திருநாரையூர்ப் புரா ணத்தை எந்த மனிதர்கள் படிக்கின்றார்களோ அவர்கள் விரும் பிய பேறெல்லாம் அடைவார்கள். யாவருக்குங் கிடைத்தற்கரிய முத்தியையும் அடைவார்கள் என்று சண்முகப் பெருமான் சன காதி முனிவர்களுக்குக் கூறியருளினர்.

கக. ஓ முனிவர்களே! சண்முகப் பெருமான் முனிவர்க ளுக்குக் கூறியருளிய திருநாரையூரின் பலவிதமான பெருமை உங்களுக்குக் கூறப்பட்டது. பரமேசனது இந்த இதிகாசத் தைக் கேட்டமாத்திரத்தில் பாபங்களெல்லாம் அழியும். நல்ல அறிவும் அன்பும் இல்லாதவனுக்கு இக்கதையைக் கூறலாகாது. நல்லறிவும் அன்புமுடைய மாணக்கர்களுக்கே கூறவேண்டும் என்று சூதமுனிவர் கூறினர். சுபம்.

முப்பத்தோராவது அத்தியாயம் முற்றிற்று.

திருநாரையூர்த் தலபுராணம் முற்றிற்று

திருச்சிற்றம்பலம்.